ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய

நீதிநெறி விளக்கம் மூலமும், விருத்தி உரையும்

விதிப்பாளர் :

திருவாளர்

அ. மஹாதேவ செட்டியார் அவர்கள்.

மதிப்பாளர் :

தமிழ்வாணர் திருவாளர் மதுரகவி

ம. மாணிக்கவாசகம் பிள்ளை அவர்கள்,

பதிப்பாளர் :

சை. ந. பாலசுந்தரம்,

ஸ்ரீசாது இரத்தின சற்குரு புத்தகசாலை,

4/34, நயினியப்ப நாயகன் வீதி,

பார்க் டவுன் (P.O.), சென்னை

All Rights Reserved] [விலை ரூ.1½

Copy-Right and All Rights Reserved
BELONGS TO
SRI SADHU RATHNA SARGURU BOOK DEPOT,
4/34, Nainiappa Naicken St.,
P, T., MADRAS.

திருவாளர். அ. மகாதேவ செட்டியார்க்கு
திருவாளர் தமிழ்வாணர் மதுரகவி
ம. மாணிக்கவாசகம் பிள்ளை அவர்கள்
இயற்றிய

சிறப்புப்பாயிரக் கவி

வெண்பா

“நீதி நெறி விளக்க நீளவுரை தாம்விதித்தார்
ஓதி உணர்வீர் உலகத்தீர்—ஆதி
சகாதேவ னைப்போலச் சாத்திரத்திற் றேர்ந்த
மகாதேவ செட்டியார் மாண்பு.”

விஷய அட்டவணை

தொடர் இலக்கம்	விஷயம்	பக்கம்
க	சிறப்புப்பாயிரக் கவி	V
உ	முகவுரை	VII
௩	செய்யுள் விஷயத்தலைப்பு அட்டவணை	XVIII
௪	செய்யுள் முதற்குறிப்பும், திருக்குறள் மேற்கோள் முதற்குறிப்பும்	XXIII
௫	நீதிநெறி விளக்க உரையில் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ள சாத்திரங்களின் பெயராகராதி	XXX
௬	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் சரித்திரச் சுருக்கம் வசனம்	XXX I
௭	௸ சரித்திரம் (செய்யுள்)	XLIX
௭	நீதிநெறி விளக்கம் பெயரிலக்கணம்	VX
௮	நீதிநெறி விளக்கம் மூலமும், விருத்தியுரை முதலியனவும்	க
௯	௸ விளக்கம் செய்யுள் முதற்குறிப்பு அகராதி	உகரு
க0	மேற்கோள் செய்யுள்	உக௮
கக	வினையுருபுகள் (அநுபந்தம்—க)	1
கஉ	The வெண்பா (,, —உ) (ஆங்கிலத்தில் வெண்பா விஷயச் சம்பந்தமான விஷயம்)	14

உ

கடவுள் துணை

தர்மமே ஜயம்

அணிந்துரை

நீதிநெறி விளக்கம் என்னும் இந்நூல் திருநெல்வேலியைச் சார்ந்த ஸ்ரீ வைகுண்டம் என்னும் திருப்பதியில் அவதரித்தருளிய ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளால் அருளிச்செய்யப்பட்டது. ஷ சுவாமிகள் இந்நூலன்றி வேறு சில நூல்களும் இயற்றியருளினார்கள். ஷ நூல்கள் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு என்னும் பெயரோடும் நெடுங்காலமாக வழங்கிவருகிறது.

ஷ ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளவர்கள் அகவொழுக்கம் புறவொழுக்கம் இரண்டினுஞ் சிறந்து, கடுந்துறவு நிலையை யனுசரித்து, ஸ்ரீ சுப்பிரமணியப்பெருமான் திருவருளுக்கும்-தேவியார் திருவருளுக்கும் பாத்திரராகி, ஸ்ரீ சந்த்ரமூர்த்தியின் அருட்பிரசாதமும் வாய்க்கப்பெற்று, அஷ்டமா சித்திகளும் கைகூடப்பெற்று, தவராஜ சிங்கமா யெழுந்தருளியிருந்தமையானே, அவர் பரிபூரணமாகி நெடுங்காலஞ் சென்றும், இன்றும் பலரால் தெய்வீகமாய்க் கொண்டாடப்படுவதோடு, அன்பர்கள் அகத்தில் விளங்கிக் கொண்டுமிருக்கிறார். ஷ சுவாமிகள் சரித்திர வாயிலாய்நாம் அறிந்துகொள்ளவேண்டிய நீதி யென்னவென்பதை அன்பர்கள் சிந்திக்கக்கடவாராக.

ஒழுக்க நிலையைத் தவறாது அனுஷ்டித்தல் நமது கடமையாம். இவ்வித நிலைமை வாய்க்கப்பெற்றவரே பாக்கியவான்களென்று கூறப்படுவர். நாயனார் தாம் அருளிய தமிழ்மறையில்,

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக."

என்று கூறியருளிய ஈரடியையும் நாம் பன்முறையும் சிந்தித்தல் வேண்டும்.

"ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன்று ஒழுக்க முடைமை."

என்று முதுமொழிக் காஞ்சியில் கூறியுள்ள வாக்கையும் நாம் கடைப்பிடித்தல்வேண்டும்.

சம்ஸ்கிருதத்திலுள்ள நான்கு வேதங்களின் கருத்துக்களையே திருவள்ளுவ நாயனார் தாம் திருவாய்மலர்ந்தருளிய தெய்வத் திருமறையாகவிளங்கும் திருக்குறளின் மூலமாய் நம்மனோர்க்குப் பலவித ஒழுக்கநிலையாக உபதேசித்தருளினார்.

ஷை தெய்வத் திருமறைக்குச் சமமாக வேறு ஒரு நூல் நமக்குக் கிடைக்குமோ? ஷை திருக்குறள் உலகத்திலுள்ள பல மொழிகளிலும் பெயர்த்தெழுதப்பட்டு ஒப்புயர்வற்று விளங்குகின்றதன்றோ? ஷை திருக்குறளின் சாரமா யமைந்ததல்லவோ நீதிநெறி விளக்கம் என்னும் நூலும்! இந்நூலின் அமைப்பைப்பற்றி வித்வ சிரோமணிகள் பலர், சிறந்த அபிப்பிராயங்களைக் கூறியுள்ளார்கள். ஷை வித்வசிரோமணிகளின் அபிப்பிராயங்கள் அத்தனையும் இங்குக் கூறுவதென்றால் இவ் வுரை மிக நீண்டுபோம். ஆதலால் மிகப் பிரசித்தியுற்றிருந்த வித்வ சிரோமணியொருவரின் அபிப்பிராயத்தை மட்டும் உதாரணமாக எண்டுக் காட்டுதும்.

யாழ்ப்பாணம், சுன்னாகத்தில் சம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் தேர்ந்த பண்டித சிரோமணியாகவிருந்த திருவாளர் அ. குமாரசுவாமிப் புலவர் அவர்களின் அபிப்பிராயம்.

"...........வள்ளுவருடைய திருக்குறளிலே ஆங்காங்கு வரும் சொற்களும், சொற்றொடர்களும், பொருள்களும், இரீதிகளும் இந்நூலிலும் ஆங்காங்கு வருகின்றன. அவ்வாறு வரும் சொற்களாவன : ஊங்கில்லை, இவறன்மை என்பன முதலாயின.

சொற்றெடர்களாவன :—பரிந்தோம்பிக் காக்க, நோவ தெவன்.........என்பன முதலாயின.

பொருள்களாவன :—கல்வி, அரசு, அமைச்சு, முயற்சி, பொருள், இன்பம்.........என்பன முதலாயின.

இரீதிகளாவன :—பித்துடைய அல்லபிற, தாழப்பெறின் ....என்பன முதலாயின.

இவைகள் இங்குமங்கும் இலைப்புரை கிளைப்பார்க்கு நன்கு புலப்படுவனவேயாம்.

இந்நூலிலே எம் மதவாதிகளாயினுஞ் சம்மதமாகக் கோடற்பாலனவாகிய காரியங்களும்...........பிறவும் அநுபவங்களோடு உதாரணங்கள் காட்டிச் சுருங்கச்சொல்லன்முதலிய அழகுகளெல்லாம் பொருந்த பண்பாக விளக்கப்பட்டன. இவையெல்லாம் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கும் பயப்பனவாயடங்கும்.

மானுடரால் அவசியம் அடைதற்பாலனவாகிய அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கையும் திறம்பெறக் கூறும் இந்நூலை வெறுப்பவர் யாவர்?........."

இதுபோன்று பண்டித சிரோமணிகள் பலர். இந்நூலின் அருமை பெருமைகளைப் பலவிதமாகப் புகழ்ந்து கூறியுள்ளார்.

சுவாமிகள் வாக்கு அருள்வாக்கு ஆதலினலேயே, அதற்கு அவ்வளவு மகிமை ஏற்பட்டு, அது வாசிப்போரைத் தன்வயமாக்குகிறது. அருள் வாக்குக்கே அவ்வித சக்தி யுண்டு.

ஷை ஸ்வாமிகளைப்பற்றிக் கந்தர் கலிவெண்பா உரைப் புத்தகத்தின் முகவுரையிலும் கூறியிருக்கின்றோம். இதோடு இந்நூலிலேயே ஸ்வாமிகளின் சரித்திரச்சுருக்கமும் சேர்க்கப்பட்டுள்ளது. அதில் சுவாமிகளின் சரித்திர விரிவைக் கண்டுகொள்ள

லாம். நீதிநெறி விளக்கம் என்னும் இந்நூலை சுவாமிகள் அருளிச் செய்ததற்குக் காரணமும் ஷை சரித்திரத்தில் கூறப்பட்டுள்ளது. ஆண்டுக் கண்டுகொள்க.

ஜீவர்களிடத்தில் மகான்களுக்கே ஓர்வித கருணை நோக்கம் உண்டு. ஜீவர்கள் துக்கச் சுழலினின்று நீங்கிச் சுகப் பிராப்தமுற வேண்டுமென்பதே அன்னோர் இராப்பகலாகக் கொண்ட சிந்தையாம். தாம் அடைந்த அநுபூதி நிலைமையினை மக்களும் அடைந்து உபசாந்தியாய் உய்வுபெறவேண்டு மென்பதே அன்னோர் முழு நோக்கமாகும். இதனிமித்தம் சிற்சில சமயங்களில் சில பெரியோர்கள் தங்கள் சரீரத்தையே உலகிற்குத் தத்தம் செய்துவிடுவது முண்டு. ஒரு திருஷ்டாந்தம் இங்குக் கூறுகின்றேன் :

சுவாமி விவேகாநந்தர், ஜீவர்கள்பேரில் வைத்த காருண்யம் காரணமாக அமெரிக்காவுக்குச் சென்று எவ்வளவு அரும்பாடு பட்டார்! இதுமாத்திரமா? இந்தியாவுக்கு வந்த பிறகும் அவர் எவ்வளவு பாடுபட்டுத் தமது அருமையான தேகத்தைத் தத்தம் செய்தார். அவர் தமது சுகத்தைக் கிஞ்சித்தும் நாடினரோ? மகான்களுக்கே இவ்வித அருங்குணம் இயற்கையா யமைந்துள்ளது அதிசயிக்கத்தக்கது. அதுபற்றியே யன்றோ மகான்களாய் விளங்கிய நம் பெரியோர்களை இன்னும் நம் நாட்டில் பூசித்து வந்தனை வழிபாடு செய்யும் வழக்கம் இருந்துகொண்டிருக்கிறது. நிற்க.

நம் சுவாமிகள் சீவர்கள்மேல் வைத்த கருணையானன்றோ நீதிநெறி விளக்கம் என்னும் இந்நூலை அருளிச் செய்தார்கள்? இதுமாத்திரமோ? இன்னும் பல நூல்களையும் அருளிச் செய்தனரே! இவற்றிற்கு ஈடாகச் சுவாமிகள் நம்மிடத்தினின்றும் ஏதேனும் பிரதியுபகாரத்தை எதிர்பார்த்தார்களா? யாதும் இன்றே! ஆனால், ஒரே உபகாரத்தைமட்டும் அவர்கள் எதிர்பார்த்தார்கள். அதுதான் என்னையோவெனின், அந் நூலிற் கூறிய ஒழுக்கவிதிகளை யறிந்து, தீயனவற்றை அறவே நீக்கி, நல்லொழுக்க விதிகளைக் கைப்பற்றி, இன்பாநுபூதி அடையவேண்டு மென்பதே யாம். இவ்வித நன்றியை நாம் சுவாமிகளுக்குச் செலுத்தாவிட்

டால், நன்றிமறந்தவர்க ளாவோமன்றோ? இந்நூலை ஒருமுறை இருமுறை மட்டும் பயிற்சி செய்தால் போதியதாகாது. நங் காலத்தில் பன்முறையும் சிரத்தாபத்தியோடும் பாராயணம் செய் யக்கூடிய நூலன்றோ இது? இம்மட்டோ? சிறுவர்கள்முதல் வித்வ சிரோமணிகள் வரையில் பயிற்சி செய்யக்கூடிய நூலன்றோ இது? பதினெண் கீழ்க்கணக்கைச் சார்ந்த நூல்களும், பிற நூல்களும் நமக்குப் பிரதானமாகப் போதிக்கும் கொள்கை யாது? ஒழுக்க விதியல்லவோ? எல்லா தர்ம நூல்களும் ஒரே முகமாகப் போதிக் கும் தர்ம நுட்பங்களையே அதாவது, ஒழுக்க விதிகளையே இந் நீதிநெறி விளக்கமும் நமக்கு அறிவுறுத்துகின்றது. அஸ்திவாரம் பலமா யிருந்தாற்றான் நாம் மேற்கொண்டு சுவரெழுப்புவது பயன் தரும். இன்றேல், கட்டடத்தின் கதி யாதாய் முடியுமென்பதை ஒவ்வொருவரும் யோசித்தல் வேண்டும். அதுபோன்றே அடிப் படையாகவுள்ள ஒழுக்க விதிகளை நாம் கைசோர விடுவோமாயின், மேற்கொண்டு சோபான படிகளைக் கடத்தல் நமக்கு எவ்வாறு சாத்தியமாம்?

இந் நீதிநெறி விளக்கம் என்னும் நூல் மிகச் சுருங்கியதொரு நூலாகும். மொத்தம் பாடல்கள் ௧0௨ மட்டுமே. இந்நூலை மனப்பாடம் செய்வதில் யாதொரு கஷ்டமும் ஏற்படாது. நூலை வாசித்தால் மட்டும் போதாது. வாசித்த நூல்களில் கூறப்பட் டுள்ள அரும் பெரும் விஷயங்களை அடுத்தடுத்து ஏகாந்தமா யிருந்து சிந்தித்தல் வேண்டும்.

ஷை நீதிநெறி விளக்கம் திருக்குறளின் சாரமா யமைந்திருப் பதை முன்னிட்டும், அருமை பெருமையை யோசித்தும், சென்னைப் பாட புஸ்தக சபையார் (Text Book Committee) அதன் நூலின் சிற்சில பகுதிகளை அடுத்தடுத்து மாணவர்களுக்கு பரிட்சைக்குரிய பாடங்களுள் ஒன்றாக ஏற்படுத்துவாராயினர். ஏற்கனவே பெருமையோடுங் கூடியிருந்த நூல் அடுத்தடுத்துப் பாட புஸ்தகமாக ஏற்படவே அது பின்னும் பிரசித்தியுற்றது. இந்நூல் மாணவர்க்கும் ஏனையோர்க்கும் என்றும் பயன் தரக்கூடிய

தாக விருப்பதைப் பற்றி, பாட புஸ்தகத்திற்கு அவ்வப்போது பல பண்டிதர்கள் உரை வெளியிட்டது போக, இந்நூல் முழுவதுக்கும் சிறந்த பண்டித சிரோமணிகள் சிலர் அவ்வக் காலங்களில் உரை வெளியிடுவோராயினர். அவ்வுரைப் பதிப்புக்களும் சில காலம் வரையில் உலகில் நிலவியிருந்து பிறகு ஒவ்வொன்றாய் மறையத் தொடங்கின. தற்காலம் இரு பதிப்புகளே வழங்கிக் கொண்டு வருகின்றன.

" பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே."

என்ற நன்னூற் புறநடைச் சூத்திர விதியிற் கூறியாங்கு உலகியல் நடைபெறுகிறது.

நீதிநெறி விளக்கத்திற்கு முற்றும் உரையோடுங் கூடியதாக அஷ்ட உரைப்பதிப்புகள் வெளிவந்துள்ளதை என் காலத்தில் பார்வையிட்டுள்ளேன். என் பார்வைக்குக் கிடையாமல் இன்னும் எத்தனை உரைப் பதிப்புக்கள் வெளி வந்துள்ளனவோ அவை எனக்குத் தெரியா. ஷை உரைப் பதிப்புக்களுள் மிகப் பூர்வீகமானது சுமார் 138 வருடங்கட்கு முன் வெளிவந்த உரையாசிரியர் ஸ்ரீமத் காஞ்சீபுரம் சபாபதி முதலியா ரவர்கள் இயற்றிய பதவுரைமட்டும் கூடிய பதிப்பேயாம். இப்போது பதிப்பிக்கப்பட்டு முடிந்துள்ள உரைப் பதிப்பு நெடுங் காலத்திற்கு முன் பதிப்பிக்கப்பட்டு மிகப் பிரசித்திபெற்ற தோருரை யாகும். இந்நூலுள் மாணவர்களுக்கு விருத்தியும் பயனும் தரக்கூடிய இரு வியாசங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

அவையாவன :—(க) வினை யுருபுகள், (உ) The வெண்பா (வெண்பாச் சீர் சம்பந்தமான விஷயம்) ஆங்கிலத்தில் ஷை இரு விஷயங்களும், வேறு நீதிநெறி விளக்க உரைப்பதிப்புகளுள் கிடையா. ஷை உரைப் பதிப்பு மாணவர்களுக்கு மிகுதியும் பயன்றாக் கூடியதாயிருப்பது கருதியும், நெடுங்காலமாக ஷை பிரதி கிடைப்பது அரிதாயிருப்பதை யுன்னியும் ஷை உரைப் பதிப்பை

நூல் முற்றும் அநேக திருத்தங்களுடன் புதிய முறையி லமைத்து வெளியிடுமாறு நேர்ந்தது.

பழைய உரைப் பதிப்பில் உரையானது பதவுரையாகப் போடப்படாமல் பொழிப்புரையாகப் போடப்பட்டிருந்தது. ஷை நூல் முற்றுமே பொழிப்புரையாக அமைந்திருந்தது. ஷை பொழிப்புரையே இக்கால நிலைமைக் கேற்கப் புதிய முறையை யனுசரித்துப் பதவுரையாக அமைக்கப்பட்டது.

பழைய உரைப் பதிப்பில் உரை விளக்கமின்றி யிருந்த பல பாகங்கள் இப் புதிய பதிப்பில் உரை விளக்கப்பட்டுள்ளன.

விருத்தியுரையுள் ஒவ்வொரு விஷயமும் தனித்தனியாகப் பிரித்துப் போடப்பட்டிருப்பதோடு, அவ்வாறு எத்தனை விஷயங்கள் குறிக்கப்பட்டுள்ளனவோ அவ்வளவிற்கும் தொடர் இலக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. பாடலி விருந்து எடுத்து ஆளப்பட்ட பதங்கள் ஒவ்வொன்றும் ஆண்டிக் எழுத்தில் போடப்பட்டுள்ளது. வாசகக் குறிகள் முற்றும் அனுசரிக்கப்பட்டுள்ளன. இந்த முறையை யனுசரித்துத் தற்காலம் எவரும் உரையைப் பதிப்பிப்பது கிடையாது; காரணம், பாரம் அதிகமாக வளர்ந்துவிடு மென்ற கவலையே யாம்.

இப்போது பதிப்பித்துள்ள புதிய பதிப்பில் பதவுரையில் பதப்பிரிவுக்கு நேர் நோராகப் போடப்பட்டுள்ள உரைப் பாகங்களில் வாசகக் குறிகள் முற்றும் அமைக்கப்பட்டுள்ளன. இதோடு வாசக நடை யெழுதும்போது இடையிடையே ஒற்று மிகுதல் குறைதல் பாகங்களை நாம் கவனித்து எழுதுதல்போன்று பதவுரையில் நூல் முற்றும் ஒற்று மிகவேண்டிய இடங்களிலெல்லாம் ஒற்றெழுத்துக்கள் () இக் குறியுள் அமைக்கப்பட்டுள்ளன. இந்நூலை வாசிக்கும் அன்பர்களுக்கு ஏதும் சந்தேகந் தோன்றா திருத்தற்பொருட்டே ஷை விஷயம் இங்குக் குறிப்பிடுமாறு நேர்ந்தது. ஷை பதவுரையையே பொழிப்புரையாகவும் வாசித்துக்கொள்ளலாம்.

நீதிநெறி விளக்கம் என்னும் இந்நூல் திருக்குறளின் சாரமாயிருப்பது கருதியே ஒவ்வொரு செய்யுளுக்கும் திருக்குறள் மேற்கோள் சமயோசிதமாக ஒன்று இரண்டு மூன்று வரையில் பரிமேலழகர் உரையுடன் காட்டப்பட்டுள்ளது. சமயோசிதமாக இதர நூல்களினின்று மேற்கோள்களும் இதில் குறிப்பிட்டுள்ளன. ஒவ்வொரு செய்யுளின் உரைப்பாகத்தின் ஈற்றிலும் அந்தந்தச் செய்யுளின் கருத்தடங்கிய ஆங்கில மொழிபெயர்ப்பும், கலாசாலைகளிற் பயிலும் மாணவர்களுக் குபயோகமாகுமாறு சேர்க்கப்பட்டுள்ளது.

உரை முடிவுக்குப் பின் வழக்கம்போல் நூலின் செய்யுள் முதற்குறிப்பகராதி சேர்க்கப்பட்டிருக்கின்றது.

அதன் பிறகு, இந்நூல் முற்றும் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ள செய்யுட்கள் சூத்திரங்கள் இவற்றின் முதற்குறிப்பகராதி புதிதாக எழுதிச் சேர்க்கப்பெற்றிருக்கின்றது.

இந்நூலுள் மேற்கோள்களாகக் காட்டப்பட்டுள்ள நூல்களின் பெயரகராதி புதிதாக எழுதிச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு செய்யுளுக்கும் புதிதாக விஷயத் தலைப்பு எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளது. நூல் ஆரம்பத்தில், ஒவ்வொரு செய்யுளுக்கும் புதிதாக எழுதிச் சேர்க்கப்பெற்ற விஷயத் தலைப்புகள் அவ்வளவும் செய்யுள் வரிசைக் கிரமமாக இருவிதஇலக்கங்கள் கொடுத்துச் சேர்க்கப்பட்டுள்ளன.

இதற்குப் பிறகு நீதிநெறி விளக்கத்தின் ஒவ்வொரு செய்யுளின் முதற்குறிப்பும், அதற்கு நேரே திருக்குறள் மேற்கோள் செய்யுளின் முதற்குறிப்பும் பக்க இலக்கங்களுடன் மாணவர்க்குப் பிரயோசனமாமாறு புதிதாக எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளன.

நூலின் ஈற்றில் வினையுருபுகள், The வெண்பா என்ற இருவிஷயங்களும் இரண்டு அநுபந்தங்களாகச் சேர்க்கப்பெற்றுள்ளன.

நீதிநெறி விளக்கத்திற்கு நூல் ஆரம்பமுதல் நூலின் பெரும் பாகம் வரையில் விருத்தியுரையாக இயற்றிய ஆசிரியரவர்கள், நூலின் இறுதியிலுள்ள சில செய்யுட்கட்கு உரையை விசேடிக்காமல் சுருக்கி இயற்றியதை முன்னிட்டு, இந்நூலை அப்பியசிக்கும் மாணவர்களுக்கும், ஏனையோர்களுக்கும் வித்தியாச அபிப்பிராயம் தோன்றி, "இந்நூல் 'சென்று தேய்ந்திறுதல்' என்னுங் குற்றத்தின்பாற் படாதோ?" என்று கூறிவிடுதல் கூடும், அல்லது பாவித்தல் கூடுமன்றோ? அவ்வித வித்தியாச அபிப்பிராயம் உண்டாகாதிருத்தற்பொருட்டு, உரையாசிரியர் அனுசரித்த ஏற்பாட்டையும், அவர் அபிப்பிராயத்தையும் ஈண்டுக் கூறுகின்றேன்.

நீதிநெறிவிளக்கச் செய்யுளின்கண் அமைந்துள்ள பதங்களில் முன்வந்துள்ள பதங்களே பின்னரும் வந்திருத்தல் கண்கூடு. ஒருமுறை இலக்கணம் வகுத்த பதம் பின் ஓர் இடத்தில் வரும்போது அந்தப் பதத்திற்கு இலக்கணம், முன்னுள்ள அல்லது பின்னுள்ள இன்ன செய்யுளின் உரைப்பாகத்தில் இன்ன இலக்கமுள்ள உரைத் தொடரில் காண்க என்று கூறியுள்ளார்.

இதோடு, முன் ஒருமுறை இலக்கணம் வகுத்த பதம் பின்னரும் வேறிடத்தில் வரும்போது, அதற்கும் இலக்கணம் வகுத்த சந்தர்ப்பமு மிருக்கிறது. அவ்வாறு இலக்கணம் வகுக்காமல் பதத்தைமட்டும் குறிப்பிட்டு முன் இன்ன செய்யுளின் விருத்தியுரையில் இன்ன இலக்கத்தொடரில் கண்டுகொள்க என்றும் கூறியிருக்கிறார். ஒருகால் பின் குறிப்பிட்ட பதம் முன்வந்துள்ள அசல் பதமாகவு மிருத்தல்கூடும், அன்றி, அந்த இலக்கணம் அமைந்த வேறு பதமாகவும் இருத்தல்கூடும்.

விருத்தியுரையுள் மேற்கோள்களாகக் காட்டியுள்ள வினையுருபுகள் என்னும் விஷயத்திலும் அதிற் குறிப்பிடப்பட்ட இலக்கத்தைக் குறிப்பிட்டுக் கூறியிருக்கின்றார்.

இந்நூலிற் பழகுவார்கள் மேற்கூறிய குறிப்புக்களை முன்னர்த் தெரிந்துகொள்ளுதல் அவசியமாம். இன்றேல் குழப்பம் உண்

டாதல் கூடும். அதுபற்றியே இவ்விஷயங்களை ஈண்டுக் குறிப்பிடும்படியான சந்தர்ப்பம் வாய்த்தது.

உரையாசிரியரவர்கள் ஈற்றிலுள்ள சில செய்யுள்கட்கு உரை முன் பகுதிகளுக்குக் கூறியதுபோன்று விசேடித்துக் கூறாமல் சுருக்கி வரைந்ததற்குக் காரணம் வருமாறு :—

உரையில், பதங்கட்கு முன் வகுத்துள்ள இலக்கணக் குறிப்பு முதலிய விசேடங்களின் பயிற்சியைக்கொண்டு, மாணவர்கள், பின் வந்துள்ள பதங்கட்கும் தாமாகவே ஊகித்துணர்ந்து உரை முதலிய விசேடங்களை அறிந்துகொள்ளுதலில் விசேடபயிற்சி யுண்டாமாறு உரையாசிரியர் இவ்விதியை யனுசரித்தன ரென்க. நூலின் பெரும்பாகங்கட்கு விருத்தியுரை யியற்றிய ஆசிரியர், பின்னர் உள்ள செய்யுள்கட்கும் ஒரே விதமாக உரை வகுப்பதென்றால், அஃது ஒரு பெருங் காரியமன்றே.

இது விஷயத்தைப்பற்றி உரையாசிரியர் தமது ஆங்கில முகவுரையிற் கூறியுள்ள அபிப்பிராயத்தையே ஈண்டுக் குறிப்பிடுகின்றேன். அது வருமாறு :—

“ . . . . This it is believed is only a practical study of grammar, and in studying to make the work lead the student to think for himself also, I have made the explanation towards the end of the book as few as possible by omitting to explain those words whose analogous forms have been already explained in previous instances.

Almost all the words of the poem are analysed, and a chapter of analysis has also been introduced.”

இப்போது அமைந்துள்ள நூதன முறையின்படி நீதிநெறி விளக்க வுரையை இதுகாறும் எவர்களும் பதிப்பித்தது கிடையாது.

இந்நூலுள் என்னையு மறியாமல் ஏதேனும் பிழை நேர்ந்திருத்தல் கூடும். அதனிமித்தம் கல்வியறிவிற் சிறந்த பெரியோர்கள் அடியேனை மன்னித்தருளுமாறு பிரார்த்திக்கின்றேன்.

இந்நூலை எனது நண்பரும், ஆரணி போஸ்டு ஹைஸ்கூல் தமிழ்ப்புலவராயிருந்தவரும், மனோரஞ்சிதம், பக்த விஜயம், இராமாயணம், பெரியபுராணம், சிற்றின்பவெற்றி வசனம், நளவெண்பா மூலமும் தெளிபொருள் விளக்க விரிவுரை, வேழமுகம் உலகநீதி உரை, நீதிசாரம் உரை, நீதி வெண்பா உரை, நீதி சூடாமணி உரை முதலிய பல நூல்களின் ஆசிரியருமாகிய செந்தமிழ்வாணர் திருவாளர் - மதுரகவி - ம. மாணிக்கவாசகம் பிள்ளையவர்கள்: இந்நூலை அதிக சிரமத்துடன் பரிசோதனை செய்து தந்தமைக்காக அன்னார்க்கு என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றேன். எனது அபீஷ்டப்படி அச்சிட்டு முடித்த ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புத்தகசாலையின் உரிமையாளர் திருவாளர் சை. ந. பாலசுந்தரஞ் செட்டியாரவர்களுக்கும் என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றேன்.

ஒன்றுக்கும் பற்றாத அடியேனை இவ்வித விஷயங்களில் ஊக்கியருளும் எல்லாம் வல்ல இறைவன் திருப்பாத கமலங்களை மனமொழி மெய்களால் வந்திப்பதோடு, ஸ்ரீ சற்குரு மூர்த்தியின் திருவடிகளையும் வந்திக்கின்றேன்.

இந்நூல் இந் நிலவுலகில் என்றும் நிலவி வாழுமாறு எம்பெருமானைப் பிரார்த்திக்கிறேன். சுபம்.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் சேவடி வாழ்க.
மஹான் சாது ஸ்ரீ சை. இரத்தின சற்குரு திருவடி வாழ்க.
தர்மமும் சத்தியமும் தழைத்தோங்குக.
பிரஜைகள் அனைவரும் அன்புற்று இனிது வாழ்க.

நெ. 3, மேட்டுத் தெரு,
G. T., சென்னை.
15—1—1929.

இங்ஙனம்,
தாஸன்,
அ. மஹாதேவ செட்டி.

கடவுள் துணை

நீதிநெறி விளக்கம்

விஷய அட்டவணை

செய்யுள் இலக்கம்	விஷயம்	பக்கம்
க	கடவுள் வாழ்த்து	க
உ	கல்வியின் சிறப்பு	ச
௩	கல்வியின் பயன்	அ
ச	சொல் வன்மை	கக
ரு	சொல்வன்மையின் சிறப்பு	கச
சு	புன்புலவர் இழிவு	கஎ
எ	புலவர் புகழ்	உ0
அ	கற்றலே நன்று	உரு
கூ	புன்புலவர் செயல்	உஎ
க0	நல்கூர்ந்தார் கல்வி நலம் பெருமை	உகூ
கக	செல்வச் சிறப்பு	௩உ
கஉ	தவத்தின் சிறப்பு	௩ரு
க௩	கல்விநலனே கலன் எனல்	௩அ
கச	கல்விச்செருக்கு ஆகாதெனல்	ச0
கரு	கற்றாரைக் கண்டு பொறாமை கொள்ளின் கல்வி வருமெனல்	ச௩
கசு	பணிவுடையாரிடத்தே செல்வஞ் சிறந்து விளங்குமெனல்	சசு
கஎ	பெரியாரியல்பு கூறல்	சஅ
கஅ	தற்புகழ்ச்சியுடையார் செய்யும் அறம் அறம் ஆகாதெனல்	ரு0
ககூ	தற்புகழ்ச்சி கூடாதெனல்	ருஉ
உ0	நன்குமதிப்பு வருதற்கேது கூறல்	ருச

செய்யுள் இலக்கம்	விஷயம்	பக்கம்
உக	தாங் கற்றவா ரெழுகாதாருரை வெற்றுரையா மெனல்	ருசு
உஉ	வித்தையை விற்பவர் நற்பயன் அடையா ரெனல்	ருகூ
உங	கல்வியறிவில்லாதார் தம் உரையால் அவமான மடைவ ரெனல்	சுக
உச	கல்வி அறிவுடையாரிடத்தே சிறந்து விளங்கு மெனல்	சுங
உரு	கல்லார்க்குக் கற்றூர் பொல்லா ராவரெனல்	சுரு
உசு	மேன்மக்கள் பிறருதவியை நோக்கியிரார்; கீழ் மக்கள் அதனை நோக்கி யிழிவுறுவ ரெனல்	சுஅ
உஎ	இவரிவர்க்கு இவரிவர் தெய்வ மெனல்	எ0
உஅ	கொடுங்கோல் வேந்தர் நன்மை யடையா ரெனல்	எஉ
உகூ	கொடுங்கோல் வேந்தர்க்கும், செங்கோல் வேந்தர்க்கும் வரும் பயன் கூறல்	எச
ங0	கொடுங்கோல் வேந்தன் வேடனிலுங் கொடிய னெனல்	எசு
ஙக	கொடுங்கோல் வேந்தன் பிணத்திற் கொப்பாவ னெனல்	எஅ
ஙஉ	செங்கோல னியல்பு கூறல்	அ0
ஙங	அரசன் பிறர் கூறுவதை நம்பியிராது, அதனது உண்மையை யாராய்ந்தறிதல் வேண்டுமெனல்	அங
ஙச	கீழ்மக்க ளியல்பு கூறல்	அரு
ஙரு	கெடுவது காட்டுங் குறி இவை யெனல்	அசு
ஙசு	பெரியார்க்குப் பிழை செய்வார்க்குத் தவறாது கேடுண்டா மெனல்	அகூ
ஙஎ	மேன்மக்க ளியல்பு கூறல்	கூக
ஙஅ	செல்வர்க்கழகு சுற்றத்தார்க் குதவுத லெனல்	கூங
ஙகூ	ஒருவனை யரசன் மதித்தல் அவனுக்குப் பெரும் பாக்கியமா மெனல்	கூரு
ச0	தக்கார் தம்மை யடைக்கலமாக அடைந்தவரை எவ்வாற்றானுங் காப்ப ரெனல்	கூஎ
சக	மான மிழந்தபின் வாழாமை முன்னினி தெனல்	கூகூ

செய்யுள் இலக்கம்	விஷயம்	பக்கம்
சஉ	சாதற் கஞ்சாதவர் இவரிவ ரெனல்	க0க
சங	மெய்ப்பயன் கொண்டார் சாதற் கஞ்சார்; ஏனையோர் அதற்கஞ்சுவ ரெனல்	க0ங
சச	அரச னெவ்வழி அவ்வழிக் குடி யெனல்	க0சு
சரு	அமைச்ச ரியல்பு கூறல்	க0அ
சசு	அரச னியல்பு கூறல்	கக0
சஎ	அரசர்க்கு அயலாகும் ஆர்வலரு மில்லை யெனல்	ககஉ
சஅ	அரசரை யடுத்திருப்பவர் அவலமாகப் போகா ரெனல்	ககச
சகூ	எடுத்துக்கொண்ட காரியத்தை நிலைபெறச் செய்தல்வேண்டு மெனல்	ககசு
ரு0	அறிவுடையோர் ஊழை நோக்கி முயற்சியை விட்டிடா ரெனல்	ககஅ
ருக	முயற்சி ஊழினுஞ் சிறந்த தெனல்	கஉ0
ருஉ	செய்தற்குரிய காரியத்தைக் காலமுதலியன அறிந்து செய்தல்வேண்டு மெனல்	கஉக
ருங	கருமமே கண்ணாயினார் இயல்பு கூறல்	கஉச
ருச	பகைவரை அற்பரென இகழ்தல் கூடா தெனல்	கஉசு
ருரு	அகப்பகைவர்க்கு மிக அஞ்சல்வேண்டு மெனல்	கஉஎ
ருசு	அகப்பகைவரை விட்டு அகலல்வேண்டு மெனல்	கஉகூ
ருஎ	நட்பினரிடத்துத் துரோகஞ் செய்பவர் விரைந்தழிவ ரெனல்	கங0
ருஅ	வெறுப்புடையார்க்கு நன்மையும் விருப்புடையார்க்குத் தீமையும் தோன்று வெனல்	கஙஉ
ருகூ	அன்பர் வன்சொல்லும் இன்சொல்லே, வன்பர் இன்சொல்லும் வன்சொல்லே எனல்	கஙச
சு0	பொய் பொறாமைமுதலிய மறநெறி விலக்கே அறநெறி யெனல்	கஙசு
சுக	நல்லோர் கெடினும் அல்லோராகா ரெனல்	கஙகூ
சுஉ	குலப்பழி வாராமற் பிழைப்பவனே உழைப்பவனு மெனல்	கசக
சுங	வஞ்சனையாற் றேடியபொருள் மாயமாயழியுமெனல்	கசஉ

செய்யுள் இலக்கம்	விஷயம்	பக்கம்
சுசு	ஆசை யடங்காதார்க்கு ஆக்கம் அறிதெனல்	கசச
சுரு	அறவழியிற் பொருள் தேடுபவரே திரண்ட செல்வ முடையவ ராவா ரெனல்	கசசு
சுசு	உத்தமர் மத்திமர் அதமர் செல்வங்கள் முறையே பொதுப்பெண், குலப்பெண், கைம்பெண் நலம்போலா மெனல்	கசஅ
சுஎ	ஈயாதான் செல்வத்திலும் ஈவான் வறுமையே ஏற்ற மெனல்	கசகூ
சுஅ	ஈகை யிலையெனினும் இன்சொல்லேனும் பேச வேண்டு மெனல்	கருக
சுகூ	சொல்வன்மையைப் பிறர்க்குப் பயன் படுத்த வேண்டு மெனல்	கருங
எ0	அறவோர் சிறு முயற்சியாற் பெரும் பயன் பெறத் தாழா ரெனல்	கருரு
எக	முடியாத காரியத்தையு முடியு மெனல், நம்பவைத்துத் தலையை வாங்குவதா மெனல்	கருசு
எஉ	அறிந்தடங்கி வாழ்வாரை அகிலத்திற் காண்பதரிது	கருகூ
எங	பிறர் குற்றமே கண்டு நகைப்பவனைக் கொலையாளி போல் அஞ்சவேண்டு மெனல்	கசுக
எச	தெய்வ தண்டனை: தெய்வம் உண்டு என்பார்க்கு உண்டு, இல்லை யென்பார்க்கு இல்லை யெனல்	கசுங
எரு	தீயோர் செல்வங்கள் பெருகினும் நல்லனவாகா வெனல்	கசுரு
எசு	சான்றோர் புகழும் நல்லோர்: ஊழ் வலியால் தீய செயினும் அல்லோராகா ரெனல்	கசுசு
எஎ	பிறன்மனை புகாமை அறனெனத்தகு மெனல்	கசுஅ
எஅ	கருமமும் தருமமுங் கெடாமல் காரிகையாரைச் சேர்தல் சிற்றின்ப வெற்றியா மெனல்	கஎ0
எகூ	காமிகள் பழிபாவத்துக்கு அஞ்சா ரெனல்	கஎக
அ0	காமிகளுக்குக் கண்ணில்லை யெனல்	கஎங
அக	கற்புடையாளே பொற்புடையா ளெனல்	கஎச
அஉ	கற்பிலாள் கணவனை வஞ்சிப்பா ளெனல்	கஎசு

செய்யுள் இலக்கம்	விஷயம்	பக்கம்
அ௩	கற்பிலாக் குலமகளின் விலைமகளே ஏற்றமெனல்	௧௭அ
அ௪	கற்பிலாப் பெண்டிர் பெரும் பாவிகளெனல்	௧அ௦
அ௫	அறிவிகள் பெண்களை வெறுப்பாரெனல்	௧அ௨
அ௬	பெரியோர் நித்திரை சுகமுதலியவற்றை இச்சியாரெனல்	௧அ௩
அ௭	ஞானிகள் தம் ஊன உடலை மதியார் எனல்	௧அ௫
அஅ	ஞானிகள் சிற்றின்பத்தைப் பொருட்படுத்தார் எனல்	௧அ௭
அ௯	ஞானிகளுக்குப் பெண்ணாசை கூடாதெனல்	௧அ௬
௯௦	அறன்வழி நில்லார் பிறப்பறாரெனல்	௧௯௧
௯௧	இளமையிலேயே தவமியற்ற வேண்டுமெனல்	௧௯௨
௯௨	ஊழை வெல்ல ஒருவரானு மாகாதெனல்	௧௯௪
௯௩	வெளித் துறவினும் மனத்துறவே மாண்புடைத்தெனல்	௧௯௬
௯௪	வஞ்ச நெஞ்சர் கடவுளை அஞ்சவேண்டுமெனல்	௧௯அ
௯௫	மறைவிற் கூறிய பழிமொழி விரைவில் வெளியாமெனல்	௨௦௦
௯௬	நிலை திரியின் மெலியாரினும் வலியாரே வருந்தியழிவரெனல்	௨௦௧
௯௭	மேலோர் செய்கை தீயவேபோலினும் நன்மையேயாமெனல்	௨௦௩
௯அ	சிவயோகிகள் உலகத்தவர்போலொழுகினும் பற்றற்றிருப்பரெனல்	௨௦௫
௯௯	உண்மை நெறியாளர் ஐம்புலன்களை அடக்குவாரெனல்	௨௦௭
௧௦௦	துறந்தார் துய்க்கும் இன்பமே இன்பமெனல்	௨௦அ
௧௦௧	கற்றுத் தெளிந்தோரே வீட்டுநெறி நிற்பரெனல்	௨௧௦
௧௦௨	கண் விழிப்பத் தூங்கும் சிவ யோகிகள் காண்பதே காட்சியெனல்	௨௧௨

நீதிநெறி விளக்கம் விஷய அட்டவணை முற்றிற்று.

நீதிநெறி விளக்கம் செய்யுள் முதற்குறிப்பும், திருக்குறள் மேற்கோள் செய்யுள் முதற்குறிப்பும்

செய்யுள் இலக்கம்	நீதிநெறி விளக்கம் செய்யுள் முதற்குறிப்பு	திருக்குறள் மேற்கோள் செய்யுள் முதற்குறிப்பு	பக்கம்
க	நீரிற்குமிழியிளமை	கோளில் பொறியிற் குணமிலவே	ச
		ஒருமைக்கட் டான்கற்ற	எ
உ	அறம்பொருளின்பமும்	கேடில் விழுச்செல்வம் கல்வி	,,
ங	தொடங்குங்காற்றுன்ப	உடையார்மு னில்லார்போ	கக
ச	கல்வியே கர்புடை	கேட்டார்ப் பிணிக்குந் தகைய	கச
ரு	எத்துணைய வாயினுங்	இணரூழ்த்து நாறா மலரனையர்	கஎ
சு	அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வி	கல்லாதவரு நனிநல்லர்	உ0
எ	கலைமகள் வாழ்க்கை	யாதானு நாடாமா லூராமா	உங
அ	நெடும்பகற் கற்ற	கல்லாதான் சொற்காமுறுதல்	உசு
கூ	வருந்தித்தாங் கற்றன	அரங்கின்றி வட்டாடியற்றே	உகூ
க0	எனைத்துணையவேனு	நற்பொருணன் குணர்ந்து	ஙக
கக	இன்சொல்லன் றாழ்நடைய	இல்லாரை யெல்லாரு மெள்ளுவர்	ஙச
கஉ	இவறன்மை கண்டு	அறத்தா றிதுவென வேண்டா	ஙஎ
கங	கற்றோர்க்குக் கல்விநலனே கலன்	எண்ணென்ப வேனை யெழுத்தென்ப	ச0
கச	முற்று முணர்ந்தவரில்லை	கல்லாவொருவன் றகைமை	சஉ

செய்யுள் இலக்கம்	நீதிநெறி விளக்கம் செய்யுள் முதற்குறிப்பு	திருக்குறள் மேற்கோள் செய்யுள் முதற்குறிப்பு	பக்கம்
கரு	தம்மின் மெலியாரை நோக்கி	உடையார்மு னில்லார்போ	சரு
கசு	கல்வியுடைமை பொருளுடைமை	ஒருமை மகளிரேபோல்	சஎ
கஎ	ஆக்கம் பெரியார்	பெருமை பெருமிதமின்மை	ருo
கஅ	விலக்கிய ஓம்பி விதித்தனவே செய்யும்	பற்றற்றேமென்பார் படிற்றொழுக்க	ருஉ
ககூ	தன்னை வியப்பிப்பான்	வியவற்க வெஞ்ஞான்றும் தன்னை	ருச
உo	பிறரார் பெருஞ்சுட்டு வேண்டுவான்	துன்புறூஉந் துவ்வாமை யில்லாகும்	ருசு
உக	கற்றுப் பிறர்க்குரைத்துக்	ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந்	ருஅ
உஉ	பிறர்க்குப் பயன்பட	குன்றி னனையாருங் குன்றுவர்	சுo
உங	கற்பன ஊழற்றூர்	நுண்மாணுழைபுலமில்லா	சுங
உச	போக்கறு கல்வி	கல்லாதா னொட்பங்	சுரு
உரு	கற்றன கல்லார் செவிமாட்டி	காணாதாற் காட்டுவான்	சுஎ
		குற்றமே காக்க பொருளாக	,,
உசு	வேத்தவை காவார் மிகன்மக்கள்	புணர்ச்சி பழகுதல் வேண்டா	சுஅ
உஎ	குலமகட்குந் தெய்வம் கொழுநனே	தெய்வந் தொழாஅள்	எக
		முறைசெய்து காப்பாற்று மன்னவன்	,,
		செவிகைப்பச் சொற்பொறுக்கும்	,,
உஅ	கண்ணிற்சொலிச் செவியினோக்கு மிறைமாட்சி	கூழுங்குடியு மொருங்கிழக்குங்	எங

செய்யுள் இலக்கம்	நீதிநெறி விளக்கம் செய்யுள் முதற்குறிப்பு	திருக்குறள் மேற்கோள் செய்யுள் முதற்குறிப்பு	பக்கம்
௨௯	குடிகொன் றிறைகொள்ளும் கோமகற்குக்	குடிதழீஇக் கோலோச்சு	௭௫
		கடுமொழியுங் கையிகந்த கண்டமும்	,,
௩௦	இன்று கொளற்பால நாளை கொளப்பொருன்	கொலைமேற் கொண்டாரிற் கொடிதே	௭௭
௩௧	முடிப்ப முடித்து	இடிப்பாரை யில்லாத வேமரா மன்னன்	௭௯
௩௨	ஒற்றிற் றெரியா சிறைப்புறத்தோர்து	ஒற்றிஞற்றெற்றிப் பொருடெரியா	௮௧
௩௩	ஏதிலார் யாதும் புகல	எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினு	௮௪
௩௪	கண்கூடாப் பட்டது கேடெனி	நன்றறிவாரிற் கயவர் திருவுடையர்	௮௬
௩௫	நட்புப் பிரித்தல்	தேரான் றெளிவுந்	௮
		பல்லார் பகைகொளலிற்	,,
		வகையறச் சூழா தெழுதல்	,,
௩௬	பணியப்படுவார் புறங்கடையாகத்	இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுக	௯௧
		எரியாற் சுடப்படினு முய்வுண்டா	,,
௩௭	கண்ணேக் கரும்பா	முகத்தா னமர்ந்தினிது நோக்கி	௯௨
௩௮	வாங்குங் கவளத் தொருசிறிது	சுற்றத்தாற் சுற்றப்படவொழுகல்	௯௪
		செயற்பால செய்யா திவறியான்	௯௫
௩௯	மாகஞ் சிறுகக் குவித்து	மன்னர் விழைப விழையாமை	௯௭
௪௦	களைகணைத் தம்மடைந்தார்க்	அன்பிலாரெல்லாந் தமக்குரிய	௯௮
		நத்தம்போற் கேடும்	,,

செய்யுள் இலக்கம்	நீதிநெறி விளக்கம் செய்யுள் முதற்குறிப்பு	திருக்குறள் மேற்கோள் செய்யுள் முதற்குறிப்பு	பக்கம்
௪௧	தம்முடை யாற்றலு மானமுந்	ஒட்டார்பின் சென்றொருவன்	௧௦௦
		மருந்தோமற் றூனோம்பும்	,,
௪௨	கலனழிந்த கற்புடைப் பெண்டிரு	கூற்றுடன்று மேல்வரினுங்	௧௦௨
௪௩	புழுநெளிந்து புண்ணழுகி	உயிர்க்குறுதி யெல்லாம்	௧௦௫
		மற்றுந் தொடர்ப்பாடெவன்கொல்	,,
௪௪	இகழினிகழ்ந்தாங் கிறைமகன்	குறிப்பறிந்தி காலங்கருதி	௧௦௭
௪௫	செவிசுடச் சென்றூங்	அறிகொன் றறியானெனினு	௧௦௯
௪௬	கைவரூஉம் வேந்த	கொளப்பட்டே மென்றெண்ணி	௧௧௧
௪௭	பழமை கடைப்பிடியார்	பழையமெனக் கருதிப்	௧௧௩
௪௮	மன்னர் புறங்கடை காத்து	தெய்வத்தா னாகாதெனினு	௧௧௫
௪௯	உறுதிபயப்ப கடைபோகாவேனு	கலங்காது கண்டவினைக்கட்	௧௧௭
௫௦	முயலாது வைத்து	கூற்றங் குதித்தலுங் கைகூடு	௧௧௯
௫௧	உலையா முயற்சி களைகணு	ஊழையு முப்பக்கங் காண்ப	௧௨௧
௫௨	காலமறிந்தாங் கிடமறிந்து	பகல்வெல்லுங் கூகையை	௧௨௩
		நெடும்புனலுள் வெல்லு	௧௨௪
௫௩	மெய்வருத்தம் பாரார்	துன்பமுறவரினுஞ் செய்க	௧௨௫
௫௪	சிறியபகையெனினு	இளைதாக முண்மரங் கொல்க	௧௨௭
௫௫	புறப்பகைகோடியின் மிக்குறினு மஞ்சார்	வாள்போற் பகைவரை யஞ்சற்க	௧௨௮
௫௬	புறநட் டகம்வேர்ப்பார்	முகத்தினினிய நகாஅ	௧௩௦

செய்யுள் இலக்கம்	நீதிநெறி விளக்கம் செய்யுள் முதற்குறிப்பு	திருக்குறள் மேற்கோள் செய்யுள் முதற்குறிப்பு	பக்கம்
ருஎ	நட்பிடைக் குய்யம்வைத்	மனத்தினமையாதவரை	கஙஉ
		கனவினு மின்னாதுமன்னோ	,,
ருஅ	மனத்த கறுப்பெனி	அழிவந்த செய்யினு மன்பறார்	கஙங
ருகூ	இனியவ ரென்சொலினு மின்சொல்லே	நகுதற் பொருட்டன்று	கஙரு
		நட்டார்போ னல்லவை சொல்லினு	கஙசா
சா0	பொய்குறளை வன்சொற்	அழுக்காறவாவெகுளி	கஙஎ
		கதங்காத்துக் கற்றடங்க	கஙஅ
சாக	நல்லா ரொழுக்கின் றலைநின்றார்	இடனில் பருவத்து மொப்புரவிற்	கச0
		ஊழிபெயரினுந் தாம் பெயரார்	,,
சாஉ	குலம்விற்றுக்கொள்ளும் வெறுக்கையும்	குற்றமிலனாய்க் குடிசெய்து	கசஉ
சாங	இடைதெரிந் தச்சுறுத்து	அழக்கொண்டவெல்லா மழப்போ	கசச
சாச	பெற்ற சிறுகப் பெறாத பெரிதுள்ளுஞ்	வேண்டாமையன்ன விழுச்செல்வம்	கசரு
சாரு	தத்த நிலைமைக்குங் குடிமைக்குந்	அஃகாமை செல்வத்திற்	கசஎ
சாசா	பொதுமகளே போலுந்	வைத்தான் வாய்சான்ற பெரும்பொரு	கசகூ
சாஎ	வள்ளன்மை யில்லாதான்	ஏதம் பெறுஞ்செல்வந் தான்றுவ்வான்	கருக
சாஅ	ஈகை யரிதெனினு	இன்சொலினிதீன்றல் காண்பா	கருஉ
சாகூ	சொல்வன்மை யுண்டெனிற்	கல்லாதவரிற் கடையென்ப	கருச
எ0	சிறுமுயற்சி செய்தாங்	பெருமையுடையவ ராற்றுவா	கருசா
எக	செயக்கடவ வல்லனவுஞ் செய்து	சொல்லுதல் யார்க்கு மெளிய	கருஅ
		இறப்பேபுரிந்த தொழிற்றாஞ்	,,

செய்யுள் இலக்கம்	நீதிநெறி விளக்கம் செய்யுள் முதற்குறிப்பு	திருக்குறள் மேற்கோள் செய்யுள் முதற்குறிப்பு	பக்கம்
எஉ	அல்லன செய்யினு	கடனென்ப நல்லவையெல்லாங்	க௬0
		அகப்பட்டியாவாரைக் காணி	க௬க
எ௩	பகையின்று பல்லார்பழி	பல்லார்முனியப் பயனிலசொல்லுவான்	க௬உ
எ௪	தெய்வ முளதென்பார்	பிறர்க்கின்னா முற்பகற்செய்யிற்	க௬௪
எ௫	தீயசெயல் செய்வாராக்கம்	இலனென்று தீயவைசெய்யற்க	க௬௬
எ௬	நன்மக்கள் செந்நாத் தழும்பிருக்க	பிறர்பழியுந் தம்பழியு நாணுவார்	க௬எ
எஎ	பிறன்வரை நின்றாள்	பிறன்பொருளாட் பெட்டொழுகும்	க௬௯
எஅ	கருமஞ் சிதையாமே	காதலகாத லறியாமை	கஎக
எ௯	கொலையஞ்சார்	பகைபாவமச்சம் பழியென	கஎஉ
அ0	திருவினுநல்லாள் மனைக்கிழத்தி	எளிதென வில்லிறப்பா னெய்து	கஎ௪
அக	கற்புடுத்தன்பு முடித்து	மங்கலமென்ப மனையாட்சி	கஎஎ
		பெண்ணிற் பெருந்தக்க யாவுள	,,
		பெறுமவற்றுள் யாமறிவதில்லை	கஎஅ
அஉ	எஞ்ஞெழின்மிக்கா	அன்பின் விழையார்	கஎஎ
அ௩	கற்பின் மகளி	புகழ்புரிந்தில்லிலோர்க்கில்லை	கஎ௯
		எற்றிற்குரியர் கயவர்	,,
அ௪	முறையுங் குடிமையும்	பொருட்பெண்டிர்	கஅக
அ௫	பெண்மை வியவார்	களவென்னுங் காரறிவாண்மை	கஅ௩
அ௬	துயிற்சுவையும்	செவிக்குண வில்லாதபோழ்து	கஅ௫
அஎ	அன்பொடருளுடைய	புக்கிலமைந்தின்று கொல்லோ	கஅ௬

செய்யுள் இலக்கம்	நீதிநெறி விளக்கம் செய்யுள் முதற்குறிப்பு	திருக்குறள் மேற்கோள் செய்யுள் முதற்குறிப்பு	பக்கம்
அஅ	சிற்றின்பஞ் சின்னீரதாயினு	சிற்றின்பம் வெஃகி	கஅஅ
		அற்றவரென்பா	,,
அகூ	எவ்வினையரேனு	அறன்வரையா னல்லசெயினும்	ககூ0
கூ0	பாபாப்பினேடே	தவஞ்செய்வார் தங்கருமஞ்செய்வார்	ககூஉ
கூக	இளையமுதுதவமாற்றுது	நெருநலுளனெருவன்	ககூச
		நில்லாதவற்றை	,,
கூஉ	நல்லவைசெய்யத் தொடங்கினு	தவமுந் தவமுடையார்க்காகு	ககூசு
		ஊழிற் பெருவலி யாவுள	,,
கூங	நெஞ்சுபுறம்பாத் துறந்தார்	தவமறைந்தல்லவை செய்தல்	ககூஎ
கூச	வஞ்சித்தொழுகு மதியிலிகாள்!	வஞ்சமனத்தான் படிற்றெழுக்கம்	ககூகூ
கூரு	மறைவழிப்பட்ட பழிமொழி	யாகாவாராயினு நாகாக்க	உ0க
கூசு	மெலியார்விழினு மொருவாற்றுனுய்ப	நிலையிற்றிரியா தடங்கியான்	உ0ங
		தலையினிழிந்த மயிரனையர்	,,
கூஎ	இசையாதபோலினு	தன்னுன்பெருக்கற்குத்	உ0ச
கூஅ	எவரெவ ரெத்திறத்த	எவ்வதுறைவதுலக	உ0சு
கூகூ	மெய்யுணர்ந்தார்	சுவையொளியூறேசை	உ0அ
க00	கற்றுத்துறைபோய	இன்பமிடையறுதீண்டு	உ0கூ
க0க	கற்றுங் கழிந்தடங்கித்	ஐயத்தினீங்கித் தெளிந்தார்க்கு	உகக
		ஐயுணர்வெய்தியக்கண்ணும்	உகக
		கற்க கசடறக் கற்பவை	உகஉ
க0உ	ஐயந்திரிபின்றளந்து	பற்றுக பற்றற்றுன்	உகங

நீதிநெறிவிளக்கம் உரையுள் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ள நூல்களின் பெயர் அகராதி

க. ஆசாரக்கோவை
உ. ஆத்திசூடி
ங. இனியவை நாற்பது
ச. ஔவையார்
ரு. ஔவை குறள்
சு. கம்பராமாயணம்
எ. கொன்றைவேந்தன்
அ. சீவக சிந்தாமணி
கூ. சூளாமணி
க0. திரிகடுகம்
கக. திருக்குறள்
கஉ. நன்னூல்
கங. ஷ்டி விருத்தியுரை
கச. நன்னெறி
கரு. நாரதபரிவிராஜ கோபநிஷத்
கசு. நான்மணிக்கடிகை
கஎ. மகாலிங்கையர் இலக்கணம்
கஅ. மநுதர்ம சாஸ்திரம்
ககூ. வாக்குண்டாம்
உ0. விசாகப்பெருமாளையர் இலக்கணம்

உ

ஸ்ரீ முருகக்கடவுள் துணை

திருக்கைலாய பரம்பரை
தருமபுரம் ஆதீனத்தைச் சேர்ந்த
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் சரித்திரச் சுருக்கம்

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திரவிடநல் திரு நாட்டிலே.

தலைமைபெற்று விளங்குகின்ற பாண்டிவளநாட்டிலே, தாமிரபரணி நதி தீரத்திலே, ஸ்ரீ வைகுண்டமென்னும் கைலாசபுரத்திலே, வேளாளர் குலத்திலே, இற்றைக்குச் சிறிது ஏறக்குறைய 310 வருடங்கட்கு முன்னர்ச் சிவ பத்தியில் சிறந்தவரும் இல்லறவொழுக்கத்திலே வழுவாதவருமாகிய சண்முக சிகாமணிக் கவிராயரென்பவர் ஒருவ ரிருந்தார். அவர், தமக்குப் புத்திரப்பேறின்மையால் தமது பெறலரும் கற்பிற் சிறந்த மனைவியாராகிய சிவகாமி சுந்தரியாரோடு மிகக் கவலை யடைந்து, அது காரணமாகத் திருச்செந்தூர் முருகக்கடவுளை உபாசனை செய்துவந்தனர். அம்முருகக் கடவுளது திருவருளினாலே ஒரு புத்திரர் அவதரித்தனர்; அதனால் அவ் விருவரும் பேருவகையுற்று, அவர்க்குச் சாதகன்ம முதலியவற்றை யுரிய பருவங்களிலே மிகுந்த சிறப்போடு செய்

வித்து, அவரை அருமை பாராட்டி வளர்த்துவருநாளில், ஐந்து வயதாகியும் அவர் பேசாமை கண்டு, ஊமையெனத் தெளிந்து, புத்திரப்பே றின்மையினும் மிக வருந்தி, முருகக்கடவுளைக் குறித்துப் பல அரிய விரதங்களை அநுஷ்டித்துவந்தனர்.

அந்நாளிலே, ஒருநாள் சண்முகசிகாமணிக் கவிராயர், மனைவியாரோடு புத்திரரையும் உடன்கொண்டு திருச்செந்தூரையடைந்து, முருகக்கடவுளைத் தரிசித்துத் துதித்து, "எம்பெருமானே! இப் புத்திரனை ஊமை தீர்த்து ஆட்கொண்டருளல் வேண்டும்" எனப் பிரார்த்தித்து, சந்நிதி முன்னுள்ள சண்முக விலாசத்திற்றனே வசித்துக்கொண்டு, "இப் புத்திரனுக்கு ஒரு மண்டலத்திற்குள் ஊமைத்தன்மை நீங்காதொழியுமாயின், மனைவியோடு பிராணத்தியாகஞ் செய்துகொள்ளக் கடவேன்" என உறுதிகொண்டு நியமமாகத் தினந்தோறும் * வதனாரம்பத்திலே ஸ்நானஞ்செய்து, முருகக்கடவுளைத் திரிகாலங்களிலும் தரிசித்து, வழிபட்டுவந்தனர். முருகக்கடவுள், அவர் பிராணத்தியாகம் பண்ணிக்கொள்ளுமாறு குறித்துள்ள அந்நாளிலே, சூரியனுதிக்க ஒரு யாம மிருக்குமளவில் சண்முக விலாசத்திலே நித்திரை செய்கின்ற அவர் புத்திரரிடத்தில் அருச்சகர் வடிவங்கொண்டு எழுந்தருளிவந்து † "குமர குருபர" என்றவரைத் தட்டி யெழுப்பி, அவரது நாவிலே தம்முடைய சடாக்ஷரத்தை யெழுதி, அவரை நோக்கி, "குழந்தாய்! விரைவிலே நமது விசுவரூப தரிசனத்திற்கு வருவாயாக!" என்று ஆக்ஞாபித்து மறைந்தருளினர். உடனே ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் தமது மாதா பிதாக்களை "அம்மா! அப்பா!" என்று தட்டி யெழுப்பி, அவர்களுக்கு நடந்த விஷயங்களை யறிவித்தனர். அது கேட்ட இருமுது குரவராகிய தாய் தந்தைய ரிருவரும் முருகக்கடவுள் தங்கள் புத்திரர்க்கருளிய

* வதனாரம்ப மென்பது சமுத்திரத்திலுள்ளதொரு ஸ்நானக் கட்டம்.

† குமரகுருபரர் என்னுந் திருநாமம் அன்றுமுதல் உண்டாயிற்று.

பெருங்கருணைத் திறத்தை வியந்து புகழ்ந்து, அப் புத்திரரோடு வதனாரம்பத்திலே ஸ்நானஞ் செய்து, நியதி முடித்து, சந்நிதியை யடைந்து, விசுவரூபதரிசனஞ் செய்துகொண்டு நின்றார்கள். அப்போது ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் முருகக்கடவுளது திருவருளினாலே தமிழ்ச் செய்யுள் பாடுஞ் சக்தி யுண்டாகப்பெற்று, கந்தர் கலிவெண்பா என்னும் ஒரு பிரபந்தத்தை அருளிச்செய்தனர்.

மற்றைநாட் பிராதக்காலத்திலே, குமரகுருபர சுவாமிகள், சிவசின்னமாகிய விபூதி உருத்திராக்ஷங்களைத் தரித்து, திருக்கோயிலை யடைந்து, சுவாமியைத் தரிசித்து, 'இனி ஞானசாரியாரைப் பெறல் வேண்டும்,' எம்ன்னும் விருப்பத்தோடு முருகக்கடவுளது திருவடிகளைத் தியானித்துக்கொண்டு பிரதக்ஷிணஞ் செய்யும்போது, அக் கடவுளது திருவருளினால் ஆகாயத்திலே, "அன்பனே! நீ இவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு உத்தரதேச யாத்திரை செய்யுங்கால் எவ்விடத்திலே உன் வாக்குத் தடைபடுமோ அவ்விடத்திலே ஞானோபதேசம் பெறக்கடவை!" என்று ஓர் அசரீரி வாக்கு அங்கே யாவருங் கேட்க எழுந்தது. அதுகேட்டு ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் திருவுள மகிழ்ந்து, திருவருளைப் புகழ்ந்து, நிலத்திலே விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தெழுந்து, தம்மை ஆண்டருளிய அக் கடவுளிடத்தில் அநுமதி பெற்று, திருச்செந்தூரை அரிதாக அகன்று, இருமுது குரவரோடு தமது ஜன்மஸ்தலமாகிய கைலாசபுரத்திற் சென்று, சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு சிலகாலம் வசித்திருந்தார். பின்பு அவர் ஒருநாள் மதுரைக்குப் போக விரும்பி, தமது தாய்தந்தையரது பிரிவாற்றாமையை இன்பமொழி கூறி நீக்கி, அவரிடத்து விடை பெற்றுக்கொண்டு, தம்பியாராகிய குமாரகவிகளும் உடன்வரப் புறப்பட்டு வரும்போது, வழியிலே மீநாட்சியம்மை பிள்ளைத் தமிழ் என்னும் ஓர் அருமைப் பிரபந்தத்தைப் பாடி முடித்து, திருப்பரங்குன்றத்தை யடைந்து, சுவாமி தரிசனஞ் செய்துகொண்டிருந்தார்.

அன்றிரவு மீநாட்சியம்மையார், மதுரையை யாளும் அரசராகிய திருமலை நாயகர் சொப்பனத்திலே தோன்றி, "நமது

குமாரனாகிய சுப்பிரமணியனது கிருபையைப் பெற்றவொருவன் நம்மைக்குறித்து ஒரு பிள்ளைத்தமிழ் பாடி முடித்துக்கொண்டு திருப்பரங்குன்றத்தில் வந்திருக்கின்றான் ; நீ அவனைப் பரிவாரங்களுடன் சென்று அழைத்துவந்து அப் பிள்ளைத்தமிழை நமது சந்நிதியில் அரங்கேற்றக்கடவாய்'' என்று ஆக்ஞாபித்து மறைந்தருளினர். உடனே திருமலை நாயகர் விழித்தெழுந்து, குதூகலமடைந்து, தாம் கண்ட சொப்பனத்தை யாவர்க்கும் மற்றைநாட் காலையி லறிவித்து, மிகுந்த மகிழ்ச்சியுடன் கைகளைச் சிரசிலே யஞ்சலி செய்துகொண்டு, தமது பரிவாரங்களுடன் திருப்பரங்குன்றத்திற்குச் சென்று, சுவாமிகளைத் தரிசித்து வணங்கி, "தவமுனிவரும் பெறுதற்கரிய முருகப்பிரானது திருவருளைப் பெற்ற சுவாமி! தேவரீரை அடியேன் பூர்வத்திலே புரிந்த புண்ணியத்தினால் தரிசிக்கப்பெற்றேன்'' என்று துதித்து, அவரிடத்து மீனாட்சியம்மையாரது ஆக்ஞையைத் தெரிவித்து, அவரையும் அவாருளிச்செய்த பிள்ளைத்தமிழையும் யானையின்மீ தேற்றிக்கொண்டு, மதுரையை யடைந்து, நகர்வலஞ் செய்வித்தார். பின்பு ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் திருக்கோயிலை யடைந்து, சித்திவிநாயகக் கடவுளையும் சோமசுந்தரக் கடவுளையும் தரிசித்து, துதித்துத் தொழுது மீண்டு, மீனாட்சியம்மையாரது சந்நிதியிற் சேர்ந்து அவ்வம்மையாரை நமஸ்கரித்து எழுந்துநின்றார். அப்பொழுது மீனாட்சியம்மையார், தெய்வத்தன்மை பொருந்திய தமது இளந் திருக்கோலத்தைக் அவர்க்குக் காட்டியருளினர். சுவாமிகள் அத் திருக்கோலத்தைத் தரிசித்து, 'அடியேன் செய்த பிள்ளைத்தமிழுக்கு இது பரிசுபோலும்' என்று நினைத்துப் பேராச்சரிய மடைந்து, தாம் இயற்றிய பிள்ளைத்தமிழை அவரது சந்நிதானத்திலே அரங்கேற்றுவாராயினர்.

அப்போது ஆங்குள்ள சிவனடியார்களி லொருவர் அப்பிள்ளைத்தமிழ்த் திருமுறையைப் பீடத்தி லெழுந்தருளுவித்து விதிப்படி பூசித்து வணங்கித் துதிக்க, குமாரகவிகள் அரசரது வேண்டுகோளின்படியே அதனை வாசிக்க, சுவாமிகள் அதன் பொருளை

யாவருங் கேட்டு இன்புறும்படி விரித்துப் பிரசங்கித்தார், அத் தினத்திலே அவரால் காப்புப்பருவம் ஒன்றே பிரசங்கிக்கப்பட்டது. சுவாமிகள் இவ்வாறே, தினந்தோறும் ஒவ்வொரு பருவமாகப் பிரசங்கஞ் செய்து வந்தார். அவர் வருகைப் பருவத்தைப் பிர சங்கம் செய்யும்போது மீனாட்சியம்மையார் அருச்சகாது பெண் குழந்தைபோல இளந்திருக்கோலத்தோடு திருமலை நாயகர் மடி யின்மீது எழுந்தருளியிருந்து,

“ தொடுக்குங் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ்
சுவையே யகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமைய
விமையப் பொருப்பில் விளையாடு
மிளமென் பிடியே யெறிதரங்க
முடிக்கும் புவனங் கடந்துநின்ற
வொருவன் றிருவுள் ளத்திலழ
கொழுக வெழுதிப் பார்த்திருக்கு
முயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே.”

என்னும் ஒன்பதாவது செய்யுளை வாசிப்பித்துப் பொருளுரைக்கும் போது “ இன்னு மொருமுறை நீ இச் செய்யுளை வாசிப்பித்துப் பொரு ளுரைக்க” என யாவரு மகிழ வினவி, அவர் கூறிய பொருளைக் கேட்டு வியந்து, இறுதிச் செய்யுளை வாசித்து நிறுத் தும்போது மறைந்தருளினர். அப்போது, திருமலைநாயகர் அருச்சகாது பெண் குழந்தை யென்று அதுகாறும் தாம் எண்

ணிக்கொண்டிருந்த எண்ணத்தை யொழித்து, இங்ஙன மெழுந்தருளி யிருந்தவர் மீநாட்சியம்மையாரே யென்று தெளிந்து, சுவாமிகளுக்கு அம்மையா ரருளிய திருவருளின் திறத்தைப் புகழ்ந்து கொண்டாடினார்; சபையாரும் அளவிறந்த ஆச்சரிய மடைந்தனர். சுவாமிகள் பிள்ளைத்தமிழை அரங்கேற்றிய பின்னர்த்; திருமலைநாயகர், சுவாமிகளைச் சிங்காதனத்தி லெழுந்தருளுவித்து, திருவடிகளில் வீரகண்டாமணியைத் தரித்து, பொன்னுலும் ஆரதனத்தாலும் அபிஷேகஞ் செய்து, அவர்க்கு யானை - குதிரை - சிவிகைகளையும், குடை - கொடி முதலிய விருதுகளை யுங் கொடுத்தார்.

சுவாமிகள் வருகைப் பருவத்திலன்றி முத்தப் பருவத்திலே,

"காலத் தொடுகற் பனைகடந்த
கருகூ லத்துப் பழம்பாடற்
கலைமாச் செல்வர் தேடிவைத்த
கடவுண் மணியே யுயிரால
வாலத் துணர்வு நீர்பாய்ச்சி
வளர்ப்பார்க் கொளிபூத் தருள்பழுத்த
மலர்க்கற் பகமே யெழுதாச்சொன்
மழலை ததும்பு பசுங்குதலைச்
சோலைக் கிளியே யுயிர்த்துணையாந்
தோன்றுத் துணைக்கோர் துணையாகித்
துவாத சாந்தப் பெருவெளியிற்
றுரியங் கடந்த பரநாத
மூலத் தலத்து முளைத்தமுழு
முதலே முத்தந் தருகவே
முக்கட் சுடர்க்கு விருந்திடும்
முலையாய் முத்தந் தருகவே."

என்னும் முதற் செய்யுளை வாசிப்பித்துப் பொருளுரைக்குங்கால் மீநாட்சியம்மையார் இளந் திருக்கோலமாகக் காட்சி யளித்து,

ஒரு முத்து வடத்தைச் சுவாமிகள் கழுத்தி லணிந்து மறைந்தருளினாரென்றும் சொல்லப்படுகின்றது.

அதன் பின்னர்ச் சுவாமிகள், திருமலைநாயகர் முதலியோர் வேண்டுகோளின்படி மீனாட்சியம்மை குறம், மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை என்னும் இரண்டு பிரபந்தங்களையும், சோமசுந்தரக் கடவுளைத் துதித்து மதுரைக் கலம்பகம் என்னும் ஒரு பிரபந்தத்தையும் அருளிச்செய்தனர். பின்பு ஒருநாள் திருமலை நாயகர் வெகுநேரம் வரையில் போசனஞ் செய்யாதிருந்தமை கண்டு, சுவாமிகள்,

"*வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது."

என்னுந் திருக்குறளை யெடுத்தோத, அரசர் அது கேட்டு உவந்து, "திருக்குறளென்னும் தமிழ் வேதத்தை முற்றும் ஆராய்ந்து தெளிதற்கு அடியேனுக்குச் சாவகாசமில்லை யாதலால், அதிலுள்ள நீதிகளை விளக்கிச் சுருக்கமாக அடியேன்பொருட்டு ஒரு நீதிநூல் செய்து தரல்வேண்டும்" என்று பிரார்த்தித்தனர். சுவாமிகள் அவ்வாறே நீதிநெறி விளக்கம் என்னும் இந்நூலை அருளிச் செய்து அவரிடத்துத் தந்து, அவ் வரசர் வேண்டுகோளின்படியே மீனாட்சியம்மையையும் சோமசுந்தரக் கடவுளையும் தரிசித்துக் கொண்டு, அத் தலத்திலேயே வசித்தருளினார்.

சுவாமிகள் இங்ஙனம் சிலநாட் சென்றபின்னர்த் தமது சகோதரராகிய குமார கவிகளை யழைத்து, மாதா பிதாக்களனுமதியின்படியே, தாமவதரித்த கைலாசபுரத்திலே இல்லறதருமத்தில் வழுவாது நிற்கும்படி அவர்க்குப் பணித்து விடையளித் தனுப்பிவிட்டு, தாம் நானாவித வாத்தியங்கள் முழங்க, விருதுகள் புடைசூழ, தமக்கபிஷேகித்த திரவியங்களை அரசர் வேண்டுகோளின்படியே ஒட்டகங்களின்மீ தேற்றிக்கொண்டு, மதுரையை யகன்று, தமது பிரிவிற் காற்றாது தம்மைத்

* திருக்குறள்-௩அ-ம் அதிகாரம், ௨௰௪-எ.

தொடர்ந்து வரும் அரசரையும் - மந்திரிமார்களையும் - பிறரையும் மீண்டு செல்லும்படி வற்புறுத்தி, தாம் சிவிகைமேற்கொண்டு, பாண்டி நாட்டைக் கடந்து, சோழநாட்டை யடைந்து, அங்குள்ள திரிசிராப்பள்ளி - திருவானைக்கா முதலிய தலங்களில் வசிக்கும் அடியார்கள் எதிர்கொண்டு வந்து பணியச், சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு, அவ்வத்தலங்களிலே சிலநாள் வசித்து, திருவாரூரைச் சேர்ந்து, தியாகேசப் பெருமானைத் தரிசித்துத் திருவாரூர் நான்மணிமாலை என்னும் ஒரு பிரபந்தத்தை அருளிச்செய்தனர். ஆண்டு வசிக்கும் நாளில், திருக்கைலாச பரம்பரையைச் சேர்ந்த * தருமபுரவாதீனத்திலே நான்காவது குருமூர்த்திகளா யெழுந்தருளியிருந்த ஸ்ரீ மாசிலாமணித் தேசிக சுவாமிகளது திருவருட் சிறப்பைக் கேள்வியுற்று, அவரைத் தரிசிக்க விரும்பிப் புறப்பட்டுச் சென்று, இடையிலுள்ள பல தலங்களையும் வணங்கிக்கொண்டு தருமபுரத்தை யடைந்தனர்.

சுவாமிக ளடைந்த அத் தினத்திலே, சைவ சித்தாந்த சாஸ்திரங்களையும், அவற்றிற்கு அங்கங்களாயுள்ள சாஸ்திரங்களையும், ஐயந்திரிபற ஓதி யுணர்ந்து, அவை கூறும் சரியை - கிரியை - யோக - ஞானானுசந்தானங்களை மேற்கொண்டு, குருபத்தியிற் சிறந்து விளங்கும் அடியவர் திருக்கூட்டங்களும், வேதசிவாகம விற்பன்னர்களும், சைவாசாரியர்களும், இலக்கண இலக்கியங்களில் வல்ல வித்வான்களும் புடைசூழும்படி, ஞான சூரியனைப் போல ஸ்ரீ மாசிலாமணித் தேசிகர் தக்ஷிணாபிமுகமாய் எழுந்தருளியிருந்தார். அப்போது சுவாமிகள் பரிசனங்கள் பின்னே தொடர்ந்து வர, விருதுகளோடும் அத் திருமடத்தினுள்ளே சென்று, அவரது சந்நிதியிலே உத்தரீயத்தோடு ஆசனத்தின்மீதிருந்துகொண்டு, மாசிலாமணித் தேசிகர் வினவிய வினாக்கள்

---

* இத் தருமபுரவாதீனத்தின் முதலாவது குருமூர்த்திகள் : ஸ்ரீ ஞானசம்பந்ததேசிகர் ; இரண்டாவது குருமூர்த்திகள்: ஸ்ரீ ஆநந்தபரவச தேசிகர் ; மூன்றாவது குருமூர்த்திகள் : ஸ்ரீ சச்சிதாநந்த தேசிக ராவர்.

பலவற்றிற்கும் உத்தரஞ் சொல்லிக்கொண்டு வந்தார்; மாசிலாமணித் தேசிகர் திருப் புன்முறுவல் செய்து, இறுதியிலே பெரிய புராணத்தில், *

"ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்க ணான்குஞ்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந்
திருந்துசாத் துவிகமே யாக
விந்துவாழ் சடையா னாடுமா நந்த
வெல்லையி றனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துட் டிளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்."

என்னும் திருவிருத்தத்தின் அனுபவப் பொருளை வினவினர்; வினவிய அளவில் சுவாமிகள் வாக்குத் தடைபட்டது; உடனே சுவாமிகள் இருக்கைவிட் டெழுந்து, முருகக்கடவுளது ஆஞ்ஞையை நினைந்து, மனங் கலங்கி, ஆசனத்தை யெடுத்தெறிந்துவிட்டு, உத்தரீயத்தை இடையிலே கட்டிக்கொண்டு, சந்நிதானத்திலே சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, எழுந்து நின்று அஞ்சலியஸ்தராகி, "எம்பெருமானே! ஆணவமலத்தினாலே மறைக்கப்பட்ட தமியேன் அறியாமையாற் செய்த பெருங் குற்றத்தை மன்னித்து, தமியேனை அடிமை கொண்டருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்து வணங்கினார். அதனைச் திருச்செவி யேற்ற ஞானாசாரியாராகிய மாசிலாமணித் தேசிகர் அவரை நோக்கி, "நீ காசி யாத்திரை முடித்து மீள்வையேல், உனக்கு அநுக்கிரகம் புரிவோம்" என்று வலியுறுத்த, சுவாமிகள் பின்னும் பலமுறை வணங்கி, "கருணாநிதியே! சிறியேன் தேவரீரது கட்டளையின்படி பசியினாலும், பிணி முதலியவற்றினாலும் வருந்திக் காசி யாத்திரையை முடித்துக்கொண்டு வருமளவும் தேகம் நிற்பதோ?

---

* பெரிய புராணம் தடுத்தாட்கொண்ட புராணம், ௧௦௬-வது செய்யுள்.

அதற்கு நிலையில்லை ; அன்றி இறக்கினும், பின்னரும் இம் மானுடப் பிறவியே வாய்த்துத் தேவரீர் திருவருட் பேற்றிற்குப் பாத்திரனாத லும் நிச்சய மில்லை ; ஆதலால், அடியேனது குற்றத்தைச் சிறிதும் திருவுள்ளத்திற் கொள்ளாது திருவருள் பாலித்தல்வேண்டும்" என்று பிரார்த்தித்தார். பரங்கருணைத் தடங்கடலாகிய மாலாசி மணித் தேசிகர் திருவுள மிரங்கி, "அன்பனே! அஃது இயலா தாயின், சிதம்பர ஸ்தலத்தை யடைந்து, சுவாமி தரிசனஞ் செய்து கொண்டு ஒரு மண்டலம் வசித்து வருவாயாக!" என்று அவர்க்கு ஆஞ்ஞாபித்தருளினர்

சுவாமிகள், அவ்வாஞ்ஞையைச் சிரமேல் வகித்து, அவரிடத்து அநுமதி பெற்று, சிவிகையி லாரோகணித்துத் திருப்புள்ளிருக்கு வேளூரை யடைந்து, திருக்கோவிலினுள்ளே பிரவேசித்து, வைத்தியநாத சுவாமியையும் தையனாயகி யம்மையையும் முத்துக் குமார சுவாமியையுந் தரிசித்து, வந்தித்துத் துதித்து, அத் தலத் தின் எல்லையைக் கடந்து புறத்திற் செல்லுவாராயினர். அப் போது, முத்துக்குமாரக் கடவுள் சுவாமிகளிடத்து அருச்சகர் வடிவமாக எழுந்தருளி வந்து, அவர்க்கு விபூதி கொடுத்து, "நம் மைக் குறித்து ஒரு பிள்ளைத்தமிழ் பாடுவாயாக" என்று கட்டளை யிட்டு, அந்தர்த்தான மாயினர். உடனே சுவாமிகள் "இங்ஙனம் எழுந்தருளினவர் நம்மை யாண்டருளிய முருகக்கடவுளே" என்று தேறி, நிலத்திலே விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித் தெழுந்து, மீண்டும் அத் திருப்பதியை யடைந்து, "எவ்வாறு பாடுவேன்?" என்று திகைக்குங்கால், அக் கடவுளது திருவரு ளால் "பொன்பூத்த குடுமி" என்று ஓரசரீரி வாக்கு எழுந்தது. சுவாமிகள் அதனையே முதலாகக் கொண்டு: முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் என்னும் பிரபந்தத்தைப் பாட ஆரம்பித்து, செங் கீரைப் பருவம் பாடும்போது, "சேத்துப் பிறக்கின்ற தெய்வங் கண் மணவாளன்" என்றும், "தேனூறு கிளவிக்கு" என்று தொடங்குங்கால் "வாயூறி நின்றவன்" என்றும், தெய்வகதியா கப் பிறர்பால் நிகழ்ந்த சொற்களைக் கேட்டு, இவையும் திருவருட்

டிறம்போலும் என்று கருதி அவற்றையும் விடாதமைத்துப் பாடி முடித்து, அதனை அக் கடவுளது சந்நிதியிலே பலருந் துதிக்கும் படி அரங்கேற்றிச் சிலநாள் அவ்விடத்திலே வசித்தார்.

பின்னர்ச் சுவாமிகள் புறப்பட்டுச் சென்று சீகாழியைப் பணிந்து, சிதம்பரத்தைச் சார்ந்து, திரிகாலங்களிலும் வழுவாமல் சுவாமி தரிசனஞ் செய்துகொண்டிருக்கும் நாளில், **சிதம்பர மும்மணிக்கோவை** என்னும் ஒரு பிரபந்த மியற்றியருளினர். அந் நாளிலே, சுவாமி தரிசனத்திற்குப் பரிசனங்களோடு செல்லுந் தருணத்தில், வழியிலே தினந்தோறும் புராணப் பிரசங்கம் செய்து கொண்டிருந்த சைவாசாரிய ரொருவர் தவிர, அது கேட்பவர் யாவரும் எழுந்து சுவாமிகளுக்கு மரியாதை செய்வார்கள். அவர்களுள்ளே ஒருவர் ஒருநாள் புராணிகரை நோக்கி, "புராணிகரே! புலவர் திலகராயும், சிவாநுபூதிப் பெருவாழ்வினராயும் விளங்குகின்ற சுவாமிகளுக்குத் தாங்கள் மாத்திரம் மரியாதை செய்யாதிருக்கின்றமைக்குக் காரணம் என்னை?" என்று வினவினர்.

அதுகேட்ட பராணிகர், "அவர் இலக்கண கவியா? வரகவி தானே" என்றார். அது பொறாத ஒருவர் அதனைச் சுவாமிகளின் திருச்செவியிற் சாத்த, சுவாமிகள் திருப் புன்முறுவல் செய்து, "மிக முயன்று அரிதிற் பெறுவது இலக்கண கவியும், அவ்வாறன்றி எளிதிற் பெறுவது வரகவியு மன்றோ? இதனை அவருணரா துரைப்பினும், அவர் சொல்லளவில் நம்மைத் துதித்தவரே யாயினர்; ஆயினும், அவர் சந்தேகத்தையும் நிவிர்த்தி செய்வோம்" என்று **சிதம்பரச் செய்யுட்கோவை** என்னும் ஒரு சிறந்த பிரபந்தத்தை அருளிச்செய்தனர். புராணிகர் அந்நூலிலமைந்துள்ள அரிய இலக்கணங்களையும், சொற்சுவை பொருட்சுவைகளையும் நோக்கி, சுவாமிகளை யடைந்து வணங்கி வேண்டிக் கொள்ள, சுவாமிகள் திருவுள மகிழ்ந்து, அவரோடு அளவளாவிய பின்பு, **சிவகாமியம்மை யிரட்டைமணிமாலை** என்னும் ஒரு பிரபந்தத்தையும் செய்தருளினர்.

சுவாமிகள் சிதம்பரத்தில் நியதி பூண்டு ஒரு மண்டலம் வசித்து, அத்தலத்தை அருமையாக நீங்கி, தருமபுரத்தைச் சார்ந்து, ஞானசாரியரைத் தரிசித்து வணங்கி, அவரைத் துதித்தியற்றிய பண்டார மும்மணிக்கோவை என்னும் பிரபந்தத்தை அவர் சந்நிதானத்திலே அரங்கேற்றினர். உடனே ஞானசாரியர் திருவுள மிக மகிழ்ந்து, சுவாமிகளை நோக்கி, "நீ இயல்பாகத் துறவியோயினும், நமது வான்முறைப்படியே அத் துறவிற்குரிய காஷாய வஸ்திரமுதலிய முக்கிய சின்னங்களையும் தரித்துக் கொள்க" எனப் பணித்து, அவரை யடிமைகொண்டு, அவர்க்கு அச் சின்னங்களை யளித்து, ஞானேபதேசமும் செய்தருளினர். சுவாமிகள் அவர்க்கு * அணுக்கத் தொண்டராகி அவ்விடத்து வசிக்கும் நாளிலே ஒருநாள், தமக்கு முன்னே பரிசாகக் கிடைத்த திரவியங்களை அந்த ஞானாசாரியர் சந்நிதியில் வைத்து ஏற்றருளும்படி பிரார்த்தித்தனர்; அவர் முன்னர்ப் பணித்தவாறே, "நீ காசியை யடைந்து இவற்றைக்கொண்டு தரும மியற்றுக" என்று திருவாய் மலர்ந்தருளினர்.

சுவாமிகள், அவ்வரிய பணியை மேற்கொண்டு, அவரிடத்து அநுமதி பெற்று, அத் திரவியங்களை ஒட்டகங்களின்மீது ஏற்றிக் கொண்டு, பரிசனங்களோடு புறப்பட்டுத் தருமபுரத்தி னெல்லையைக் கடந்து, சிவிகையில் ஆரோகணித்துச் சென்று சிதம்பர முதலிய ஸ்தலங்களை வணங்கி, காஞ்சிபுரத்தை யடைந்து, சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு வீற்றிருக்கும் நாளிலே, தம்மிடத்தில்

---

* சுவாமிகள் மாசிலாமணித் தேசிகர்க்கு அணுக்கத் தொண்டராகி வசிக்கும் நாளையிலே அவ்வவ் வமையங்களில்,

"பூதங் கடந்த புகழ்க்கூடற் சம்பந்தன் போதித்தசொல்
வாதங் கடந்து மனேலய மாயிந்து மண்டலம்போய்
நாதங் கடந்து நடுவெளி தாண்டி நலஞ்சிறந்த
போதங் கடந்தின்ப பூரண மாகிப் பொலிந்ததுவே."

என்னும் இச் செய்யுள் முதலிய சில செய்யுள்களை அருளினரென்றும் சொல்லப்படுகின்றது.

அநேக வைஷ்ணவர்களோடு வந்து சமயக் கோட்பாட்டைப்பற்றி வாதித்த பிள்ளைப்பெருமாளையங்கார் முதலியோரிடத்துப் பல பிரபல நியாயங்கொண்டு வாதஞ் செய்து, அவர்களை வென்று, அவ்விடத்தினின்றும் நீங்கி, இடையிலுள்ள திருக்காளத்தி முதலிய ஸ்தலங்களை யிறைஞ்சிக் காசியென்னுந் திவ்விய ஸ்தலத்தினெல்லையை யணுகினார். அணுகியவுடன் சிவிகையினின்று மிறங்கிக் கங்கையை வந்தித்து, அதிலே ஸ்நானஞ் செய்து தமது நியதியை முடித்துக்கொண்டு நோக்கியபோது, அக் கங்கையின் இருபுறத்திலுங் காடுகளடர்ந்து துருக்கர்களது பள்ளியும் சமாதியுமே நிறைந்திருப்பதைக் கண்டு மனநொந்து, அன்றிரவு அருநித்திரை செய்தார். அப்போது அக் காடுகளால் மறைக்கப்பட்டிருந்த கேதாரத்தி லெழுந்தருளிய சிவபெருமான் அவர்க்குச் சொப்பனத்திலே தோன்றி, "நம்மைப் பூசிப்பாயாக!" என்று ஆக்ஞாபிக்க, சுவாமிகள் அவ்வாறே மற்றைநாட் பிராம முகூர்த்தத்தில் கேதாரத்தை யடைந்து, காடுகளை அழிப்பித்து, அதனடுவே எழுந்தருளியுள்ள சிவபெருமானைப் பூசித்துத் துதித்து, பின்னர் விசுவநாதரை விசாலாட்சி யம்மையாரோடு அருச்சித்து வணங்கி, காசிக் கலம்பகம் என்னும் ஒரு பிரபந்தத்தை அருளிச் செய்தார்.

சுவாமிகள் அத் தலத்தில் வசிக்கும் நாளிலே, அந்நகரத்தை யாண்டுகொண்டு ஆங்கிருந்த டில்லி பாட்சாவைக்கண்டு வசனித்து தரும மியற்றுதற்குத் தக்க இடத்தைப் பெற விரும்பி, அவனுக்குரிய இந்துஸ்தான் பாஷையைத் தெரிவித்தருளும்படி சரஸ்வதீ தேவியைப் பிரார்த்தித்து, சகலகலாவல்லிமாலை என்னும் ஒரு பிரபந்தத்தைப் பாடத் தொடங்கினார்; ஒன்பது பாட லருளியும் சரஸ்வதிதேவி தமக்குத் திருவருள் செய்யாமை கண்டு, "மண்கண்ட வெண்குடை கீழாக மேற்பட்ட மன்னருமென், பண்கண்டளவிற் பணியச் செய்வாய்" என்னும் பத்தாவது பாட்டை அருளிச்செய்தார். உடனே சரஸ்வதியார் திருவருள் சுரந்து அப் பாஷையை விளக்கியருள, சுவாமிகள் களிகூர்ந்து, அவ்

வரசன் சமுகத்திற் கெழுந்தருளினார். அவன் சுவாமிகளது அருமை பெருமைகளைச் சிறிதும் அறியாதவனாகையால், சிங்காதனத்தி லிருந்துகொண்டே சுவாமிகளது வரலாற்றை வினவினான். சுவாமிகள் அதனாலே தமக்கு யாதொரு குறைவும் இல்லையாயினும், அவனுக்கு நேரிடும் கெடுதியை யெண்ணி அப் பாட்சாவின்மீது கருணைகூர்ந்து "மஹாராஜாவே! உம்மை ஆசீர்வதிக்க வந்த நம்மை இப்படி நிறுத்திக்கொண்டு வினவுவது தருமமல்ல" என்று உரைத்தருளினார். அது கேட்ட அரசன், "உம்மிடத்திலே தெய்வீகங் கண்டாலன்றி உமது சரீரத் தோற்றத்திற்கு நான் மரியாதை செய்யேன்" என்று கூறினான். சுவாமிகள் "அப்படியாயின், அதனை நாளையதினம் உமக்குக் காட்டுவோம்" என்று சொல்லி மீண்டு, மற்றைநாள் காளியினது அனுக்கிரகத்தால் வந்த ஒரு சிங்கத்தின்மே லேறிக்கொண்டு யாவரும் அஞ்சும்படி சபையிற் புகுந்து, அரசனை நோக்கி, "நீர் இருப்பது உயிரற்ற சிங்கம், நாம் இருப்பது உயிருற்ற சிங்கம்; ஆயினும், நீர் அஞ்சவேண்டுவதில்லை; உமக்கு மாத்திரம் இது பசுவாகத் தோன்றும்" என்று சொல்லி அதிலிருந்தபடியே அவன் வினாக்களுக்கு உத்தரங் கொடுத்து, அவனை வணங்கும்படி செய்து அங்கே வீற்றிருந்தருளினார்.

சுவாமிகள் அக்காலத்திலே அரசனையும் பிறரையும் சந்தோஷிப்பிக்கும்படி செய்த பிரசங்கங்களுள்ளே சிற்றின்பத்தைக் குறித்துள்ள பிரசங்கத்தைக் கேட்டுத் துறவிகளாய் விருத்தப்பருவமடைந்துள்ள அரசனுடைய குருமுதலியோர்களும் விரகத்தினாலே மயங்கிப் பூமியிலே விழுவார்கள்; யுத்த விஷயமாகச் செய்யும் பிரசங்கத்தைக் கேட்டு, வயோதிகர்களும் கண் சிவந்து, பற்களைக் கடித்து, ஆயுதங்களை யெடுத்துக்கொண்டு ஆரவாரிப்பார்கள். இவ்வாறு சுவாமிகள் ஒவ்வொரு விஷயத்தைப்பற்றிப் பிரசங்கிக்கும் பிரசங்கத்திலும் அவர்கள் அந்தந்த மயமாதலை அடைந்து வருவாராயினர். அவர்களுள் சில துருக்கர்கள் மற்றப் பிரசங்கங்களைப்பற்றிச் சந்தேகியாமல் சிற்றின்பத்தைக் குறித்துச்

செய்த பிரசங்கத்தில் மாத்திரம் சந்தேக முடையவராய், "இவர்க்குக் காமானுபவ மில்லாமலே சாஸ்திரத்தால் இவ் விஷயத்தில் இவ்வளவு பேசுதல் முடியுமா?" என்று கூறி, சுவாமிகளை நோக்கி, "இவர் பகற் சன்னியாசிபோலும்" என்றற்றொடக்கத் தன வற்றைக் கூறிப் பலவாறு பிதற்றுவாராயினர், அதுகண்டு சுவாமிகள், மிகவும் களிம்பேறிய ஒரு செப்புப்பாத்திரத்தை அழைப்பித்து, அவ்வாறு பிதற்றிய துருக்கர்களை நோக்கி, "நாளைக்கு இதனை மருந்தில்லாமலே பொன்னுக்குதலாகிய ஒரு இரசவாதம் செய்வோம்" என்று சொல்லி, அப் பாத்திரத்தை அவர்கள் காணும்படி மலத்திலே புதைத்தார்.

மறுநாள் அரசன் முதலிய பலரும் வந்து கூடியபின்பு, சுவாமிகள் வந்து அப் பாத்திரத்தை எடுப்பித்துச் சுத்தி செய்வித்து "இது பொன்னும்" என எதிரே வைத்தனர். முதனாள் ஆக்ஷேபித்த துருக்கர்களுட் சிலர், அது கண்டு "இது இரசவாதத்தா லன்று; மலம் புளிப்பாததால் இப் பாத்திரம் இப்படிப் பிரகாசிக்கின்றது" என்று கூறினர். உடனே சுவாமிகள் அவர்களை நோக்கி, "நீவிர் மலம் புளிப்பென்கிறீர்களே; அதனையும் புசித்து அநுபவித்தீர்கள் போலும்" என்றார். அவர்கள் அதுகேட்டு மிகவுங் கோபங் கொண்டு அவரைச் சூழ, சுவாமிகள் அவர்களை நோக்கி, "நேற்றைக்கு இப்படிப்பட்ட கோபம் நமக்கும் உண்டாயிருக்குமே?" என்று சொல்லினார். அப்பொழுது விவேகிகளாகிய அரசன்முதலாயினோர் அவர்களை யடக்கி, சுவாமிகளது புத்தியை வியந்து புகழ்ந்தார்கள். மூடர்களாகிய அத் துருக்கர்கள் முன்னையினும் மிக்க பொறாமை யுடையவர்களாய் ஒருநாள் அரசனிடத்திலே வந்து, "உமது நண்பராகிய ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் சாஸ்திரங்களில் வல்லவரேனும், அவர் கைக்கொண்ட தெய்வமோ பொய்" என்றனர்.

அது கேட்ட அரசன் அதனைச் சுவாமிகளுக்கு விண்ணப்பஞ் செய்தனன். சுவாமிகள், உண்மையை யாவர்க்கும் வெளிப்படுத்த விரும்பி, அத் துருக்கர்களது உத்தேசப்படியே

சிவக்கக் காய்ச்சிய இரும்பைக் கொணர்வித்து, "சைவ சமயமே மெய்ச்சமயமானால், அச் சமயத்திற்குரிய சிவபெருமானுக்குப் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், சூரியன், சந்திரன், ஆன்மா என்னும் எட்டுமே திருவுருவமானால், அவ்வெட்டனுள்ளும் அக்கினியே பிரதானமானால் இது சுடமாட்டாது" என்னுங் கருத்தோடு அவ் விரும்பைத் தமது திருக்கரத்திலே ஏந்தியருளினார். அது கண்ட யாவரும் அதி யற்புத மடைந்து, சிவபெருமானே பரம்பொருளென்று தெளிந்து, சுவாமிகளைத் துதித்தார்கள். பொறாமை யதிகரித்துள்ள துருக்கர்களோ தங்கள் கருத்து முற்றாமையால் முகம் புலர்ந்து, தலை கவிழ்ந்து நின்றனர்; சுவாமிகள் யாதொரு சலனமுமின்றி அரசனது வேண்டுகோளின்படியே அந்த இரும்பை எறிந்துவிட்டுச் சபையிலே வீற்றிருந்தருளினார்.

பின்னொருநாள் அத்துருக்கள் அரசனை யடைந்து, "துறவிகளுக்குச் சாதிபேதம் கூடாது" என்று சாஸ்திரங்கள் கூறுவதால், துறவியாகிய ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளுக்கு நமது கிருகத்திலே போஜனம் செய்வித்தல் வேண்டும்" எனக் கூறினர்; அது கேட்டு, அரசனும் அதற்கு உடன்பட்டவனாய் அதனைச் சுவாமிகளுக்கு விண்ணப்பஞ் செய்தனன்; சுவாமிகள் அதற் கிசைந்து, தமது வேலைக்கார னொருவனை ஒரு தட்டிலே சில செவ்வரத்தம் பூவை வைத்து ஒரு வெள்ளைப் பரிவட்டத்தினாலே மறைத்துக் கொண்டு வரும்படி நியமித்துவிட்டு, தாம் முற்சென்று, அங்கே தமக்காகப் படைக்கப்பட்டிருந்த மாமிசங்களுள் ஒவ்வொன்றையும் தனித்தனியே வினவி, "பன்றி மாமிசம் ஒன்றுமாத்திரம் தவறியதுபோலும்; ஆனால், அது நம்மிடத்தி லிருக்கிறது" என்று சொல்லி, வேலைக்காரன் கொண்டுவந்த தட்டை வாங்கும்படி கை நீட்டினார்; அதனால், அம் மிருகத்தின் பெயரையுஞ் சொல்லாத துருக்கர்களோடு அரசனும் வெட்கப்பட்டு அதனைத் தடுத்தான். சுவாமிகள் அரசனைத் தம் வயமாகக் விரும்பி, அங்கே படைத்துள்ள மாமிசங்க ளனைத்தையும் உற்று நோக்க, அவையெல்லாம் காய் கனி முதலிய பல அரிய உணவுப் பொருள்க ளாயின. அது

கண்ட அரசன் சுவாமிகளை வணங்கித் தனது குறையை யிரந்து, "இனி அடியேன் செய்யவேண்டிய பணி யாது?" என்று வினவினன்; சுவாமிகள், "உமது ஆளுகையிலுள்ள இக் காசிமா நககரத்தில் நாம் எண்ணிவந்த தருமத்தை நடத்துவதற்கு ஓரிடம் வேண்டும்" என்றார். அரசனும், "தேவரீர்க்குப் பிரீதியான இடந் தருவேன்" என்று உடன்பட்டான். அன்றிரவு சுவாமிகள்நித்திரை செய்யும்பொழுது கேதாரேஸ்வரர் அவரது சொப்பனத்திலே தோன்றி, "அன்பனே! நீ அரசனிடத்திலே உபய கருடன் வட்டமிடு மிடத்தைக் கேள்" என்று கட்டளையிட்டு மறைந்தருளினர். சுவாமிகள் விழித்தெழுந்து திருவருளைத் துதித்து, மற்றை நாள் உஷஸ்காலத்திலே கேதாரேஸ்வரரைத் தரிசித்துக்கொண்டு வெளியிலே வந்தபோது, அந்தக் கேதார கட்டத்தின் அருகில் அரசனது பள்ளிவாசலில் சிவாஞ்ஞைப்படி உபய கருடன் வட்டமிடுதலைக் கண்டு, திருவுள மகிழ்ந்து, அரசனிடத்திற் சென்று அவ்விடத்தைத் தெரிவித்தார். உடனே அரசன் யாதொரு தடையுஞ் சொல்லாமல் அந்த இடத்தில் ஒரு பெரிய திருமடங் கட்டி, அதிலே தனது முகரும் வைத்துத் தத்தஞ் செய்து, அவர்க்கு வேண்டிய சிறப்புகளையும் செய்தான். இதுவே **குமாரசாமி மடம்** என்று சொல்லப்படுகிறது.

சுவாமிகள் அத் திருமடத்திலே எழுந்தருளி யிருந்துகொண்டு, திருமலைநாயகர் கொடுத்த திரவியங்களைக் கொண்டு அவர் பெயரால் ஒரு சத்திரங் கட்டுவித்து, தருமபரிபாலனஞ் செய்தமையேயன்றி, கேதார நாதர்க்கும் ஆலய மமைத்து, விதிப்படி நித்திய நைமித்தியங்களை ஏற்படுத்தி, காலந்தோறும் சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு அத் தலத்திலேயே வசித்திருந்தனர். ஒருநாள் தமது ஞானாசாரியரைத் தரிசிக்கவேண்டுமென்னும் அன்பு அதிகரித்தலால் கேதாரநாதரையும் விசுவநாதரையும் தரிசித்து, அவரிடத்து விடைபெற்றுப் பிரயாணமாகி, இடையிலுள்ள ஸ்தலங்களையும் இறைஞ்சி, தருமபுரத்தின் எல்லையை யடைந்து, சிவிகையினின்று மிறங்கி, திருமடத்திலுள்ளே சென்று, ஞானாசாரிய

ரைத் தரிசித்து வணங்கித் துதித்துத் திருவருள் பெற்றுச் சிந் நாள் உடன் வசித்துக் காசியை யடைந்தனர்; இங்ஙனம் மூன்று முறை வந்து தரிசித்துச் சென்ற பின்பு நாலாவது முறையிலே ஞானசாரியாரது சந்நிதியிலே நின்று, "இனி அடியேனுக்கு எம் பெருமானது தரிசனத்தை விட்டு நீங்கிக் காசியி லிருக்க மன மில்லை" என்று விண்ணப்பஞ் செய்தனர். அப்போது ஞான சாரியர், பிரிவாற்ருமையால் வருந்தும் சுவாமிகளை நோக்கி,

"காட்டிருந் தாலு மலையிருந் தாலுங் கருதரிய
நாட்டிருந் தாலு நமக்கேன்ன காணல்ல தோர்கமலை
வீட்டிருந் தாண்டருள் ஞானப்ர காசன் விரைமலர்த்தாள்
கேட்டிருந் தாலும் பிறவா நெறிவந்து கிட்டிடுமே."

என்னும் கட்டளைக் கலித்துறையை அருளிச்செய்து, அவர்க்குச் சொக்கலிங்க மூர்த்தியையும் மீனாட்சியம்மையையும் கிரியா பூஜை யாக எழுந்தருளப் பண்ணிக்கொடுத்து, திருவருள் பாலித்து விடை யளித்தனர். சுவாமிகள் அவ் வாஞ்ஞையைச் சிரமேற்கொண்டு வணங்கி விடைபெற்று அங்கே எழுந்தருளி விளங்கும் சொக்க லிங்க மூர்த்தியின் சந்நிதியிலே நமஸ்கரித் தெழுந்து அரிதின் நீங் கிக், காசியை யடைந்து, சிவதருமங்களை இயற்றிக்கொண்டு, சிவானுபூதிச் செல்வராய்ச் சிலகாலம் வீற்றிருந்து, வைகாசி மாதத் திலே, கிருஷ்ணபட்ச திருதியையிலே, சிவபெருமான் திருவடி நீழலிற் கலந்தருளினர்.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் திருவடி வாழ்க.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் சரித்திரச் சுருக்கம்

முற்றிற்று.

சிறப்புப் பாயிரம்

"சீர்மலி நெடுங்கடற் செகமெலாம் பழிச்சும்
ஓர்தனி நகரி னொளிர்வைகுந் தையாந்
தாம்பிர வன்னிநீள் தகைப்புனல் வளமுடைத்
தேம்பொழி னகர்தனிற் சின்மய வடிவுகொண்
டலைக்கடன் முகட்டிரு ளறவரி யெழுந்தெனக்
கலைக்கடன் முகட்டினிற் காய்ந்திட மடமொரு
ஞாநகு ரியனு நலம்பெறத் தோன்றிப்
பேர்நிறீஇ நிணம்பயில் பெருந்தகை வைவேல்
நரபதி திருமலை நாயக் கன்புகழ்ப்
பெருமையு முதலவன் பேரரு ளுங்கொடு
நூற்குவை நுதலிய நுண்பொரு டருமனைத்
தாற்றலு மோதா தறிந்துமால் பொதியத்
தடவரை மாமுனி தருந்தமி ழேசிறப்
புடையதா மாதலி னுவந்துசெந் தமிழிற்
கலிவெண் பாமுதற் கருதிய பன்மூன்
றொலிபெறு பிரபந் தமுமுறைத் ததன்பின்னர்
வேதமா கமமுயர் மிருதிநூ லனையபா
லோதவெண் கடலிடை யுணர்வின்மந் தரமா
மூழியான் ஞெலிந்தக மூயமன் பதையுய
வேழநற் சொற்சுவை விளாவிய யெழில்நயச்
சிறுவரும் வேட்புறச் செய்குவா னீதி
நெறிவிளக் கப்பெயர் நெடுமெழி் தளித்தனன் ;
ஐந்தெனு மளவு மழக்குண மகன்றிடா
மைந்தனற் செழுங்கௌ மாரநீங் கியமுன்
சொல்லரும் வாலிபத் துகளில்சந் நியாசியாய்
வல்முனி மாசிலா மணிபால் வளர்ந்தோன் ;
தயங்கிய மாண்புடைத் தம்பிரா னெனும்பெயர்
வயங்கிடத் தர்ம மடமெலாம் புரந்தோன் ;
காசினி துதித்திடுங் கங்கைமா நதியணி
காசியின் மடத்தினற் காந்தனு வுரவோன் ;
குவளைமா மலருரங் குலவிய குலத்தினன் ;
சிவசம யத்தினன் செழும்பொருட் கவிஞர்தன்
தமரென ஞான்றுந் தயங்கிய
குமர குருபரக் கோதில்செம் முனியே."

"வெறுவிதி நவமாய் விளம்பில னென்க."

"பயன்படு சிலவிதி பகர்ந்தன னென்க.
முன்னொடு பின்மலை வுள்ளனபோல
வருவன வெல்லாம் பிறர்மத மாக்குக.
கூறின பின்னுங் கூறின சிலவவை
யநுவாத மென்றே யறிந்தே யடக்குக."

"தாமுன் னறிந்ததற் கீதுமா றாயி
னொரூல் விதியோ வெனவே யெண்ணுக.
சிலநாட் பழகிற் சிலவும் பலியா,
பலநாட் பழகிற் பலிக்கு மென்க.
விரைவாய்ப் பார்க்கிற் றெரியா தொன்றும்,
விரையா தேற்கிற் கருகா தென்க."

அநுவாதம்: "யாதானும் ஓர் நிமித்தத்தால் ஒன்றனை முற் கூறியும் வேறொரு நிமித்தத்தால் அதனையே பின்னுங் கூறுதல்."

இலக்கணக் கொத்து.

உபாத்தியாயர் சகாயமின்றி வாசிக்கக்கூடிய சிறந்த தமிழ் வேதம் இஃது ஒன்றே என்பதை உணர்வீர்களாக!

திருக்குறள் மூலமும்,

[பரிமேலழகருரையும், தெளிபொருள்விளக்கப் பதவுரையும், விசேஷக் குறிப்புகளுடனும், நாயனார் திருவுருவப் படத்துடன் உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டு அழகிய காலிகோ பைண்டு செய்தது: விலை ரூபா 4]

தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் திருவாய்மலர்ந்தருளிய திருக்குறளென்னும் இந்நூலானது கஙஅ௦ குறள்வெண்பாக்களாற் செய்யப்பட்டு, பாஷையின் உயர்வை விளக்குவதாயும், இராஜதந்திர முதலிய பலவகைப்பட்ட சிறந்த நீதி நெறியை நன்குணர்த்தத் தக்கதாயும், எல்லாச் சமயிகளானும் இனி தேற்றுக் கொள்ளப்பட்டதாயு முள்ளது. மேலும் தமிழ்ப்பாஷையில் விருத்தியடைய விரும்புவோர்க்கும் ஏற்ற நூலாகவும் விளங்குகின்றது.

ஆதலால் தமிழ் வேதமாகிய திருக்குறள் மூலமும் இதற்குப் பரிமேலழகர் செய்த உரையும் கற்றோர் யாவராலும் விரும்பத்தக்கனவே. இந்நூல் தற்கால நிலைமையைக் கருதி பண்டிதபாமரர் யாவர்க்கும் எளிதில் பயன்படும்பொருட்டுக் கடினசந்திகளை ஒருவாறு விளக்கி, அதனுடன் எளிய நடையில் செய்யப்பட்ட தெளிபொருள்விளக்கப் பதவுரையும் சேர்த்து ஒரே புத்தகமா யச்சிடப்பட்டிருக்கிறது.

நீதி நூல்கள்

	ரூ.	அ.		ரூ.	அ.
மநுநீதி சதகம்	0	8	நீதிநெறி விளக்கம் மூலமும்,		
திரிகடுகம் உரையுடன்	0	6	தி. சு. செட்டியார் விருத்தி		
இன்னாநாற்பது உரையுடன்	0	3	யுரையுடன் புதிய பதிப்பு	0	8
இனிதுநாற்பது ,,	0	3	நாலடியார் உரையுடன்	1	4
கார் நாற்பது உரையுடன்	0	3	நள வெண்பா உரையுடன்	1	8
களவழி நாற்பது உரை	0	3	ஆசாரக் கோவை உரை	0	8
நான்மணிக்கடிகை ,,	0	8	முதுமொழிகாஞ்சி உரை	0	6
சிறுபஞ்சமூலம் ,,	0	12	அறநெறிச்சாரம் உரை	0	8
ஏலாதி உரையுடன்	0	6	நீதிநூற் கொத்து ,,	0	8
மர்தர் நீதி வசனம்	1	0	ஆத்திசூடி புராணம் ,,	2	0
நீதிவாக்யமஞ்சரிவச. (208)	0	4	ஆத்திசூடி வெண்பா உரை	1	0
நீதிநெறி விளக்கம் உரை	1	8	பழமொழி உரையுடன்	2	0

நீதிநெறி விளக்கம்

[நீதி—மநுமுதலிய நூல்களில் விதித்தவற்றைச் செய்தலும் விலக்கினவற்றை ஒழிதலுமாகிய முறைமை.

நெறி—அதுவாகிய வழி.

விளக்கம்—அதனைக் காட்டுந் தீபம்.

இப்பொருளமைந்த இம் மூன்று சொற்களும் : முன்னது பண்புத் தொகைநிலைத்தொடரும், பின்னது இரண்டாம் வேற்றுமை யுருபும் பயனும் உடன்தொக்க வேற்றுமைத் தொகை நிலைத் தொடருமாகத் தொக்க நீதிநெறி விளக்கம் என்பது நீதியாகிய நெறியைக் காட்டும் தீபம் போல்வதாகிய நூலுக்கு இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைக்களத்துப் பிறந்த அன்மொழித் தொகைக் காரணக் குறியாயிற்று. எனவே, பேதைமையால் நீதியல்லாத நெறியில் செல்வார்க்கு அப் பேதைமையாகிய இருளைப் போக்கி நீதிநெறியைக் காட்டுவதென்பது கருத்து.

மக்கள் ஒழுகல் முறைமை, முறைமையல்லாமை என்னும் இரண்டேயன்றி வேண்டாமையால் நீதிநெறி என்னும் தொடர் பண்புத் தொகைநிலைத் தொடராக உரைக்கப்பட்டது ; ஒற்றுமைப் பொருளதாகிய ஆறும் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர் எனினும் பொருந்தும்.

க. விளங்கு-பகுதி,

உ. அம்-புடைபெயர்ச்சிப் பொருண்மை விகுதி,

௩. பகுதி மெல்லொற்று வல்லொற்றானது வலித்தல்,

௪. உகரக்கேடு சந்தி.

இவ்வாறு முடிந்து நின்ற விளக்கமென்னும் தொழிற்பெயர் தீபத்தை யுணர்த்தலால் தொழிலாகுபெயர் ; தான் காரணமாக நின்று மற்ற பொருள்கள் விளங்குதலாகிய காரியத்தைச் செய்கின்றமையால் காரியவாகுபெயருமாம். இங்ஙனங் கொள்ளாமல் 'விளங்குத லுடையது ' என்னும் பொருளில் ' அம் ' வினைமுதற் பொருண்மை விகுதி எனக் கொண்டு தொழிலடியாகப் பிறந்த பெயர் எனினும் இழுக்காது.

உ

கடவுள் துணை

திருக்கைலாய பரம்பரைத்

தருமபுர ஆதீனத்தைச் சார்ந்த

காசி மடாலயம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்

திருவாய் மலர்ந்தருளிய

நீதிநெறிவிளக்கம் மூலமும், விருத்தி உரையும்

[கடவுள் வாழ்த்து]

க. நீரிற் குமிழி யிளமை; நிறை செல்வம்
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்; —நீரில்
எழுத்தாகும் யாக்கை; நமரங்காள்! என்னே ?
வழுத்தாத தெம்பிரான் மன்று.

[பதவுரை]

இளமை	=	இளமையானது
நீரில் குமிழி	=	நீரினிடத்து உண்டாகும் குமிழியே;
நிறை செல்வம்	=	நிறைந்த செல்வமும்
நீரில் சுருட்டும்	=	நீரினிடத்துச் சுருளும்
நெடும் திரைகள்	=	நெடிய திரைகளே;
யாக்கை	=	யாக்கையும்
நீரில் எழுத்து ஆகும்	=	நீரி லெழுதிய எழுத்தேயாம்;

(யாவும் இப்படியே அழிதன்மாலையவாயிருப்பதால்)

நமரங்காள் = நம்மவரே!

எம்பிரான் மன்று = (நாம்) நம்முடைய நித்தியக்கடவுளாகிய நடேசனுடைய திருச்சிற்றம்பலத்தை

வழுத்தாதது என் = வழுத்தாமலிருப்பதற்குக் காரணம் என்ன?

[தோகுத்துரை]

இளமைமுதலிய மூன்றும், முறையே குமிழிமுதலிய மூன்றுமேபோல நிலையாதனவாம்; ஆதலால், நம்மவரே! நாம் நடேசனைத் தியானித்தல் தகுதியென்பதாம்.

[விருத்தியுரை]

1. 'நீரிற் குமிழ்' என்னுங்கால், ஏழாம் வேற்றுமையின்கண் தற்கிழமை இடப்பொருள் பெறப்பட்டது.

2. 'குமிழி' என்பது, வினையடிப் பகுபதப் பொருட்பெயர். "ஊரி," "மூடி," "அம்பலத்தாடி" என்புழிப்போல, இவ்விடத்து இகர விகுதி வினைமுதற் பொருளைக் காட்டியது. குமிழுந் தொழிலையுடையது 'குமிழி'. குமிழ்தல்-புடைத்தல்; இது 'இளமை' என்பதன் பெயர்ப் பயனிலை.

3. 'இளமை': இது சொன்னிலையால் 'மை' என்னும் பண்புப்பெயர் விகுதி பெற்றமைபற்றிப் பகுபதமாயினும், மை விகுதிக்குப் பகுதிப்பொருளின்றி வேறு பொருள் இல்லையாதலின், பொருணிலையாற் பகாப்பதம் என்னப்படும். இவ் வாய்பாட்டுப் பண்புகள் மை விகுதியின்றி யியங்கா.

4. 'நிறை' என்ற வினைத்தொகை, 'செல்வம்' என்ற தன் எச்சத்தோடு முடிந்தது.

5. 'சுருட்டு' என்னும் பிறவினைப் பெயரெச்சவினை,

"நற்பாட றேற்றதவர்"

என்புழிப்போலத் தன்வினைப் பொருள்பட நின்றது. இதன் தனிவினைப் பெயராகிய சுருட்டு, 'சுருள்' என்ற தன்வினையை, டு- என்ற விகுதி புணர்ந்தபடியால், பிறவினைத் தோற்றத்தை யடைந்

தது; ஏனைய வினையுருபாகிய 'உம்' விகுதி பெயரெச்சப் பொருண்மையைக் காட்டிற்று. இவ் விகுதி இடைநிலைகளைச் சாராமையே வரும்.

6. 'நெடும்': 'நெடுமை' என்பது, பண்புத்தொகைக்கண் ஈறு போய், இனந் தோன்றினமையால், 'நெடும்' என நின்றது.

7. 'திரைகள்' என்ற மொழி பரவை வழக்கேபோலக் 'கள்' விகுதி பெற்றது. 'திரை' என்பது, வினையடிப் பகாப்பதப் பொருட் பெயர். திரையுந் தொழிலையுடையது 'திரை'. 'செல்வம்' என்பதற்கு இது பெயர்ப் பயனிலை.

8. 'எழுத்து' என்பது, 'எழுது' என்பதன் விரித்தல் விகாரம்; செய்யுள்-1, (விருத்தியுரை) இலக்கம்-7, காண்க. "எழுதப்படுதலின் எழுத்தே".

9. 'ஆகும்' என்பது, "செய்யும்" என்னும் வாய்பாட்டு வினைமுற்று. ஆ-தனிவினைப்பெயர், கு-சாரியை, உம்-பாலையும் காலத்தையும் காட்டும் முற்று விகுதி.

10. 'எழுத்தாகும்' என்பது, தொடர்மொழி வினையாய், 'யாக்கை' என்பதன் பயனிலை யாயிற்று.

11. 'நமர்கள்' என்பது, விகுதிமேல் விகுதி ஈற்றுத்தன்மைப் பன்மைப்பெயர்; இது 'அம்' சாரியை பெற்று 'நமரங்கள்' என நின்று, எட்டாம் வேற்றுமையின்கண் 'நமரங்காள்' என்றாயிற்று.

12. 'என்' என்பது, 'எவன்' என்னும் வினாவினைக் குறிப்பின் மரூஉ.

13. 'ஏ': 'என்' என்பதை யடுத்த 'ஏ' அசைநிலை யிடைச் சொல் எனப்படும்.

14. 'வழுத்தாதது' என்பது, காலங்காட்டும் இடைநிலை பெற்ற வினையடிப் பகுபத வினைப்பெயர். இப் பதத்துள் வரும் வினையுருபுகளுள் 'வழுத்து' என்னும் தனிவினைப்பெயர்: வினையையும், த்-இடைநிலை: இறந்த காலத்தையும், ஆகார இடைநிலை எதிர்மறையையும், து-விகுதி: வினையடிப் பகுபத வினைப்பெயர்ப்பொருண்மையையுங் காட்டின. விகுதிக்கும் இடைநிலைக்கு நடுவில் அ-என்னும் சாரியை வரப்பெற்றது.

15. 'யாம்' என்ற தன்மைப் பன்மைப் பெயர் ஆறும் வேற்றுமைத் தொகைக்கண் 'எம்' என நின்றது.

16. 'மன்று' என்பது, 'அம்பலம்' என்னும் பொருட்டு; அது இவ்விடத்துத் திருச்சிற்றம்பலத்தை யுணர்த்தும்.

[திருக்குறள்-பாயிரம்-க-அதி.-கடவுள் வாழ்த்து-கூ-ம் குறள்]

"கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
றாளை வணங்காத் தலை".

பரிமேலழகர் உரை:—(இதன் பொருள்) தத்தமக் கேற்ற புலன்களைக் கொள்கை யில்லாத பொறிகள்போலப் பயன்படுதலுடையவல்ல, எண்வகைப்பட்ட குணங்களை யுடையானது தாளை வணங்காத தலைகள், எ-று.

Youth is a bubble on the surface of the waters. Abundant wealth is like the rolling waves of the ocean. The body is like character traeed on water. Why then do we not, oh my friends! worship the temple of our God (நடேசன்).

[கல்வியின் சிறப்பு]

உ. அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்;
புறங்கடை நல்லிசையு நாட்டும்;—உறுங்கவலொன்
றுற்றுழியும் கைகொடுக்கும்; கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை.

[பதவுரை]

அறம் பொருள் இன்பம் உம் வீடு உம் பயக்கும்	(கல்வி) அறம் பொருள் இன்பத்தையும்மோக்ஷத்தையும் தரும்;
புறம் கடை	= (அன்றியும்) தலைவாயிலிடத்து
நல் இசையும் நாட்டும்	= நல்ல புகழையும் நிலைநிறுத்தும்;

உறும் கவல் ஒன்று = மிகுந்த கவலை ஒன்று
உற்ற உழிஉம் = நேரிட்ட இடத்தும்
கைகொடுக்கும் = உதவி செய்யும்;

(ஆதலால்)

சிறுமை உயிர்க்கு = அற்ப ஆயுளையுடைய உயிர்களாகிய மனிதருக்கு
கல்வியின் ஊங்கு உற்ற துணை இல்லை = கல்வியின் அதிகமாய்ப் பொருந்திய துணை யின்று.

[தோகுத்துரை]

அறமுதலிய நான்குடன் நல்லிசை நாட்டல் முதலிய இரண்டனையும் பயத்தலால் மனிதருக்குக் கல்வியே சிறப்புற்ற துணையாம்.

[விருத்தியுரை]

1. 'பயக்கும்', 'நாட்டும்', 'கைகோடுக்கும்' என்பனவற்றிற்குக் 'கல்வி' தோன்றா எழுவாய்.

2. 'அறம்', 'பொருள்', 'இன்பம்' என்பவை இப் பிறப்பிலேயே பெறப்படுவதுபற்றி அவற்றை உம்மை கொடுத்துப் பிரித்தார்.

3. 'வீடும்': இதன்கண்ணுள்ள உம்மை எண் உம்மை யெனப்படும். 'வீடு' என்பது, வினையடிப் பகாப்பதப் பொருட்பெயர். அறம், பொருள், இன்ப மென்பவற்றை விட்டதனாற் பெறப்பட்டது வீடு.

"ஈதல்அறம்; தீவினைவிட் டீட்டல்பொருள்; எஞ்ஞான்றும்
காத லிருவர் கருத்து ஒருமித்து—ஆதரவு
பட்டதே யின்பம்; பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு."

4. 'பயக்கும்' : பாடல்-1, (விருத்தியுரை) இலக்கம்-9 காண்க; "செய்யும்" என்னும் வாய்பாட்டு வினைமுற்று. பய-தனிவினைப் பெயர்; கு-சாரியை, உம்-பாலையும் காலத்தையும் காட்டும் முற்று விகுதி.

5. 'புறங்கடை' என்பது, 'புறத்திலுள்ள அந்தம்' என்னும் பொருள்பட நின்றது.

6. 'நல்லிசை' என்ற பண்புத்தொகை 'நன்மையாகிய இசை' என விரியும். நன்மை முதலிய பண்புப்பெயர்கள் பண்புத்தொகைக்கண் இவ்விடத்து நின்றமைபோலவே பண்படியாயேனும், "வன்சொல்" என்புழிப்போல ஈறு திரிந்தேனும் வரப்பெறும். குணப்பெயரோடு குணிப்பெயர் புணருங்கால் அக் குணியோடு குணத்துக்கு உண்டாகிய வொற்றுமை நயத்தை விளக்குதற்கு "ஆகிய" என்னுமொழி வரப்பெறும். இதற்குப் பண்புருபு என்று பெயர். இவ்விடத்து 'நன்மை' என்பது குணப்பெயர், 'இசை' என்பது குணிப்பெயர். இவ் "ஆகிய" என்னும் உருபின்கண் ஆக்கவினை யின்மையின் இஃது இலக்கணையாற் "செய்த" என்னும் வாய்பாட்டிற் படுவதோர் இடைச்சொல்.

7. 'நாட்டும்': 'நாடு' என்ற தன்வினையின் விகாரமாகிய 'நாட்டு' என்பது தனிவினைப்பெயர்; பெரும்பான்மையும் 'கு-சு-டு-து-பு-று' க்களுள் உள்ள மெய்களே பிறவினைப் பொருளுணர்த்த இவ் விரித்தல் விகாரம் பெறும்.

8. 'உறும்': உறு-தனிவினைப்பெயர். இது "செய்யும்" என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம்; உம்-பெயரெச்ச விகுதி.

9. 'கவல்': பாடல்-1, (வி-ரை) இல-7-காண்க. இது வினையடிப் பகாப்பதப் பொருட்பெயர். கவலைக்குக் காரணமாயிருப்பது 'கவல்'.

10. 'உற்றுழி' என்பது, 'உற்ற, உழி' என விரியும். பெரும்பான்மையும் "செய்த" என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சமே இக் கடைக்குறை விகாரம் பெறும்.

11. 'உற்ற': 'உறு' என்ற தன்வினைப்பெயரின் றகர மிரட்டிப்பதால் இறந்தகாலம் பெறப்பட்டது. பெரும்பான்மையும் ஈற்றுக் 'கு-சு-டு-து-பு-று- க்களிலுள்ள மெய்யே இறந்தகாலங் காட்ட இவ் விரித்தல் விகாரம்வரும்; இது "செய்த" என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம். இவ்வாறே "கற்ற அறிவு" என்பது "கற்றறிவு" என நின்றது.

12. 'கைகொடுக்கும்': பாடல்-1, (வி-ரை) இல-10 காண்க.

13. 'கல்வியின்' என்பது, ஐந்தாம் வேற்றுமையின்கண் மிகுதியை யுணர்த்தும் எல்லைப் பொருள்தர நின்றது.

14. 'கல்வி': இது வினையடிப் பகுபதப் பொருட்பெயர்; வி-வினைப்பெயர் விகுதி. கற்குந் தொழிலாற் பெறப்பட்டது 'கல்வி'.

15. 'ஊங்கு'-அதிகம்.

16. 'இல்லை' என்பதன்கண் பிறந்த 'ஐ' ஈற்றுக்குப் பொருளின்று: இம் மொழி "இவன் இவள்" "இலர் இல" முதலியபோலாகாமல் இருதிணை ஐம்பால்களுக்கும் பொதுவாய் நிற்றலால், குறிப்புப் பொதுவினைமுற்று எனப்படும்.

[மகாலிங்கையர் இலக்கணம்]

"எதிர்மறை: இன்மையும் அன்மையும் என இரு வகைப்படும். இன்மை - இல்லாததாகச் சொல்லுதல். அன்மை - ஒரு பொருளை மறுத்து'மற்றொன்று' எனச்சொல்லுதல் உதாரணம்: "அது இல்லை, அது அன்று."

17. 'சிறு': சிறுமை-பண்புத்தொகைக்கண் 'சிறு' என நின்றது; நகர மிரட்டித்தது சந்தி. பாடல்-2, (வி-ரை) இல-6 காண்க.

18. 'உயிர்க்கு' என்புழி நான்காம் வேற்றுமையின்கண் தகுதிப் பொருள் பெறப்பட்டது. 'உயிர்' என்பது ஆகுபெயர்.

[திருக்குறள்-பொருட்பால்-அரசியல்-சഠ-அதி. -கல்வி-அ-ம் குறள்]

"ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து."

பரி:—(இ-ள்) ஒருவனுக்குத் தானொரு பிறப்பின்கண் கற்ற கல்வி எழுபிறப்பினுஞ் சென்று உதவுதலையுடைத்து, எ-று.

[திருக்குறள்-பொருட்பால்-அரசியல்-சഠ-அதி.-கல்வி-கo-ம் குறள்]

"கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை."

பரி:—(இ-ள்) ஒருவனுக்கு அழிவில்லாத சீரிய செல்வமானது கல்வி; அஃதொழிந்த மணியும் பொன்னுமுதலாயின செல்வமல்ல, எ-று.

It will teach virtue and yield wealth & pleasure, and heavenly bliss; it will establish a good name abroad, and when calamities befal you, it will lend a helping hand. Hence there is no better support to short lived mortals than learning.

[கல்வியின் பயன்]

ங. தொடங்குங்காற் றுன்பமா யின்பம் பயக்கும்;
மடங்கொன் றறிவகற்றுங் கல்வி-நெடுங்காமம்
முற்பயக்குஞ் சின்னீர வின்பத்தின் முற்றிழாய்!
பிற்பயக்கும் பீழை பெரிது.

[பதவுரை]

கல்வி	= கல்வியானது
தொடங்குங்கால்	= ஆரம்பிக்குங் காலத்தில்
துன்பம் ஆய்	= வருத்தம் ஆகி
இன்பம் பயக்கும்	= (பின்பு) இன்பத்தைத் தரும்;
	(அன்றியும்)
மடம் கொன்று	= அறியாமையைக் கெடுத்து
அறிவு அகற்றும்	= அறிவை விசாலமாக்கும்.
முற்று இழாய்	= தொழில் முற்றிய ஆபரணத்தை யுடைய பெண்ணே!
நெடுமை காமம்	= மிகுந்த காமமானது
முன் பயக்கும்	= முன்பு கொடுக்கிற
சில் நீர இன்பத்தின்	= அற்பத் தன்மையை யுடைய இன்பத்தினும்
பின் பயக்கும்	= பின்பு கொடுக்கிற
பீழை பெரிது	= துன்பமே மிக்கது.

[தொகுத்துரை]

கல்வியானது மடங் கொன்று அறிவு அகற்றுவதுமன்றி, முன் துன்பம் பயந்து, பின் இன்பம் பயக்கும்; ஆனாற் காமமோ, முன் தான் பயக்கும் இன்பத்திலுங் கொடிய தீமையைப் பின் பயக்கும் என்பதாம்.

[விருத்தியுரை]

1. **'தொடங்கும்':** தொடங்கு-தனிவினைப்பெயர். செய்யுள்-2, (வி-ரை) இல-8 காண்க.

2. **'காலத்தில்'** என்பது 'கால்' எனத் தொகுத்து நின்றது.

3. **'துன்பமாய்':** செய்யுள்-1, (வி-ரை) இல-10 காண்க.

'ஆய்' என்பதன்கண், ஆ-தனிவினைப்பெயர், ய்-இறந்த காலங் காட்டும் வினையெச்ச விகுதி.

4. **'இன்பம் பயக்கும்':** செய்யுள்-2, (வி-ரை) இல-4 காண்க.

5. **மடங்கொன்று'** என்பது 'மடத்தைக் கொன்று' என விரியும். மடம்-மடமை-அறியாமை யென்பன வொருபொருண் மொழி.

6. **'கொன்று':** கொல் - தனிவினைப் பெயர், உ - வினையெச்ச விகுதி, ற்-இறந்தகால இடைநிலை. சந்தியாற் 'கொற்று' என நிற்க வேண்டியது மெலித்தல் விகாரத்தால் 'கொன்று' என்றாயிற்று. வினையெச்ச விகுதி யாவற்றுள்ளும் உ-விகுதி யொன்றுமே கால இடைநிலை யணைந்து வரும்.

7. **'அறிவு':** இஃது அந்தக்கரணத்தை யுணர்த்திற் றாதலால் வினையடிப் பகுபதப் பொருட்பெயர்; வு-வினைப்பெயர் விகுதி. அறியுந் தொழிலையுடையது 'அறிவு'.

8. **'அகற்றும்':** செய்யுள்-3, (வி-ரை) இல-4 காண்க. அகற்று-தனிவினைப்பெயர். பெரும்பான்மையும், "அகல்-புகு-பாய்" முதலிய தன்வினைத் தனிவினைப் பெயர்கள், பிறவினைப் பொருடர, ஏற்ற பெற்றி, 'கு-சு-டு-து-பு-று' க்களை யணைந்து வரும்.

9. **'கல்வி':** இது வினையடிப் பகுபத வினைப்பெயர். கற்குந் தொழிலாற் பெறப்பட்டது 'கல்வி'.

10. **'நெடும்':** செய்யுள்-1, (வி-ரை) இல-6 காண்க.

11. 'காமம்': இது "காமா" என்ற ஆரியமொழி திரிந்த வடமொழி. ஆரியமொழியுள் தமிழ் நடை பெற்றன வடமொழி என்னப்படும்.

12. 'முன்', 'பின்' இவை இடைச்சொல். வேற்றுமை ஏலாமையால் இப் பெயர் பெற்றன.

13. 'முற்பயக்கும்' 'பிற்பயக்கும்': செய்யுள்-3, (வி-ரை) இல-1, காண்க.

14. 'சில்நீர' என்பது 'சின்னீர' என நின்றது.

15. 'நீர' இக் குறிப்புப் பெயரெச்சம், 'நீர்மை' என்ற பண்புப் பெயரின் ஈறு குறைந்த பகுதியை யடைந்தது, அ-எ-விகுதி.

16. 'இன்பத்தின்': செய்-9, (வி-ரை) இல-13 காண்க. சந்தியினால் 'அத்து' என்னும் சாரியை தோன்றிற்று.

17. 'முற்று' செய்யுள்-1, (வி-ரை) இல-14 காண்க.

18. 'இழை' வினையடிப் பகுபதப் பொருட்பெயர். இழைக்கப் படுவது 'இழை'. இழை-நகை.

19. முற்றிழை' என்பது எட்டாம் வேற்றுமையின்கண் 'முற்றிழாய்' என நின்றது; இது அன்மொழித்தொகை, இவ்விடத்து மகடூஉ முன்னிலையாய் நின்றது. அன்மொழித்தொகைப் பெயருக்கும் ஆகுபெயருக்கும் வேற்றுமை யென்னையெனின்,

[நன்னூல் விருத்தியுரை]

௧. அன்மொழித் தொகைப்பெயர், செய்யுளியற்றுவோன் ஒருவரை வியப்பு முதலியவற்றால் தன் கூற்றாயும் பிறர்கூற்றாயும் உரைப்புழி, ஆங்காங்கு வருவதன்றி இதுபோல நியதிப்பெயராய் வருவதன்று.

௨. இவ் விருபெயருந் தம்பொரு ளுணர்த்தாது பிறிது பொருளுணர்த்துதலின் ஒக்குமாயினும், இவ் வொப்புமையினும் ஒருவாறு வேற்றுமை யுண்டு.

ஆகுபெயர்: ஒன்றன் பெயரான் அதனோ டியைபுபற்றிப் பிறிதொன்றனை யுணர்த்திப் பெரும்பான்மையும் ஒருமொழிக்கண் வருதாம்.

அன்மொழித்தொகை: இயைபு வேண்டாது, பிறிதுபொரு ளுணர்த்தி, இருமொழிக்கண்ணதேயாம்.

ரு. இருபெயரொட் டாகுபெயர்க்கும் அன்மொழித்தொகைக் கும் வித்தியாச மியாதோவெனில், பெரும்பான்மையும் இருபெய ரொட்டாதுபெயருள் வரும் அடைமொழி ஆதுபெயர்ப் பொருளை விசேடித்து நிற்கும்.

அன்மொழித்தொகைப்பெயருள் வரும் அடைமொழியோ தான் அடுத்துவருமொழியின் இயற்பொருளையேவிசேடித்துநிற்கும்.

20. 'பெரிது' என்னும் குறிப்புவினையுள், பெருமை யென்பது ஈறு போய், இடையுகர மிய்யாகிப் 'பெரி' என நின்றது. து-ஒன் றன் படர்க்கை விகுதி.

[திருக்குறள்-பொருட்பால்-அரசியல்-சுO-ம் அதி.-ரு-ம் குறள்]

''உடையார்மு னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்.''

பரி.—(இ-ள்) ''பிற்றைநிலைமுனியாது கற்றல்நன்'' முதலான் செல்வர்முன் நல்கூர்ந்தார் நிற்குமாறுபோலத் தாமும் ஆசிரியர் முன் ஏக்கற்றுநின்றுங் கற்றார் தலையாயினர், அந்நிலைக்கு நாணிக் கல்லாதவர் எஞ்ஞான்றும் இழிந்தாரே யாவர், எ-று.

Learning though painful in the beginning, will (ultimately) afford delight. It will dissipate ignorance, and extend knowledge. Oh thou decorated with well-wrought jewels! The evil that springs in the end from protracted sensual indulgence, exceeds the frivolous pleasure it at first affords.

[சொல் வன்மை]

ச. கல்வியே கற்புடைப் பெண்டிரப் பெண்டிர்க்குச்
செல்வப் புதல்வனே யீர்ங்கவியாச்—சொல்வள
மல்லல் வெறுக்கையா மாண்வை மண்ணுறுத்துஞ்
செல்வமு முண்டு சிலர்க்கு.

[பதவுரை]

கல்வியே	=	வித்தையே
கற்பு உடைய பெண்டிர்	=	கற்புடைய மனைவியராகவும்,
ஈரம் கவியே	=	இனிமையாகிய செய்யுளே
அ பெண்டிர்க்கு செல்வப் புதல்வன் ஆ	=	அம் மனைவியர் பெறும் செல்வப் புத்திரர் ஆகவும்,
சொல் வளம்	=	பொருளறிவுறுத்துஞ் சொல்லின் வளமே
மல்லல் வெறுக்கை ஆ	=	வளப்பத்தையுடையபொருளாகவும், (இருப்பது மன்றி)
மாண் அவை	=	பெருமையையுடைய சபையில்
மண் உறுத்தும்	=	அழகை யுண்டாக்கும்
செல்வமும்	=	அவையஞ்சாமையாகியசெல்வமும்
சிலர்க்கு உண்டு	=	சிலருக்குண்டு.

[தொகுத்துரை]

சிலருக்கு வித்தைமுதலிய மூன்றும் முறையே மனைவியும் புத்திரனும் பொருளுமா யிருப்பதுமன்றி, அவையஞ்சாமையாகிய செல்வமுமாயிருக்கின்ற தென்பதாம்.

[விருத்தியுரை]

1. 'கல்வி' செய்யுள்-2, (வி-ரை) இலக்கம் 13 காண்க. இது வினையடிப் பகுபதப் பொருட்பெயர்.

2. 'கல்வியே' என்பதன்கணுள்ள ஏகாரம் தேற்றேகார மென்னப்படும். "அவனே கொண்டான்" என்பது ஒரு குழுவினின்றும் ஒருவனைப் பிரித்து நிற்றற் பொருடருங்கால் பிரிநிலை யெனவும், துணிதற் பொருடருங்கால் தேற்றம் எனவும் படும். இத் தேற்றப் பொருள் பிரிநிலைக்கண்ணே யுளதாதலின் இப் பொருளை வேறெடுத்துக் கூறுதல் ஏனையபோற் சிறப்புடைத்தன்று என்பது தோன்ற நன்னூலார் இதனைப் பொருட் சிறப்பில்லா ஈற்றசைக்கும் இசைநிறைக்கும் இடையே கூறினர். [நன்னூல் விருத்தி].

3. 'உடைப்பெண்டிர்' என்பது, உடைய பெண்டிர் என்பதன் தொகுத்தல் விகாரம். செய்-2, (வி-ரை) இல-10 காண்க. 'உடைய' என்பது குறிப்புப் பெயரெச்சம். உடைமையின் திரிபு ஆகிய 'உடை' இதன் பகுதி, அ-பெயரெச்ச விகுதி.

4. 'பெண்டிர்க்கு' என்புழி, நான்காம் வேற்றுமை முறைமைப் பொருட்டா நின்றது.

5. 'ஈரம்' என்ற மொழி அகரந் தொகப் பெற்றமைபற்றிப் பண்புத் தொகைக்கண் 'ஈர்ம்' என நின்றது.

6. 'கவியா' கவியாக. 'ஆக' என்பது 'ஆ' எனக் கடை குறைந்தது. 'ஆக' என்றதன்கண் 'ஆ' த-வி. பெயர், கு-சாரியை, அ-வினையெச்சப் பொருண்மையையும், முக்காலப் பொதுமையையுங் காட்டும் விகுதி. இது "செய" என்னும் வாய்பாட்டு வினையெச்சமென்னப்படும். இவ் வாய்பாட்டு வினையெச்சங்கள் காரணப் பொருளில் வருமிடத்து இறந்த காலத்தையும், காரியப்பொருளில் வருமிடத்து எதிர்காலத்தையும், இவ் விருபொருளு மின்றி வருமிடத்து நிகழ்காலத்தையும் காட்டும்.

"சூரியனுதிக்க இருணீங்கிற்று."	இறந்தகாலம்-காரணப் பொருள்.
"சூரியனுதிக்கக் கடவுள் கற்பித்தார்."	எதிர்காலம்-காரியப்பொருள்.
"சூரியனுதிக்க வந்தான்."	நிகழ்காலம்-பிற பொருள்.

7. 'வளம்': 'நல்' என்ற பண்படியை 'அம்' என்ற பண்புப் பெயர்ப் பொருண்மையைக் கொடுக்கும் விகுதி புணர, 'நலம்' என்ற பண்புப்பெயர் தோன்றினதுபோல, 'வள்' என்ற பண்படியும், 'அம்' விகுதியுஞ் சேர 'வளம்' என்ற மொழி வரப் பெற்றது.

8. 'மல்லல்' 'வளப்பம்' 'வளம்' 'அதிகம்' என்பன ஒரு பொருண்மொழி.

9. 'வெறுக்கை' வெறுப்பை யடையவேண்டியது 'வெறுக்கை' எனப்பட்டது. 'கை' என்பது வினைப்பெயர் விகுதி; இது வினையப்படி பகுபதப் பொருட்பெயர்.

10. 'மாண்' என்பது சிறப்பை யுணர்த்தும் பண்படி, இது மாண்பின் விகார மெனப்படும்.

11. 'மண்ணுறுத்தும்': இது தொடர்மொழி வினை. செய்-2, (வி-ரை) இல-12, செய்-3, (வி-ரை) இல-13-8 காண்க.

12. 'உண்டு': 'உள்' என்ற பண்படி பகுதி, டு-குறிப்பு வினை முற்று விகுதி. "வேறு, இல்லை, உண்டு ஐம்பான் மூவிடத்தன." இஃது உளன், உளள், உளர், உளது, உளபோல நில்லாமைபற்றிக் குறிப்புவினைப் பொதுப்பெயர் எனப்படும்.

13. 'சிலர்': செய்-3, (வி-ரை) இல. 14 காண்க. அர்-பலர்பால் விகுதி.

[திருக்குறள்-பொருட்பால்-அங்கவியல்-௬௫-ம் அதி.-௩-குறள்]

"கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்."

பரி.—(இ-ள்) நட்பாயேற்றுக்கொண்டாரைப் பின் வேறுபடாமற் பிணிக்குங் குணங்களை அவாவி மற்றைப் பகையாய் ஏற்றுக் கொள்ளாதாரும் பின் அப் பகைமை யொழிந்து நட்பினை விரும்பும் வண்ணஞ் சொல்லப்படுவதே அமைச்சர்க்குச் சொல்லாவது, எ-று.

With learning as the chaste wife, sweet poetry as the favorite son of that matron, and copiousness of expression as ever increasing wealth, some there are who also possess the talent of adorning a grand assembly.

[சொல்வன்மையின் சிறப்பு]

௫. எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந்
துய்த்துணர் வில்லெனி னில்லாகும்—உய்த்துணர்ந்துஞ்
சொல்வன்மை யின்றெனி னென்னா மஃதுண்டேல்
பொன்மலர் நாற்ற முடைத்து.

[பதவுரை]

இடம் அறிந்து	=	நல்லாசிரியனைக் கண்டுணர்ந்து
எ துணைய ஆயினும்	=	எவ்வளவாகிலும்
கல்வி உய்த்து உணர்வு	=	கல்வியை ஆராய்ந்து அறிதல்
இல் எனின்	=	இல்லையாயின்
இல் ஆகும்	=	கற்றறிவு சீர்ப்படாது;
உய்த்து உணர்ந்தும்	=	அவ்வாறு ஆராய்ந்து அறிந்தும்
சொல் வன்மை	=	பிறருக்குத் தாங் கற்றதை யேற்கச்சொல்லுஞ் சொல்லாற்றல்
இன்று எனின்	=	இல்லையாயின்
என் ஆம்	=	கற்றதனாற் பிரயோசன மென்ன ?
அஃது உண்டேல்	=	சொல்லாற்றலும் இருந்தால்

(இக் கற்றறிவுச் சீர்ப்பாடுஞ் சொல்லாற்றலும்)

பொன் மலர்	=	பொற்பூவுக்கு
நாற்றம் உடைத்து	=	மணம் வாய்த்ததுபோலச்சிறக்கும்.

[தோகுத்துரை]

கல்வியை நல்லாசிரியனைக் கொண்டேஉய்த்துணரல்வேண்டும்; அப்படிப் பெறப்பட்ட கல்வியும் சொல்வன்மை; யில்லாமற் பயன் படாது; இவ் விரண்டுஞ் சேருதலோ பூவுடன் மணஞ் சேருவது போலச் சிறக்கும் என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'துணைய': குறிப்புப்பெயர். துணை-பகுதி, அ-பலவின்பால் வினைமுற்று விகுதி.

2. 'ஆயின்': "செயின்" என்னும் வாய்பாட்டு எதிர்கால வினையெச்சம்.

"இடையுரி வடசொலின் இயம்பிய கொளாதவும்" என்பதன்படியே உடம்படுமெய் பெறப்பட்டது, ஆ-தனிவினைப் பெயர்; இன்-எதிர்கால வினையெச்ச விகுதி.

3. 'இடம்': இவ்விடத்து ஆகுபெயராய் ஆசிரியனை உணர்த்திற்று.

4. 'அறிந்து': செய்-3, (வி-ரை) இல-6 காண்க.

த்-இறந்தகால இடைநிலை. இவ் வினையெச்சம் 'உய்த்து' என்பதன் தனிவினைப் பெயரோடு முடிந்தது.

5. 'உய்த்து': செய்-5, (வி-ரை) இலக்கம்-4 காண்க.

பிறவினையை உணர்த்தவேண்டிச் சந்தியால் வந்த தகரம் மெலிந்து நின்றது. இவ் வினையெச்சம் 'உணர்வு' என்னும் தனி வினைப்பெயரோடு முடியும்.

6. 'உணர்வு': இது வினையடிப்பகுபத வினைப்பெயர்.

7. 'இல்': குறிப்புப்பெயர். செய்யுள்-2, (வி-ரை) இலக்கம்-15, காண்க.

8. 'எனின்' இஃது 'என்' என்ற இடைச்சொல்லடியாகப் பிறந்த வினையெச்சம். செய்யுள்-5, (வி-ரை) இலக்கம்-2 காண்க.

9. 'இல்லாதும்': செய்யுள்-1, (வி-ரை) இலக்கம்-10 காண்க.

10. 'உணர்ந்தும்' ,, 5, ,, ,, 4 ,,

இதனை எதிரதுதழுவிய எச்சவும்மை அடைந்தது.

11. 'இன்று': குறிப்புச் சிறப்பு முனைமுற்று.

செய்யுள்-2, (வி-ரை) இலக்கம்-16 காண்க.

12. 'என்னும்': செய்யுள்-1, (வி-ரை) இலக்கம்-10 காண்க.

,, ,, ,, ,, -12 ,,

13. 'அஃது': அது என்பதன் விரித்தல் விகாரம்.

14. 'உண்டேல்': "செயின்" என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

[விசாகப்பெருமாளையர் இலக்கணம்]

"இக்காலத்து வழக்கில் 'உண்டானேல்', 'உண்டானெனின்', 'உண்டானாயின்', 'உண்டானேனும்' என, 'ஏல்', 'எனின்', 'ஆயின்', 'எனும்' இந்நான்கும் முற்று வினைகளோடு இயைந்து, ஒரு சொன்னீர்மைப்பட்டுச், "செயின்" என்னும் வாய்பாட்டு வினையெச்சங்களாய் வருதல் காண்க."

15. 'நாற்றம்': வினையடிப் பகுபதப் பொருட்பெயர். நாறுதலையுடையது 'நாற்றம்'.

16. 'உடைத்து': இது குறிப்பு வினைமுற்று. 'உடைமை' யின் விகாரம் ஆகிய உடை-பகுதி. செய்யுள்-3, (வி-ரை) இலக்கம்-19, காண்க.

[திருக்குறள்-பொருட்பால்- அங்கவியல்-சொல்வன்மை-கூ௫-ம் அதி-௬௦-குறள்]

"இணரூழ்த்து நாறா மலரனையர் கற்ற
துணர விரித்துரையா தார்."

பரி:—(இ-ள்) கற்றுவைத்த நூலைப் பிறரறியும்வண்ணம் விரித்துரைக்கமாட்டாதவர் கொத்தின்கண்ணே மலர்ந்து வைத்தும் நாறாத பூவை யொப்பர், எ-று.

How extensive soever it may be, learning will be of no avail if not acquired under a proper tutor, with due appreciation. Even if so acquired, of what use is it without vigor of expression? Should that also be possessed, it is like a golden flower invested with fragrance.

[புன்புலவர் இழிவு]

கூ. அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியுங், கல்லார்
அவையஞ்சா வாகுலச் சொல்லு—நவையஞ்சி
ஈத்துண்ணார் செல்வமு நல்கூர்ந்தா ரின்னலமும்
பூத்தலிற் பூவாமை நன்று.

[பதவுரை]

அவை அஞ்சி	= சபைக்குப் பயந்து
மெய் விதிர்ப்பார்	= உடம்பு நடுங்குகிறவர்களுடைய
கல்வியும்	= கல்வியும்,
அவை அஞ்சா	= சபைக்கு அஞ்சாத
கல்லார்	= மூடர்களுடைய
ஆகுலச் சொல்லும்	= ஆரவார மொழிகளும்,

(பொருள் ஈட்டுங்கால் வரக்கூடிய பழிப்பும்
பாவமுமாகிய)

நவை அஞ்சி = குற்றத்துக்கு அஞ்சி
ஈத்து = இரந்தோர்க்குக் கொடுத்து(த்)
உண்ணார் = தாமும் அநுபவியாதவர்களுடைய
செல்வமும் = செல்வமும்,
நல்கூர்ந்தார் = தரித்திரர்களுடைய
இன் நலமும் = இளமைமுதலிய இனிய நலமும்
பூத்தலின் = உண்டாதலினும்
பூவாமை நன்று = உண்டாகாமையே நல்லது.

[தொகுத்துரை]

அவையஞ்சி மெய் விதிர்ப்பார் கல்விமுதலிய நான்கும் இருப்பதினும் இல்லாமையே நன்று என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'அஞ்சி': இ-இறந்தகால வினையெச்ச விகுதி; இவ் வெச்சம் "செய்து" என்னும் வாய்பாட்டு வினையெச்ச மென்னப்படும்.

2. 'மெய்விதிர்ப்பார்': மெய்விதிர்-தனிவினைப்பெயர், ப-எதிர் கால இடை நிலை, ஆர்-பலர்பால் விகுதி, (ப்-சந்தி,) இது வினையாலணையும் பெயர்.

வினைமுற்றுக்கும், வினையாலணையும் பெயர்க்கும் வேற்றுமை யாதோவெனின், வினைமுற்று: பகுதிக்கண் பொருள் சிறந்து நிற்கும்; வினையாலணையும்பெயர்: விகுதிக்கண் பொருள் சிறந்து நிற்கும்.

எல்லாச் சொற்களையுங் கூறுங்கால், பொருள் சிறக்குமிடத்து எழுத்தினை யெடுத்தும், அயலெழுத்தினை நலிந்தும், ஏனையெழுத்துக்களைப் படுத்துங் கூறுக.

வினையாலணையும் பெயர் முன்பு வினையாய்ப் பின்பு அவ்வினையை யியற்றுவோர்க்குப் பெயராய் வரும்.

3. 'கல்வி': செய்யுள்-3, (வி-ரை) இலக்கம் 9, காண்க.

4. 'கல்லார்': இதுவும் வினையாலணையும் பெயரே. கல்-தனி வினைப்பெயர், ஆர்-பலர்பால் முற்று விகுதி.

[விசாகப்பெருமாளையர் இலக்கணம்]

"ஆ விகுதி யிடையிலே புணர்ந்து, பெரும்பான்மையுங் கெட்டு நிற்க, காலங் காட்டும் இடைநிலைகளைப் பெறாமல், பால்காட்டும் விகுதிகளை யிறுதியிற் பெற்று வரும் வினைச்சொற்கள் முக்காலத்துக்கும் பொதுவாகிய எதிர்மறை வினைமுற்றுச் சொற்களாம். இவ் வெதிர்மறை யாகாரம் உயிர் நெடில்முதல் விகுதியோடு புணருமிடத்துக் கெட்டு நிற்கும்."

5. 'அஞ்சா' என்பது, அஞ்சாத என்பதன் கடைக்குறை; "செய்யாத" என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சமே யிவ்வாறு தொக்கு வரும்.

6. 'சோல்': வினையடிப் பகாப்பத வினைப்பெயர்.

7. 'ஈந்து' என்பது 'ஈத்து' என நின்றது; இது வலித்தல் விகாரம். செய்யுள்-5, (வி-ரை) இலக்கம்-4, காண்க.

8. 'உண்ணார்': செய்யுள்-6, (வி-ரை) இலக்கம்-4, காண்க.

9. 'நல்கூர்ந்தார்': செய்யுள்-6, (வி-ரை) இலக்கம்-2, காண்க. 'நல்கூர்' என்பது 'நல்குரவு' என்பதன்கண் உள்ள தனிவினைப் பெயர்.

10. 'இன் நலம்': சந்தியால் 'இன்னலம்' என நின்றது.

11. 'இன்' என்பது 'இனிமை' என்ற பண்புப் பெயரின்கண் உள்ள பண்படி.

12. 'பூத்தல்': பூ-தனிவினைப் பெயர், தல்-வினைப்பெயர்விகுதி; இது வினையடிப் பகுபத வினைப்பெயர்.

13. 'பூத்தலில்': செய்யுள்-2, (வி-ரை) இலக்கம்-13, காண்க.

14. 'பூவாமை': ஆ-எதிர்மறை இடைநிலை, மை-வினைப்பெயர் விகுதி; வினையடி வினைப்பெயர் விகுதிகளுள் பெரும்பான்மையும் விகுதி ஒன்றுமே எதிர்மறையை யணைந்து வரும்.

15. 'நன்று': று-ஒன்றன் படர்க்கை வினைமுற்று விகுதி. செய்யுள்-5, (வி-ரை) இலக்கம் 11, 16. காண்க. இது குறிப்பு வினைமுற்று.

[திருக்குறள்-பொருட்பால்-அரசியல்-கல்லாமை-சுக-அதி.-
௯-குறள்]

"கல்லா தவரு நனிநல்லர் கற்றார்முற்
சொல்லா திருக்கப் பெறின்."

பரி.—(இ-ள்) கல்லாதாரும் மிக நல்லவராவர் தாமே தம்மை யறிந்து கற்றார் அவையின்கண் ஒன்றனையுஞ் சொல்லாதிருத்தல் கூடுமாயின், எ-று.

[திருக்குறள்-பொருட்பால்-அரசியல்-கல்லாமை-சுக-ம் அதி.-
௬-குறள்]

"உளரென்னு மாத்திரைய ரல்லாற் பயவாக்
களரனையர் கல்லா தவர்."

பரி:—(இ-ள்) கல்லாதவர் காணப்படுதலான் இலரல்லர் உள ரென்று சிலர் சொல்லு மளவினராதல் அன்றித் தமக்கும் பிறர்க்கும் பயன் படாமையால் விளையாத களர் நிலத்தோ டொப்பர், எ-று.

The learning of those who tremble through fear in an assembly, the blustering words of the illiterate who fear not an assembly, the wealth of those who neither give it to others nor enjoy it themselves, and the blooming youth of the indigent, will prove more advantageous if they are not, than if they are.

[புலவர் புகழ்]

எ. கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு.

[பதவுரை]

கலைமகள் முகத்தது வாழ்க்கை	=	சரசுவதி முகத்தினிடத்து வாழ்தல்
எனினும்	=	இருவர்க்கும்ஒத்ததேயானாலும்
மலரவன்	=	பிரமன்
வள் தமிழோர்க்கு	=	வண்மையையுடைய தமிழ்ப் புலவோர்க்கு
ஒவ்வான்	=	ஒருவாற்றான் ஒப்பாகான்;

(எவ்வாற்றானெனில்),

மற்று இவர்	=	தமிழ்ப்புலவராகிய இவர்
புகழ் கொண்டு	=	(தம்)புகழ் மூலமாக(ப்)
செய்யும் உடம்பு	=	படைக்கின்ற உடம்பு
மலரவன் செய்	=	அப் பிரமன் படைக்கும்
வெற்று உடம்பு	=	பயனின்மையையுடைய உடம்பு
மாய்வனபோல் மாயா	=	இறப்பதுபோல இறத்தலில.

[தொகுத்துரை]

பிரமனும் புலவரும் கலைமகள் வாழ்க்கையைத் தம்மிடத்து அடைந்தவராயினும், பிரமன் செய்யு முடம்புபோலப் புலவரின் புகழாகிய வுடம்பு மாயாவாதலால், பிரமனினும் புலவரே சிறப்புடையர் என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'கலை': "கொடை, மடை, விடை" என்புழிப்போலச் செயப்படுபொருள் பெறப்பட்டது. கற்றலால் பெறப்படுவது கலை; இது வினையடிப்பகுபதப் பொருட்பெயர்.

2. 'கலைமகள்' என்பது, 'கலைக்குரிய மகள்' என விரியும்.

3. 'வாழ்க்கை' கை-வினைப்பெயர் விகுதி. இது வினையடிப் பதபகு வினைப்பெயர்.

4. 'முகத்தது': இது குறிப்பு வினைமுற்று. முகம்-பகுதி, அத்து சாரியை;

"அத்தி னகர மகாமுனை இல்லை."

து-ஒன்றன் படர்க்கை வினைமுற்று விகுதி, விகுதிக்கு முன் வந்த 'அ' சாரியை. செய்யுள்-5, (வி-ரை) இல-16, காண்க.

5. 'எனின்' செய்-5, (வி-ரை) இல-8, காண்க.

6. 'எனினும்': இதன்கண் உம்மை உயர்வு சிறப்பும்மை.

[நன்னூல் விருத்தியுரை]

"ஒருபொருளின் உயர்வைச் சிறப்பித்தலின்கண் உயர்வு சிறப்பும்மையும், இழிவைச் சிறப்பித்தலின்கண் இழிவு சிறப்பும்மையும் வரும்."

7. 'மலரவன்': அ—சாரியை, அன்-ஆண்பாற் படர்க்கை வினைமுற்று விகுதி, வ்-உடம்படு மெய். செய்-7,(வி-ரை) இல-4, காண்க.

[நன்னூல் விருத்தியுரை]

" உடன்பட லென்பது உடம்பட லென மரீஇயிற்று.

"உடம்பா டிலாதவர் வாழ்க்கை"

என வருதல் காண்க; உயிரோ டுயிர்க்கு மயக்க மின்மையின் வரு முயிர்க்கு உடம்பாக வடுக்குமெய் உடம்படுமெய் யெனப் பொருள் கூறுதலு மொன்று."

8. 'வண்டமிழ்': "வன்சொல்" என்புழி வன்மையின்விகாரமே 'வன்' என நின்றாற்போல, இவ்விடத்து வண்மையின் விகாரம் 'வண்' எனப் பண்புத்தொகைக்கண் நின்றது. வண்மையின் பண்படி 'வள்.'

9. 'வண்டமிழோர்க்கு' என்புழி, ஒப்புப்பொருள் நான்காம் வேற்றுமையின்கண் வந்தது.

10. 'ஒவ்வான்': இடைச்சொல்லடியாகப் பிறந்த வினைமுற்று. செய்-6, (வி-ரை) இல-4, காண்க.

11. 'செய்': செய்-1 (வி-ரை) இல-4, காண்க.

12. 'வெற்று உடம்பு': வெறுமை யுடம்பு என்பது பண்புத்தொகைக்கண் 'வெறு உடம்பு' என நின்றது. செய்-2, (வி-ரை) இல-17, காண்க.

13. 'மாய்வன': இவ் வாய்பாட்டுச் சில வினைமுற்றுக்கள் வினைப் பெயர்ப் பொருளையே கொடுத்து நிற்கும். இது "நடந்தது" என்னும் வினையடிப் பெயர்போல நின்றது. மாய்வது, மாய்வன, மாய்தல்' என்பன வொருபொருண் மொழி.

14. 'போல்' என்பது, உவம உருபு.

15. 'மாயா': மாய்-தனிவினைப் பெயர்; ஆ-என்பது பலவின் பால் முற்றுவிகுதி. செய்-6, (வி-ரை) இல-4, காண்க; இது பல வின்பால் வினைமுற்று.

16. 'புகழ்கொண்டு' என 'ஆல்' உருபு நிற்றற்குரியவிடத்து 'கொண்டு' என்னுஞ் சொல்லுருபு வந்தது. இச் சொல்லுருபு 'ஆல்' 'ஆன்' உருபு நிற்றற்குரிய இடத்திலேயே வரும்.

17. 'மற்று' என்பது 'பிறிது' பொருளைக் கொடுத்தது.

18. 'இவர்': குறிப்பு வினைப்பெயர்; இது 'இ' என்னும் சுட்டிடைச்சொல் அடியாகப் பிறந்தது; வ்-உடம்படு மெய்; அர்-பலர் பால் விகுதிவினையுருபுகள்-19-ம் இலக்கம்.

19. 'செய்யும்': செய்-3, (வி-ரை) இல-1, காண்க.

[திருக்குறள்-பொருட்பால்-அரசியல்-௪௦-அதி.-கல்வி- -எ-குறள்]

"யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு."

பரி:—(இ-ள்) கற்றவனுக்குத் தன்னுடுந் தன்னூருமேயன்றி யாதானு மொருநாடும் நாடாம், யாதானு மோரூரும் ஊராம்; இங்ஙனமாயின், ஒருவன் தானிறக்குமளவுங் கல்லாது கழிகின்றது என் கருதி, எ-று.

Although the goddess of learning lives in the countenance of Brahma, he bears no comparison to the Tamil Pundits; for the body of fame that these create perishes not like the body of clay made by Brahma.

[கற்றலே நன்று]

௮. நெடும்பகற் கற்ற வவையத் துதவா
துடைந்துளா ருட்குவருங் கல்வி—கடும்பகல்
ஏதிலான் பாற்கண்ட வில்லினும் பொல்லாதே
தீதென்று நீப்பரி தால்.

[பதவுரை]

நெடும் பகல்	= பல நாளாய்(த்)
கற்ற	= தாங் கற்றனவாய நூல்களாலாய பிரயோசனத்தை(க்)
அவையத்து உதவாது உடைந்துளார்	= கற்றுவல்லோர் சபையினிடத்துப் பெருமறப் போனவரது
உட்குவருங்கல்வி	= நாணத்தக்க கல்வியை(க்)
தீது என்று	= கொடியது என்று
நீப்பது அரிது	= நீக்குதல் கூடாது;

(ஆதலால், அது)

கடும் பகல்	= நெடும் பகலில்
ஏதிலான்பால் கண்ட	= அயலானிடத்து இருக்கக் கண்ட
இல்லினும்	= தன் மனையாளினும்
பொல்லாதே	= ஒருவனுக்குப் பொல்லாததாகும்.

[தொகுத்துரை]

சபை முன்னிற்குஞ் சமயத்தில் தனக்குப் பயன்படாக் கல்வி: பிரசித்தமாய்ப் பிறனை யணைந்த இல்லாளினும் பொல்லாததே; இல்லாளை நீக்கலாம்; அக் கல்வியை நீக்குவதோ அரிது என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'நெடும்': செய்-1, (வி-ரை) இல-6, காண்க.

2. 'பகல்': ஒருநாளிலிருந்து பகுக்கப்பட்ட பாதியானபடியால் இப் பெயர் பெற்றது. பகு-த-வி-பெயர், அல்-வினைப்பெயர் விகுதி; இது வினையடிப் பகுபதப் பொருட்பெயர்.

3. 'கற்ற': கல்-த-வினைப்பெயர், ற்-இறந்தகால இடைநிலை, அ-பலவின்பால் முற்றுவிகுதி; இது வினையாலணையும் பெயர். செய்-6, (வி-ரை) இல-2, காண்க.

4. 'அவையத்து': அவை-அம்-அத்து; பின்னையவிரண்டுஞ் சாரியை; இது ஏழாம் வேற்றுமைத் தொகை.

5. 'உதவாது': எதிர்மறை இறந்தகால வினையெச்ச வினை. உதவு-தனிவினைப்பெயர், ஆ-எதிர்மறை இடைநிலை, த்-இறந்தகால இடைநிலை, உ-வினையெச்ச விகுதி.

6. 'உடைந்துளார்': 'உடைந்து' என்ற வினையெச்சம் தொழிற் பெயர்ப்பொருள்படநிற்க, 'உடைந்துளார்' என்பது 'உடைதலை யுடையவர்கள்' என்னும் பொருள் பெற்றது.

7. 'உடைந்து': தொழிற்பெயர்ப் பொருள் கொடுக்கும் வினை யெச்சம். உடை - த. வினைப்பெயர், த்-இறந்தகால இடைநிலை, உ-வினையெச்ச விகுதி. செய்-5, (வி-ரை) இல-4, காண்க.

8. 'உளார்': குறிப்பு வினைமுற்று. உள்-பகுதி (உண்மை), ஆர்-பலர்பால் விகுதி; இது குறிப்புச் சிறப்புவினை. 'உண்டு' என்பது குறிப்புப் பொதுவினை. செய்-4, (வி-ரை) இல. 12, காண்க. 'உளார்' என்பது தொகுத்தல் விகாரம்.

9. 'உட்கு'-வெட்கம். பெரும்பான்மையும் வெட்கத்தையடைந்தவர் தமக்குட் சுருங்கி (உள்ளடைந்து) போவதினால் இப் பெயர் வெட்கத்திற்காயிற்று; இது குறிப்பு வினைப்பெயர். உள்-பகுதி. "இல்லை" என்புழி ஐகாரஞ் சாரியையாய் நின்றாற்போல, இவ்விடத்துக் 'கு' சாரியையாய் நின்றது. செய்-க, (வி-ரை) இல-10, காண்க.

10. 'வரும்' : செய்-2, (வி-ரை) இல-7, காண்க. வ-குறுக்கல் விகாரம், ரு-விரித்தல் விகாரம்.

11. 'கல்வி' : செய்-2, (வி-ரை) இல-14, காண்க.

12. 'கடும்': ,, 8. ,, ,, -1, ,,

13. 'ஏதிலான்': என்பது, 'முறை முதலிய ஏது மில்லாதவன்' என்னும் பொருள்பட நின்றது.

14. 'ஏது': குறிப்பு வினைப்பெயர். 'ஏ' என்னும் வினா விடைச் சொல் பகுதி. செய்-5, (வி-ரை) இல-16, காண்க.

15. 'இலான்': ஆன்-ஆண்பால் விகுதி, "குழையான்" என்புழிப்போல நின்றது. செய்-5, (வி-ரை) இல-11, காண்க; இது குறிப்புச் சிறப்பு வினைமுற்று.

16. 'பால்': ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு.

17. 'கண்ட': இவ்விடத்துக் 'காணப்பட்ட' என்னும்பொருள் கொள்ளுஞ் செயப்படு பொருள்பட நின்றது. காண்-த-வினைப் பெயர், ட்-இறந்தகால இடைநிலை, அ-பெயரெச்சவிகுதி; சந்தியாற் 'கட்ட' என நின்றது மெலித்தல் விகாரத்தாற் 'கண்ட' என்றாயிற்று.

18. 'இல்': இல்லிலிருப்பவளை 'இல்' என்பது இடவாகுபெயர்.

19. 'இல்லினும்': செய்-2, (வி-ரை) இல-13, காண்க. உம்-இழிவு சிறப்புப்பொருள்பட நின்றது. செய்-7, (வி-ரை) இல-6, காண்க.

20. 'பொல்லாதது' என்பது 'பொல்லாது' எனத் தொகுத்து நின்றது.

21. 'தீது': தீமையின்கண்ணுள்ள தீ-பகுதி. செய்-8, (வி-ரை) இல-14, காண்க.

22. 'நீப்பது அரிது' என்பது 'நீப்பரிது' என நின்றது.

"தொட்டனைத்தூறுமணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறுமறிவு."

இவ்விடத்துத் 'தொட்டது அனைத்து,' 'கற்றது அனைத்து' என்பன 'தொட்டனைத்து,' 'கற்றனைத்து' என நின்றன.

23. 'நீப்பது,' காப்பது என்பன, "வழுத்தாதது" போல வரும் தொழிற்பெயர்கள், செய்-1, (வி-ரை) இல-12, காண்க. நீ-தனி வினைப்பெயர். "வெருட்டினன்," "வெருண்டான்" என்புழி 'வெருள்' என்பதுபகுதியாய்நின்றதுபோல, "நீக்கினன்," "நீங்கினன்" என்புழி 'நீ' பகுதியாய் நின்றது. ஆயினும், ஏவலின் விகுதி குறைந்த விகாரம் இத் தனிவினைப்பெயராய் நில்லாமை யறிக.

24. 'அரிது': செய்-3, (வி-ரை) இல-19, காண்க.

[திருக்குறள்-பொருட்பால்-அரசியல்-சம-அதி-கல்வி-அ. குறள்]

"ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து."

பரி:—(இ-ள்) ஒருவனுக்குத் தாளெரு பிறப்பின்கண் கற்ற கல்வி எழு பிறப்பினுஞ் சென்று உதவுதலை யுடைத்து எ-று.

[திருக்குறள்-பொருட்பால்-அரசியல்-சக-அதி. கல்லாமை-உ-செய்யுள்]

"கல்லாதான் சொற்கா முறுதன் முலையிரண்டு
மில்லாதாள் பெண்காமுற் றற்று."

பரி:—(இ-ள்) கல்வியில்லாதா னொருவன் அவையின்கண் ஒன்று சொல்லுதலை அவாவுதல், இயல்பாகவே முலை யிரண்டும் இல்லாதா ளொருத்தி பெண்மையை அவாவினாற் போலும், எ-று.

The disgraceful learning of those who lose themselves in an assembly of the wise, and can make no use of the knowledge they have acquired after years of industry, is worse than one's wife discovered with a stranger; for the former cannot be cast off as evil.

[புன்புலவர் செயல்]

கூ. வருந்தித்தாங் கற்றன வோம்பாது மற்றும்
பரிந்துசில கற்பான் றொடங்கல்—கருந்தனங்
கைத்தலத்த வுய்த்துச் சொரிந்திட் டரிப்பரித்தாங்
கெய்த்துப் பொருள்செய் திடல்.

[பதவுரை]

தாம் வருந்தி	=	*தாம் வருத்தமுற்று(க்)*
கற்றன	=	*கற்றனவாகிய நூற்பொருள்களை*
ஓம்பாது	=	*சிந்தித்தல் முதலியவற்றாற் பாதுகாவாது*
மற்றும் சில	=	*வேறு சில நூற்களை*
பரிந்து	=	*வருந்தி*
கற்பான் தொடங்கல்	=	*கற்கப்புகுதல்,*
கைத்தலத்த	=	*கையிலுள்ள*
கரும் தனம்	=	*மிக்க பொருள்களை(ப்)*
உய்த்து சொரிந்திட்டு	=	*புறத்திற் கொண்டுபோ யெறிந்துவிட்டு(ப்)*
எய்த்து	=	*(பின்னர்) வருந்தி*
அரிப்பரித்து	=	*அரிப்பரித்து(ப்)*
பொருள் செய்திடல்	=	*பொருளை யீட்டல்போலும்.*

[தொகுத்துரை]

கற்றுக்கொண்டதில் மனதைச் செலுத்தாமற் பின் ஒன்றைக் கற்கப்புகுதல், கைப்பொருளை யெறிந்துவிட்டுப் பின்னர்அரிப்பரித்துப் பொருள் தேடுதல்போலும் என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'வருந்தி': வருந்து-த. வி. பெயர்.

2. 'தாம்': இத் தன்மைப் பன்மைப் பெயர், இருதிணைக்கும் பொதுவாய் நிற்கும்; இது 'கற்றன' என்பதன்கண்ணுள்ள தனி வினைப் பெயருக்கு எழுவாய்.

3. 'கற்றன': செய்-8. (வி-ரை) இல-3, காண்க. விகுதிக்கு முன் 'அன்' சாரியை வரப்பெற்றது.

4. 'ஓம்பாது': செய்-8, (வி-ரை) இல-5, காண்க. ஓம்பு-த.வி. பெயர்.

5. 'மற்று': இவ் விடைச்சொல் 'பிறிது' என்னும் பொருள்பட நின்றது.

6. 'மற்றும்': எதிரது தழுவிய எச்சவும்மை.

7. 'பரிந்து' செய்-5, (வி-ரை) இல-4, காண்க. பரி-த-வி-பெயர்.

8. 'சில': இது 'சில்' என்னும் பண்படியாகப் பிறந்த பலவின் பாற் பெயர், அ-பலவின்பால் வி. முற்று விகுதி.

9. 'கற்பான்': இது எதிர்கால வினையெச்சம். பான்-காலங் காட்டும் வினையெச்ச விகுதி. இது 'கற்க' என்னும் பொருட்டு.

10. 'தொடங்கல்': தொடங்கு-த. வி. பெயர்; இது வினை யடிப் பகுபத வினைப்பெயர்.

11. 'கரும்': செய்-1, (வி-ரை) இல-6, காண்க.

12. 'தனம்': 'தலத்த' என்னும் குறிப்புப் பெயரெச்சத்திற்கு இது முடிபாய் நிற்கும்.

13. 'கைத்தலத்த' என்ற பண்புத்தொகை 'கையாகிய தலத்த' என விரியும். 'கை' என்பது 'தலத்த' என்ற வினையின் பகுதியை விசேடித்து நின்றது.

14. 'தலத்த': செய்-5, (வி-ரை) இல-1, காண்க. அத்து-சாரியை, அ-பெயரெச்ச விகுதி.

15. 'உய்த்து' என்பது 'செலுத்தி' என்னும் பொருட்டு. இது இவ்விடத்துப் 'புறத்தேகொண்டுபோய்' என்னும் பொருள்படநின்றது. இது "செய்து" என்னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம்.

16. 'சொரிந்திட்டு': இத் தொடர்மொழி வினை 'சொரிந்து' என்னும் பொருள்பட நின்றது. இதுவும் "செய்து" என்னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம். செய்-2, (வி-ரை)இல-11,காண்க

17. 'அரிப்பரித்து' என்பது, 'அரிப்பினால்அரித்து' எனவிரியும்.

18. 'அரித்து' என்பது, "செய்து" என்னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம்.

19. 'எய்த்தல்': இளைத்தல். எய்த்து-இதுவும் "செய்து" என்னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம்.

20. 'செய்திடு' என்பது, "சொரிந்திடு" என்பதுபோ லொத்த தொடர்மொழி வினை. செய்திடல்-தொடர்மொழி வினையடிப் பகுபத வினைப்பெயர், அல்-வினைப்பெயர் விகுதி.

[திருக்குறள்-பொருட்பால்-அரசியல்-சுக-அதி. கல்லாமை-க-செய்யுள்]

"அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்."

பரி:—(இ-ள்) அரங்கினை யிழையாது வட்டாடினாற் போலும், தான் நிரம்புதற் கேதுவாகிய நூல்களைக் கல்லாது ஒருவன் அவையின்கண் ஒன்றனைச் சொல்லுதல், எ-று.

To attempt to learn more and more, without digesting what has been already acquired by reflection is, like voluntarily throwing away in the sands the abundant wealth that was in one's hand, and then toiling to secure it by sifting the sands.

[நல்கூர்ந்தார் கல்வி நலம் பெருமை]

கo. எனைத்துணைய வேனு மிலம்பாட்டார் கல்வி
தினைத்துணையுஞ் சீர்ப்பா டிலவா—மனைத்தக்காண்
மாண்பில லாயின் மணமக னல்லறம்
பூண்ட புலப்படா போல்.

[பதவுரை]

மணமகன் பூண்ட	=	கணவனானவன் மேற்கொண்ட
நல் அறம்	=	விருந்தோம்பல்முதலிய நல்ல தருமங்கள்
மனைத்தக்காள்	=	இல்வாழ்க்கைக்குத் தக்கவளாகிய மனைவி
மாண்பு இலள் ஆயின்	=	நற்குண நற்செயல்களென்னு மாட்சிமை யில்லாதவளாயின்
புலப்படாபோல்	=	விளங்காமைபோல(த்),
இலம்பாட்டர் கல்வி	=	தரித்திருடைய கல்வியானது
எனைத்துணைய ஏனும்	=	எவ்வளவு மிகுதியையுடையதாயினும்
தினைத்துணையும்	=	தினையினுடைய அளவுதானும்
சீர்ப்பாடு இலவாம்	=	சிறப்பை யடைதல் இல்லையாம்.

[தொகுத்துரை]

நற்குண மில்லாத மனைவியின் நாயகன் மேற்கொண்ட விருந்தோம்பல்முதலிய அறம், அவனுக்குப் பயன்படாதவறே, நல்கூர்ந்தாருடைய கல்வியுஞ் சிறப்பை யடையாது என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'எனை': எனையஎன்ற குறிப்புப்பெயரெச்சம் ஈறு குறைந்து 'எனை' என நின்றது; இது 'எ' என்னும் வினாவிடைச்சொல்லடியாகப் பிறந்தது.

2. 'துணைய': செய்-5, (வி-ரை) இல-1, காண்க.

3. 'ஏனும்': 'எனினும்' என்பது 'ஏனும்' என மருவி நின்றது. செய்-5, (வி-ரை) இல-8, காண்க. இதன்கண் உம்மை உயர்வுசிறப்பும்மை.

4. 'இலம்பாடு' என்பது இல் பாடு என்ற இருமொழியாலானது. இவ் விருமொழிக்கு நடுவில் 'அம்' சாரியை வரப்பெற்றது. 'பாடு' என்பது, ''உடம்பாடு'' ''கடப்பாடு'' என்புழிப்போலத் தன்

மை' என்னும் பொருள்படும். ஆகவே, இது இன்மை யெனும் பொருட்டு. இலம்பாட்டா ரென்பவர் இல்லாதவர்; இது குறிப்பு வினைப்பெயர்.

5. 'கல்வி': செய்-2, (வி-ரை) இல-14, காண்க.

6. 'துணையும்': இழிவுசிறப்பும்மை.

7. 'சீர்பாடு': என்பது, 'சீர்மை' என்னும்பொருள்படநின்றது.

8. 'இல' 'இல்': என்னும் பண்படியாகப் பிறந்த குறிப்புவினை, அ-பன்மை வினைமுற்று விகுதி. செய்-5, (வி-ரை) இல. 11, காண்க.

9. 'ஆம்': 'ஆகும்' என்பது, 'ஆம்' என நின்றது. செய்-1, (வி-ரை) இல 9, காண்க.

10. 'தங்காள்' என்பது, வினையாலணையும் பெயர். செய்-2. (வி-ரை) இல-10, காண்க. 'ஆள்' என்பது பெண்பால் விகுதி.

11. 'இலன்': செய்-5, (வி-ரை) இல. 11, காண்க.

12. 'ஆயின்' ,, 5 ,, ,, 2, ,,

13. 'மணமகன்' என்பது 'மணத்துக்குரிய மகன்' என விரியும். மணம் என்பது கல்யாணம்.

14. 'நல்லறம்': செய்-2, (வி-ரை) இல-6, காண்க.

15. 'பூண்ட': பூண்-தனிவினைப்பெயர், ட்-இறந்தகால இடைநிலை, அ-பெயரெச்ச விகுதி, செய்-3, (வி-ரை) இல. 17, காண்க; இது 'அறம்' என்னு மொழியுடன் முடியும்.

16. 'புலப்படா':'மாய்வன,' செய்-7, (வி-ரை)இல. 13-போல் வினையாலணையும் பெயர்; இது வினைப்பெயர்ப்பொருளைக் கொடுத்து நின்றது. புலப்படு-தனிவினைப் பெயர், ஆ-பலவின்பால்விகுதி, செய்-6, (வி-ரை) இல-4,காண்க. புலன்களுக்கு விடயமாதல் புலப்படுதல், அஃதாவது தோன்றல்.

17. 'போல்': செய்-7, (வி-ரை) இல-14, காண்க.

[திருக்குறள்-பொருட்பால்-ஒழிபியல்-௧௦௩-ம் அதி-நல்குரவு-௬-குறள்]

"நற்பொரு ணன்குணர்ந்து சொல்லினு நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்."

பரி.—(இ-ள்) மெய்ந்நூற் பொருளைத் தெளியவறிந்து சொன்னாராயினும், நல்கூர்ந்தார் சொல்லுஞ் சொல் பொருளின்மையைத் தலைப்படும், எ-று.

Just as the deeds of charity undertaken by a person will fail, should his wife be devoid of the domestic virtues, so will the learning of the indigent, extensive though it be, fail to secure the slightest applause.

[செல்வச் சிறப்பு]

௧௧. இன்சொல்லன் றாழ்நடைய னாயினுமொன் றில்லானேல்
வன்சொல்லி னல்லது வாய்திறவா—தென்சொலினும்
கைத்துடையான் காற்கீ ழொதுங்குங் கடன்ஞாலம்
பித்துடைய வல்ல பிற.

[பதவுரை]

இன் சொல்லன் = (ஒருவன்) இனிய சொல்லையுடையோனும்
தாழ் நடையன் ஆயினும் = பணியத்தக் காரிடத்துப் பணியு மியல்புடையோனுமாயினும்
ஒன்று இல்லான் எல் = அவன் சிறிதுபொருளு மில்லானாயின்
கடல் ஞாலம் = கடல்சூழ்ந்த இந்த உலகத்துள்ளார்
வன்சொல்லின் அல்லது = அவனை நோக்கிக் கடுமையாகிய சொற் சொல்லுதலினலன்றி
வாய் திறவாது = இன்சொல்லினுல் வாய்பேசார்;
(ஆனாலோ)
கைத்து உடையான் = பொருளையுடையோன்
என் சொலினும் = எவ்வாறு சொல்லினும்
கால் கீழ் ஒதுங்கும் = அவன் காலின் கீழ் ஒதுங்குவார்;

பித்து உடைய = (ஆகையால், இவ் வுலகத்தார்) பைத்திய குணத்தையுடையவர்களேயன்றி

பிற அல்ல = நற்குணத்தையுடையவர்களல்லர்.

[தோகுத்துரை]

நல்கூர்ந்த இன்னடையுடையோருடனுங் கடுஞ்சொற் சொல்லி, கைத்துடையோர் தீயசொற் சொல்லினும் அவர்க்குத் தாழ்ந்து நடக்கு மிவ் வுலகம் பித்துடையதே என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'சோல்லன்': குறிப்பு வினைப்பெயர்; செய்-6, (வி-ரை) இல-2, காண்க.

2. 'தாழ்': வினைத்தொகை; செய்-1, (வி-ரை) இல-4, காண்க.

3. 'நடையன்': செய்-11, (வி-ரை) இல-1, காண்க.

4. 'ஆயின்' செய்-5, (வி-ரை) இல. 2, காண்க.

5. 'ஆயினும்': உயர்வு சிறப்பும்மை.

6. 'ஒன்று': இஃது எண்ணுகுபெயராய்ப் பொருளை யுணர்த்தி நின்றது.

7. 'இல்லானேல்': செய்-5, (வி-ரை) இல-14, காண்க.

8. 'வன்சோல்': ,, 7, ,, ,, 8 ,, .

9. 'திறவா': இதற்கு 'ஞாலம்' என்பது தோன்றா எழுவாயாய் நின்றது. இவ் வினைமுற்றின் விகுதியாகிய 'ஆ' பலர்பாலைக் காட்டியது. செய்-6, (வி-ரை) இல-4, காண்க.

10. 'என்': செய். 1, (வி-ரை) இல-12, காண்க.

11. 'கைத்து': கையி லுள்ளது கைத்து; இது குறிப்பு வினைப் பெயர். செய்-5, (வி-ரை) இல-16, காண்க.

12. 'உடையான்': செய்-5, (வி-ரை) இல-16, காண்க.
செய்-11, (வி-ரை) இல-1, காண்க.

13. 'கீழ்' என்பது, ஏழாம் வேற்றுமை யுருபு.

14. 'ஒதுங்கும்': செய்-3, (வி-ரை) இல-1, காண்க.

15. 'கடன் ஞாலம்' என்பது, 'கடலாற் சூழப்பட்ட ஞாலம்' என விரியுமாதலால், இத் தொகை உருபும் பயனுந் தொக்கதொகை யெனப்படும். 'ஞாலம்' என்பது ஞாலத்துள்ளவர்களை யுணர்த்தினமையால் ஆகுபெயர்.

16. 'உடைய': இது குறிப்பு வினைமுற்று; அ-பலவின்பால் விகுதி. செய்.11, (வி-ரை) இல-12, காண்க.

17. 'அல்ல': இஃது 'அல்' என்ற பண்படியாகப் பிறந்தது. செய்யுள்-11, (வி-ரை)இல-16, காண்க; செய்-2, (வி-ரை) இல-16, காண்க.

18. 'பிற': "இவ் விடைச்சொல்லின்கண் பலவின்பால் விகுதியாகிய 'அ' என்றது புணர்ந்து கெட்டது" என்றும், "பிறன்,பிறள் முதலிய மொழிகள் னகர ளகர வொற்றீற்று விகுதிகளையே யடைந்தன" என்றுஞ் சொல்லுவார்.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால்-அங்கவியல்-எசு-அதி-பொருள் செயல் வகை-உ-குறள்]

"இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை
யெல்லாருஞ் செய்வர் சிறப்பு."

பரி:—(இ-ள்) எல்லா நன்மையு முடையாராயினும் பொருளில்லாரை யாவரு மிகழ்வர், எல்லாத் தீமையு முடையாராயினும் அஃதுடையாரை யாவரு முயர்ச்செய்வர், எ-று.

The world will talk harshly to him who has not wealth, although he be kind and humble; whereas they will shelter themselves under the feet of the wealthy though he may be the reverse in manner. Men are subject to a species of insanity. The inhabitants of the sea-girt earth are not good.

[தவத்தின் சிறப்பு]

௧௨. இவறன்மை கண்டு முடையாரை யாருங்
குறையிரந்துங் குற்றேவல் செய்ப—பெரிதுந்தா
முற்பகனோலாதார் நோற்றாரைப் பின்செல்லல்
கற்பன்றே கல்லாமை யன்று.

[பதவுரை]

இவறன்மை	= உலோபகுணம்
கண்டும்	= (அவரிட மிருப்பதைக்) கண்டிருந்தும்
உடையாரை	= செல்வமுடையவரிடம்
யாரும்	= யாவரும்
குறை இரந்து	= தங்குறை சொல்லி யிரந்து (அவர் ஏவிய)
குறுமை ஏவல் உம்செய்ப	= சிறு தொழில்களையும் செய்வார்கள்;
பெரிதும்	= மிகுதியும்
முன் பகல்	= முன்னாட்களாகிய தம் பிறப்பில்
நோலாதார்	= தவஞ் செய்யாதார்
நோற்றாரை	= அந்நாட்களில் தவஞ் செய்தவரை(ப்)
பின் செல்லல்	= பின் தொடர்ந்து போதல்
கற்பு அன்றே	= நியமமல்லவா? (ஆதலால் இது)
கல்லாமை அன்று	= அறியாமை யல்ல.

[தேர்குத்துரை]

பாக்கியமுள்ள உலோபிகளை யாவருந் தழுவி நடப்பது விதியின் பயனேயன்றி வேறல்ல என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'இவறன்மை' என்புழி, 'மை' விகுதி விகுதிமேல் விகுதியாய் நின்றது. இவறல்-வினையடிப் பகுபத வினைப்பெயர். இவறல்-உலோபித்தல்.

2. 'கண்டு': செய்-3, (வி-ரை) இல-6, காண்க.

3. 'உடையார்': ஆர்-பலர்பால் விகுதி. செய்-11, (வி-ரை)இல-16, காண்க.

4. 'யார்': இது 'யாவர்' என்னும் குறிப்பு வினைப்பெயரின் மரூஉ.

5. 'துறை': குறைக்கப்பட்டது குறை; இது வினையடிப் பகாப் பதப் பொருட்பெயர்.

6. 'இரந்து': செய்-5, (வி-ரை) இல-4, காண்க.

7. 'குற்றேவல்': 'குறுமை ஏவல்' என்பது 'குற்றேவல்' என நின்றது.

8. 'செய்ப': இது பலர்பாற் படர்க்கை வினைமுற்று. பகரவீறு பாலையுங் காலத்தையுங் காட்டிற்று.

[நன்னூல்-பதவியல்-கஅ]

"பாந்தப் (ப) செலவோடு வரவும்" காட்டும்.

9. 'பெரிது': இது குறிப்பு வினையெச்சமாய் 'நோலாதார்' என்றதன்எச்சத்தோடு முடிந்தது. தகரம் எழுத்துப்பேறு,உ-வினை யெச்ச ஈறு; அன்றேல், குறிப்பு வினைமுற்று வினையுரிச்சொற் பொருள்பட நின்றதெனினு மமையும். இதனைச் சார்ந்த உம்மை தனக்கென வேறு பொருளின்றி நின்றது.

10. 'முன்': செய்-3, (வி-ரை) இல-12, காண்க.

11. 'நோலாதார்': நோல்-தனிவினைப் பெயர், ஆ-எதிர்மறை இடைநிலை, த்-எழுத்துப்பேறு, ஆர்-பலர்பால் விகுதி.

12. 'நோற்றார்': நோல்-தனிவினைப் பெயர், ற்-இறந்தகால இடைநிலை, ஆர்-பலர்பால் விகுதி.

13. 'பின்': செய்-3, (வி-ரை) இல-13, காண்க.

14. 'செல்லல்': வினையடிப் பகுபத வினைப்பெயர். செய்-12, (வி-ரை) இல-1,காண்க.

15. 'கற்பு': கற்பிக்கப்பட்டது கற்பு; வினையடிப் பகுபதப் பொருட்பெயர்; பு-வினைப்பெயர் விகுதி.

16. 'அன்று': அசைநிலை.

17. 'கல்லாமை': 'கற்பிக்கப்படாதது' என்னும் பொருள்பட நின்றது. செய்-6, (வி-ரை) இல-14, காண்க.

18. 'அன்றே' என்பது, அன்மையின் பண்படியாகிய 'அல்' அடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று. ஏகாரவிறு இடைச்சொல் தேற்றத்தைக் கொடுத்தது.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-அறத்துப்பால்-துறவறவியல்-உஎ-அதி-தவம்-உ குறள்]

"தவமுந் தவமுடையார்க் காகு மவமதனை
யஃதிலார் மேற்கோள் வது."

பரி:—(இ-ள்) பயனையன்றித் தவந்தானும் உண்டாவது முற்றவமுடையார்க்கே; ஆகலான், அத் தவத்தை அம் முற்றவ மில்லாதார் முயல்வது பயனின் முயற்சியாம், எ-று.

[திருக்குறள்-அறத்துப் பால்-பாயிரம் அதி-ச-
அறன் வலியுறுத்தல்-எ-குறள்]

"அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை."

பரி:—(இ-ள்) அறத்தின் பயன் இதுவென்று யாம் ஆகமவளவையான் உணர்த்தல் வேண்டா, சிவிகையைக் காவுவானோடு செலுத்துவானிடைக் காட்சியளவைதன்னானே யுணரப்படும், எ-று.

(வாக்குண்டாம்-அ-ம் செய்யுள்)

"மேலைத் தவத்தளவே யாகுமாந் தாம்பெற்ற செல்வம்"

Men will do menial offices to the rich, importuning them with suits for redress although they be found niggardly. Is it not proper that those who dit not perform deeds of penance in a former birth should dance attendance on those who have so done? This is not their own ignorance.

[கல்வி நலனே கலன் எனல்]

கரு. கற்ருேர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்ருே ரணிகலம் வேண்டாவா—முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக் கழகுசெய் வார்.

[பதவுரை]

யாரே	=	யாவர்தாம்
அழகுக்கு	=	அழகுக்கு
அழகு செய்வார்	=	அழகைக் கொடுப்பார்?
முற்ற முழுமணிப் பூணுக்கு	=	முற்றுப் பெறமுழுமணிக ளழுத்திய நகைகளுக்கு(ப்)
பூண் வேண்டா	=	(பின்னும் அழகைக்கொடுக்கும்படிவேறு) ஆபரணங்கள் வேண்டப்படாவாம்; அதுபோல(க்)
கற்ருேர்க்கு	=	கற்றுணர்ந்தவர்க்கு(க்)
கல்வி நலனே	=	கல்வியறிவென்னும்
கலன் அல்லால்	=	ஆபரணமேயன்றி
மற்று ஓர் அணிகலம்	=	வேறே யாபரணம்
வேண்டாவாம்	=	வேண்டியதில்லை.

[தொகுத்துரை]

அழகுக்கு அவ் வழகும், ஆபரணத்துக்கு அவ் வாபரணமும், கல்விக்கு அக் கல்வியுமே அழகைக் கொடுக்கும் என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'நலம்' 'கலம்' என்பன போலியால் 'நலன்' கலன்' என நின்றன. யாண்டும் பால்பகா அஃறிணைப் பெயர்க்கண் குறிலிணையை யணைந்துவந்த மகரவொற்றீறே யிப்போலியை யடையும்.

2. 'நலனே': தேற்றேகாரம்; செய்-4, (வி-ரை) இல-2, காண்க.

3. 'அல்லாமல்' என்பது 'அல்லால்' எனத்தொகுத்துநின்றது.

4. 'வேண்டப்படா' என்னும் செயப்படுபொருளை யுணர்த்தும் வினை 'வேண்டா' என மயங்கிநின்றது.

5. 'முற்ற' என்பது, 'அழகைப் பூரணப்படுத்த' என்னும் பொருள்தர நின்றது; இது "செய" என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

6. 'மணிப்பூணுக்கு' என்பது, 'மணிகளை யழுத்திய நகைகளுக்கு' என விரியுமாதலால், இஃது உருபும் பயனுந் தொக்கதொடர்.

7. 'யாரே' என்பதன்கண் ஏகாரவினாவிடைச்சொல் எதிர்மறைப்பொருள் கொடுத்து நின்றது.

[உதாரண மேற்கோள்]

[நான்மணிக்கடிகை-௨௮-ம் செய்யுள்]

"கற்பக் கழிமட மஃகு மடமஃகப்
புற்பந்தீர்ந் திவ்வுலகின் கோளுணருங் கோளுணர்ந்தான்
தத்துவ மான நெறிபடரு மந்நெறி
இப்பா லுலகி னிசைநிறீ யுப்பால்
உயர்ந்த உலகம் புகும்."

(ப-ரை.) கற்ப-(ஒருவன் நூல்களைக்) கற்பதினால், கழி மடம்-மிகுதியாகிய பேதைமை, அஃகும்-குறைவான்; மடம் அஃக-அறியாமை நீங்குவதினால், புற்பம் தீர்ந்து-புல்லறிவு நீங்கி, இவ்வுலகின் கோள்-இவ் வுலகத்தினது இயல்பினை, உணரும்-அறிவான்; கோள் உணர்ந்தான்-அவ்வியற்கையை உணர்ந்தவன், தத்துவம் ஆன நெறி-உண்மையாகிய வழியில், படரும்-செல்வான்; அந்நெறி-(சென்ற) அவ்வழியினால், இப்பால்-இம்மையில், உலகின்-உலகத்தில் இசை நிறீஇ-புகழை நிலைப்பெறச்-செய்து, உப்பால்-மறுமையில், உயர்ந்த உலகம்-(எல்லா உலகங்களிலும்) உயர்ந்த முத்தியுலகத்தில், புகும்-புகுவான், எ-று.

[ஆத்திசூடி-எ-சூத்திரம்]

"எண்ணெழுத் திகழேல்."

(பொழிப்புரை.) தருக்கநூலையும், இலக்கணநூலையும் இகழாது கற்க, எ-று.

[கொன்றைவேந்தன்-எ-சூத்திரம்]

"எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகும்."

(பொழிப்புரை.) தருக்கநூலும் இலக்கணநூலும் மக்களுக்கு இரண்டு கண்களெனக் கூறத்தக்கனவாம், எ-று.

[நன்னூல்-சிறப்புப்பாயிரம்-சங்கரநமச்சிவாயப் புலவர்

[விருத்தியுரை]

"எழுத்தென்றது, இயற்றமிழை; அது 'எண்ணென்ப வேனை யெழுத்தென்ப' என்பதனானு முணர்க.

இசைத்தமிழும் நாடகத்தமிழும் இவ்வியற்றமிழ்போல முதல் நூற்பொரு ளுணர்தற்குக் கருவியன்மையின் இயற்றமிழ் ஒன்றே கூறினார்."

[திருக்குறள்-அறத்துப்பால்-அரசியல்-௪0-அதி.-கல்வி-உ-குறள்.]

"எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு."

பரி:—(இ-ள்) அறியாதார் எண்ணென்று சொல்லுவனவும் மற்றை யெழுத்தென்று சொல்லுவனயும் ஆகிய கலைகள் இரண்டனையும் அறிந்தார் சிறப்புடை உயிர்கட்குக் கண்ணென்று சொல்லுவர், எ-று.

The learned need no other ornaments than their learning. A perfect ornament set with unbroken gems to present the best artistic effect needs no further decoration. Who is there that will endeavour to add beauty to what is passing fair?

[கல்விச் செருக்கு ஆகாதெனல்]

கச. முற்று முணர்ந்தவ ரில்லை; முழுவதூஉங்
கற்றன மென்று களியற்க—சிற்றுளியாற்
கல்லுந் தகருந் தகரா கனங்குழாய்!
கொல்லுலைக் கூடத்தி னல்.

[பதவுரை]

முற்றும் உணர்ந்தவர்	=	எல்லாம்அறிந்தவர்கள்
இல்லை	=	இல்லை;
	(ஆதலால்),	
முழுவதும்	=	எல்லாவற்றையும்
கற்றனம் என்று	=	கற்றுவிட்டோம் என்று
களியற்க	=	மகிழ்ச்சி யடைதல்வேண்டாம்
கனம் குழாய்	=	கனத்த காதணியை யுடைய வளே !
சிறு உளியால்	=	சிறிய உளியினால்
கல்லும் தகரும்	=	கல்லானதும் உடைக்கப்படும்; (ஆனாலும் அது)
கொல் உலை	=	கொல்லனுடைய உலைமுகத்தி லுள்ள
கூடத்தினால்	=	சம்மட்டியினால்
தகரா	=	உடைக்கப்படாது.

[தொகுத்துரை]

சிற்றுளிக்குத் தகருமலை சம்மட்டிக்குத் தகராது; (பெரியோரா லாகாத காரியமு முண்டு); ஆகையால், 'முற்று முணர்ந்தனம்' என்ற பெருமிதம் வேண்டாம் என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'முற்று' என்பது வினையடிப் பகாப்பதப்பொருட்பெயர்.

2. 'முற்றும்' என்பதன்கண் முற்றும்மை வந்தது.

3. 'உணர்ந்தவர்': செய்-6, (வி-ரை) இல-9, காண்க, இடைநிலைக்கும் விகுதிக்கும் நடுவில் அகரச்சாரியை வந்தது.

4. 'இல்லை': செய்-2, (வி-ரை) இல-16, காண்க.

5 'முழுவதும்' என்பது, இன்னிசை யளபெடையாய் 'முழுவதூஉம்' என நின்றது; இதனையு முற்றும்மை யடைந்தது.

6. 'முழுவது' என்பதன்கண் முழுமையின் திரிபுஆகிய முழு-பகுதி, அ-சாரியை, து-ஒன்றன்விகுதி; இது குறிப்பு வினைமுற்று.

7. 'கற்றனம்': தன்மைப் பன்மை யிறந்தகால வினைமுற்று; கல்-பகுதி, ற்-இறந்தகால இடைநிலை, அன் - சாரியை, அம்-தன்மைப் பன்மை விகுதி.

8. 'என்று': 'என்' என்னும் இடைச்சொலடியாகப் பிறந்த "செய்து" என்னும் வாய்பாட்டு வினையெச்சம். செய்-5, (வி-ரை) இல-8, காண்க.

9. 'களியற்க': எதிர்மறை வியங்கோள்; அல் - எதிர்மறை யிடைநிலை.

10. 'சிற்றுளி': செய்-2, (வி-ரை) இல-17, காண்க.

11. 'கல்லும்' என்புழி உயர்வு சிறப்பும்மை வந்தது.

12. 'தகரா': செய்-7, (வி-ரை) இல-15,காண்க; தகர் - தனி வினைப்பெயர்.

13. 'கனங்குழாய்' என்பது, 'கனத்தையுடைய குழையை யுடையவளே! என விரியும்; செய்-3, (வி-ரை) இல-20, காண்க.

14. 'குழாய்': எட்டாம் வேற்றுமையின்கண் "இழை" என்பது "இழாய்" என நின்றாற்போலவே, 'குழை' என்பது 'குழாய்' என நின்றது.

15. 'கோல்': வினையடிப் பகாப்பதப் பொருட்பெயர்.

16. 'உலைக்கூடம்' என்பது, 'உலைமுகத்திலிருக்குங் கூடம்' என விரியும்.

17. 'கூடத்தினுல்' என்புழி, 'அத்து,' 'இன்' என்ற சாரியை வேற்றுமைக்கு முன் நின்றன.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-அறத்துப்பால்-அரசியல்-சுக-அதி.-கல்லாமை-ரு-குறள்]

"கல்லா வொருவன் றகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்."

பரி:—(இ-ள்) நூல்களைக் கல்லாத வொருவன் யான் அறிவுடையே னெனத் தன்னை மதிக்கும் மதிப்பு, அவற்றைக் கற்றவன் கண்டு உரையாடக் கெடும், எ-று.

[நன்னெறி-உக-ம் செய்யுள்.]

"எழுத்தறியார் கல்விப் பெருக்க மனைத்தும்
எழுத்தறிவார்க் காணி னிலையாம்;—எழுத்தறிவா
ராயுஞ் கடவு ளவிர்சடைமுன் கண்டளவில்
வீயுஞ் சுரநீர் மிகை."

[பொழிப்புரை.] ஆகாய கங்கையின் பெருக்கமானது பஞ்சாக்கரத்தினியல்பை யாராய்ந்தறிந்துள்ளவர் ஆராய்கின்ற சிவபிரானது விளங்குகின்ற சடையைக் கண்டவளவில் கெடும்; அதுபோல், இலக்கண நூலுணர்ச்சி யில்லாதவருடைய கல்விப்பெருக்கமெல்லாம், இலக்கண நூலுணர்ச்சி யுடையாரைக்கண்டவளவில் கெடும்.

There is none who knows everything. Be not proud therefore that you have learnt-all (that can be learnt.) O thou adorned with heavy ear-rings! Even the hard rock can be broken by a small chisel. It cannot be broken by the blacksmith's hammer, at the forge.

[கற்றாரைக் கண்டு பொருமை கொள்ளின், கல்வி வருமெனல்]

கரு. தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க-தம்மினும்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெலாம்
எற்றே யிவர்க்குநா மென்று.

[பதவுரை]

தம்மின் மெலியாரை	= தம்மின் எளியாரை(ப்)
நோக்கி	= பார்த்து(த்)

தமது உடைமை	=	தமது பொருளே
அம்மா பெரிது என்று	=	ஓ ஓ மிக்கது என்று
அகம் மகிழ்க	=	மன மகிழ்க.
தம்மினும்	=	தம்மினும்
கற்றாரை நோக்கி	=	அதிகமாகக் கற்றவர்களைப் பார்த்து
நாம் கற்றது எல்லாம்	=	நாம் கற்றது முழுவதும்
இவர்க்கு எற்றே என்று	=	இவரதுகற்றறிவோடெத்தன்மையதாம் (ஒப்பிடவுந்தகாது) என்று கருதி(த்)
கருத்து அழிக	=	தம் மனத்துள் வருந்துக.

[தொகுத்துரை]

தம் பொருளைத் தமக்குக் கீழானோருடைய பொருளோடு ஒப்பிட்டுக் களிப்படைக; தம் கல்வியைத் தமக்கு மேலானோருடைய கல்வியோடு ஒப்பிட்டு மனம் வருந்துக என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'தம்மின்' என்புழி ஐந்தனுருபு தாழ்வை யுணர்த்தும் எல்லைப் பொருள்தர நின்றது.

2. 'மேலியார்': செய்-12, (வி-ரை) இல-3, காண்க.

3. 'நோக்கி': "செய்து" என்னும் வாய்பாட்டு வினையெச்சம். நோக்கு-தனிவினைப்பெயர்; 'இன்' என்பதன் கடைக்குறையாகிய 'இ' இறந்தகாலங் காட்டிற்று.

4. 'தாம்' என்னும் தன்மைப் பன்மைப் பெயர் உருபேற்றமையால் 'தம்' என நின்றது.

5. 'உடைமை': பண்புப்பெயர்.

6. 'அம்மா': வியப்பு இடைச்சொல்.

7. 'பெரிது': செய்-3, (வி-ரை) இல-19, காண்க.

8. 'என்று': ,, 14, ,, ,, 8 ,, .

9. 'மகிழ்க': வியங்கோள் வினைமுற்று.

10. 'தம்மினும்' என்றதன்கண் வந்த உம்மை உயர்வு சிறப்பும்மை.

11. 'கருந்து' என்பது, ஆகுபெயராய் மனவருத்தத்தை யுணர்த்திற்று.

12. 'கருத்து அழிக' என்பது, 'மனவருத்தத்தினை லழிக' என்னும் பொருள்படும்.

13. 'கற்றது': து-ஒன்றன் படர்க்கை விகுதி; செய்-8, (வி-ரை) இல-3, காண்க.

14. 'எல்லாம்' என்னும் பொதுப்பெயர் தொகுத்தல் விகாரத்தால் 'எலாம்' என நின்றது.

15. 'எற்று' என்பது, 'எ' என்னும் வினவிடைச்சொல்லடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று.

16. 'எற்றே' என்புழி, ஏகாரவினை எதிர்மறையை யுணர்த்திற்று. செய்-13, (வி-ரை) இல-7, காண்க.

17. 'கற்றதேலா மெற்றே யிவர்க்கு நாமென்று' என்பது, பொருள் கொள்ளுங்கால், 'நாம் கற்ற தெல்லா மிவர்க்கு எற்றே' என்று நிற்கும்.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால்-அரசியல்-சு௦-அதி.-கல்வி-ரு-குறள்]

"உடையார்மு னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்."

பரி:—(இ-ள்.) "பிற்றைநிலை முனியாது கற்றல் நன்" றாதலான், செல்வர்முன் நல்கூர்ந்தார் நிற்குமாறுபோலத் தாமும் ஆசிரியர் முன் ஏக்கற்று நின்றுங் கற்றார் தலையாயினார்; அந்நிலைக்கு நாணிக் கல்லாதவர் என்றுஞ்றும் இழிந்தாரே யாவர், எ-று.

Observing the condition of persons poorer than yourself, feel glad at heart that your lot is comparatively

happy. Be sorry when you see persons cleverer than yourself by reflecting on their superiority.

[பணிவுடையாரிடத்தே செல்வஞ் சிறந்து விளங்கு மெனல்]

கசு. கல்வி யுடைமை பொருளுடைமை யென்றிரண்டு
செல்வமுஞ் செல்வ மெனப்படும்—இல்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பபோற் றாமுந்
தலைவணங்கித் தாழப் பெறின்.

[பதவுரை]

இல்லார்	=	தரித்திரர்
குறை இரந்து	=	தமது குறையைத் தமக்கு இரந்து சொல்லி(த்)
தம் முன்னர்	=	தமது முன்னே
நிற்ப போல்	=	நிற்பது போல(க்),
தாமும்	=	கல்வியும் பொருளு முடைய ராய தாமும்
தலை வணங்கி	=	தந்தலையால் வணங்கி(ப்)
தாழப் பெறின்	=	பிறர்க்குத் தாழ்வாராயின்,
கல்வி உடைமை பொருள் உடைமை என்ற	=	தமது கல்வியும் திரவியமு மாகிய
இரண்டு செல்வமும்	=	இரண்டு பாக்கியமுமே
செல்வம் எனப்படும்	=	பாக்கியமென்று பலராலும் விசேடித்துச்சொல்லப்படும்

[தொகுத்துரை]

தம்மை நாடி வரும் நல்கூர்ந்தார்ப்போலத் தாமுந் தாழின் ஒருவரது கல்வியும் பொருளுஞ் சிறப்புறும் என்பதாம்.

[விருத்தியுரை]

1, 'உடைமை': பண்பாகுபெயர்.

2. 'என்று': என்பது.

"வினைபகை யென்றிரண்டி னெச்ச நினையுங்காற்
றீயெச்சம் போலத் தெறும்."

என்புழிப்போல், எண்ணிடைச்சொல்லாய் நின்றது.

3. 'செல்வழும்': முற்றும்மை.

4. 'துறை': வினையடிப் பகாப்பதப் பொருட்பெயர்.

5. 'துறை யிரந்து': என்பது, 'குறையினிமித்தம் இரந்து' என்றுவது, 'குறையைச் சொல்லி யிரந்து' என்றுவது விரியும்.

6. 'முன்னர்'என்புழி, 'அர்'சாரியையாய் நின்றது; "பாங்கர்,". "பின்னர்" என்பனவு மிவ்வாறு சாரியை பெற்றன.

7. 'நிற்பது' என்ற வினையடிப் பகுபத வினைப்பெயர் கடை குறைந்து 'நிற்ப' என நின்றது.

8. 'தலை வணங்கி': மூன்றும் வேற்றுமைத் தொகை.

9. 'தாழ்' என்ற வினையெச்சம் வினைப்பெயர்ப் பொருண்மை யைக் கொடுத்து நின்றது.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால்-ஒழிபியல்-கூஅ-அதி.-பெருமை-சு-குறள்]

"ஒருமை மகளிரே போலப் பெருமையுந்
தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு."

பரி:—(இ-ள்) கவரா மனத்தினையுடைய மகளிர் நிறையின் வழுவாமற் றம்மைத் தாங் காத்துக்கொண் டொழுகுமாறுபோல, பெருமைக்குணனும், ஒருவன் நிறையின் வழுவாமற் றன்னைத் தான் காத்துக்கொண் டொழுகுவானாயின், அவன்கணுண்டாம், எ-று.

If the learned or the rich should be humble like the unlearned, or the poor who stand in their presence repre-

senting their grievances, then alone shall they be said to possess real wealth & learning.

[பெரியாரியல்பு கூறல்]

களஎ. ஆக்கம் பெரியார் சிறியா ரிடைப்பட்ட
மீச்செலவு காணி னனிதாழ்ப—தூக்கின்
மெலியது மேன்மே லெழச்செல்லச் செல்ல
வலிதன்றே தாழுந் துலைக்கு.

[பதவுரை]

ஆக்கம் பெரியார்	=	செல்வத்திற் பெரியார்
சிறியார் இடைப்பட்ட	=	சிறியோரிடத்துண்டாகிய
மீச்செலவு காணின்	=	வரம்பிகந்த நடையைக் கண்டா[ல்
னனி தாழ்ப	=	தாமே மிகவுந் தாழ்வார்கள்;
தூக்கின்	=	ஆராய்ந்து பார்க்கின்
துலைக்கு	=	துலாக் கோலில்
மெலியது	=	நொய்ய பொருளுள்ள தட்டு
மென்மேல்	=	மென்மேலும்
எழச் செல்லச் செல்ல	=	உயர்ந்து போகப்போக(த்)
வலிது அன்றே	=	திண்ணிய பொருளுள்ள தட்டல்லவா
தாழும்	=	தாழுகின்றது.

[தோதத்துரை]

தராசின் கனமுள்ள தட்டுக் கீழ் நாட, கனமற்ற தட்டு மேனுடு மாறுபோல, சிறியார் வரம்பிகந்து நடக்குங்காலத்தும், பெரியோரானவர் தாழ்ந்தே நடப்பர் என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'ஆக்கம்' என்ற வினையடிப் பகுபதப் பொருட்பெயர், ககர மிரட்டித்தலாகிய விரித்தல் விகாரம் பெற்றது; இவ்வாறே "வாட்டம்" என்பதும் விரிக்கப்பட்டது.

2. 'பெரியார், சிறியார்': செய்-12, (வி-ரை) இல-3, காண்க.

3. 'இடை' 'இடம்' என்பன ஒருபொருண் மொழி.

4. 'செலவு': "அறிவு" என்பதுபோல, வினையடிப் பகுபத வினைப்பெயராய் நின்றது.

5. 'நனி': வினையுரிச்சொல்.

[நன்னூல் விருத்தியுரை]

"வினைப் பெயர் வினைகளை விட்டு நீங்காவாய்ச், செய்யுட் குரியனவாய்ப், பொருட் குரிமை பூண்டு வருவன வுரிச்சொல்லாம்."

"இவையும் பண்புப்பெயராயினும், வினைப் பெயர் வினைகளை விட்டு நீங்காமையின் வேறு ஓதப்பட்டன". "செய்யுட்குரியனவாய்ப் பொருட்குரிமை பூண்டனவாதலின் உரிச்சொலெனக் காரணக் குறிபோந்தது." அன்றியும், உரிச்சொல் "அரிதுணர் பொருளன" ஆயுமிருத்தல் வேண்டும்.

6. 'தாழ்ப': "வினையுருபுகள்": 19-3, 20-1, காண்க.

7. 'தூக்கின்': என்பது, "செயின்" என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

8. 'மெலியது': விகுதிக்கு முன் அகாரச்சாரியை தோன்றிற்று.

9. 'மென்மேல்' என்ற அடுக்கு சந்தியால் லகரம் னகரமான தின்மேற் குறுக்கல் விகாரம் பெற்றது.

10. 'அன்றே': செய்-12, (வி-ரை) இல-19, காண்க.

11. 'துலைக்கு' என்பது உருபுமயக்கமாய், நான்கனுருபு ஏழாம் வேற்றுமைப் பொருளின்கண் வந்தது.

[உதாரண மேற்கோள்]
[திருக்குறள்-பொருட்பால்-அங்கவியல்-௯௮-அதி-பெருமை-௯-குறள்]

"பெருமை பெருமித மின்மை சிறுமை
பெருமித மூர்ந்து விடல்."

பரி:—(இ-ள்) பெருமைக்குணமாவது, காரண முண்டாய வழியும் அஃதியல்பாத னோக்கித் தருக்கின்றி யிருத்தல்; சிறுமைக் குணமாவது, அஃதில்வழியும் அதனை யேற்றிக்கொண்டு தருக்கின் முடிவின்கண்ணே நின்றுவிடுதல், எ-று.

Those who are rich in wisdom will bear with patience the improper conduct of the unwise. Does it not appear on examining, that the lighter weight in a scale pan rises higher & higher, while the heavier falls lower ?

[தற்புகழ்ச்சியுடையார் செய்யும் அறம் அறம் ஆகாதெனல்]

௧௮. விலக்கிய வோம்பி விதித்தனவே செய்யு
நலத்தகையார் நல்வினையுந் தீதே—புலப்பகையை
வென்றன நல்லொழுக்கி னின்றேம் பிறவென்று
தம்பாடு தம்மிற் கொளின்.

[பதவுரை]

விலக்கிய	= விலக்கப்பட்டனவாகிய கருமங்களை(ச்)
ஓம்பி	= செய்யாமற் பாதுகாத்து
விதித்தனவே	= விதிக்கப்பட்டனவற்றையே
செய்யும்	= செய்கின்ற
நலம் தகையார்	= நல்ல தகுதியை யுடையவர்கள்:
புலம் பகையை	= "ஐம்புலன்களாகிய பகைவரை
வென்றனம்	= யாம் அடக்கினோம்;

நல் ஒழுக்கில் = நல்லொழுக்கங்களிலும்
நின்றேம் = வழுவாமல் நின்றேம்''
என்று = என்றுகூறி
தம் பாடு = தம்முடைய பெருமையை(த்)
தம்மில் கொளின் = தமக்குள் மதித்துக்கொள்ளின்
(அப்படி மதிப்பவரது)
நல் வினையும் = நல்ல செய்கையும்
தீதே = தீயதேயாம்.

[தேர்குத்துரை]

தம்மைத் தாமே மதித்துக்கொள்ளும் நல்லோர் செய்யுங் கருமமுந் தீதே என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'விலக்கிய,' 'விதித்தன' என்பன, முறையே விலக்கப்பட்டன விதிக்கப்பட்டன எனச் செயப்படுபொருள்கொடுத்துநின்றன.

2. 'விதித்தனவே': தேற்றேகாரம்.

3. 'நலம் தகையார்,' 'புலம் பகை' என்பன பண்புத்தொகைக்கண் 'நலத்தகையார்,' 'புலப்பகை' என நின்றன.

4. 'நல்வினையும்': இழிவு சிறப்பும்மை.

5. 'தீது': குறிப்பு வினைமுற்று; து-ஒன்றன்படர்க்கை விகுதி.

6. 'வென்றனம்': தன்மைப்பன்மை யிறந்தகால வினைமுற்று; வெல்-தனிவினைப்பெயர், ற்-இறந்தகால இடைநிலை, அன்-சாரியை, அம்-தன்மைப்பன்மை விகுதி, லகரம் ன்கரமானது சந்தி.

7. 'ஒழுக்கு': ''ஆட்டம்'': ஆக்கம் என்ற வினையடிப்பகுபத வினைப்பெயர் விரித்தல் விகாரம் பெற்றதுபோல, 'ஒழுக்கு' என்ற வினையடிப்பகாப்பத வினைப்பெயரும் விரித்தல் விகாரம் பெற்றது.

8. 'நின்றேம்': எம்-தன்மைப்பன்மை விகுதி.

9. 'பாடு' என்பது 'பெருமை' என்னும் பொருட்டு.

10. 'பிற': அசைநிலை.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-அறத்துப்பால்-துறவறவியல்-உ௮-அதி.-கூடாவொழுக் ௫-குறள்]

"பற்றற்றே மேன்பார் படிற்றொழுக்க மெற்றெற்றென்
றேதம் பலவுந் தரும்."

பரி:—(இ-ள்) தம்மைப் பிறர் நன்கு மதித்தற் பொருட்டு யாம் பற்றற்றே மென்று சொல்வாரது மறைந்தவொழுக்கம் அப்பொழுது இனிதுபோலத் தோன்றுமாயினும், பின் என்செய்தேம் என்செய்தே மென்று தாமே யிரங்கும்வகை, அவர்க்குப் பல துன்பங் களையுங் கொடுக்கும், எ-று.

[திருக்குறள்-அறத்துப்பால்-துறவறவியல்-உ௮-அதி.-கூடாவொழுக் கம்-௬-குறள்]

"நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணா ரில்."

பரி:—(இ-ள்) நெஞ்சாற் பற்றறாது வைத்து பற்றற்றார் போன்று தானஞ் செய்வாரை வஞ்சித்து வாழுமவர்போல வன்கண்மையை யுடையார் உலகத் தில்லை, எ-று.

Even the good acts of the worthy, who avoid the forbidden, and perform the enjoined deeds only, are evil, should they be puffed up with self-complacent vanity, at their having triumphed over the hostile senses, and preserved themselves steadily in the paths of virtue.

[தற்புகழ்ச்சி கூடாதெனல்]

௧௬. தன்னை வியப்பிப்பான் றற்புகழ்த னீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றாற்-றன்னை
வியவாமை யன்றே வியப்பாவ தின்பம்
நயவாமை யன்றே நலம்.

[பதவுரை]

தன்னை வியப்பிப்பான்	=	(பிறர்) தன்னைப் புகழுங்காரண மாக(ஒருவன்)
தன் புகழ்தல்	=	(தானே) தன்னைப் புகழ்தல்
தீச்சுடர்	=	விளக்கின் சுடரில்
நன்னீர் சொரிந்து	=	தண்ணீர் வார்த்து
வளர்த்தது அற்றால்	=	(அவ் விளக்கை) வளர்த்தது போலாம்; (ஆதலால்)
தன்னை	=	(ஒருவன்) தன்னை
வியவாமை அன்றே	=	நன்குமதியாம லிருப்பதல்லவா
வியப்பு ஆவது	=	(அவனுக்குப்) புகழாகுவது;
இன்பம்	=	தன் சுகத்தை(த்)
நயவாமை அன்றே	=	(தானே) நாடாமையல்லவா
நலம்	=	(அவனுக்கு) இன்ப மாகுவது.

[தாத்பர்யவுரை]

ஒருவன் மதிப்படையவேண்டித் தானே தன்னைப் புகழ்தல், விளக்கில் நீர் விட்டு அதனை எரிப்பதுபோலாம்; ஆதலால், பிறரா லடையும்புகழ்ச்சியே புகழ்ச்சி; இன்பத்தையே விரும்பாம லனுபவிக்கும் இன்பமே யின்பம் என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'வியப்பிப்பான்': வியப்பி-தனிவினைப்பெயர்; பான்-வினையெச்ச விகுதி.

2. 'புகழ்தல்': வினையடிப் பகுபத வினைப்பெயர்.

3. 'நன்னீர்': நல்+நீர் என்பது சந்தியால் 'நன்னீர்' என நின்றது.

4. 'வளர்த்தற்றால்': "கொண்டது அற்று" என்பது "கொண்டற்று" என நின்றாற்போல, 'வளர்த்தது அற்றால்' என்பது 'வளர்த்தற்றால்' என நின்றது. செய்-1, (வி-ரை) இல-14, காண்க.

5. 'அன்றே': செய்-12, (வி-ரை) இல-19, காண்க.

6. ஆல்-அசை.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள் - அறத்துப்பால் - அரசியல்-௪௪-அதி.-குற்றங் கடிதல்-௯-குறள்]

"வியவற்க வெஞ்ஞான்றும் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை."

பரி:—(இ-ள்) தான் இறப்ப வுயர்ந்தஞான்றும் மதத்தாற் றன்னை நன்குமதியாதொழிக; தனக்கு நன்மை பயவா வினைகளை மானத்தால் விரும்பாதொழிக, எ-று.

The self-praising of a man who desires to usecure the esteem of the world, is like endeavouring to kindle light by pouring water. Estimableness consists in abstainment from self-commendation; and true happiness in not seeking happiness for its own sake.

[நன்குமதிப்பு வருதற்கேது கூறல்]

௨௦. பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவோன் யாண்டு
மறவாமே நோற்பதொன் றுண்டு—பிறர்பிறர்
சீரெலாந் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல்.

[பதவுரை]

பிறரால்	= பிறரால்
பெரும் சுட்டு	= நன்குமதிக்கப்படுதலை
வேண்டுவோன்	= விரும்புகிறவன்
யாண்டும்	= எக்காலத்தும்
மறவாமே நோற்பது	= மறவாமல் நோற்கத்தக்கது
ஒன்று உண்டு	= ஒன்றுண்டு;
	(அஃதென்னவெனில்),
பிறர் பிறர்	= பிறருடைய

சீர் எல்லாம்	=	சிறப்பையெல்லாம்
தூற்றி	=	பிரசித்தப்படுத்தி,
சிறுமை	=	அவரது குற்றத்தை
புறம் காத்து	=	அடக்கி,
யார்யார்க்கும்	=	யாவருக்கும்
தாழ்ச்சி சொலல்	=	தாழ்மையான வசனங்களைச் சொல்லுதலாம்.

[தொகுத்துரை]

பிறருடைய சிறுமையைத் தனக்குளடக்கிச் சீர்மையைத் தூற்றி நடப்பவனே பிறரால் நன்கு மதிக்கப்படுவான் என்பதாம்.

1. 'பிறர்': செய்-11, (வி-ரை) இல-18, காண்க.

2. 'சுட்டு': என்பது 'அடையாளம்' என்னும் பொருளையுடையது; அஃது இவ்விடத்துப் புகழை யுணர்த்திற்று.

3. 'யாண்டு மறவாமே': ஏழாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர் நிலை.

4. 'மறவாமே': "வினையுருபுகள்": 22, காண்க.

5. 'நோற்பது'. வினையடிப் பகுபத வினைப்பெயர். செய் - 1, (வி-ரை) இல-14, காண்க.

6. 'உண்டு': செய்-4, (வி-ரை) இல-12, காண்க.

7. 'பிறர் பிறர்' என்ற அடுக்கு 'எவ்வகைப் பிறரும்' என்னும் பொருள் கொடுத்தது.

8. 'சீர்': என்புழிப் பண்படியே பெயராய் நின்றது; இது பெரும்பான்மையுஞ் 'சீர்மை' என்று நிற்கும்.

9. 'எலாம்': இஃது 'எல்லாம்' என்பதன் தொகுத்தல் விகாரம்; 'எல்லாம்' என்பது திணைப் பொதுப்பெயர்.

10. 'தூற்றி': இகரவீற்று வினையெச்சம்; இவ் வீறு இறந்த காலத்தையுங் காட்டிற்று.

11. 'புறங்காத்து': என்பது தொடர்மொழிவினை; புறங்கா-தனிவினைப்பெயர்.

12. 'யார் யார்': என்னும் அடுக்குச் 'சகலருக்கும்' என்னும் பொருள்பட நின்றது.

13. 'தாழ்ச்சி': தாழ்ச்சியையுடைய வார்த்தைகளை யுணர்த்தி நின்றது; இது வினையடிப்பகுபதப் பொருட்பெயர்.

14. 'சொலல்': வினையடிப் பகுபத வினைப்பெயர்.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-அறத்துப்பால்-இல்லறவியல்-கo-அதி. இனியவைகூறல்-ச-குறள்.]

"துன்புறூஉந் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டு
மின்புறூஉ மின்சொ லவர்க்கு."

பரி:—(இ-ள்) எல்லார் மாட்டும் இன்பத்தை மிகுவிக்கும் இன்சொல்லையுடையார்க்குத் துன்பத்தையே மிகுவிக்கும் நல்குரவு இல்லையாம், எ-று.

He who desires to seeure the esteem of others should always adhere to this principle without forgetfulness. "That he should extol the virtue and conceal the defects of others, and talk humbly with all."

[தாங் கற்றவா றொழுகாதாருரை வெற்றுரையா மெனல்]

உக. கற்றுப் பிறர்க்குரைத்துத் தாநில்லார் வாய்ப்படூஉம்
வெற்றுரைக் குண்டோர் வலியுடைமை—சொற்றநீர்
நில்லாத தென்னென்று நாணுறைப்ப நேர்ந்தொருவன்
சொல்லாமே சூழ்ந்து சொலல்.

[பதவுரை]

கற்று(உம்)	= (நூலைக்) கற்றும்
பிறர்க்கு உரைத்தும்(உம்)	= பிறர்க்கு அதைக் கூறியும்
தாம் நில்லார்வாய்	= தாம்அதன்வழிநில்லாதாரிடத்தினின்று

படூஉம்	= பெறப்படும்
வெற்று உரைக்கு(உம்)	= பயனில் வார்த்தைகளுக்கும்
ஓர் வலியுடைமை	= ஒருவாற்ருன் ஓர் பயன்
உண்டு	= உண்டு;

(அஃதென்னவெனின்),

சொற்ற நீர்	= "கூறிய நீரே
நில்லாதது	= அதன் வழி நில்லாதது
என் என்று	= என்ன காரணத்தைப்பற்றி?" என்று
நாண் உறைப்ப	= அவர்க்கு வெட்க முண்டாகும்படி
ஒருவன் நேர்ந்து	= ஒருவன் எதிர்ப்பட்டு
சொல்லாமே	= வெளிப்படையாய்ச் சொல்லாமல்
சூழ்ந்து சொலல்	= குறிப்பாயேனுஞ் சொல்லுதல்.

[தோதத்துரை]

தாம் கூறியபடி நடவாதவருடைய சொல்லுக்குச் "சொற்ற நீர் நில்லாததென்?" என்று பிறர் சொல்லுதலே பயன் என்பதாம்.

[விருத்தியுரை]

1. **'தாம்'**, **'தான்'** என்பன திணைப் பொதுப்பெயர்.

2. **'தாம் நில்லார்'** என்பது சந்தியால் **'தாநில்லார்'** என நின்றது.

3. **'நில்லார்'**: செய்-6,(வி-ரை) இல-4, காண்க.

4. **'வாய்ப்படூஉம்'** என்பது 'வாய்ப்படும்' என்றதன் இன்னிசை அளபெடை; 'வாய்ப்படும்' என்பது 'இடத்துண்டாகும்' என்னும் பொருட்டு.

5. **'வெற்றுரை'**: செய்-7,(வி-ரை) இல-12, காண்க.

6. **'உரை'**: **வினையடிப்** பகாப்பதப் பொருட்பெயர்; உரைக்கப்படுவதனுல் 'உரை' என்னப்பட்டது.

7. **'வலி'** என்பது 'வலிமை' என்ற பண்புப்பெயரின் கடைக்குறை; 'வல்' என்பது பண்படி.

8. 'சோற்ற': "செய்த" என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம்; சொல்-த-வி-பெயர், ற்-இறந்தகால இடைநிலை, அ-பெயரெச்ச விகுதி.

9. 'நில்லாதது': செய்-1, (வி-ரை) இல-14, காண்க.

10. 'என்': செய்-1, (வி-ரை) இல-12, காண்க.

11. 'உறைப்ப': "செய" என்னும் வாய்பாட்டு வினையெச்சம். ப்-எதிர்காலங் காட்டிற்று.

12. 'சொல்லாமே': செய்-20, (வி-ரை) இல-4, காண்க.

13. 'சூழ்ந்து': செய்-5, (வி-ரை) இல-4, காண்க.

14. 'சொலல்': செய்-20, (வி-ரை) இல-14, காண்க.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால்-அங்கவியல்-அ௪-அதி. பேதைமை-௪-குறள்]

"ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்
பேதையிற் பேதையா ரில்."

பரி:—(இ-ள்) மன மொழி மெய்க ளடங்குதற் கேதுவாய நூல்களை யோதியும், அவ் வடக்கத்தான் வரும் பயனை யுணர்ந்தும் அதனை யறியலுறப் பிறர்க்குரைத்தும், தான் அவை யடங்கி யொழுகாத பேதைபோலப் பேதையார் உலகத் தில்லை, எ-று.

The empty words of those who, having learnt the sciences, teach others, but themselves follow not their own teaching, should possess this virtue, that they should be uttered after such deep reflection as to preventa nother from asking this question to their shame, "Why don't you, who have inculcated this maxim, follow it." *

---

* I have not given this meaning in my Tamil paraphrase. But what is given here is the usual interpretation.

[வித்தையை விற்பவர் நற்பயன் அடையாரெனல்]

உஉ. பிறர்க்குப் பயன்படத் தாங்கற்ற விற்பார்
தமக்குப் பயன்வே றுடையார்—திறப்படூஉம்
தீவினை யஞ்சா விறல்கொண்டு தென்புலத்தார்
கோவினை வேலை கொளல்.

[பதவுரை]

தாம் கற்ற	= தாம் கற்ற அறிவை(ப்)
பிறர்க்கு	= பிறர்க்கு
பயன் பட	= பயனுண்டாம்படி (அவரும் அதனால் முத்திநெறி யறியும்வண்ணம்)
விற்பார்	= விற்பவர்(கைம்மாருகப் பொருள் பெற்றுக்கொண்டுபோதிப்பவர்)
திறப்படூஉம்	= பல வகைப்பட்ட
தீவினை	= கொடுமையாகிய செயல்களைச் செய்வதற்கு
அஞ்சா	= மனந் தளராத
விறல் கொண்டு	= வலிமை யடைந்து
தென்புலத்தார் கோவினை	= யமனை(த்)
வேலை கொளல்	= வேலை கொல்வதாகிய (தம்முயிரைக் கொண்டுபோம்படி யழைப்பதாகிய)
வேறு பயன்	= பின்னொரு பயனையும்
தமக்கு உடையார்	= தமக்கு உடையவராவர்.

[தாத்பரியம்]

பொருள் பெறுங் காரணமாக முத்திநெறி போதிப்பவர் தாமும் முத்தி நெறி யடையார் என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'பட': "செய" என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

2. 'கற்ற': செய்-8, (வி-ரை) இல-3, காண்க; இஃது அன் சாரியை பெருமல் வந்தது.

3. 'விற்பார்': செய்-6, (வி-ரை) இல-2, காண்க. வில்-தனி வினைப்பெயர்.

4. 'வேறு': இது 'வெறுமை'யின் ஈறு குறைந்து முதனீண்ட குறிப்பு வினைப்பெயர்.

5. 'திறப்படும்': 'திறம்படும்' 'என்பது, 'திறப்படும்' என நின்று, பின் இன்னிசை யளபெடை பெற்றது. 'திறம்' என்பது இவ்விடத்து 'வகை' என்னும் பொருட்டு.

6. 'தீவினை': தீமை - வினை என்பது பண்புத்தொகைக்கண் 'தீவினை' என நின்றது.

7. 'அஞ்சாத' என்னும் பெயரெச்சம் 'அஞ்சா' எனக் கடைக் குறைந்து நின்றது.

8. 'விறல்': வலிமை.

9. 'தென்புலத்தார் கோ'; யமன்; இத் தேவன் தென்றிசை வாசிகளாகிய பிதிர்களின் அரசன்.

[உதாரண மேற்கோள்.]

[திருக்குறள்-பொருட்பால்-ஒழிபியல் - கூஎ-அதி.-மானம் ரு-குறள்]

"குன்றி னனையாருங் குன்றுவர் குன்றுவ
குன்றி யனைய செயின்."

பரி:—(இ-ள்) குடிப்பிறப்பான் மலைபோல வுயர்ந்தோரும் தாழ்தற் கேதுவாகிய செயல்களை ஒரு குன்றியளவாயினுஞ் செய்வ ராயிற் றாழ்வர், எ-று.

Those who impart spiritual instruction to others for gold, thus rendering their knowledge useful to them, derive a further advantage, namely-the strength of mind to slight the gain anticipated and make the regent of the dead a servant (to carry off their own lives).

[கல்வியறிவில்லாதார் தம் உரையால் அவமான மடைவரெனல்]

௨௫. கற்பன வூழற்ருர் கல்விக் கழகத்தாங்
கோற்கமின் றூத்தைவா யங்காத்தல்—மற்றுத்தம்
வல்லுரு வஞ்சன்மி னேன்பவே மாபறவை
புல்லுரு வஞ்சுவ போல்.

[பதவுரை]

கற்பன	= (நூல்களைக்) கற்கும்படியான
ஊழ் அற்ருர்	= விதி யில்லாமற்போனவர்கள்
ஊத்தை வாய்	= (அறிவினுற்கழுவப்படாத தம்முடைய) ஊத்தை வாயை
கல்விக் கழகத்து	= கற்ருேர் சபையில்
ஒற்கம் இன்று	= வெட்கமின்றி(த்)
அங்காத்தல்	= திறத்தல்,

(அக் கற்ருேரைப் பார்த்து நீவீர்)

மா பறவை	= "விலங்குகளும் பறவைகளும்
புல் உரு	= புல் உருவுக்கு(ப்)
அஞ்சுவபோல்	= பயப்படுவதுபோல,
தம் வல் உரு	= எம்முடைய வல்லுருவுக்கு(ப்)
அஞ்சன்மின்	= பயப்படவேண்டாம்"
என்பவே	= என்பதை ஒருவாறு ஒக்கும்.

[தோகுத்துரை]

கற்ருர்முன் கல்லாதார் உரையாட எழல், மாபறவைமுன் புல்லுருத்தோன்றலை நிகர்க்கும்; பெரும்பான்மையும் கற்ருர் மெலிய வுடலையும் கல்லார் வலிய வுடலையு முடையவராதலின், கல்விக்கழகம் கல்லாதார் வல்லுருவுக் கஞ்சும் என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'கற்பன': செய்-1, (வி-ரை) இல-13, காண்க. கற்கும்படியான அறிவைக் கொடுக்கும் ஊழ், 'கற்பன' எனப்பட்டது; ஆகை

யால், இது வினையடிப் பகுபதப் பொருட்பெயர். 'கற்பன வூழ்' என்பது 'கற்பனவாய வூழ்' என விரியும்.

2. 'அற்றார்': ''உறு'' என்ற தனி வினையினின்றும் ''உற்றார்'' என்ற வினை தோன்றினதுபோல, 'அறு' என்ற தனி வினையினின்றும் 'அற்றார்' என்ற வினை தோன்றிற்று. செய்-2, (வி-ரை) இல-1, காண்க.

3. 'கழகம்' என்பது 'கற்குமிடம்'; அஃது இவ்விடத்துக் 'கற்றோர் சபை'யை யுணர்த்திற்று.

4. 'ஆங்கு': 'மற்று': அசைநிலை.

5. 'ஒற்கம்': வினையடிப்பகுபதப் பொருட்பெயர்; 'ஒல்கு-தனி வினைப்பெயர், ஒல்குதலுக்குக் காரணமாயிருப்பது ஒற்கம், அல்லது வெட்கம். ஒல்கல்-அடங்கல்.

6. 'அங்காத்தல்': வினையடிப் பகுபத வினைப்பெயர்; அங்கா-தனி வினைப்பெயர்.

7. 'வல்லுரு': 'வன்மையுரு' என்பது பண்புத்தொகைக்கண் 'வல்லுரு' என நின்றது.

8. 'அஞ்சன்மின்': அஞ்சு-தனி வினைப்பெயர்; அல்-எதிர்மறை யிடைநிலை; மின் - விகுதி.

9. 'என்ப': செய்-7, (வி-ரை) இல-13, காண்க.

10. 'மா பறவை': என்பது, உம்மைத் தொகையாதலாற் பகரஞ் சந்தியா விரட்டியாது நின்றது.

11. 'புல்லுரு' என்பது, 'புல்லாலாகிய உரு' என விரியும்.

12. 'அஞ்சுவ': செய்-23, (வி-ரை) இல-9, காண்க. அ-விகுதி. செய்-19, (வி-ரை) இல-5, காண்க.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால்-அரசியல்-௪௨-அதி.-கேள்வி-௯-குறள்]

''நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராத லரிது.''

பரி:—(இ-ள்) நுண்ணிதாகிய கேள்வியுடைய ரல்லாதார் பணிந்த மொழியினை யுடையராதல் கூடாது, எ-று.

[திருக்குறள்-பொருட்பால்-அரசியல்-௪௧-அதி.-கல்லாமை ௭-குறள்]

"நுண்மா ணுழைபுல மில்லா னெழினல
மண்மாண் புனைபாவை யற்று"

பரி:—(இ-ள்.) நுண்ணிதாய் மாட்சிமைப் பட்டுப் பலநூல் களினுஞ் சென்ற அறிவிலாதவனுடைய எழுச்சியும் அழகும் சுதை யான் மாட்சிமைப்படப் புனைந்தபாவையுடைய எழுச்சியும் அழகும் போலும் (எ-று)

That a person not learned in the sciences, should audaciously open his impure mouth in the assembly of the wise, seems as if he would tell his audience not to fear his stout appearance, like the birds frightened by scarecrows of grass.

[கல்வி அறிவுடையாரிடத்தே சிறந்து விளங்கு மெனல்]

௨௪. போக்கறு கல்வி புலமிக்கார் பாலன்றி
மீக்கோ ணகையினர் வாய்ச்சேரா—தாக்கணங்கு
மாணவாம் பெண்மை யுடைத்தேனினும் பெண்ணலம்
பேடு கோளப்படுவே தில்.

போக்கு அறு கல்வி	= பிற பொருள்போல் இழத்தற் கருமையாகிய கல்வி
புலம் மிக்கார்பால் அன்றி	= அறிவின் மிக்காரிடத்தன்றி
மீக்கொள் நகையினர்வாய்	= நகையின் மிக்காரிடத்து(ச்)
சேரா	= சேராது;
தாக்கணங்கும்	= (தானே ஆடவரைத்) தீண்டி வருத்துவதோர் தெய்வமகனும் (மோகினியும்)
ஆண் அவாம்	= ஆண்தன்மையை விரும்புதற்கேது வாகிய

பெண்மைஉடைத்தெனினும் = (ஒரு பெண்ணுக்கு) பெண்தன்மை யாகிய அழகுடைய தாயினும்
பெண் நலம் = (அப்) பெண்ணி னின்பத்தை (வலிமையிற் சிறந்தஆணேயன்றி)
பேடு = மடமையிற் சிறந்த பேடு
கொளப்படுவது இல் = அநுபவிப்பது முடியாது.

[தொகுத்துரை]

பெண்ணலத்தைப் பேடு அநுபவிப்பது முடியாமை போல, கல்வி நலத்தை நகையாடுவார் அநுபவிப்பது முடியாது என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'போகீது': வினையடிப் பகுபதப் பொருட்பெயர்; போகுந் தொழிலின்றப் பெறப்படு மிழத்தல் போக்கு' எனப்பட்டது.

2. 'அறு': வினைத்தொகை.

3. 'அன்றி': குறிப்பு வினையெச்சம். 'அல்' என்னும் பண்படி பகுதியாய் நின்று பின் மெலித்தல் விகாரம் பெற்றது என்றேனும், 'அன்மை'யின் கடைக்குறை பகுதியாய் நின்றது என்றேனுங் கூறு தல் வழக்கு.

4. 'மீ' என்பது வினை யுரிச்சொல்.

5. 'கோள்': வினைத்தொகை.

6. 'நகையினர்': குறிப்பு வினைப்பெயர்; விகுதிக்கு முன் 'இன்' சாரியை வரப்பெற்றது.

7. 'வாய்': ஏழனுருபு.

8. 'சோரா': செய்-19, (வி-ரை) இல-5, காண்க.
,, 26, ,, ,, 1, காண்க.

இதன் எழுவாயாகிய 'கல்வி' பால்பகா அஃறிணைப் பெயராகலின் அஃது இவ்விடத்துப் பன்மைப் பயனிலை பெற்றது.

9. 'தாக்கு' என்னும் வினைத்தொகை, 'தீண்டிவருத்தும்' என்னும் பொருள் கொடுத்தது.

10. 'தாக்கணங்கும்': உயர்வு சிறப்பும்மை.

11. 'அவாம்' என்பது, 'அவாவும்' என்பதன் தொகுத்தல் விகாரம்; "வினையுருபுகள்": 21, காண்க.

12. 'பெண்மை': செய்-1, (வி-ரை) இல-3, காண்க.

13. 'கோள்': கொண்டவென்னும் பெயரெச்சம், 'கொள்' எனத் தொக்கு நின்றது.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால்- அரசியல்-சக-அதி-கல்லாமை-சு-குறள்]

"கல்லாதா னொட்பங் கழியநன் றாயினுங்
கொள்ளா றறிவுடை யார்."

பரி:—(இ-ள்) கல்லாதவனது ஒண்மை ஒரோவழி மிக நன்றாயிருப்பினும் அறிவுடையார் அதனை ஒண்மையாகக்கொள்ளார், எ-று.

Knowledge that can never be lost belongs only to persons endowed with vast intellectual powers; but it will never be the portion of the frivolous who indulge in excessive laughter. The hermaphrodite cannot enjoy the charms of a damsel, though she be so beautiful, as to induce even the goddess of beauty to sigh for manhood.

[கல்லார்க்குக் கற்றார் பொல்லா ராவரெனல்.]

உரு. கற்றன கல்லார் செவிமாட்டிக் கையுறாஉங்
குற்றந் தமதே பிறிதன்று—முற்றுணர்ந்துந்
தாமவர் தன்மை யுணராதார் தம்முணரா
ஏதிலரை நோவ தெவன்.

[பதவுரை]

கற்றன	=	(கற்றுணர்ந்தார்தாம்) கற்றவற்றை
கல்லார்	=	(நூல்களைக்) கல்லாதவரது
செவி	=	காதில்
மாட்டி	=	நுழைத்து
கையுறும்	=	(அவரால் தாம்) அவமதிக்கப் படுவதாகிய
குற்றம்	=	குற்றத்திற்குக் காரணம்
தமதே	=	தமது அறியாமையேயாம்,
பிறிது அன்று	=	வேறன்றாம்;
தாம் முற்றுணர்ந்தும்	=	தாம் எல்லாவற்றையும் அறிந்திருந்தும்
அவர் தன்மை யுணராதார்	=	அக் கல்லாதவரது தன்மையை யுணராதவராய்
தம் உணரா(த)	=	தம்மை (இத்தன்மையரென்று) அறியாத
ஏதிலரை	=	அக் கல்லாதவரை
நோவது	=	வெறுப்பது
என்	=	யாதுபற்றியாம்?

[தொகுத்துரை]

கற்றார், தாங் கற்றவற்றைக் கல்லாதாரிடத்துச் சொல்லுவதினாற் குற்றம் விளையு மென்பதை, முன்னரே யறியவேண்டும் என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'செவிமாட்டி,' 'கையுறூஉம்' என்ற தொடர்மொழிவினை 'செவியிற் சொல்லி, கையிற் பெறப்படும்' என்னும் பொருள்பட நின்றன.

2. 'பிறிது': செய்யுள்-11, (வி-ரை) இல-8, காண்க. இகரஞ் சாரியை.

3. 'முற்று': செய்யுள் 14, (வி-ரை) இலக்கம் 1, காண்க.
4. 'உணராதார்': ,, 12, (வி-ரை) இலக்கம் 12, காண்க.
" வினையுருபுகள்:" 26-1, காண்க.

5. 'ஏதிலர்': செய்யுள்-8, (வி-ரை) இல-13, காண்க.
6. 'நோவது': வினையடிப் பகுபத வினைப்பெயர்.
7. 'எவன்':

[நன்னூல் வினையியல்-31.-சூத்திரம்]

"எவனென் வினவினைக் குறிப்பிழி யிருபால்."

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால்-அங்கவியல்-அரு-அதி.-புல்லறி வாண்மை-கூ-குறள்]

"காணாதாற் காட்டுவான் றான்காணான் காணாதான்
கண்டானாந் தான்கண்ட வாறு."

பரி:—(இ-ள்) *தன்னை எல்லா மறிந்தானாக மதித்தலாற் பிறரால் ஒன்றறியுந்தன்மை யிலாதானை அறிவிக்கப்புகுவான் அவனாற் பழிக்கப்பட்டுத் தான் அறியானாய் முடியும்; இனி, அவ்வறியுந் தன்மை யில்லாதான்கொண்டது விடாமையாற் றானறிந்தவாற்றால் அதனை அறிந்தானாய் முடியும், எ-று.*

[திருக்குறள்-பொருட்பால்—அரசியல்-சச-அதி.-குற்றங்கடிதல்-ச-குறள்]

"குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
யற்றந் தரூஉம் பகை."

பரி:—(இ-ள்) *தனக்கிறுதி பயக்கும் பகை குற்றமே; ஆகலான், அக் குற்றம் தன்கண் வாராமையே பயனாகக் கொண்டு காக்கவேண்டும், எ-று.*

The fault of subjecting one's self to the contempt of the ignorant by driving into their ears what one has learnt, is his own fault, it is not another's. Who should he who knows everything feel pain when another does not appreciate his owrth, although he himself did not discover their character.

[மேன்மக்கள் பிறருதவியை நோக்கியிரார்; கீழ்மக்கள் அதனை நோக்கி யிழிவுறுவ ரெனல்.]

உகூ. வேத்தவை காவார் மிகன்மக்கள் வேறுசிலர்
காத்தது கொண்டாங் குவப்பெய்தார்—மாத்தகைய
அந்தப் புரத்தது பூஞை புறங்கடைய
கந்துகோல் பூட்கைக் களிறு.

[பதவுரை]

மிகல் மக்கள்	= மேலானோர் (தயவுபெற வேண்டி)
வேந்து அவை	= இராச சபையை
காவார்	= (எக்காலமும்) காத்துகொண் டிரார்;
வேறு சிலர்	= ஆனால், வேறு சிலரோ
காத்தது கொண்டு	= இராசசபையையே காத்தது கொண்டு
ஆங்கு	= (அதனால்) அவ்விடத்து
உவப்பு எய்தார்	= மகிழ்ச்சியை யடையார்; கொண்டு
பூஞை	= பூனையானது
மாத்தகைய	= மிகவும் சம்பிரமத்தையுடைய
அந்தப்புரத்தது	= அந்தப்புரத்திலேயே இருக்கும்;
கந்து கொல்	= கட்டுத்தறியை முறிக்கும்
பூட்கை களிறு	= துதிக்கையையுடைய யானையோ
புறங்கடைய	= தலைவாசலி னிற்கும்.

[தொகுத்துரை]

கீழானோர் இராசசபையைக் காத்துக்கொண்டிருப்பார்; மேலானோரோ அப்படிக் காத்துக்கொண்டிருப்பதை விரும்பமாட்டாரென்பதாம்.

[விருத்தியுரை]

1. 'வேத்தவை': 'வேந்தவை' என்பது, பண்புத் தொகைக்கண், "பளிக்கறை" என்பதுபோல, 'வேத்தவை' என வலித்து நின்றது.

2. 'காவார்': பலர்பால் எதிர்மறை வினைமுற்று. "வினையுருபு கள்": 26-1, காண்க.

3. 'மிகன்மக்கள்': என்பது, 'மிகலைப் பொருந்திய மக்கள்' என விரியும்; மிகல்-வினையடிப் பகுபத வினைப்பெயர்.

4. 'வேறு': செய்யுள்-22, (வி-ரை) இல-4, காண்க.

5. 'காத்தது': வினையடிப் பகுபத வினைப்பெயர். இதன் தனி வினைக்குத் 'தாம்' என்பது தோன்றா எழுவாய்.

6. 'ஆங்கு': இடப்பொருளது.

7. 'எய்தார்': 'எய்துவார்' என்பது தன் எதிர்மறைவினை.

8. 'தகைய': குறிப்புப் பெயரெச்சம்; 'தகைமை'யின் திரிபு ஆகிய தகை-பகுதி.

9. 'அந்தப்புரம்': என்பது, 'உள் வீடு' என்னும் பொருள் படும்; 'அந்தர், புர' என்னும் ஆரிய மொழிகள் சேர்ந்து 'அந்தப் புரம்' என்னும் வடமொழியாயின.

10. 'அந்தப்புரத்தது' என்பது, குறிப்பு வினைமுற்று; அத்து, அ் - என்பன சாரியை.

11. 'கடைய': இதுவும் குறிப்பு வினைப்பெயர்.

12. 'பூட்கை': என்பது, துளையையுடைய பொருள்.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால்-அங்கவியல்-எக-அதி.-நட்பு-ரு-குறள்]

"புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதா
னட்பாங் கிழமை தரும்."

பரி:—(இ-ள்) ஒருவனோடொருவன் நட்பாதற்குப் புணர்ச்சி யும் பழகுதலுமாகிய காரணங்கள் வேண்டுவதில்லை; இருவர்க்கு மொத்த வுணர்ச்சிதானே நட்பா முரிமையைக் கொடுக்கும், எ-று.

The great will not dance attendance at the Court of the king. The mean will rejoice to stand in waiting at the Court. The cat lives in the splendid apartments of the palace. The powerful elephant which breaks the post to which it is tied stands at the entrance.

[இவரிவர்க்கு இவரிவர் தெய்வ மெனல்.]

உஎ. குலமகட்குத் தெய்வங் கொழுநனே மன்ற
புதல்வர்க்குத் தந்தையுந் தாயும்—அறவோர்க்
கடிகளே தெய்வ மனைவோர்க்குந் தெய்வம்
இலைமுகப் பைம்பூ ணிறை.

[பதவுரை]

குலமகள்கு	=	குலமகளுக்கு
கொழுநனே தெய்வம்	=	அவள் கணவனே தெய்வமாவன்;
புதல்வர்க்கு	=	புத்திரர்களுக்கு
தந்தையும் தாயும்	=	அவரது தந்தையும் தாயுமே
மன்ற (தெய்வம்)	=	நிச்சயமாகத் (தெய்வமாவர்);
அறவோர்க்கு	=	அறத்தின் வழி நிற்போர்க்கு
அடிகளே தெய்வம்	=	அவரது குருவே தெய்வமாவர்;
அனைவோர்க்கும்	=	(ஆனால் இவர்கள்) யாவர்க்கும்
இலை முகம்	=	இலை முகத்தைப் போன்ற
பைம்பூண் இறை	=	செழுமையான பைம்பொன்னால் செய்யப்பட்ட நகைகளா லலங் கரிக்கப்பட்ட இராஜனே
தெய்வம்	=	தெய்வமாவன்.

[தொகுத்துரை]

உலகத்தார் யாவர்க்கும் அரசனே தெய்வமாவ னென்பதாம்.

[விருத்தியுரை]

1. 'மன்ற': தேற்றப் பொருள் கொடுக்கும் இடைச்சொல்.
2. 'அறவோர்': குறிப்பு வினைப்பெயர்.

[நன்னூல்-பொதுவியல்-2-சூத்திரம்]

"பெயர்வினை யிடத்து னளரய வீற்றய
லாவோ வாகலுஞ் செய்யுளு ளுரித்தே."

3. 'அனைவோர்': 'அ' என்னும் சுட்டிடைச்சொ லடியாகப் பிறந்த 'அன்னோர்' என்னும் குறிப்பு வினைப்பெயர் 'அனைவோர்' என மருவி நின்றது.

4. 'பைம்பூண்': 'பசுமை பூண்' என்புழி, பண்புத்தொகைக்கண் ஈற்று விகுதி போய், இடையுகரஞ் சகரத்தோடு கெட்டு, வருமெழுத்திற்கு இன மிகுந்து, அடியகரம் ஐகார மாயின. "ஈறுபோதல்" என்னு நன்னூற் பதவியல் சூத்திரங் காண்க.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-அறத்துப்பால்-இல்லறவியல்-சு-அதி-. வாழ்க்கைத்துணைநலம்-ரு-குறள்]

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெ யெனப் பெய்யு மழை."

பரி:—(இ-ள்) பிறதெய்வந் தொழாது தன் தெய்வமாகிய கொழுநனைத் தொழாநின்று துயிலெழுவாள் பெய்யென்று சொல்ல மழை பெய்யும், எ-று.

[திருக்குறள்-பொருட்பால்-அரசியல்-அதி.-சுக-இறைமாட்சி-அ-குறள்]

"முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்."

பரி:—(இ-ள்.) தான் முறை செய்து பிறர் நலியாமற் காத்தலையுஞ் செய்யும் அரசன் பிறப்பான் மகனேயாயினும், செயலான் மக்கட்குக் கடவுளென்று வேறு வைக்கப்படும், எ-று.

[திருக்குறள்-பொருட்பால்-அரசியல்-சுக-அதி.-இறைமாட்சி-கூ-குறள்]

"செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கு முலகு."

பரி:—(இ-ள்) இடிக்குந் துணையாயினோர் சொற்களைத் தன் செவி பெருந்தாகவும் விளைவுநோக்கிப் பொறுக்கும்பண்புடைய அரசனது குடைநிழற்கண்ணே தங்கும் உலகம், எ-று.

The husband is the God of the chaste wife; the parents are the Gods of the children; the spiritual tutors are the Gods of their disciples; and the Sovereign, adorned with leaf like ornaments, is the God of all.

[கொடுங்கோல்வேந்தர் நன்மை யடையாரெனல்.]

உ௪ கண்ணிற் சொலிச்செவியி னோக்கு மிறைமாட்சி
புண்ணியத்தின் பாலதே யாயினுந்—தண்ணளியான்
மன்பதை யோம்பாதார்க் கென்னும் வயப்படைமற்
றென்பயக்கு மாணல் லவர்க்கு.

[பதவுரை]

கண்ணின்	=	பார்வையினால்
சொல்லி	=	தங் கருத்தை வெளியிட்டு,
செவியின் நோக்கும்	=	(தம் பிரசைகளுடைய வேண்டுதலைச்) செவிகொடுத்துக் கேட்கும்
இறை மாட்சி	=	இராசத்துவம்
புண்ணியத்தின் பாலதே ஆயினும்	=	(அரசர்க்கு மேனாள் தவத்தினாற் கிடைத்ததேயாயினும்)
தண் அளியால்	=	கிருபையினால்
மன்பதை	=	(அவ்வாறு) தம் பிரசைகளை(க்)
ஓம்பாதார்க்கு	=	காவாத (அந்த) அரசர்க்கு
என் ஆம்	=	(அதனாற்) பிரயோசனம் யாதாம்?
ஆண் அல்லவர்க்கு	=	ஆண்தன்மைக்குரிய வீர மில்லாதவர்க்கு
வயம் படை	=	அவருடைய கையிலுள்ள வலிமை பொருந்திய ஆயுதம்
என் பயக்கும்	=	என்ன பிரயோசனத்தைக் கொடுப்பதாகும்?

[தொகுத்துரை]

அரசர் தாம் கருணையா யிராவிடில், கருணையை யளிக்கக்கூடிய அவர் மாண்பினு லவர்க்குப் பிரயோசனமே மில்லை யென்பதாம்.

[விருத்தியுரை]

1. 'கண்ணில்' 'செவியில்' *என்பன வுருபு மயக்கமாய் மூன்றும் வேற்றுமைப் பொருள் கொடுத்து நின்றன.*

2. 'பாலது': *குறிப்பு வினைமுற்று.*

3. 'மன்பதை': *மனிதர் கூட்டம்.*

4. 'ஓம்பாதார்': *செய்*.-12, (வி-ரை) இல-12, *காண்க.*

5. 'என்னும்': ,, 1, ,, ,, 10 ,, .

6. 'வயம் படை': ,, 18, ,, ,, 3 ,, .

7. 'மற்று': *அசைநிலை.*

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால்-அரசியல்-டுசு-அதி.-கொடுங்கோன்மை-ச-குறள்]

"கூழுங் குடியு மொருங்கிழக்குங் கோல்கோடிச்
சூழாது செய்யு மரசு."

பரி:—(இ-ள்) *மேல் விளைவது எண்ணுது முறை தப்பச் செய்யும் அரசன் அச்செயலான் முன்னீட்டிய பொருளையும் பின்னீட்டுதற் கேதுவாகிய குடிகளையுஞ் சேரஇழக்கும்,* எ-று.

Though princes enjoy the sovereign prerogative of speaking with the eyeand seeing with the ear as the fruit of their former acts, of what use can these be if they do not protect their subjects with tender mercy? Of what avail are mighty weapons of war to a person of manliness?

[கொடுங்கோல் வேந்தர்க்கும், செங்கோல் வேந்தர்க்கும் வரும் பயன் கூறல்.]

உகூ. குடிகொன் றிறைகொள்ளும் கோமகற்குக் கற்ற
மடிகொன்று பால்கொளலு மாண்பே—குடியோம்பிக்
கொள்ளுமா கோள்வோர்க்குக் காண்டுமே மாநிதியம்
வெள்ளத்தின் மேலும் பல.

குடி கொன்று	=	தன் பிரசைகளை வருத்தி(த்)
இறை கொள்ளும்	=	திறை வாங்கும்
கோமகற்கு.	=	அரசனுக்கு
கன்று ஆ	=	கறவைப் பசுவினது
மடி கொன்று	=	மடியை யரிந்து
பால் கொளலும்	=	பாலைக் கொள்ளுதலும்
மாண்பே	=	நன்மையாயிருக்கும்
		(இஃது இப்படியிருக்க)
குடி ஓம்பி	=	தம் குடிகளைப் பாதுகாத்து(த்)
கொள்ளும் ஆறு கொள்வோர்க்கு)	=	(திறையை நீதி வழுவாது) வாங்கும் வீதப்படி வாங்கும் அரசர்க்கு(த்)
மா நிதியம்	=	திரவிய சம்பத்தானது
வெள்ளத்தின் மேலும் பல	=	வெள்ளத்திலும் அதிகமாயிருப்பதை
காண்டுமே	=	நாம் கண்டிருக்கிறோம்.

[தோகுத்துரை]

குடிகளை வருத்தித் திறை வாங்கும் அரசன் தனக்கு ஊதியம் வரும் வழியைத் தானே கெடுத்துக்கொள்ளுவான்; நீதி வழுவாது திறை வாங்குபவனே செல்வனுவா னென்பதாம்.

[விருத்தியுரை]

1. 'மகற்கு': 'மகனுக்கு' என்பது 'மகற்கு' எனத் தொகுத்து நின்றது.

2. 'கற்ற': 'கன்று ஆ': செய்-26,(வி-ரை) இல-1, காண்க; இது கன்'றையுடைய ஆ' என விரியும்.

3. 'கோன்று': முன் வந்த கொன்று 'வருத்தி' என்னும் பொருள்படவும், பின் வந்த கொன்று 'அரிந்து' என்னும் பொருள் படவு நின்றன.

4. 'கோள்ளுமா கோள்வோர்': 'கொள்ளுமாறு கொள்ளு வோர்' என்பது 'கொள்ளுமா கொள்வோர்' என விகாரப்பட்டு நின்றது.

5. 'காண்டும்': "வினையுருபுகள்": 19-7, 20-3, காண்க.

6. 'வெள்ளம்' என்பது, எண்ணுக்குப்பெயராய்த் திரவியத்தை யுணர்த்திற்று. செய்-9, (வி-ரை) இல-8, காண்க.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால்-அரசியல்-ருரு-அதி.-செங்கோன்மை-சு-குறள்]

"குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்ன
னடிதழீஇ நிற்கு முலகு."

பரி:—(இ-ள்) தன் குடிகளையும் அணைத்துச் செங்கோலையுஞ் செலுத்தும் பெருநிலவேந்த னடியைப் பொருந்தி விடார் உலகத்தார், எ-று.

[திருக்குறள்-பொருட்பால்-அரசியல்-ருஎ-அதிகாரம்-வெருவந்த செய்யாமை-எ-குறள்]

"கடுமொழியுங் கையிகந்த தண்டமும் வேந்த
னடுமுரண் டேய்க்கு மரம்."

பரி:—(இ-ள்) கடிய சொல்லும் குற்றத்தின் மிக்க தண்டமும் அரசனது பகை வெல்லுதற்கேற்ற மாறுபாடாகிய இரும்பினைத் தேய்க்கும் அரமாம், எ-று.

In a prince who exacts tribute from his subjects by oppression, to obtain milk from a new milched cow by cutting its udder is *comparatively* good. Have we not seen the wealth of those kings increase above computation who preserve their subjects, and obtain their dues in justice.

[கொடுங்கோல் வேந்தன் வேடனிலுங் கொடிய னெனல்.]

௩௦. இன்று கொளற்பால நாளை கொளப்பொருன்,
நின்று குறையிரப்ப நேர்படான்,—சென்றொருவன்
ஆவன கூறி னெயிறலைப்பான், ஆறலைக்கும்
வேடலன் வேந்து மலன்.

[பதவுரை]

இன்று	=	இன்றைக்கு(ப்)
கொளல் பால	=	பெறவேண்டிய திறையை
நாளை	=	நாளைக்கு
கொள்ள பொருன்	=	வாங்கும்படியான பொறுமை யில்லாதவனும்,
நின்று	=	தன்னைச் சந்தித்து
குறை இரப்ப	=	ஒருவன் தன் குறையைச் சொல்லும்படியாக.
நேர்படான்	=	நேர்படாதவனும்,

(அப்படி நேர்படாத காலத்தும்)

ஒருவன் சென்று	=	ஒருவன் தானே தன்னிருப்பிடம் வந்து
ஆவன கூறின்	=	தனக்கு ஆகவேண்டிய காரியத்தைச் சொன்னால்
எயிறு அலைப்பான்	=	பற்களைக் கடித்துக் கோபித்துக் கொள்ளுபவனுமாகிய அரசன்:

(வழிமறித்துப் பறியாமையால்)

ஆறு அலைக்கும்	=	வழியில் வருத்தும்
வேடு அலன்	=	வேடனுமல்லன்;
வேந்தும் அலன்	=	அரசமாட்சி யில்லாமையால் அரசனுமல்லன்.

[தொகுத்துரை]

"இன்று கொளற்பால நாளை கொளப் பொறுமை" முதலிய குணங்களையுடைய அரசனை வேடனென்றுதானுஞ் சொல்லுவது தகாதென்பதாம்.

[விருத்தியுரை]

1. 'பால': செய்-9, (வி-ரை) இல-8, காண்க; பான்மையின் திரிபு ஆகிய 'பால்' பகுதி.

2. 'பொறுன்': செய்-6, (வி-ரை) இல-4, காண்க.

3. 'இரப்ப': இது "செய" என்னும் வாய்பாட்டு வினையெச்சம்; எதிர்கால இடைநிலை யணைந்து வந்தது.

4. 'நேர்படான்': நேர்படு-தனிவினைப்பெயர்.

5. 'ஆவன': செய்-9, (வி-ரை) இல-3, காண்க. ஆ-தனி வினைப் பெயர், வ்-எதிர்கால இடைநிலை, அன்-சாரியை, அ-பல வின்பால் விகுதி. இம் மொழி பெரும்பான்மையுங் குகரச்சாரியை பெற்று'ஆகுவன' என நிற்கும்.

6. 'எயிறு'-பல்; எயிறு அலைப்பான் - பல்லைக் கடிப்பான்.

7. 'ஆறலைக்கும்'—வழியில் வருத்தப்படுத்தும்.

8. 'வேடு': "வேந்தன்," "அமைச்சன்" என்பனவற்றின் பால்பகா அஃறிணைப் பெயர்கள் "வேந்து," "அமைச்சு" என நிற்பது போல, 'வேடன்' என்பதன் பால்பகா அஃறிணைப்பெயர் 'வேடு' என நின்றது.

9. 'அலன்': செய்-2, (வி-ரை) இல-16, காண்க.

[திருக்குறள்-பொருட்பால்-அரசியல்-ருகூ-அதி.-கொடுங்கோன்மை. க-குறள்]

"கோலைமேற் கொண்டாரிற் கொடிதே யலைமேற்கோண்
டல்லவை செய்தொழுகும் வேந்து."

பரி:—(இ-ள்) பகைமைபற்றிக் கொல்லுதற்றொழிலைத் தம் மேற் கொண்டொழுகுவாரினுங் கொடியன், பொருள் வெஃகிக் குடிகளை அலைத்தற் றொழிலைத் தன்மேற் கொண்டு முறையல்லவற் றைச் செய்தொழுகும் வேந்தன், எ-று.

What is due to-day he will not wait to receive to-morrow. He will not listen to the grievences of the distressed who appeal to him. He will grind his teeth when wise counsels are offered to him. Such a person is neither a king nor a *vedan* who pludmers in the highway.

[கொடுங்கோல் வேந்தன் பிணத்திற்கொப்பாவ னெனல்.]

௩க. முடிப்ப முடித்துப்பின் பூசுவ பூசி
வுடுப்ப வுடுத்துண்ப வுண்ணு-இடித்திடித்துக்
கட்டுரை கூறிற் செவிகொளா கண்விழியா
நெட்டுயிர்ப்போ டுற்ற பிணம்.

[பதவுரை]

முடிப்ப	=	முடிக்கப்படுவனவற்றை
முடித்து	=	முடித்தும்,
பின்	=	பிறகு
பூசுவ பூசி	=	பூசப்படுவனவற்றைப் பூசியும்,
உடுப்ப உடுத்து	=	உடுக்கப்படுவனவற்றை யுடுத்தும்,
உண்ப உண்ணு	=	உண்ணப்படுவனவற்றை யுண்டும்,
இடித்து இடித்து	=	அமைச்சர் முதலாயினோர் அடிக்கடி நெருங்கி
கட்டுரை கூறின்	=	உறுதி வார்த்தைகளைச் சொன்னால்
செவி கொள்ளா	=	அவ்வுறுதி வார்த்தைகளைக் கவனித்துக் கேளாதவை
கண் விழியா	=	கண் விழித்துக்கொண்டு
நெடு உயிர்ப்போடுஉற்ற	=	நெட்டுயிர்ப்போடிருக்கும்
பிணம்	=	பிணத்துக்குச் சமானமாம்.

[நேர்தத்துரை]

தம்மை யலங்கரித்துப் போஷிக்கிற தொழிலை மாத்திரந் தடை யறச் செய்தும் பெரியாரது உறுதி வார்த்தைகளுக்குக் கவனித்துச் செவி கொடாதுமுள்ள அரசர், பிணங்களுக்குச் சமானமாவ ரென்ப தாம்.

[விருத்தியுரை]

1. 'முடிப்ப,' 'பூசுவ,' 'உடுப்பது,' 'உண்பது' என்பன செயப்பாட்டு வினைப்பொருள் கொடுத்து நின்றன; இவை வினையா லணையும் பெயர்.

2. 'உண்ணு' என்பது, 'உண்டு' என்னும் பொருள்படும் வினை யெச்சம்.

3. 'முடித்து,' 'பூசி,' 'உடுத்து,' 'உண்ணு' என்பனவற்றை யடைய வேண்டிய எதிரதுதழுவிய எச்சவும்மை, செய்யுள் விகாரத் தால் தொக்குநின்றன.

4. 'கட்டுரை': தொடர்மொழி வினையடிப் பகாப்பதப் பொருட்பெயர்.

5. 'கோளா' என்பது, 'கொள்ளா' என்பதன் தொகுத்தல் விகாரம். "வினையுருபுகள்": 19-5, காண்க.

6. 'விழியா,' 'விழித்து' என்பன ஒருபொருள் மொழி.

7. 'பிணம்': இதற்குக் 'கொளா' என்ற வினையாலணையும் பெயர் எழுவாய்.

8. 'கோளா-பிணம்' என்பதற்குக் கேளாத வேந்தர் பிணத் திற்கு ஒப்பாவர் என்று பொருள் கொள்க.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால்-அரசியல்-சுரு-அதி.-பெரியாரைத் துணைக்கோடல்-அ-குறள்]

"இடிப்பாரை யில்லாத வேமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்."

பரி:—(இ-ள்) கழறுதற் குரியாரைத் தனக்குத் துணையாகக் கொள்ளாமையிற் காவலற்ற அரசன் பகையாய்க் கெடுப்பார் இல்லை யாயினும் தானே கெடும், எ-று.

Persons who decorated with sweet smelling garlands of flowers and *sandal waters*, arrayed in rich vestments, and partaking excellant food, hear not the vigorous and reiterated counsels of the wise are no better than corpses endowed with breath.

[செங்கோல னியல்பு கூறல்.]

௩௨. ஒற்றிற் றெரியா சிறைப்புறத் தோர்துமெனப்
பொற்றோ டுணையாத் தெரிதந்துங்–குற்றம்
அறிவரிதென் றஞ்சுவதே செங்கோன்மை சென்று
முறையிடினுங் கேளாமை யன்று.

[பதவுரை]

ஒற்றின்	= "(நம் பிரசைகளது குற்றங்களை) வேவுகாரரால்
தெரியா	= அறிவது முடியாது;
(ஆகையால், அவற்றை நாமே)	
சிறைப்புறத்து	= மறைவிடங்களினின்று
ஓர்தும் என	= அறிவோம்" என்று
பொன் தோள்	= தம் அழகியதோள்களே
துணை ஆக	= தமக்குத் துணையாகப்போய் நின்று
தெரிதந்தும்	= அவற்றை யறியினும்,
குற்றம்	= 'அக் குற்றங்களின் காரணகாரியங் களை
அறிவது அரிது என்று	= முழுமையும் அறிவது அரிது' என்று
அஞ்சுவதே	= பயப்படுவதே
செங்கோன்மை	= இராஜநீதி;
சென்று	= (ஒருவன் தானே) தம்மிடம் வந்து நின்று

முறையிடினும் = (தனது குறையைச்)சொன்னாலும்
கேளாமை = அதைக் கேளாதிருப்பது
அன்று = இராஜ நீதியன்று.

[தொகுத்துரை]

அரசர் தம் பிரஜைகள் குற்றத்தைத் தாம் எவ்வளவு வருத்தப் பட்டு அறியினும் அப்படி யறியும் தம்மறிவினுங் குற்றமிருக்குமென் றெண்ணுவதே அவர்க்குச் செங்கோன்மை; தம்பால் வந்து குடிகள் முறையிடுவனவற்றைக் கேளாமை செங்கோன்மையன்று மென்ப தாம்.

[விருத்தியுரை]

1. 'ஒற்று': ஒற்றன் என்பதன் பால்பகா அஃறிணைப்பெயர்.

2. 'தெரியா': செய்-24, (வி-ரை) இல-8, காண்க; இது வினை முற்று.

3. 'சிறைப்புறம்': ஒதுக்கிடம்.

4. 'சிறைப்புறத் தோர்தும்': ஏழாம் வேற்றுமைத் தொகை.

5. 'ஓர்தும்,': "வினையுருபுகள்": 19-7, காண்க.

6. 'துணையா': 'துணையாக' என்பது 'துணையா' எனக் கடை குறைந்து நின்றது. செய்-4-(வி-ரை) இல-6, காண்க.

7. 'தெரிந்தும்,' 'அறிந்தும்' என்பன ஒரு பொருண்மொழி. 'தெரிதல்' என்ற வினைப்பெயரின்கண்ணுள்ள தனிவினைப்பெயர் தெரிதந்தும் என்பதற்குத் தனிவினைப்பெயராய் நின்றது.

8. 'அறிவு,' 'அஞ்சுவது,' 'கேளாமை' என்பன வினையடிப் பகுபத வினைப்பெயர்.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள் - பொருட்பால் - அரசியல்-௫௯-அதி.-ஒற்றாடல்-௯-குறள்]

"ஒற்றினா னொற்றிப் பொருடெரியா மன்னவன்
கொற்றங் கொளக்கிடந்த தில்."

பரி:—(இ-ள்) ஒற்றினனே எல்லார்கண்ணும் நிகழ்ந்தவற்றை ஒற்றிவித்து அவற்றான் எய்தும் பயனை ஆராயாத அரசன் வெற்றி யடையக் கிடந்தது வேறொரு நெறி யில்லை, எ-று.

[திருக்குறள்-பொருட்பால்-அரசியல்-ருரு-அதி-செங்கோன்மை-
கூ-குறள்.]

"குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் றொழில்."

பரி:—(இ-ள்.) குடிகளைப் பிறர் நலியாமற் காத்துத் தானும் நலியாது பேணி, அவர்மாட்டுக் குற்ற நிகழின் அதனை ஒழிப்பான் ஒறுத்தல் வேந்தனுக்குப் பழியன்று, தொழில் ஆகலான், எ-று.

[இனியவை நாற்பது-ந-ரு-செய்யுள்]

"ஒற்றினா லொற்றிப் பொருடெரியு மாண்பினிதே;
முற்றான் றெரிந்து முறைசெய்தன் முன்னினிதே;
பற்றிலனாய்ப் பல்லுயிர்க்கும் பாத்துற்றுப் பாங்கறிதல்
வெற்றிவேல் வேந்தற் கினிது."

(பொ-ரை) வெற்றியைத் தரும் வேற்படையையுடைய அரச னுக்கு ஒற்றரால் புறத்தே நிகழுவதை யறிந்து அதனுண்மையை அறிந்தொழுகுகின்ற மாட்சிமை இனிமை தருவதாம்; (ஒரு காரி யத்தைச் செய்வதற்கு) முன்னர்த் தான் (ஆராயத்தக்கனவற்றை) ஆராய்ந்தறிந்து (அதனை) நீதியாகச் செய்தல் மிகவும் இனிமை தருவ தாம்; (எவர்மீதும்) அபிமான மில்லாதவனாய்ப் பல வுயிர்களுக்கும் தமது பொருளைப் பங்கிட்டுக் கொடுத்தலை யெண்ணிப் பாங்கானவற் றைச் செய்ய அறிதல் இனிமை தருவதாம், எ-று.

The justice of a king consists in his endeavouring to ascertain the truth in person, (suspectful of the representations of spies) concealed in sacret places, unattented and alone, and in hesitating to act, with the persuation that to detect the faults of others is not an easy task. But to remain inexorable in spite of the petitions of the distressed, is not justice.

[அரசன் பிறர் கூறுவதை நம்பியிராது, அதனது உண்மையை யாராய்ந்தறிதல் வேண்டுமெனல்.]

௯௯. ஏதிலார் யாதும் புகல இறைமகன்
கோதோரீஇக் கொள்கை முதுக்குறைவு—நேர்நின்று
காக்கை வெளிதென்பா ரென்சொலார் தாய்க்கொலை
சால்புடைத் தென்பாரு முண்டு.

[பதவுரை]

இறைமகன்	=	அரசனானவன்
ஏதிலார் யாதும் புகல	=	அயலார் யாது கூறினும்
கோது ஓரீஇ	=	(அதனது) குற்றங்களை நீக்கி
கொள்கை	=	(உண்மையைத் தன் மனத்துள்) கொள்ளுவதே
முதுக்குறைவு	=	(அவனுக்குப்) பேரறிவாகும்;
நேர் நின்று	=	(காக்கையின்) எதிரே நின்று கொண்டு
காக்கை	=	(அக்) காக்கையை
வெளிது என்பார்	=	வெளிது (வெண்மை நிறமுடையது) என்று சொல்கின்ற இவ்வுலகத்தார்
என் சொல்லார்	=	பின்னை யென்னதான் சொல்லமாட்டார்?
தாய்க் கொலை	=	(தம்) தாயைக் கொல்வது
சால்பு உடைத்து	=	தகுதியுடையது
என்பாரும் உண்டு	=	என்று சொல்லுவாரு முண்டே.

[தொகுத்துரை]

அரசன் உலகத்தார் தத்த மியல்பிற்குத் தக்கபடி தாங் கூறுவனவற்றைக் கூறுவாரென்ப துணர்ந்து, தான் அவரிடத்துக் கேட்டவற்றில் குற்றத்தை நீக்கிக் குணத்தைக் கொள்ளல்வேண்டு மென்பதாம்.

[விருத்தியுரை]

1. 'ஒரீஇ': இம் மொழி யியற்கை யளபெடை பெற்றே வருத லால் இது சொல்லிசை யளபெடை யெனப்படும். குறில் நெடிலா யளபெழுந்து வருவது இன்னிசை யளபெடை. 'ஒரீஇ', 'ஒருவி' 'நீக்கி' என்பன வொருபொருண் மொழி.

2. 'கோள்கை': வினையடிப் பகுபத வினைப்பெயர்.

3. 'முதுக்குறைவு': பேரறிவு.

4. வெளிது': செய்-3, (வி-ரை) இல-19, காண்க.

5. 'சால்பு': உரிச்சொல்லடியாகப் பிறந்த பண்புப்பெயர்.

6. 'என்பாரும்': இழிவு சிறப்பும்மை.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால்-அரசியல்-சஉ-அதி.-அறிவுடைமை-ங-குறள்]

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

பரி:—(இ-ள்) யாதொரு பொருளை யாவர் யரவர் சொல்லக் கேட்பினும், அப் பொருளின் மெய்யாய பயனைக் காண வல்லது அறிவு, எ-று.

Tho true wisdom of a king lies in rejecting what is false in the representation of other and accepting what is true. What will they not say, who maintain in the face of the startling reality, that the crow is white. There are some who will approve even matricide.

[கீழ்மக்க ளியல்பு கூறல்.]

௩௪. கண்கூடாப் பட்டது கேடெனினுங் கீழ்மக்கட்
குண்டோ வுணர்ச்சிமற் றில்லாகும்—மண்டெரி
தான்வாய் மடுப்பினு மாசுணங் கண்டுயில்வ
பேரா பெருமூச் செறிந்து.

[பதவுரை]

கேடு	=	கேடானது
கண் கூடாக	=	கண்ணுக் கெதிராக
பட்டது எனினும்	=	தோன்றியதாயினும்
கீழ்மக்கட்கு	=	கீழ்மக்களுக்கு
உணர்ச்சி உண்டோ	=	உணர்ச்சி யுண்டாமோ ? (அக் கேட்டில்நின்றும் ஒழியத்தக்க அறிவு உண்டாகுமோ ?)
இல் ஆகும்	=	இல்லையாம்;
மண்டு எரி	=	நெருங்கிய தீயானது
வாய் மடுப்பினும்	=	பக்கத்தில் சூழ்ந்து எரிந்து நெருங்கிக்கொண்டாலும்
மாசுணம்	=	பெரும் பாம்புகள்
பெருமூச்சு எறிந்து	=	பெருமூச்செறிந்து (பெருமூச்சு விட்டுக்கொண்டு)
கண் துயில்வ	=	தூங்குவனவேயன்றி
பேரா	=	(தம் இடம் விட்டுப்) பெய்ரா.

[தோதத்துரை]

கீழ்மக்கள், கேடுவந்த காலத்தும் அதனைக் கவனியா ரென்பதாம்.

[விருத்தியுரை]

1. ‘கண்கூடா’: ‘கண்ணுக்குக் கூடாக’ என்பது ‘கண்கூடா’ என வந்தது.

2. ''கேடு': ''வினையுருபுகள்'': 8-1, காண்க.
3. 'உணர்ச்சி': செய்-20, (வி-ரை) இல-13, காண்க.
4. 'மண்டு': வினைத்தொகை.
5. 'மற்று', 'தான்' என்பன அசைச்சொற்கள்.
6. 'வாய் மடுப்பினும்': பக்கத்தில் நெருங்கினும்.
7. 'துயில்வ': வினைமுற்று.
8. 'பேரா': செய்-24, (வி-ரை) இல-8, காண்க.

9. 'மாசுணங் கண்டுயில்வ பேரா பெருமூச் செறிந்து' என்பது பொருள் கொள்ளுங்கால் 'மாசுணம் பெருமூச்செறிந்து கண்டுயில்வ பேரா' என நிற்கும்.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால்-ஒழிபியல்-கௌஅ-அதி.-கயமை உ-குறள்]

''நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்.''

பரி:—(இ-ள்) தமக்குறுதியாவன வறிவாரின் அவையறியாத கீழ்மக்கள் நன்மையுடையர், அவர்போல அவை காரணமாகத் தந் நெஞ்சத்தின்கட் கவலையில ராகலான், எ-று.

Will fools rouse themselves to a sense of danger although it be plainly visible. They cannot see. Although a conflagration may be blazing around, the mountain serpants will awake not from their deep breathing slumbers

---

[கெடுவது காட்டுங் குறி இவையெனல்.]

ளரு. நட்புப் பிரித்தல் பகைநட்ட லொற்றிகழ்தல்
பக்கத்தார் யாரையு மையுறுதல்—தக்கார்
நெடுமொழி கோறல் குணம்பிறி தாதல்
கெடுவது காட்டுங் குறி.

[பதவுரை]

நட்புப் பிரித்தல்	=	இஷ்டருக்குள் பகையை யுண்டாக்குவதும்,
பகை நட்டல்	=	பகைவரை இஷ்டராக்குவதும்,
ஒற்று இகழ்தல்	=	வேவுகாரரை நிந்திப்பதும்,
பக்கத்தார் யாரையும்	=	தன்பக்கத்திலுள்ளாராகிய எல்லாரையும்பற்றி(ச்)
ஐயுறுதல்	=	சந்தேகிப்பதும்,
தக்கார்	=	தகுதியுடையாரது (உறுதி வார்த்தை சொல்லத்தக்கவர்களுடைய)
நெடு மொழி	=	(நன்மை நிறைந்த) உறுதி மொழிகளை
கோறல்	=	அலட்சியம் பண்ணுவதும்,
குணம் பிறிது ஆதல்	=	இயற்கையாகியகுணம் மாறுவதும்,
கெடுவது	=	ஒருவனுக்கு வரப்போகிறகேட்டை
காட்டும்	=	முன்னே யறிவிக்கும்
குறி	=	அடையாளமாகும்.

[தோகுத்துரை]

'நட்புப்பிரித்தல்'முதலிய ஆறும் ஒருவனுக்கு வரும் கேட்டினைக் காட்டுங் குறியா மென்பதாம்.

[விருத்தியுரை]

1. 'நட்பு': நட்டல். "வினையுநபுகள்": 19, காண்க.

2. 'பகை' என்பது, ஆகுபெயராய்ப் பகைவரை யுணர்த்திற்று.

3. 'பக்கத்தார்': குறிப்பு வினைப்பெயர்.

4. 'யாரையும்': முற்றும்மை.

5. 'ஐயுறுதல்': ஐயுறு-தனிவினைப்பெயர்.

6. 'தக்கார்': வினையாலணையும் பெயர். செய்-2, (வி-ரை) இல-11, காண்க.

7. 'கோறல்': 'கொல்லல்' என்ற தனிவினை முதனீண்டு சந்தியாற் 'கோறல்' என்றாயிற்று. கோறல்-அலட்சியம் பண்ணுதல்.

8. 'கேடுவது': வினையடிப் பகுபத வினைப்பெயர்.

9. 'தறி': வினையடிப் பகாப்பதப் பொருட்பெயர்.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால்-அரசியல்-ருக-அதி.-தெரிந்துதெளிதல்-கo-குறள்]

"தேரான் தெளிவுந் தெளிந்தான்க ணையுறவுந்
தீரா விடும்பை தரும்."

பரி:—(இ-ள்) அரசன் ஒருவனை ஆராயாது தெளிதலும் ஆராயாது தெளிந்தவன்மாட்டு ஐயப்படுதலும் இவ்விரண்டும் அவனுக்கு நீங்காத துன்பத்தைக் கொடுக்கும், எ-று.

[திருக்குறள்-பொருட்பால்-அரசியல்-சரு-அதி.-பெரியாரைத்-துணைக்கோடல்-கo-குறள்]

"பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்."

பரி:—(இ-ள்) தான்தனியனாய்வைத்துப் பலரோடும் பகைகொள்ளுதலின் பதிற்றுமடங்கு தீமையுடைத்து; அரசன் பெரியாரோடு நட்பினைக் கொள்ளா தொழிதல், எ-று.

[திருக்குறள்-பொருட்பால்-அரசியல்-சஎ-அதி-தெரிந்து செயல்வகை-ரு-குறள்]

"வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோ ராறு."

பரி:—(இ-ள்) சென்றால் நிகழும் திறங்களையெல்லாம் முற்ற வெண்ணாது சில எண்ணிய துணையானே அரசன் பகைவர்மேற் செல்லுதல் அவரை வளரு நிலத்திலே நிலைபெறச் செய்வதொரு நெறியாம், எ-று.

To alienate the affection of friends, to contract friendship with foes, to mock at spies, to suspect the fidelity of friends, to reject the efficacious advice of the wise, and to become changed in temperament are omens of approaching ruin.

[பெரியார்க்குப் பிழை செய்வார்க்குத் தவறாது கேடுண்டா மெனல்.]

௺௬. பணியப் படுவார் புறங்கடைய ராகத்
தணிவில் களிப்பினுற் ருழ்வார்க்—கணிய
திளையாண் முயக்கெனினுஞ் சேய்த்தன்றே மூத்தாள்
புணர்முலைப் போகங் கொளல்.

[பதவுரை]

பணியப்படுவார்	=	(தம்மாற்) பணியப்படுபவர்
புறங்கடையர் ஆக	=	(தந்) தலைவாசலில் நிற்பாராக
தணிவு இல்களிப்பினுல்	=	(தம்முடைய) அளவற்ற பாக்கிய மகிழ்ச்சியினுல்
தாழ்வார்க்கு	=	(அவரை எதிர்கொள்ளுவதினின் றுந்) தாழ்பவர்களுக்கு
இளையாள் முயக்கு	=	இளையவளாகிய இலட்சுமியின் போக அநுபவம்
அணியது எனினும்	=	(அச் சமயத்திற்) சமீபத்தி லிருந் தாலும்
மூத்தாள்	=	(அவளுக்கு) மூத்த தேவதையாகிய மூதேவியினுடைய
புணர் முலைபோகம் கொளல்	=	நெருங்கிய ஸ்தனங்களின் போகத்தைக் கொள்ளுதல்
சேய்த்து அன்று	=	தூரமன்று (கிட்டியே நிற்கும்).

[தோதத்துரை]

தம்மாற் பணியப்படுதற்குரியர் தம்பால் வரும்பொழுது அவரை எதிர்கொள்ளுவதற்குத் தம்முடைய பாக்கிய மகிழ்ச்சியாற் றாழ்பவர் விரைவாகக் கேட்டை யடைவ ரென்பதாம்.

[விருத்தியுரை]

1. 'பணியப்படுவார்', 'மூத்தாள்' என்பன வினையாலணையும் பெயர்.

2. 'புறங்கடையர்': குறிப்பு வினைப்பெயர்.

3. 'தணிவு', 'களிப்பு' என்பன வினையடிப் பகுபத வினைப் பெயர்.

4. 'அணியது', 'சேய்த்து' என்பன குறிப்பு வினைமுற்று 'அண்மை,' 'சேய்மை' என்பன பண்புப்பெயர்.

5. 'முயக்கு': முயங்கு என்ற தனிவினைப்பெயரின் வலித்தல் விகாரத்தினால், 'முயக்கு' என்ற வினையடிப் பகாப்பத வினைப் பெய ருண்டாயிற்று.

6. 'இளையாள்': குறிப்பு வினைப்பெயர்.

7. 'புணர்': வினைத்தொகை; இது 'நெருங்கிய' என்று பொருள்படும்.

[உதாரண மேற்கோள்]

[சூளாமணி]

"இகழ்ச்சி யிற்கெடு வார்களை யெண்ணுக
மகிழ்ச்சி யின்பத்தின் மைந்துறும் போழ்தெனப்
புகழ்ச்சி நூலுட் புகன்றனர் பூவினுட்
டிகழ்ச்சி சென்றசெம் பொன்முடி மன்னனே."

(பொ-ரை) மண்ணுலகத்தில் விளங்குதல் (யாண்டுஞ்) சென்றுள்ள செம்பொன்னாலாய முடியையுடைய அரசனே! (அரசர் தமது செல்வப்) பெருக்காலாய மகிழ்ச்சியின்கண் (தாம்) வலியுறும் போது (தம்மினும் பெரியாரை) இகழுதலாற் கெடுகின்றவரைக் கருதுவாராக என்று புகழ்ச்சிநூலென்னும் திருக்குறளின்கண் (தேவர்) கூறினர், எ-று.

[திருக்குறள்-பொருட்பால்-அரசியல்-௫௪-அதி.-பொச்சாவாமை-௯-குறள்]

"இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுக தாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து."

பரி:—(இ-ள்) அரசர் தம் மகிழ்ச்சிக்கண் தாம் வலியுறும்பொழுதுமுற்காலத்து அதனின் ஆய சோர்வாற் கெட்டவர்களை நினைக்க.

[திருக்குறள்-பொருட்பால்-அங்கவியல்-௯௦-அதி.-பெரியாரைப் பிழையாமை-௬-குறள்]

"எரியாற் சுடப்படினு முய்வுண்டா முய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்."

பரி:—(இ - ள்) காட்டிடைச் சென்று ஒருவன் ஆண்டைத் தீயாற் சுடப்பட்டானாயினும் ஒருவாற்றான் உயிருய்தல் கூடும்; தவத்தாற் பெரியாரைப் பிழைத்து ஒழுகுவார் எவ்வாற்றானும் உயிருய்யார், எ-று.

Those who by the pride of their wealth, pay not proper respects to the worthy, deserving of obeisance, will soon have to be wedded with the sister of Lakshmi, although they now enjoy the company of *Lakshmi* herself.

[மேன்மக்க ளியல்பு கூறல்.] 2

௩௭. கண்ணேக் கரும்பா நகைமுகமே நாண்மலரா
இன்மொழியின் வாய்மையே யீர்ங்காயா—வண்மை
பலமா நலங்கனிந்த பண்புடையா ரன்றே
சலியாத கற்ப தரு."

[பதவுரை]

கண்நோக்கு (ஏ)	= (தம்முடைய குளிர்ந்த) பார்வையே
அரும்பு ஆக	= அரும்பாகவும்,
நகை முகம் ஏ	= (தம்) இனிய முகமே
நாள் மலர் ஆக	= புதுமலராகவும்,
இன் மொழியின் வாய்மையே	= (தம்) இனிய உண்மையாய மொழியே
ஈரம் காய் ஆக	= இனிய காயாகவும்,
வண்மை (ஏ)	= (தம்) ஈகையே
பலம் ஆக	= பழமாகவும் (பொருந்திய)
பண்புஉடையார் அன்றே	= பண்பை யுடையவர்க ளல்லவா
நலம் கனிந்த	= நன்மை மிகுந்த
சலியாத கற்பதரு	= (கொடுப்பதில் ஒருகாலுந்) தளரூத கற்பதருவுக்குச் சமானமானவ ராவர்.

[தோகுத்துரை]

மேற் கூறப்பட்ட நால்வகைக் குணங்களு முடையவரே கற்பதருவுக்கு ஒப்பாவா ரென்பதாம்.

[விருத்தியுரை]

1. ‘ஆக’ என்பன ‘ஆ’ என நின்றன.

2. ‘நகைமுகம்’: மகிழ்ச்சியைக் காண்பிக்கு முகம் என்னும் பொருள் படும் ‘நகைமுகம்’ என்பது ‘நகையையுடைய முகம்’ என விரியும்.

3. ‘நாண்மலர்’: அன்றே மலர்ந்த புஷ்பம்.

4. ‘ஈரம்’: செய்-4, (வி-ரை) இல-5, காண்க.

[உதாரண மேற்கோள்]

திருக்குறள்-அறத்துப்பால்-இல்லறவியல்-க0-அதி.-இனியவை-கூறல்-ஙு-குறள்]

“முகத்தா னமர்ந்தினிது நோக்கி யகத்தானா
மின்சோ லினதே யறம்.”

பரி:—(இ-ள்.) கண்டபொழுதே முகத்தான் விரும்பி யினிதாக நோக்கி, பின் நண்ணியவழி மனத்தொடணுகிய இனிய சொற்களைச் சொல்லுதலின்கண்ணதே அறம், எ-று.

With the look of the eye for the blooming bud, the smiling countenance for the full blown flower, sweet words of truth for the *unripe fruit*, and generous munificence for the delicious fruit, persons who possess such virtues are like the inexhaustible heavenly ambrosial tree.

[செல்வர்க்கழகு சுற்றத்தார்க்குதவுத லெனல்.]

௩௨. வாங்குங் கவளத் தொருசிறிது வாய்தப்பிற்
றூங்குங் களிறோ துயருறா—வாங்கதுகொண்
டூரு மெறும்பிங் கொருகோடி யுய்யுமா
லாருங் கிளையோ டயின்று.

[பதவுரை]

வாங்கும்	= (தாம்) பெற்றுக்கொள்ளும்
கவளத்து	= கவளத்தினுடைய
ஒரு சிறிது	= ஒரு சிறிய பாகமானது
வாய் தப்பின்	= வாயினின்றுந் தவறி விழுந்தால்
தூங்கும் களிறோ	= அசைந்துகொண்டு நிற்கும் யானைகளோ
துயர் உறா	= அதனால் வருத்த மடையமாட்டா;
ஆங்கு	= (ஆனால்) அது சிந்திய இடத்தில்
ஊரும் ஒருகோடி எறும்பு	= ஊருகின்ற ஒருகோடியளவான (திரளான) எறும்புகள்
இங்கு	= இவ் வுலகத்தில்
ஆரும் கிளையோடு	= (தமது) நெருங்கியசுற்றத்தோடு

அது கொண்டு அயின்று = { அப்படி விழுந்தபாகத்தைப் புசித்து (ப்)
உய்யும் = பிழைக்கும்.

[தோகுத்துரை]

பெரியோருக்கு அற்பமாகிய காரியம் சிறியோருக்கு மிகவு முக்கியமான காரியமாயு மிருக்கலா மென்பதாம்.

[விருத்தியுரை]

1. 'கவளம் ஒருசிறிது' என்பது, 'கவளத்தினுடைய ஒரு சிறிது' என விரியும்.

2. 'சிறிது': செய்-3, (வி-ரை) இல-19, காண்க.

3. 'வாய் தப்பின்': 'வாயினின்றுந் தப்பின்'; ஐந்தாம் வேற்றுமைத்தொகை.

4. 'தூங்கும்': ஆடிக்கொண்டு நிற்கும்.

5.: 'களிறு' பால்பகா அஃறிணைப்பெயர்.

6.: 'இங்கு': இவ்வுலகத்து.

7. 'ஒருகோடி': 'ஒன்று கோடி' என்பது, பண்புத் தொகைக்கண் 'ஒருகோடி' என நின்றது.

8.: 'ஆல்' அசைநிலை.

9. 'ஆரும்,' 'நெருங்கும்' என்பன ஒரு பொருண்மொழி. "வினையுருபுகள்": 21, காண்க.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால்-அரசியல்--ருஉ-அதி.-சுற்றந்தழால்-சு-குறள்]

"சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன்."

பரி:—(இ-ள்) செல்வம் பெற்றவதனால் ஒருவன் பெற்ற பயனாவது தன் சுற்றத்தால் தான் சூழப்படும் வகை அதனைத் தழீஇயொழுகுதல் (உபசரித்து நடத்தல்), எ-று.

[திருக்குறள்-பொருட்பால்-சச-அரசியல்-அதி.-குற்றங் கடிதல் எ - குறள்]

"செயற்பால செய்யா திவறியான் செல்வ
முயற்பால தன்றிக் கெடும்."

பரி:—(இ-ள்) பொருளாற் றனக்குச் செய்துகொள்ளப்படு மவற்றைச் செய்து கொள்ளாது அதன்கட் பற்றுள்ளஞ் செய்தானது செல்வம் பின்உளதாம் பான்மைத்தன்றி வறிதே கெடும், எ-று.

[கொன்றைவேந்தன்-ரு0-சூத்திரம்]

"சுற்றத்திற் கழகு சூழ விருத்தல்."

(பொ-ரை) (ஒருவன் தன்) உறவினர்க்குச் (செய்யும்) அழகாவது (அவன் அவர் தன்னைச்) சூழ்ந்திருக்கும்படி ஒழுகிவருதலாம், எ-று.

The reeling elephant wicl not be sorry if a small quantity out of rice, drop from its mouth of a mouthful it receives by their trunk, although a crore of crawling ants with all its relatives will subsist on that small quantity.

[ஒருவனை யரசன் மதித்தல் அவனுக்குப் பெரும் பாக்கியமா மெனல்.]

ருகூ. மாகஞ் சிறகக் குவித்து நிதிக்குவை
யீகையி னெக்கழுத்த மிக்குடைய—மாகோல்
பகைமுகத்த வொள்வேலான் பார்வையிற் றீட்டு
நகைமுகத்த நன்கு மதிப்பு.

[பதவுரை]

மா கொல்	=	(தன் தோற்றத்தினாலேயேபகைவ ராகிய) மிருகங்களைக் கொல்லக் கூடிய
பகை முகத்த	=	பகைத்தன்மையைத் தன் முனையி லுள்ள
ஒள் வேலான்	=	பிரகாசமானவேலையுடைய அரசன்
பார்வையில் நீட்டும்	=	தன்பார்வையினாற் குறிப்பிடுகின்ற
நகை முகத்த	=	(அவனது) மலர்ந்த முகத்திலுள்ள
நன்கு மதிப்பு	=	நன்கு மதிப்புகள் (உயர்வாக மதித் தல்கள்)
மாகம் சிறுக	=	ஆகாயமுஞ் சிறுத்தது என்று சொல்லும்படி
குவித்து	=	குவித்து (குவியல் செய்து)
நிதிக்குவை	=	திரவியக் குவையை(க்)
ஈகையின்	=	கொடுப்பதினும்
எழும் கழுத்தம் மிக்கு உடைய	=	எழுகின்ற பெருந்தன்மையை மிகுதியும் உடையனவாம்.

[தொகுத்துரை]

அரசனுடைய ஈகையினும் அவனுடைய தயவே ஒருவனுக்குப் பெரிய தென்பதாம்.

[விருத்தியுரை]

1. 'மாகஞ் சிறுகக் குவித்து': குவையி னுயரமானது ஆகாயத் தையு மளாவும்படி குவித்து.

2. 'ஈகையின்': ஐந்தாம் வேற்றுமை எல்லைப்பொருள்.

3. 'எழும் கழுத்தம்': என்பது 'எக்கழுத்தம்' என மருவி நின்றது.

4. 'மிக்கு': செய்-24-(வி-ரை) இல-1, காண்க. மிகு-தனி வினைப்பெயர். "வினையுருபுகள்": 9-2, காண்க.

5. 'உடைய': குறிப்பு வினைமுற்று; அ-பலவின்பால் விகுதி.

6. 'மா கொல்': மிருகங்களைக் கொல்லுகின்ற.

7. முகத்த': குறிப்புப் பெயரெச்சம்.

8. 'ஒள்': என்பது ஒண்மையின் பண்படி.

9. 'வேலான்': "வினையுருபுகள்":18, காண்க.

10. 'நன்து': பண்புப்பெயர்; "வினையுருபுகள்": 17, காண்க.

11. 'மதிப்பு': "வினையுருபுகள்": 9, காண்க.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால்-அங்கவியல்-எ0-அதி.-மன்னரைச் சேர்ந்தொழுகல்-உ-குறள்]

"மன்னர் விழைப விழையாமை மன்னரான்
மன்னிய வாக்கந் தரும்."

பரி:—(இ-ள்) தம்மாற் சேரப்பட்ட மன்னர் விரும்புவனவற்றைத் தாம் விரும்பாதொழிதல், அமைச்சருக்கு அவரானே நிலைபெற்ற செல்வத்தைக் கொடுக்கும், எ-று.

The smiles of esteem in the countenance of a king, who holds the brilliant lance, inflicting death on all animals; are more agreeable and delightful than the profuse munificence of one who devotes to charity his hoard of riches towering above the skies.

[தக்கார் தம்மைப் படைக்கலமாக அடைந்தவரை எவ்வாற்றானுங் காப்ப ரெனல்.]

௪0. கிளைகளைத் தம்மடைந்தார்க் குற்றுழியு மற்றோர்
விளைவுன்னி வெற்றுடம்பு தாங்கார்—தளர்நடைய
தூனுடம் பென்று புகழுடம் போம்புதற்கே
தானுடம் பட்டார்க ளாம்.

[பதவுரை]

ஊன் உடம்பு	=	இறைச்சியாலாகிய இவ் வுடம்பு
தளர்நடையது என்று	=	(பிணி மூப்புமுதலியகாரணமாகத்) தளருகின்ற இயல்பினையுடைய தென்று (அதனை வெறுத்து)
புகழ் உடம்பு	=	புகழினாலாகிய உடம்பினை
ஓம்புதற்கு எ	=	வளர்த்தற்கே
உடம்பட்டார்கள்	=	உடம்பட்டவர்கள்:
தம் களைகண் ஆக	=	தம்மை ஆதாரமாக
அடைந்தார்க்கு	=	அடைந்துளோர்க்கு
உற்ற உழியும்	=	(சிறிது துன்பம்) வந்தவிடத்தும்
மற்றுஓர்விளைவுஉன்னி	=	வேறொரு உலகப் பயனைக் கருதி
வெறு உடம்பு	=	(தம்) வெறிய வுடம்பினை(த்)
தாங்கார்	=	தாங்கிக்கொண்டு வாளாவிரார்.

[தாத்பரியம்]

புகழை நாடுபவர் தம் உயிரைக் கொடுத்தேனும், தம்மை யடைந்தவரை யிரட்சிப்ப ரென்பதாம்.

[விருத்தியுரை]

1. 'களைகண்': ஆதாரம்.

2. 'உற்றுழியும்': செய்-2, (வி-ரை) இல-10, காண்க.

3. 'விளைவு': வினையடிப் பகுபதப் பொருட்பெயர்.

4. 'நடை': என்பது, வினையடிப்பகுபத வினைப்பெய ராத லின், 'நடையது' என்பது குறிப்பு வினைமுற்று.

5. 'உடம்பட்டார்கள்': செய்-எ, (வி-ரை) இல-7, காண்க.

6. 'தான்,' 'தாம்' என்பன அசைச்சொற்கள்.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-அறத்துப்பால்-இல்லறவியல்-அ-அதி.-அன்புடைமை-உ-குறள்]

"அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு."

பரி:—(இ-ள்) அன்பிலாதார் பிறர்க்குப் பயன் படாமையின் எல்லாப் பொருளானும் தமக்கே உரியர்; அன்புடையார் அவற்றானே யன்றித் தம்முடம்பானும் பிறர்க்குரியர், எ-று.

[திருக்குறள்-அறத்துப்பால்-இல்லறவியல்-உசு-அதி.-புகழ்-ரு-குறள்]

"நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது."

பரி: —(இ-ள்) புகழுடம்பிற்கு ஆக்கமாகுங் கேடும் புகழுடம்பு உளதாகுஞ் சாக்காடும் சதுரப்பாடுடையார்க்கல்லது இல்லை, எ-று.

Those who have resolved to cherish the body of fame, perceiving the frailness of the body of flesh, will not hesitate to sacrifice their lives, although to the detriment of worldly pleasures, while persons attached to worldly pleasures will be beset by calamities.

[மான மிழந்தபின் வாழாமை முன்னினி தெனல்.]

சக. தம்முடை யாற்றலு மானமுந் தோற்றுத்தம்
இன்னுயி ரோம்பினு மோம்புக—பின்னர்ச்
சிறுவரை யாயினு மன்ற தமக்காங்
கிறுவரை யில்லை யெனின்.

[பதவுரை]

பின்னர் தமக்கு = இனிமேற் நமக்கு
சிறுவரை ஆயினும் = கணப்பொழுதாயினும்
மன்ற = நிச்சயமாக
இறுவரை இல்லை எனின் = சாங்கால மில்லையாயின்,

தம்முடைய	=	தம்முடைய
ஆற்றலும்	=	வலிமையையும்
மானமும்	=	பெருமையையும்
தோற்று	=	இழந்து
தம் இன் உயிர்	=	தமது இனிய உயிரை(க்)
ஓம்பினும் ஓம்புக	=	காக்கினுங் காக்குக.

[தோகுத்துரை]

தமக்கு இறத்தலில்லை யென்னும் நிச்சயத்தை யடைந்தவர் மாத்திரம் தம் வலிமையையும் பெருமையையு மிழந்தேனும் தம்மைக் காப்பது ஒருவாறு நியாயமாகலா மென்பதாம்.

[விருத்தியுரை]

1. 'உடை': 'உடைய' என்னும் குறிப்புப் பெயரெச்சம்'உடை' எனக் கடை குறைந்தது.

2. 'தோற்று': தோல்-தனிவினைப்பெயர்.

3. ஓம்புக': வியங்கோள் வினைமுற்று.

4. 'பின்னர்': 'அர்' சாரியை.

5. 'மன்ற': செய்-27, (வி-ரை) இல-1, காண்க.

6. 'ஆங்கு': அசைநிலை.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால்-ஒழிபியல்-கூஎ-அதி.-மானம்-எ - குறள்]

"ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலி னந்நிலையே
கெட்டா னெனப்படுத லன்று."

பரி:—(இ-ள்) தன்னை யிகழ்வார் பின்னே சென்று பொருள் பெற்று அதனாலொருவன் உயிர்வாழ்தலின், அது செய்யாது இறந்தானென்று சொல்லப்படுதல் அவனுக்கு நன்று, எ-று.

[திருக்குறள்-பொருட்பால்-ஒழிபியல்-கூஎ-அதி.-மானம்-அ - குறள்]

"மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து."

பரி:—(இ-ள்) உயர்குடிப்பிறப்புத் தன் வலியாகிய மானம் அழிய வந்துழி, இறத்தலொழிந்து பயனில்லாத உடம்பினைக் காக்கும் வாழ்க்கை பின்னு மிறவாமைக்கு மருந்தாமோ? எ-று.

Should the mean be certain that death will not come upon them for even a moment, it may not be absurd in them to lose their strength and honor, for saving their lives.

[சாதற் கஞ்சாதவர் இவரிவ ரெனல்.]

சஉ. கலனழிந்த கற்புடைப் பெண்டிரு மைந்து
புலனொருங்கப் பொய்யொழிந் தாரும்-கொலைஞாட்பின்
மொய்ம்புடை வீரரு மஞ்சார் முரண்மறலி
தும்பை முடிசூ டினும்.

[பதவுரை]

கலன் அழிந்த	=	மங்கலநாண் இழந்த
கற்பு உடைய	=	கற்பினையுடைய
பெண்டிரும்	=	குலமகளிரும்,
ஐந்து புலன்	=	(மெய், வாய், கண், மூக்கு, செவி யென்னும்) ஐம்புலன்களும்
ஒருங்க	=	அடங்கிநிற்க
பொய் ஒழிந்தாரும்	=	பொய்ம்மையினின்று நீங்கினவரும்,
கொலை ஞாட்பின்	=	கொலைக்களத்தின்கண்
மொய்ம்பு உடைய	=	(வெற்றியடையும்) வலிமையுடைய
வீரரும்	=	வீரரும்
முரண் மறலி	=	வலிமையையுடைய யமன் (தம்மோ டெதிர்த்துப் போர் செய்ய வருவதற்கு அடையாளமாக)
தும்பை முடி சூடினும்	=	தும்பைப்பூமாலையை முடியில் தரித்துக்கொண்டாலும்
அஞ்சார்	=	பயப்படார்.

[தோகுத்துரை]

கற்புடைய விதவைமுதலிய மூவரையும் அஞ்சப்பண்ணுதல் யமனுக்கும் முடியா தென்பதாம்.

[விருத்தியுரை]

1. 'கலனழிந்த' 'அழிந்தகலன்': தமக்கு அழகைச் செய்வதினின்றுங் கெட்டுப்போன நகை.

2. 'உடைப்பெண்டிர்', 'உடைவீரர்': செய்-41,(வி-ரை) இல-1, காண்க.

3. 'பெண்டிர்': 'பெண்டு' என்னும் குறிப்பு வினைமுற்று, 'இர்' என்னும் பலர்பால் விகுதி யடைந்தது.

4. 'ஒருங்க': காரணப்பொருளில் வந்த வினையெச்சம்; செய்-4-(வி-ரை) இல-6, காண்க.

5. 'போய்யோழிந்தாரும்': பொய்யினின்றும் ஒழிந்தாரும்.

6. 'ஞாட்பு': 'களம்' என்பன ஒருபொருண்மொழி.

7. 'மூரண்': வலிமை.

8. 'மறலி': மறத்தொழிலைச் செய்பவன்'மறலி'எனப்பட்டான்; ல்-பெயரிடைநிலை. "வினையுருபுகள்": 18, காண்க.

9. 'தும்பை': தும்பைப்பூவாலாகிய மாலை.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால்-அங்கவியல்-எஎ-அதி.-படைமாட்சி-ரு-குறள்]

"கூற்றுடன்று மேல்வரினுங் கூடி யெதிர்நிற்கு
மாற்ற லதுவே படை."

பரி:—(இ-ள்) கூற்றுவன்றானே வெகுண்டு மேல் வந்தாலும் நெஞ்சொத்து எதிர்நின்றுதாங்கு மாற்றலை யுடையதே படையாவது, எ-று.

Virtuous widows who have renounced their ornaments, sages who subduing their senses, have relinquished the false pleasures of the earth and the heroes who stand undaunted in the field of battle, will fear not though the mighty regent of the dead appears before them adorned with a garland of * thoombay flowers.

[மெய்ப்பயன் கொண்டார் சாதற்கஞ்சார்; ஏனையோர் அதற்கஞ்சுவ ரெனல்.]

௪௫. புழுநெளிந்து புண்ணழுகி யோசனை நாறுங்
கழிமுடை நாற்றத்த வேனும்—விழலர்
விளிவுன்னி வெய்துயிர்ப்பர் மெய்ப்பயன் கொண்டார்
சுளியார் சுமைபோடு தற்கு.

[பதவுரை]

விழலர்	= (தம் பிறப்பின்பயனை யடையாத) வீணர், (தமதுடம்புகள்)
புண் அழுகி	= புண்களுடையனவா யழுகி(ப்)
புழு நெளிந்து	= புழுக்கள் நெளிய
யோசனை நாறும்	= யோசனைதூரத்திற்கு வீசுகின்ற
கழி	= மிகுந்த
முடைநாற்றத்த ஏனும்	= தூர்க்கந்தமாகிய நாற்றத்தை யுடையனவாயினும்
விளிவு உன்னி	= சாதலை நினைத்து
வெய்து உயிர்ப்பர்	= பெருமூச்செறிவார்;
மெய்ப்பயன்கொண்டார்	= தம் முடம்பினாலாகிய பயனைக்கொண்டவராகிய ஞானிகளோ

---

* The wearing of which is a sign of challenge.

சுமை	= இவ் வுடம்பாகிய சுமையை
போடுதற்கு	= விட்டுவிடுவதற்கு
சுளியார்	= வெறுப்படையார்.

[தொகுத்துரை]

தம் பிறப்பின் பயனையடைந்த ஞானிகளோ தம்முடம்பை விட்டு நீங்க வருந்தார்; மற்றோர் தம்முடம்பை யிழப்பதை நினைக்குந் தோறும் பெருமூச்செறிவாரென்பதாம்.

[விருத்தியுரை]

1. 'நேளிந்து' என்பது, 'நெளிய' என்னும் வினையெச்சத் திரிபு.

[நன்னூல்-வினையியல்-சூத்திரம்-உஎ]

"சொற்றிரி யினும்பொரு டிரியா வினைக்குறை."

2. 'யோசனை': எண்ணுகுபெயராய்த் தூரத்தை யுணர்த்திற்று.

3. 'கழி': மிகுதிப்பொருள் கொடுக்கும் பெயர் உரிச்சொல்.

4. 'மூடை': துர்க்கந்தம்.

5. 'நாற்றத்த': செய்-5, (வி-ரை) இல-1, காண்க.

6. 'எனும்': ,, 10, ,, ,, 3, ,, .

7. 'விழல்': என்பது 'வெறுமை' என்னும் பொருட்டு; வெறுமையையுடையவர் 'விழலர்'.

8. 'விளிவு': இறத்தல்: இது வினையடிப்பகுபத வினைப் பெயர்.

9. 'வெய்துயிர்த்தல்': வெப்பமான சுவாசத்தை விடல்.

10. 'மெய்ப்பயன்': மெய்யை யடைந்ததனாற் பெற்ற பயன்.

11. 'சுளித்தல்': முகத்தைச் சுளித்தல்.

[உதாரண மேற்கோள்]

[நாரதபரிவிராஜகோபநிஷத் - கூ - உபதேசம்]

"சத்தியவாக்குள்ளவனும், ஞான வைராக்கியங்களோடு கூடியவனும், தேகமாத்திரமிச்சமாயுள்ளவனும் (சந்நியாசி) வசிக்கவேண்டும்."

[மநுதர்மசாஸ்திரம் - கூ - அத்தியாயம்]

"வேலைக்காரன் தனக்கு யஜமானன் சம்பளம் கொடுக்கும் நாளை எதிர்பார்ப்பதுபோலத் தன்தேகநாசகாலத்தை (சந்நியாசி) எதிர்பார்த்திருக்கவேண்டும்."

[ஔவைகுறள்-உடம்பின் பயன் அ-குறள்]

"உயிர்க்குறுதி யெல்லா முடம்பின் பயனே
அயிர்ப்பின்றி யாதியை நாடு."

(பொ-ரை) உடம்பின் முக்கியப் பயனாவது எல்லா வகையாலும் உயிர்க்கு உறுதியாகிய மோட்சமேயாம்; (அதனைப் பெறுதற் பொருட்டுச்) சோம்பலின்றி ஆதியாகிய பகவானை விரும்பி வணங்கு.

[திருக்குறள்-அறத்துப்பால்-துறவறவியல்-௩௫-அதி.-துறவு-௫-குறள்]

"மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க் குடம்பு மிகை."

பரி:—(இ-ள்) பிறப்பறுத்தலை மேற்கொண்டார்க்கு அதற்குக் கருவியாகிய உடம்பும் மிகையாம்; ஆனபின், அதற்கு மேலே இயைபில்லனவுஞ் சில தொடர்ப்பாடுளவாதல் என்னும், எ-று,

Although the body be festered with sores, eaten up by worms, rank with noxious stench which diffuses itself a யோசனை distance around, the fool will heave a deep and painful groan at the very thought of death. Those who have rightly availed themselves of their body will not be sorry to cast off that burden.

[அரச னெவ்வழி அவ்வழிக் குடியெனல்.]

சச. இகழி னிகழ்ந்தாங் கிறைமக னொன்று
புகழினு மொக்கப் புகழ்ப—விகன்மன்னன்
சீர்வழிப் பட்டதே மன்பதைமற் றென்செய்யும்
நீர்வழிப் பட்ட புணை.

[பதவுரை]

இறைமகன்	= (உலகத்தார்தம்) அரசன்
ஒன்று இகழின்	= ஒன்றை இகழ்வானாயின்
ஆங்கு இகழ்ந்து	= (தாமும் ஒத்து) அவ னிகழ்ந்தவாறே இகழ்ந்து
புகழினும்	= (அவன் அதனைப்) புகழ்ந்தாலும்
ஒக்க புகழ்ப	= (தாமும்) அவனோடு கூடப் புகழ்வர்.
மன்பதை	= மக்கட்கூட்டம்
இகல் மன்னன்	= வலிமைதங்கிய அரசனது
சீர் வழி பட்டதே	= குறிப்பின் வழியில் பொருந்தியதே யாம்;
நீர் வழி பட்ட புணை	= நீர்ப்பெருக்கிலகப்பட்ட தெப்பமானது (நீரால் தள்ளப்படாமல்)
மன்று என் செய்யும்	= வேறு என் செய்யும்?

[தோதத்துரை]

இராசனுடைய விருப்பத்துக்கொத்து ஆவன் பிரஜைகள் நடக்கவேண்டியவராயிருக்கின்றன ரென்பதாம்.

[விருத்தியுரை]

1. 'ஒன்று': எண்ணுகுபெயர்.

2. 'ஒக்க': ஒ-தனிவினைப்பெயர், கு-சாரியை, அ-பெயரெச்ச விகுதி; ககர மிரட்டித்தது சந்தி. 'ஒக்க' என்பது 'ஒத்து' என்னும் பொருள்பட நின்றது.

3. 'புகழ்ப': செய்-17, (வி-ரை) இல-6, காண்க.

4. 'சீர்': குறிப்பு.

5. 'பட்டது': வினைமுற்று.

[உதாரண மேற்கோள்]

[ஆசாரக்கோவை-எகூ-செய்யுள்]

"விரைந்துரையார்; மேன்மே லுரையார்; பொய்யாய
பரந்துரையார்; பாரித் துரையார்—ஒருங்கெனைத்தும்
சில்லெழுத்தி னாலே பொருளடங்கக் காலத்தாற்
சொல்லுக செவ்வி யறிந்து."

(பொ-ரை) கடுகி உரையார்; மேன்மேல் உரையார்; பொய் யாய சொற்களைப் பரக்க உரையார்; தாம் உரைக்கத்தக்க சொற் களைப் பரப்பி உரையார்; கூறவேண்டிய எனைத்தினையும் ஒருமிக்கச் சில்லெழுத்தினானே முழுவதும் பொருள்விளங்கும் வகை காலத் தோடு பொருந்தச் செவ்வி யறிந்து சொல்லுக.

[திருக்குறள்-பொருட்பால்-அங்கவியல்-எ0-அதி.-மன்னரைச் சேர்ந்தொழுகல் கூ-குறள்]

"குறிப்பறிந்து காலங் கருதி வெறுப்பில
வேண்டுப வேட்பச் சொலல்."

பரி:—(இ - ள்) அரசனுக்குக் காரியம் சொல்லுங்கால் அப் பொழுது நிகழ்கின்ற அவன் குறிப்பினை யறிந்து சொல்லுதற்கேற்ற காலத்தையும் நோக்கி வெறுப்பிலவுமாய் வேண்டுவனவுமாய காரி யங்களை அவன் மனம் விரும்பும்வகை சொல்லுக, எ-று.

Contemning if the monarch contemns, and commending to his wish if he commends, the populace follow the varying tastes and humors of their soverign. What can the vessel do when it is borne along by a violent current in the waters ?

[அமைச்சரியல்பு கூறல்.]

சரு. செவிசுடச் சென்றாங் கிடித்தறிவு மூட்டி
வெகுளினூஉம் வாய்வெரீஇப் பேரா—கவுண்மதத்த
கைம்மா வயத்ததே பாகுமற் றெத்திறத்து
மம்மாண் பினவே யமைச்சு.

[பதவுரை]

கவுண் மதத்த	=	கதுப்பின்கண் மதத்தினையுடைய
கைம்மா	=	யானையானது
பாகு வயத்ததே	=	பாகனது வசத்துக்கு உட்பட்ட தேயாம்.
எத்திறத்தும்	=	எவ்வாற்றானும்
அமைச்சு	=	அமைச்சரும்
அ மாண்பினவே	=	அத்தன்மை யுடையவரே; (ஏனென்றால், அமைச்சர் அரசன் தமது உறுதிவார்த்தைகளைக் கேளாதபோதிலும்)
சென்று	=	(தாமே) சென்று
செவி சுட	=	(அவற்றை அவன்) காது வருந்தும் படி
இடித்து	=	வற்புறுத்திச் சொல்லி,
அறிவு மூட்டி	=	அறிவு வளரும்படி பண்ணி,
வெகுளினும்	=	(அவன்) கோபிக்கினும்
வாய் வெருவி	=	(அவனுக்குப்) பயந்து
பேரா	=	(அவனை விட்டு) அகலார்.

[தோகுத்துரை]

பாகனானவன் தன் யானையை நடத்துவதுபோல, அமைச்சரும் தம் அரசரை நடத்துவா ரென்பதாம்.

[விருத்தியுரை]

1. 'சேவிசுடச் சென்றிடித்து' என்பது, பொருள் கொள்ளுங் கால், 'சென்று செவிசுட விடித்து' என நிற்கும்; செவிசுட இடித்தல் - காதி லுறைக்கும்படி சொல்லுதல்.

2. 'மூட்டி': வளர்த்து.

3. 'வேதுளினூஉம்': செய்-14, (வி-ரை) இல-5, காண்க.

4. 'வெரீஇ': சொல்லிசை யளபெடை. செய்-33,(வி-ரை)இல-1, காண்க. 'வெருவி,' 'வெரீஇ,' 'அஞ்சி' என்பன ஒருபொருண் மொழி. வாய்வெருவு-தனிவினைப்பெயர்.

5. 'போா': என்பதற்கு 'அமைச்சு' என்பது தோன்றா எழுவாய்; இது பால்பகா அஃறிணைப்பெயர்; இவ்விடத்துப் பலர்பால் பெற்றது. செய்-24, (வி-ரை) இல-9, காண்க.

[நன்னூல்-பெயரியல்-சூத்திரம்-உச]

''பால்பகா வஃறிணைப் பெயர்கள்பாற் பொதுமைய.''

6. 'வயத்தது': குறிப்பு வினைமுற்று. செய்-26,(வி-ரை)இல-10, காண்க.

7. 'எத்திறத்தும்': எத்திறத்தினும்.

8. 'மாண்பின': குறிப்பு வினைப்பெயர்.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால்-அங்கவியல்-சூ௪-அதி.-அமைச்சு-அ-குறள்]

''அறிகொன் றறியா னெனினு முறுதி
யுழையிருந்தான் கூறல் கடன்.''

பரி:—(இ-ள்) அறிந்து சொல்லியாரது அறிவையு மழித்து அரசன் தானு மறியானேயாயினும், அக் குற்றம் நோக்கி யொழியாது அவனுக்கு ஊறுதியாயின கூறுதல் அமைச்சனுக்கு முறைமை, எ-று.

The ministers will not fail to approach the king and awake him to the calls of reason, assailing his ears with their counsels, undeterred by incurring his displeasure. The lusty elephant, is under the sway of its பாகன் and the ministers of a kink are also of his nature.

[அரச னியல்பு கூறல்.]

௪௯. கைவரூஉம் வேந்த னமக்கென்று காதலித்த
சேவ்வி தெரியா துரையற்க—ஒவ்வொருகால்
எண்மைய னேனு மரியன் பெரிதம்மா
கண்ணில னுள்வெயர்ப்பி னன்.

[பதவுரை]

வேந்தன்	=	அரசன்
ஒவ்வொருகால்	=	ஒவ்வொரு காலத்திலே
எண்மையன் எனும்	=	எளியனுயிருந்தாலும்
பெரிது	=	பெரும்பான்மையாக
அரியன்	=	அரியனுகவுமிருப்பன்,
கண் இலன்	=	கருணையில்லாதவனுகவுமிருப்பன்,
உள் வெயர்ப்பினன்	=	மனக்கோபமுடையவனுகவு மிருப்பன்;

(ஆதலால்)

நமக்கு கைவரும் என்று	=	(இவன்) நமக்குப் பழகினவனென்று எண்ணி
காதலித்த	=	விரும்பினவற்றை(ச்)
செவ்வி தெரியாது	=	சமய மறியாமல்
உரையற்க	=	சொல்லற்க.

[தோகுத்துரை]

அரசன் நம்மிடத்துத் தயவுடையவனாயிருப்பினும் அவனிடத்துச் சமய மறிந்தே நாம் விரும்பியவற்றைச் சொல்லல்வேண்டுமென்பதாம்.

[விருத்தியுரை]

1. 'கைவருஉம்': செய்-45,(வி-ரை) இல-3, காண்க: "வினையுருபுகள்": 19-13, காண்க.

2. 'காதலித்த': வினையாலணையும் பெயர்.

3. 'தேரியாது': எதிர்மறை வினையெச்சம்.

4. 'உரையற்க': எதிர்மறை வியங்கோள் வினைமுற்று.

5. 'ஒவ்வோருகால்': ஒன்று, ஒன்றுகால் என்பது பண்புத்தொகைக்கண் 'ஒவ்வொருகால்' என நின்றது.

6. 'எள்' என்பது எண்மையின் பண்படி. எண்மைமுதலிய வாய்பாட்டுப் பெயர்கள் 'எளிமை'முதலிய வாய்பாட்டுப் பெயர்களாய் நிற்பது முண்டு. உதாரணம்:-வன்மை, வலிமை, வெண்மை, வெளிமை.

7. 'பேரிது': செய்-12, (வி-ரை) இல-9, காண்க.

8. 'அம்மா': ,, 15 ,, ,, -9, ,, .

9. 'வேயர்ப்பு': காரியவாகுபெயராய்க் கோபத்தை யுணர்த்திற்று.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-போருட்பால்-அங்கவியல்-எ௦-அதி.-மன்னரைச் சேர்ந்தோழுகல்-கூ-குறள்.]

"கோளப்பட்டே மேன்றேண்ணிக் கோள்ளாத செய்யார்
துளக்கற்ற காட்சி யவர்."

பரி:—(இ-ள்) அரசனால் யாம் நன்குமதிக்கப்பட்டோமென்று கருதி அவன் விரும்பாதவற்றைச் செய்யார் நிலைபெற்ற வறிவினையுடையார், எ-று.

Labouring under the delusion that the king is a friend of yours, do not request of him what you want, on unseasonable occasions. Although occasionaly easy of access he will generally be inaccessible. He is devoid of mercy and broods malignity.

[அரசர்க்கு அயலாரும் ஆர்வலரு மில்லை யெனல்.]

சஎ. பழமை கடைப்பிடியார் கேண்மையும் பாரார்
கிழமை பிறிதொன்றுங் கொள்ளார்—வெகுளின்மன்
காதன்மை யுண்டே யிறைமாண்டார்க் கேதிலரு
மார்வலரு மில்லை யவர்க்கு.

[பதவுரை]

பழமை	= (அரசர் தமது) பழைய முக நட்பையும்
கடைப்பிடியார்	= (முடிவுமட்டும்) நிலைநிறுத்தார்;
கேண்மையும்	= சிநேக மென்பதையும்
பாரார்	= கவனியார்;
பிறிது கிழமை ஒன்றும்	= வேறொரு பாத்தியத்தையும்
கொள்ளார்	= (மனத்துள்) நோக்கார்;
வெகுளின்	= (அவர்) கோபிப்பாராயின் (அப்போது)
அவர்க்கு	= அவருக்கு
ஏதிலரும் ஆர்வலரும்	= அயலாரும் அன்புடையவரும்
இல்லை	= இல்லை; (ஆதலால்)
இறை மாண்டார்க்கு	= அரசில் மாட்சிமைப்பட்டவர்க்கு
காதன்மை உண்டே	= (ஒருவர்மீது) சிநேகமென்பது உண்டோ? இல்லை.

[தோகுத்துரை]

எவரும் அரசருடைய அன்பில் முழு நம்பிக்கை வைத்தல் கூடா தென்பதாம்.

[விருத்தியுரை]

1. 'கடைப்பிடித்தல்': கடைசிமட்டுங் கொண்டுபோதல்.

2. 'மன்': அசைச்சொல்.

3. 'காதன்மை': செய்-1, (வி-ரை) இல-3, காண்க.

4. 'உண்டே': ,, 13, ,, ,, 7, ,, .

5. 'மாண்டார்': 'மாட்சிமையோர்' என்னுங் குறிப்பு வினைப் பெயர் 'மாண்டார்' எனத் தெரிநிலைவினைத் தோற்றத்தை யடைந்து நின்றது.

6. 'ஆர்வம்': அன்பு; ஆர்வலர்-அன்பர்; ல்-எழுத்துப்பேறு.

[உதாரண மேற்கோள்]

[ஆசாரக்கோவை-அரு-செய்யுள்]

"அறத்தோடு கல்யாணம் ஆள்வினை கூரை
இறப்பப் பெருகியக் கண்ணும்—திறப்பட்டார்
மன்னரின் மேம்படச் செய்யற்க செய்பவேல்
மன்னிய செல்வங் கெடும்."

(பொ-ரை) அறிவுடையோர் தம்மாட்டுச் செல்வம் மிகப் பெருகியவிடத்தும், அறத்தினையும்-கலியாணத்தினையும்-முயற்சியையும்-வீட்டினையும் அரசர் செய்வதினும் மேம்படச் செய்யா தொழிக; செய்வாராயின், தம்மாட்டுற்ற செல்வங் கெடும்.

[திருக்குறள்-பொருட்பால்-அங்கவியல்-எ0-அதி.-மன்னரைச்சேர்ந் தொழுகல்-க0-குறள்]

"பழைய மெனக்கருதிப் பண்பல்ல செய்யுங்
கெழுதகைமை கேடு தரும்."

பரி:—(இ-ள்) அரசனுக்கு யாம் பழையமெனக் கருதித் தமக் கியல்பல்லாதவற்றைச் செய்யு முரிமை அமைச்சர்க்குக் கேட்டினைப் பயக்கும், எ-று.

They will not retain a recollection of old acquaintance; they will not care for the ties of friendship ; they will not regard any other relationship. The kings have no mercy when provoked. With them the distinction of friend and foreigner is null.

[அரசரை யடுத்திருப்பவர் அவலமாகப்போகா ரெனல்.]

சஅ. மன்னர் புறங்கடை காத்து வறிதேயாம்
எந்நலங் காண்டுமென் றெள்ளற்க—பன்னெடுநாள்
காத்தவை யெல்லாம் கடைமுறைபோய்க் கைகொடுத்து
வேத்தவையின் மிக்குச் செயும்.

[பதவுரை]

யாம் மன்னர் புறங் கடை	=	'நாம் அரசர் தலைவாயிலை
வறிதே காத்து(உம்)	=	யாதோ ரூதியமும் பெறாது காத்து (வந்தும்)
எ நலம்	=	யாது பிரயோசனத்தை
காண்டும் என்று	=	அடைந்தோம்?' என்று
எள்ளற்க	=	அலட்சியஞ் செய்யற்க;
பல் நெடுநாள்	=	(நீவிர்) பலநாட்கள் (அரசாது தலைவாயிலில்)
காத்தவை எல்லாம்	=	காத்திருந்தவையெல்லாம்
கடைமுறை போய்	=	முடிவிலே சென்று
கைகொடுத்து	=	உதவி
வேந்து அவையில்	=	இராஜ சபையில்
மிக்கு செயும்	=	(உமக்கு)மிகுந்த நன்மையைச் செய்யும்.

[தொகுத்துரை]

அரசனை யடுத்திருப்பது வீணகா தென்பதாம்.

[விருத்தியுரை]

1. 'கார்த்து': *என்பது வந்தும் என்பதை அவாவி நின்றது.*

2. 'வறிது': *குறிப்பு வினையெச்சம்.*

3. 'காத்தவை': *வினையடிப்பகுபத வினைப்பெயர்.* "வினையுருபுகள்": 9, *காண்க.*

4. 'காண்டும்': "வினையுருபுகள்": 19,7, *காண்க.*

5. 'எள்ளற்க' ,, : 26.2, ,, .

6. 'கடைமுறை போய்': *கடைமுறையிற் போய்.*

7. 'கைகொடுத்து': *கையை யாதரவாகக் கொடுத்து; அஃதாவது, உதவி; இவ்வாறு பொருள் கொள்ளுதல் இலக்கணையாற் பொருள் கொள்ளுதல் எனப்படும்.*

8. 'வேத்தவை': *செய்யுள்* 26, (வி-ரை) இல-1, *காண்க.*

9. 'மிக்கு': ,, 39, ,, ,, 4, ,,

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால்-அரசியல்-கூஉ-அதி.-ஆள்வினையுடைமை-கூ-குறள்.]

"தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும்."

பரி:—(இ-ள்) *முயன்றவினை பால்வகையாற் கருதிய பயனைத் தாராதாயினும், முயற்சி தனக்கிடமாய உடம்பு வருந்திய வருத்தத்தின் கூலியளவு தரும்; பாழாகாது, எ-று.*

Do not slightingly talk of having waited in the Entrance Chamber of the Court to no purpose. Your long attendance will speak in your favor with the Sovereign and raise you ultimately to eminence in the Court.

[எடுத்துக்கொண்ட காரியத்தை நிலைபெறச் செய்தல்வேண்டு மெனல்.]

சசு. உறுதி பயப்ப கடைபோகா வேனு
மிறுவரை காறு முயல்ப—இறுமுயிர்க்கு
மாயுண் மருந்தொழுக்க றீதன்று லல்லனபோ
லாவனவு முண்டு சில.

[பதவுரை]

ஆயுள் மருந்து	=	ஆயுளைத் தரும் மருந்தை(ச்)
இறும் உயிர்க்கும்	=	சாகும் நிலையிலுள்ள உயிருக்கும்
ஒழுக்கல்	=	வாயில் விடுதல்
தீது அன்று	=	தீதாகாது;
சில	=	சில கருமங்கள் (முன்பு)
அல்லன போல்	=	முடியாதன போலத் தோன்றி(ப்)
ஆவனவும்	=	(பின்பு) முடிவனவும்
உண்டு	=	உண்டு; (ஆதலால்)
உறுதி பயப்ப	=	நன்மை பயக்குங் காரியங்கள்
கடைபோகா எனும்	=	முற்றுப் பெறுவிடினும் (அவை)
இறுவரை காறும்	=	முடிவுபெறும் வரைக்கும்
முயல்ப	=	(அறிவுடையோர்) முயற்சி செய்துவருவர்.

[தாத்பரியம்]

உறுதி பயப்பனவற்றை யிறுவரைகாறும் முயலல் வேண்டு மென்பதாம்.

[விருத்தியுரை]

1. 'பயப்ப': வினையாலணையும் பெயர். "வினையுருபுகள்": 19-3, 20-1, காண்க.

2. 'கடைபோகா': செய்-24, (வி-ரை) இல-8, காண்க.

3. 'இறு': வினைத்தொகை.

4. 'காறு': 'வரை' என்னும் பொருள்படும் இடைச்சொல்.

5. 'ஆயுண் மருந்து': பிழைப்பூட்டு மருந்து.

6. 'ஆல்': அசை.

7. 'அல்லனபோல': 'அல்லனவற்றைப்போல'. 'அல்லன'. இஃது 'அல்ல' என்ற குறிப்பு வினைப்பெயர்போலாகாது விகுதிக்கு முன் 'அன்' சாரியை பெற்றது.

8. 'ஆவன' வினைமுற்று; அன்-சாரியை.

9. 'ஆவனவும்': உயர்வுசிறப்பும்மை.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால்-அங்கவியல்-கஎ-அதி.-வினைத் திட்பம்-அ-குறள்]

"கலங்காது கண்ட வினைக்கட் டுளங்காது
தூக்கங் கடிந்து செயல்."

பரி:—(இ-ள்.) மனந் தெளிந்து செய்வதாகத் துணிந்த வினையின்கண் பின்னசைதலின்றி நீட்டித்தலை யொழிந்து செய்க, எ-று.

Persons will persevere in their efforts as long as they live, although their noble object cannot be fuley accomplished. It is not wrong to apply medicinal remedies even to the dying man. Some acts although they may appear impossible may still ultimately be carried into execution.

[அறிவுடையோர் ஊழைநோக்கி முயற்சியை விட்டிரா ரெனல்.]

ரு௦. முயலாது வைத்து முயற்றின்மை யாலே
யுயலாகா வூழ்த்திறத்த வென்ஞர்—மயலாயும்
ஊற்றமி றூவிளக்க மூழுண்மை காண்டுமென்
றேற்ரு ரெறிகான் முகத்து.

[பதவுரை]

மயல் ஆயும்	=	புத்திமயக்கத்தினுலேனும்
ஊழ் உண்மை	=	ஊழ்வினையினது உண்மையை
காண்டும் என்று	=	(யாம்) பார்ப்போம்என்று (நினைத்து)
ஊற்றம் இல்	=	மறைவின்றி யிருக்கும்
தூ விளக்கம்	=	தூய விளக்கை
எறி கால் முகத்து	=	வீசுகின்ற காற்றுக்கெதிரே
ஏற்ருர்	=	(ஒருவரும்) ஏற்ருர். (அதுபோல, அறிவுடையோர்),
முயலாது வைத்தும்	=	(பயன்தருங் கருமங்களைச் செய்யத் தாம்) முயற்சி செய்யாதிருந்தும்
முயற்று இன்மை யாலே	=	முயற்சி செய்யாமையினுல்
ஊழ் திறத்த	=	(தமது) ஊழ்வினைப் பகுதியாய கருமங்கள்
உயல் ஆகா	=	(தம்மை விட்டுத்) தப்புவன ஆக மாட்டா
என்ஞர்	=	என்று சொல்லார்.

[தோகுத்துரை]

அறிவுடையோர் 'ஊழின்படி யெல்லா மாகட்டும்' என்று முயற்சி செய்யாதிரா ரென்பதாம்.

[விருத்தியுரை]

1. 'முயலார்து': செய்-46, (வி-ரை) இல-3, காண்க.

2. 'முயற்று': "வினையுருபுகள்": 9, காண்க.

3. 'உயல்': தப்புதல்; வினையடிப் பகுபத வினைப்பெயர்; உய் - தனிவினைப் பெயர்.

4. 'ஆகா': செய்-24, (வி-ரை) இல-8, காண்க.

5. 'திறத்த': ,, 43, ,, ,, 5, ,, .

6. 'ஆய்': "வினையுருபுகள்": 27-1, காண்க.

7. 'ஊற்றம்': அதிகம், வலிமை, மறைவு என்பன வொரு பொருண் மொழி.

8. 'இல்-தூ-விளக்கம்.'

9. 'தூ விளக்கம்': தூய்மை விளக்கம்; பண்புத்தொகைக்கண் 'தூவிளக்கம்' என நின்றது.

10. 'காண்டும்': செய்-29, (வி-ரை) இல-5, காண்க.

11. 'ஏற்றார்': "வினையுருபுகள்": 11, காண்க.

12. 'எறி': வினைத்தொகை.

13. 'முகத்து': 'முகம்' என்பது ஏழாம் வேற்றுமைக்கண் 'முகத்து' என நின்றது.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-அறத்துப்பால்-துறவறவியல்-உஎ-அதி.-தவம்-௯-குறள்]

"கூற்றங் குதித்தலுங் கைகூடு நோற்றலி
னாற்ற றலைப்பட் டவர்க்கு."

பரி:—(இ-ள்) கூற்றத்தைக் கடத்தலும் உண்டாவதாம், தவத்தான் வரும் ஆற்றலைத் தலைப்பட்டார்க்கு, எ-று.

The wise will not remain quiet with the excuse that the decisions of fate will not be affected by their indolence Who will hold a lamp in the face of the violent wind, merely to test the strength of its fate?

[முயற்சி ஊழினுஞ் சிறந்ததெனல்]

ருக. உலையா முயற்சி களைகணு வூழின்
வலிசிந்தும் வண்மையு முண்டே—யுலகறியப்
பான்முளை தின்று மறலி யுயிர்குடித்த
கான்முளையே போலுங் கரி.

[பதவுரை]

ஊழின் வலி	=	(சிலர்க்கு) ஊழினது வலிமையை
உலையாத முயற்சி	=	இளைத்தலில்லாத தமது முயற்சியையே
களைகண் ஆக	=	ஆதாரமாக (க் கொண்டு)
சிந்தும்	=	சிதைக்கின்ற
வண்மையும் உண்டு	=	வலிமையு முண்டு; (அதற்கு)
உலகு அறிய	=	உலக மறியும்படி
பால் முளை தின்று	=	ஊழினது முளையைக் கெடுத்து
மறலி உயிர் குடித்த	=	இயமனது உயிரையும் குடித்த
கால் முளையே	=	மார்க்கண்டேயன் என்னும் பிள்ளையே
கரி	=	நல்ல சாட்சியாம்.

[தொகுத்துரை]

"ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்." என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'உலையா': உலையாத.

2. 'உண்டே': தேற்றேகாரம்.

3. 'உலகு': கதவு, 'கதவம்' என 'அம்' சாரியை பெற்றது போல, உலகு, 'உலகம்' என 'அம்' சாரியை பெற்றது.

4. 'பால்,' 'விதி,' 'ஊழ்' என்பன வொருபொருண் மொழிகள்

5. 'கான் மூளை' என்பது 'பிள்ளை' என்னும் பொருள்படும். கந்தபுராணம், மார்க்கண்டேய படலத்தால் இப் பிள்ளை மார்க்கண்டேயன் என்பது பெற்றும்.

6. 'நல்ல': குறிப்புப் பெயரெச்சம்.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால்-அரசியல்-சுஉ-அதி-ஆள்வினையுடைமை-க0-குறள்]

''ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்.''

பரி:—(இ-ள்) பயனை விலக்குவதாய ஊழினையும் புறங்காண்பர் அவ் விலக்கிற் கிளையாது வினையைத் தாழ்வற முயல்வார், எ-று

It is possible to destroy the power of fate itself with unintermitted industry as an auxiliary. The child மார்கண்டேயன், who in the presence of all the world baffled fate, and destroyed the regent of the dead, is a sufficient evidence.

[செய்தற்குரிய காரியத்தைக்காலமுதலியன அறிந்து செய்தல்வேண்டுமெனல்.]

ருஉ. கால மறிந்தாங் கிடமறிந்து, செய்வினையின்
மூல மறிந்து, விளைவறிந்து,—மேலுந்தாஞ்
சூழ்வன சூழ்ந்து, துணைமை வலிதெரிந்
தாள்வினை யாளப் படும்.

[பதவுரை]

காலம் அறிந்து = (தகுந்த) காலத்தை யறிந்து,
இடம் அறிந்து = இடத்தை யறிந்து,
செய் வினையின் = செய்யும் தொழிலின்
மூலம் அறிந்து = காரணத்தை யறிந்து,
விளைவு அறிந்து = (அதனால் வரும்) பயனையு மறிந்து,
மேலும் = இன்னும்,
சூழ்வன சூழ்ந்து = ஆராயவேண்டிய யாவற்றையும் (அறிவுடையாரோடு கூடி ஆராய்ந்து அறிந்து,)
துணைமைவலிதெரிந்து = துணைவாது பலத்தையும் அறிந்து,
ஆள் வினை = (பின்னர்ச்)செய்யவேண்டிய கருமத்தை(ச்)
ஆளப்படும் = செய்வது தகுதி.

[தாத்பரியம்]

காலமுதலியனவற்றை யறிந்தே ஒரு காரியத்தைச் செய்ய முயலல்வேண்டு மென்பதாம்.

[விருத்தியுரை]

1. 'ஆங்கு,' 'தாம்': என்பன அசைச் சொற்கள்.

2. 'சூழ்வன': வினையாலணையும் பெயர்.

3. 'படும்': "'வேண்டும்,' 'தகும்,' 'படும்' இம்மூன்று மொருபொருட்கிளவியாய்த் தொழிற்பெயராய்த் தேற்றப்பொருள் பட்டே நிற்கு மென்க. இங்ஙனம் வருஞ் செய்யுட்கெல்லாம் நச்சினார்க்கினியர், சேனாவரையர், பரிமேலழகர், உரையாசிரியர் முதலாயினோர், முற்றாயும் எச்சமாயும் பொரு ளுரைக்கின் வழுவாம் என்று கருதி, வியங்கோட் பொருட்டென்றும், விதிப்பொருட்டென்றும், தகுதிப் பொருட்டென்றும், வேண்டுபவென்றும் தமக்கு வேண்டியவாறே பொருளெழுதிச் சொற்குணம் வாளா போயினர்." [நன்னூல்-வினையியல்-௨௦-ம்-சூத்திர விருத்தியுரை.]

4. 'ஆளப்படும்': என்பது 'ஆளப்படுதல் தகுதி' எனப் பொருள் கொள்ளப்படும்.

[உதாரண மேற்கோள்]

[சீவகசிந்தாமணி]

இடத்தோடு பொழுது நாடி யெவ்வினைக் கண்ணு மஞ்சார்
மடப்பட லின்றிச் சூழு மதிவல்லார்க் கரிய துண்டோ

தடத்திடைக் காக்கை யொன்றே யாயிரங் கோடி கூகை
இடத்திடை யழுங்கச் சென்றாங் கின்னுயிர் செகுத்த தன்றே.

(பொ-ரை) *ஆயிரங்கோடிக் கணக்கான கோட்டான்களை ஒரே காக்கை, அவைகள் வாழ்விடத்திலேயே சென்று, (காலம் பார்த்து) ஒடுங்கியிருந்து, அவைகளுடைய உயிரைவாங்கிக்(கொன்று) வென்று நின்றது. (ஆகையால்) இடத்தையுங் காலத்தையும் ஆராய்ந்து, எந்தக் காரியத்திற்கும் பின்வாங்காதவராகி, அறியாமைக் கிடங்கொடாமல் ஆலோசிக்கும் அறிவில் வல்லவராகிய அரசர்க்கு ஆகாத காரியமும் உண்டோ? (இல்லை யென்றபடி.)*

[கம்பராமாயணம்]

சீல மல்லன நீங்கிச்செம் பொற்றுலைத்
தால மன்ன தனிநிலை தாங்கிய
ஞால மன்னற்கு நல்லவர் நோக்கிய
கால மல்லது கண்ணுமுண் டாகுமோ."

(பொ-ரை) *தீயொழுக்கத்தில் நீங்கி, பொன்னிறுக்குந் தராசுமுள்போல் நடுநிலையாகிய நீதிநெறியிற் படரும் அரசனுக்கு, பெரியோர் மதித்துள்ள காலம் என்பதிலேயே கண்ணுயிருக்குமன்றி வேறொன்றிற் செல்லாது.*

[மநுதர்மசாஸ்திரம்-எ-அத்தியாயம்]

"சுபமான மார்கழி மாதத்தில் அரசன் சண்டைக்குப் போதல்வேண்டும்; தனக்குப் பலக்குறை வில்லாதிருந்தால், பல காலத்திலேயே சத்துருவின் தேசத்தை யெதிர்த்தல் வேண்டுமென்று மன மிருந்தால், பங்குனி சித்திரை மாதங்களிலும் போகலாம்; மற்ற மாதங்களிலும் தனக்கு நிச்சயமாக வெற்றியுண்டாகும் என்றும், தன் சத்துரு சதுரங்கபல மில்லாமல் துன்பப்படுகிறு னென்றுந் தோன்றினுல் போகலாம்."

[திருக்குறள்-பொருட்பால்-அரசியல்-சக-அதி.-காலமறிதல்-க-குறள்]

"பகல்வெல்லுங் கூகையைக் காக்கை யிகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது."

பரி:—(இ-ள்) தன்னின் வலிதாய கூகையைக் காக்கை பகற் பொழுதின்கண் வெல்லாநிற்கும்; ஆதலால், பகைவரது இகலை வெல்லக் கருதும் அரசர்க்கு அதற்கேற்ற காலம் இன்றியமையாது, எ-று.

[திருக்குறள்-பொருட்பால்-அரசியல்-ரு0-அதி-இடனறிதல்-ரு-குறள்]

"நெடும்புனலுள் வெல்லு முதலை யிடும்புனலி
னீங்கி னதனைப் பிற."

பரி:—(இ-ள்) முதலை ஆழமுடைய நீரின்கண் ஆயின் பிறவற்றையெல்லாந் தான் வெல்லாநிற்கும்; அப் புனலின் நீங்குமாயின் அதனைப் பிறவெல்லாம் வெல்லாநிற்கும், எ-று.

An act should be carried into execution after weighing the time, place, the causes and the consequences thereof and often thinking of all circumstances worthy of consideration, and estimating the strength of one's auxiliaries.

[கருமமே கண்ணாயினாரது இயல்பு கூறல்.]

ருரு மெய்வருத்தம் பாரார்; பசி நோக்கார்; கண்டுஞ்சார்;
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்;—செவ்வி
அருமையும் பாரார்; அவமதிப்புங் கொள்ளார்;
கருமமே கண்ணாயி னார்.

[பதவுரை]

கருமமே	=	(தாம்செய்து முடிக்க மேற்கொண்டுள்ள) காரியத்திலேயே
கண் ஆயினார்	=	மனம் படிந்திருப்பவர்:
மெய் வருத்தம்	=	(தமது)உடம்பின் வருத்தத்தை(க்)
பாரார்	=	கவனியார்;
பசி நோக்கார்	=	பசியை (ஒரு பொருட்டாக) எண்ணார்;
கண் துஞ்சார்	=	நித்திரை கொள்ளார்;
எவ்வெவர் தீமையும்	=	யாவர் செய்யுந் தீங்கினையும்

மேற்கொள்ளார் = உட்கொள்ளார்;
செவ்வி = காலத்தினது
அருமையும் பாரார் = அருமையையும் எண்ணார்;
அவமதிப்பும் கொள்ளார் = (பிறர் செய்யும்) அவமானத்தையும் கவனியார்.

[தோகுத்துரை]

கருமமே கண்ணாயினார்: தமக்கு வரும் எவ்வகை யிடையூறு களையும் ஒரு பொருட்டாக எண்ணா ரென்பதாம்.

[விருத்தியுரை]

1. 'வருத்தம்': இது வருந்து என்னும் வினையடிப் பகுபத வினைப்பெயர்; 'அம்' விகுதியையும், வலித்தல் விகாரத்தையும் பெற்றது.

2. 'கண்துஞ்சு': தனிவினைப்பெயர்.

3. 'எவர்': குறிப்பு வினைப்பெயர்.

4. 'தீமையும்': எண்ணும்மை.

5. 'மேற்கோள்': தனிவினைப்பெயர்.

6. 'ஆயினார்': 'இன்,': சாரியை; செய்-50, (வி-ரை) இல-6, காண்க.

[திருக்குறள்-பொருட்பால்-அங்கவியல்-கஎ-அதி.-வினைத்திட்பம்-கூ குறள்]

"துன்ப முறவரினுஞ் செய்க துணிவாற்றி
யின்பம் பயக்கும் வினை."

பரி:—(இ-ள்) முதற்கண் மெய்ம்முயற்சியாற் றமக்குத் துன்பம் மிக வருமாயினும், அது நோக்கித் தளராது முடிவின்கண் இன்பம் பயக்கும் வினையைத் திட்பமுடையராய்ச் செய்க, எ-று.

Those who have set their whole heart in gaining an object will not regard bodily pain and hunger, will not sleep, will not take heed of the evils that others do, will not even think of the value of time lost and of the injury of slanders heaped on them.

[பகைவரை அற்பரென இகழ்தல் கூடாதெனல்.]

௫௪. சிறிய பகையெனினு மோம்புத றேற்றார்
பெரிதும் பிழைபா டுடையர்—நிறைகயத்
தாழ்நீர் மடுவிற் றவளை குதிப்பினும்
யானை நிழல்காண் பரிது.

[பதவுரை]

பகை சிறிய எனினும் = தம் பகைவர்கள் சிறியவர்களாயிருப்பினும்
ஓம்புதல் = (அவர்களினின்றுந் தம்மைக்) காத்துக்கொள்ளுதலை
தேற்றார் = அறியாதவர்
பெரிதும் = மிகவும்
பிழைபாடு உடையர் = தவறுதலுடையவராவர்;
கயத்து ஆழ் = மிக ஆழமாயுள்ள
நீர் நிறை மடுவில் = நீர் நிறைந்துள்ள மடுவில்
தவளை குதிப்பினும் = (சிறிய) தவளையானது குதித்தாலும் (அந்நீர் அசைவினால்)
யானை நிழல் = (அதிலுள்ள பெரிய) யானையினிழலை
காண்பது அரிது = காண்பது அரிதாகும்.

[தொகுத்துரை]

தம் பகைவரைச் சிறியரென்று கருதி அவரை யலட்சியஞ்செய்தல் கூடா தென்பதாம்.

[விருத்தியுரை]

1. 'பகை': என்பது ஆகுபெயராதலின் அது பால்பகா அஃறிணைப்பெயராய் இவ்விடத்துப் பன்மைப் பயனிலை பெற்றது.

2. 'தேற்றார்': என்னும் பிறவினை தன்வினைப் பொருட்டாக நின்றது. செய்-1, (வி-ரை) இல-5, காண்க.

3. 'பிழைபாடு': செய்-10, (வி-ரை) இல - 4, காண்க.

4. 'பெரிதும்': ,, 12, ,, ,, 9, ,,

5. 'கயத்து ஆழ்': இவை ஒரு பொருட் பன்மொழி.

6. 'காண்பரிது': செய்-8; (வி-ரை) இல-22, காண்க.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால்-அங்கவியல்-அஅ-அதி.-பகைத்திறந் தெரிதல்-கூ-குறள்]

"இளைதாக முண்மரங் கொல்க களையுநர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து."

பரி:—(இ-ள்) களையவேண்டுவதாய முண்மரத்தை இளைதாய நிலைமைக்கட் களைக; அன்றியே முதிர்ந்த நிலைமைக்கட் களைய லுறிற் களைவார் கையினை அதுதான் களையும், எ-று.

Those that do not feel the necessity of being on their guard against enemies weak though they be, are highly to blame. Though the insignificant frog jump on the surface of the waters of the pool on whose banks are elephants, ever so slightly the shadows of the elephants are not refeec-ted by the waters.

[அகப் பகைவர்க்கு மிக அஞ்சல்வேண்டு மெனல்.]

ருரு. புறப்பகை கோடியின் மிக்குறினு மஞ்சார்
அகப்பகை யொன்றஞ்சிக் காப்ப—அனைத்துலகுஞ்
சொல்லொன்றின் யாப்பார் பரிந்தோம்பிக் காப்பவே
பல்காலுங் காமப் பகை.

[பதவுரை]

சொல் ஒன்றின்	=	(தமது) ஒரு வார்த்தையினாலே
உலகு அனைத்தும்	=	உலக மனைத்தையும்
யாப்பார்	=	(தமது) வசமாக்கவல்ல முனிவர்
காமப் பகை	=	காமமாகிய உட்பகையையே
பல்காலும்	=	பன்முறையும்
பரிந்து	=	வருந்தி
ஓம்பி காப்ப	=	மிகுதியும் காவல் செய்வார்; (அது போல, அறிவுடையோர்)
புறப்பகை	=	வெளிப்பகை
கோடியின்	=	கோடியென்னுந் தொகையினும்

மிக்கு உறினும்	= அதிகமாய்ப் பொருந்துவதாயினும்
அஞ்சார்	= அஞ்சாராகி
அக்ப்பகை	= அகப்பகை (உட்பகை)
ஒன்று	= ஒன்றேயாயினும்
அஞ்சிக் காப்ப	= (அதற்கு) அஞ்சி (அதனைக்) காவல் செய்வர்.

[தோகுத்துரை]

வெளிப் பகைவரைப் பார்க்கினுந் தம்மருகே யிருக்கும் பகைவருக்கு மிகவும் அஞ்சுதல்வேண்டு மென்பதாம்.

[விருத்தியுரை]

1. 'கோடியின்': அதிகத்தை யுணர்த்தும் எல்லைப் பொருளில் வந்த ஐந்தாம் வேற்றுமை.

2. 'மிக்கு': வினையடிப் பகுபதப் பொருட்பெயர்.

3. 'அஞ்சார்': வினையாலணையும் பெயர்.

4. 'அனைத்து': குறிப்பு வினைமுற்று.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால்-அங்கவியல்-அகூ-அதி.-உட்பகை-உ-குறள்]

"வாள்போற் பகைவரை யஞ்சற்க வஞ்சுக
கேள்போற் பகைவர் தொடர்பு"

பரி:—(இ-ள்) வாள்போல எறிதுமென்று வெளிப்பட்டு நிற்கும் பகைவரை அஞ்சாதொழிக; அங்ஙனம் நில்லாது கேள்போல மறைந்து நிற்கும் பகைவர் நட்பினை அஞ்சுக, எ-று.

The sages who can sway the whole world with a single word strive to suppress the influence of lust. The wise prince therefore will fear not a crore of foes from without, but will guard himself against the more dangerous foes that are within.

[அகப் பகைவரை விட்டு அகலல் வேண்டு மெனல்.]

ருசு. புறநட் டகம்வேர்ப்பார் நச்சுப் பகைமை
வெளியிட்டு வேறுதல் வேண்டும்;—கழிபெருங்
கண்ணோட்டஞ் செய்யேல்; கருவியிட் டாற்றுவார்
புண்வைத்து மூடார் பொதிந்து.

[பதவுரை]

புறம் நட்டு	=	(அரசர்) புறத்திலே நேசித்து
அகம் வேர்ப்பார்	=	மனத்திலே கோபங்கொண்டிருப்பவராது
நச்சுப் பகைமை	=	நஞ்சுபோன்ற பகைமையை
வெளியிட்டு	=	வெளிப்படுத்தி(த்)
வேறு ஆதல் வேண்டும்	=	(தாம் அவரினின்றும்) நீங்குதல் வேண்டும்;
கழி பெரு கண்ணோட்டம்	=	அவரிடத்து மிகுந்த கண்ணோட்டம்
செய்யேல்	=	செய்வது தகாது; (உலகத்தார்)
புண்	=	புண்ணினை
கருவி இட்டு	=	கருவியினா லறுத்து
ஆற்றுவார்	=	ஆற்றுவாரே யன்றி
பொதிந்து வைத்து மூடார்	=	அதனை மறைத்து மூடி வையார்.

[தொகுத்துரை]

புறநட்டு அகம் வேர்ப்பார் நட்பை விட்டு நீங்கல் வேண்டு மென்பதாம்.

[விருத்தியுரை]

1. ‘நட்டு’: நள்-தனிவினைப் பெயர்; த்-இறந்தகால இடைநிலை, உ-வினையெச்ச விகுதி.

2. 'வேர்ப்பார்': 'வேர்': தனிவினைப் பெயர்.

3. 'நச்சுப் பகைமை': செய்-26, (வி-ரை) இல-1, காண்க.

4. 'வேண்டும்': ,, 52, ,, ,, 3, ,, .

5. 'கழி பெரும்': இஃது "நாகிளங் கன்று" என்புழிப் போல மீமிசையாய் மிகுதியை யுணர்த்திற்று.

6. 'கண்ணோட்டஞ் செய்தல்': அலட்சியஞ் செய்தல்.

7. 'செய்யேல்': "வினையுருபுகள்": 19-10, காண்க.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால்-அங்கவியல்-அந-அதி.-
கூடாநட்பு-ச-குறள்]

"முகத்தி னினிய நகாஅ வகத்தின்னா
வஞ்சரை யஞ்சப் படும்."

பரி:—(இ-ள்) கண்டபொழுது முகத்தால் இனியவாகச் சிரித்து, எப்பொழுதும் மனத்தால் இன்னாராய வஞ்சரை, அஞ்சல்வேண்டும்.

Expose the hallowness of those who harbor malignity in their hearts under the mask of friendship, and renounce them. Do not think of breaking the rules of decorum. Men will not keep their sores covered but will try to heal them by incision.

[நட்பினாரிடத்துத் துரோகஞ் செய்பவர் விரைந்தழிவ ரெனல்.]

ருஎ. நட்பிடைக் குய்யம்வைத் தெய்யா வினைசூழ்ந்து
வட்கார் திறத்தராய் நின்றார்க்குத்—திட்பமா
நாளுலந்த தன்றே நடவே னடுவின்மை
வாளா கிடப்பன் மறந்து.

[பதவுரை]

நட்பிடை	=	சிநேகிதரிடத்து
குய்யம் வைத்து	=	வஞ்சகம் செய்தலை மனத்தின் கண் வைத்து
எய்யா	=	இரகசியமாக(த்)
வினை சூழ்ந்து	=	தீவினைகளை யாலோசித்து (இவ்வகைச் செயல்களினால்)
வட்கார்	=	பகைஞராது
திறத்தர் ஆய்	=	நிலைமையினரேயாய்
நின்றார்க்கு	=	இருந்தவர்க்கு
திட்பமாம் நாள்	=	(வாழ்வதற்குப்) பலமாயுள்ள வாழ் நாள்
உலந்தது அன்று	=	முடிந்துவிட்டதன்று; (ஆனால், இவர் வாழ்நாள் இவர்க்கு உடனேயே வாரா மையினால்),
நடு இன்மை	=	இவருடைய நடுவுநிலைமை யின் மையை
மறந்து	=	யமனும் மறந்ததினாலேயே
வாளா கிடப்பன்	=	சும்மா இருக்கிறான் என்று நினைக் கப்படும்.

[தோதத்துரை]

தஞ் செய்கை யமனுடைய நினைவுட் படாமையினாலேயே சிநேகிதராயிருந்தும் பகைத்தொழில் செய்பவர்கள், தம்முயிரை இன்னும் தாங்கிக்கொண்டிருக்கிறார்களென்று எண்ணவேண்டு மென்பதாம்.

[விருத்தியுரை]

1. 'நட்பு': வினையடிப் பகுபத வினைப்பெயர்.
2. 'துய்யம்': வஞ்சகம்.

3. 'எய்யா': எய்யாக வென்பது 'எய்யா' என நின்றது

4. 'வாளா': 'சும்மா' என்னும் பொருள் கொடுக்கும் இடைச்சொல்.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால்-அங்கவியல்-அரு-அதி.-கூடாநட்பு-ரு-குறள்]

"மனத்தி னமையா தவரை யெனைத்தொன்றுஞ்
சொல்லினாற் றேறற்பாற் றன்று."

பரி:—(இ-ள்) மனத்தால் தம்மோடு மேவாதாரை யாதொரு கருமத்தினும் சொல்லாற் றெளிதன் முறைமைத்தன்று என்று நீதிநூல் சொல்லும், எ-று.

[திருக்குறள்-பொருட்பால்-அங்கவியல்-அஉ-அதி.-தீநட்பு-கூ-குறள்]

"கனவினு மின்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு."

பரி:—(இ-ள்) வினையுஞ் சொல்லும் ஒவ்வாது வேறுவேறா யிருப்பார் நட்பு, நனவின்கண்ணேயன்றி கனவின்கண்ணு மின்னாது, எ-று.

In the case of those that hold hollow friendship and practice deceit in secret, it is not to be presumed that their days are not as yet numbered. Yama only slumbers for the time, unconcious of his own pitiless character.

[வெறுப்புடையார்க்கு நன்மையும் விருப்புடையார்க்குத் தீமையும் தோன்றா வெனல்.]

ருஅ. மனத்த கறுப்பெனி னல்ல செயினும்
அனைத்தெவையுந் தீயவே யாகும்;—எனைத்துணையுந்
தீயவே செய்யினு நல்லவாக் காண்பவே
மாசின் மனத்தி னவர்.

[பதவுரை]

மனத்த கறுப்பு எனின்	=	ஒருவன்மேற் கோபம் ஒருவர்க்குத் தம் மனத்தி லிருக்குமாயின்
நல்ல செயினும்	=	நல்லவற்றை அவன் செய்தாலும்
அனைத்து எவையும்	=	(அவருக்கு) அவை யாவும்
தீயவே ஆகும்	=	தீயவே யாகும்; (பொல்லாத காரியங்களாகவே தோன்றும்);
மாசு இல் மனத்தினவர்	=	களங்கமற்ற மனத்தினை யுடையவர்
எனைத்துணையும்	=	ஒருவன் தமக்கு எவ்வளவும்
தீயவே செய்யினும்	=	தீமையே செய்தானாயினும்
நல்ல ஆக காண்ப	=	அவைகளை நல்லவையாகவே நினைத்துக்கொள்ளுவார்கள்.

[தோகுத்துரை]

மனத்திற் கோபம் வைத்திருப்பவருக்கு இஷ்டமாய் நடப்பது அரிது என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'மனத்த': செய்-50, (வி-ரை) இல-5, காண்க.

2. 'அல்ல': குறிப்பு வினைமுற்று.

3. 'காண்ப': என்பதற்கு 'மனத்தினவர்,' என்பது எழுவாய்.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால்-அரசியல்-அக-அதி.-பழைமை-எ-குறள்]

"அழிவந்த செய்யினு மன்பறா ரன்பின்
வழிவந்த கேண்மை யவர்."

பரி:—(இ-ள்) நட்டார் தமக்கு அழிவு வந்தவற்றைச் செய்தாராயினும் அவர்மாட்டு அன்பு ஒழியார், அன்புடனே பழையதாய் வந்த நட்பினை யுடையார்.

Even the good acts of a man who harbors malice will be considered evil, whereas even the evil acts of men with spotless hearts will seem to be good.

[அன்பர் வன்சொல்லும் இன்சொல்லே
வன்பர் இன்சொல்லும் வன்சொல்லே,
எனல்.]

ருக. இனியவ ரேன்சோலினு மின்சோல்லே யின்னார்
கனியு மோழியுங் கடுவே—யனல்கோளுந்தும்
வேங்காரம் வேய்தேனினு நோய்தீர்க்கு மேய்போடிப்பச்
சிங்கி குளிர்ந்துங் கோலும்.''

(பதவுரை]

இனியவர்	=	சிநேகிதர்
என் சொல்லினும்	=	என்ன சொல்லினும் [(காதுக்கு) இனிமையல்லாத சொல்லைச் சொல்லினும்]
இன் சொல்லே	=	(அஃது) இனிய மொழியேயாகும்;
இன்னார்	=	பகைஞராயினோரது
கனியும் மொழியும்	=	கனியு மொழிகளும்
கடுவே	=	விஷமேயாகும்.
அனல் கொளுந்தும்	=	தீப்போலச் சுடும்
வெங்காரம்	=	வெங்காரமானது
வெய்து எனினும்	=	வெம்மைய தெனினும்
நோய் தீர்க்கும்	=	பின்பு பிணியினை யகற்றும்;
சிங்கி	=	சிங்கியானதோ

மெய் பொடிப்ப = உடல் புளகங் கொள்ளும்படியாய்(க்)
குளிர்ந்தும் கொல்லும் = குளிர்ந்தும் பின்னர்க் கொல்லும்.

[தோதத்துரை]

சிநேகிதரும் பகைஞரும் சொல்லுவது முறையே கடுமையும் இனிமையுமாயினும் அவைகள், முறையே அமுதமும் நஞ்சுமாகும் என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'இன்னார்': 'இன்னாமை' என்னும் பண்படியாகப் பிறந்த குறிப்பு வினைப்பெயர்.

2. 'கனியும்': பெயரெச்சம்.

3. 'மொழியும்': இழிவு சிறப்பும்மை.

4. 'கடு': வினையடிப் பகாப்பதப் பொருட்பெயர்.

5. 'வெம்மை': பண்புத் தொகைக்கண் 'வெம்' என நின்றது.

6. 'வெய்து': குறிப்பு வினைப்பெயர்; வெம்மையின் திரிபு ஆகிய 'வே'-பகுதி.

7. 'பொடிப்ப': "செய" என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால்-அரசியல்-எக-அதி.-நட்பு-ஃ-குறள்]

"நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு."

பரி:—(இ-ள்) ஒருவனோ டொருவன் நட்புச்செய்தல் தம் முள் நகுதற்கு இயைந்தன சொல்லி நகையாட்டற் பொருட்டன்று; அவற்கு வேண்டாத செய்கை உளதாயவழி முற்பட்டுக் கழறுதற் பொருட்டு, எ-று.

வ-ரை:—இன்சொற்கு மீளாமையின் வன்சொல்லால் 'இடித்தற்பொருட்டு,' என்றார். இதனால் இனியவர் இன்சொல்லே

யன்றி வன்சொல்லாகிய என்சொலினும் நன்சொல்லாகிய இன்சொல்லேயாமென் றுணர்க.

[திருக்குறள்-பொருட்பால்-அரசியல்-அதி.-அங-கூடாநட்பு-சு-குறள்]

"நட்டார்போ னல்லவை சொல்லினு மொட்டார்சொல்
லொல்லை யுணரப் படும்."

பரி:—(இ-ள்) நட்டார்போன்று நன்மை பயக்குஞ் சொற்களைச் சொன்னாராயினும் பகைவர் சொற்கள் அது பயவாமை அச் சொல்லியபொழுதே யறியப்படும், எ-று.

ஆகையால் 'இன்னார் கனியுமொழியுங் கடுவே' யாமென் றுணர்க.

The words of the kind hearted, whether sweet or not' will seem sweet; but even the sweet words of the rude will be bitter. (வெங்காரம்) The borax, although hot will cure disease, but poison though cooling will kill.

[பொய் பொருமை முதலிய மறநெறி விலக்கே அறநெறி யெனல்.]

சுo. பொய்குறளை வன்சொற் பயனிலவென் றிந்நான்கு
மெய்தாமை சொல்லின் வழுக்காது—மெய்யிற்
புலமைந்துங் காத்து மனமா சகற்று
நலமன்றே நல்லா றெனல்

[பதவுரை]

சொல்லின்	=	தாம் பேசும் சொல்லில்
பொய்	=	பொய்,
குறளை	=	புறங்கூறல்,
வல் சொல்	=	கடுஞ் சொல்,
பயன் இல என்று	=	பயனில் சொல் என்று

இந்நான்கும்	=	இந்நான்கு குற்றங்களும்
எய்தாமை	=	எய்தாமலும்,
மெய்யில்	=	உடம்பின்கணுள்ள
புலம் ஐந்தும்	=	ஐம்புலன்களும்
வழுக்காது	=	நெறிதப்பிச் செல்லாமலும்
காத்து	=	காவல் செய்து
மனம் மாசு அகற்றும்	=	வெகுளி முதலிய மனக்குற்றங்களையும் அகற்றுகின்ற
நலம் அன்றே	=	தன்மையன்றே
நல் ஆறு எனல்	=	அறத்தின் வழியென்று சொல்லுக.

[தோகுத்துரை]

மேற்கூறிய நலங்கள் அறத்தின்வழி நிற்பதற்கு அறிகுறி என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'துறளை': நிந்தனை பயக்கு மொழி.

2. 'இல்': குறிப்பு வினைப்பெயர்.

3. 'என்று': செய்-16, (வி-ரை) இல-2, காண்க.

4. 'எய்தாமை', 'வழுக்காது.' என்பன எதிர்மறை வினையெச்சங்கள்.

5. 'அன்றே': ஏகார வினு இடைச்சொல் தேற்றப்பொருள் கொடுத்தது.

6. 'எனல்': வியங்கோள் வினைமுற்று. "வினையுருபுகள்": 19-2, காண்க.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-அறத்துப்பால்-பாயிரம்-சு-அதி.-அறன்வலியுறுத்தல்-ரு-குறள்]

"அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொ னான்கு
இழுக்கா வியன்ற தறம்."

பரி:—(இ-ள்) பிறராக்கம் பொறாமையும், புலன்கள்மேற் செல்லுகின்ற அவாவும், அவை யேதுவாகப் பிறர்பால் வரும் வெகுளியும், அதுபற்றி வருங் கடுஞ் சொல்லுமாகிய இந்நான்கினை யுங் கடிந்து இடையறாது நடந்தது அறமாவது, எ-று.

[திருக்குறள்-அறத்துப்பால்-இல்லறவியல்-கஙு-அதி.-ஒழுக்க முடைமை க0-குறள்]

"கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி
யறம்பார்க்கு மாற்றி னுழைந்து."

பரி:—(இ-ள்) மனத்தின்கண் வெகுளி தோன்றாமற் காத்துக் கல்வி யுடையவனாய் அடங்குதலை வல்லவனது செவ்வியை அறக்கடவுள் பாரா நிற்கும், அவனை யடையும் நெறியின்கட் சென்று, எ-று.

[நல்லாதனார் இயற்றிய திரிகடுகம்-சஙு-செய்யுள்]

"வாயி னடங்குத றுப்புரவா மாசற்ற
செய்கை யடங்குத றிப்பியமாம்—பொய்யின்றி
நெஞ்ச மடங்குதல் வீடாகு மிம்மூன்றும்
வஞ்சத்திற் றீர்ந்த பொருள்."

(பொ-ரை) வாக்கால் (ஒருவன்) அடங்கி நடத்தல் (இகத்திற்குரிய) செல்வத்தைத் தருவதாம்; சரீரத் தொழிலால் அடங்கி நடத்தல் குற்றமில்லாத தெய்வப் பிறப்பைத் தருவதாம்; பொய்யில்லாமல் மனத்தால் அடங்கி நடத்தல் முத்தியைத் தருவதாகும். இந்தத் துப்பரவு முதலாய மூன்றும், வஞ்சனையினின்று நீங்கிய பொருள்களாம், எ-று.

What is described as virtue consists in avoiding falsehood, and slandering, and harshness of expression, and emptiness of speech, in guarding the organs of sense from sinning and in removing all impurities from the heart.

[நல்லோர் கெடினும் அல்லோராகா ரெனல்.]

௬௧. நல்லா றொழுக்கின் றலைநின்றார் நல்கூர்ந்து
மல்லன செய்தற் கொருப்படார்—பல்பொறிச்
செங்கட் புலியே றறப்பசித்துந் தின்னுவாம்
பைங்கட் புனத்தபைங் கூழ்.

[பதவுரை]

நல் ஆறு ஒழுக்கின் தலை = நீதிநெறி யொழுக்கத்தின்கண்
நின்றார் = நின்றவர்கள்
நல்கூர்ந்தும் = தரித்திரப்பட்ட காலத்தும்
அல்லன = நீதிநெறி யல்லாதனவற்றை (ச்)
செய்தற்கு = செய்வதற்கு(ச்)
ஒருப்படார் = சம்மதியார்;
பல் பொறி = பல புள்ளிகளையும்
செம் கண் = சிவந்த கண்களையுமுடைய
புலி ஏறு = புலியானவை
அறப் பசித்தும் = தமக்கு மிகப் பசித்தகாலத்தும்
பைங்கண் = பசுமையான இடத்திலிருக்கிற
புனத்த பைங்கூழ் = புனத்திலுள்ள பயிர்களை(த்)
தின்னு ஆம் = தின்னுவாம் (உண்ணுவாம்).

[தொகுத்துரை]

அறத்தின் வழி நிற்போர் தாரித்திரிய மடைந்த காலத்தும் தீமை செய்யார் என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'தலை': 'இடம்' என்பன வொருபொருள்.

2. 'ஒருப்படார்': 'ஒருமைப்படார்' என்பது 'ஒருப் படார்' என விகாரப்பட்டு நின்றது.

3. 'செங்கண்': 'செம்மை கண்' என்பது பண்புத் தொகைக்கண் 'செங்கண்' என நின்றது.

4. 'புலியேறு': என்பது,

"ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குறித்தே."

என்பதற் கொப்பப் பெண்புலியையு முணர்த்திற்று; இஃது பால்பகா அஃறிணைப்பெயர்.

5. 'பைங்கண்,' 'பைங்கூழ்': செய்-27, (விரை) இல-4, காண்க.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-அறத்துப்பால்-ஒப்புரவறிதல்-உஉ-அதி.-அ-குறள்]

"இடனில் பருவத்து மொப்புறவிற் கொல்லார்
கடனறி காட்சி யவர்."

பரி:—(இ-ள்) செல்வஞ் சுருங்கிய காலத்தும் ஒப்புரவு செய்தற்குத் தளரார், தாஞ் செய்யத் தகுவனவற்றை யறிந்த இயற்கை யறிவுடையார், எ-று.

[திருக்குறள்-பொருட்பால்-ஒழிபியல்-கூகூ-அதி.-சான்றாண்மை கூ-குறள்]

"ஊழி பெயரினுந் தாம்பெயரார் சான்றாண்மைக்
காழி யெனப்படு வார்."

பரி:—(இ-ள்) சால்புடைமையாகிய கடற்குக் கரையென்று சொல்லப்படுவார், ஏனைக்கடலுங் கரையுள் நில்லாமற் காலந் திரிந்தாலும் தாம் திரியார், எ-று.

Those who have stood in the paths of virtue will not condescend to do evil acts, although suffering from poverty. The many spotted tiger, although pinched by hunger will not feed on the green grass growing in the meadow.

[குலப்பழி வாராமற் பிழைப்பவனே உழைப்பவனு மெனல்.]

சுஉ. குலம்விற்றுக் கோள்ளும் வெறுக்கையும், வாய்மை
நலம்விற்றுக் கோள்ளும் திருவுந்—தவம்விற்றுங்
கூனோம்பும் வாழ்வு முரிமைவிற் றுண்பதூஉந்
தானோம்பிக் காத்த றலை.

[பதவுரை]

குலம் விற்று	=	(ஒருவன்) தன் குலத்தை விற்று(ச்)
கொள்ளும்	=	சம்பாதிக்கின்ற
வெறுக்கையும்	=	பொருளும்,
வாய்மை நலம் விற்று	=	தான் பொய் கூறுவதினல் (உண்மையாகிய நன்மையை முற்றும் விட்டு)
கொள்ளும் திருவும்	=	பெறுகின்ற செல்வமும்,
தவம் விற்று	=	தான் கொண்ட விரதத்தை விற்று(த்)
ஊன் ஓம்பும் வாழ்வும்	=	தன்னுடலைப் போஷிப்பதும்,
உரிமை விற்று	=	தனது பிதிரார்ஜிதமுதலிய உரிமைகளை விற்று(ச்)
உண்பதூஉம்	=	சீவிப்பதுமாகிய இவை
தான் ஓம்பிக் காத்தல்	=	தனக்கு வாராமற் காப்பதே
தலை	=	அவனுக்குத் தலைமையான அற மாகும்.

[தோகுத்துரை]

மேற்கூறிய தீமைகள் தன்பால் வாராமற் காப்பதே ஒருவனுக்கு மேலான அறச்செய்கை என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'வெறுக்கை': செய்-4. (வி-ரை) இல-9, காண்க.

2. 'ஆங்கு', 'தான்': அசைச் சொற்கள்.

3. 'தலை': ஆகுபெயரால் அறத்தை யுணர்த்தியது.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால்-ஒழிபியல்-க0ௗ-அதி.-குடிசெயல்வகை-ரு-குறள்]

"குற்ற மிலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்று முலகு."

பரி:—(இ-ள்) குற்றமாயின செய்யாது தன் குடியை யுயரச் செய் தொழுகுவானை அவனுக்குச் சுற்றமாக வேண்டித் தாமே சென்று சூழ்வர் உலகத்தார், எ-று.

The greatest of virtues is to avoid the wealth flowing from selling one's birth and rank and talents; to abstain from cherishing the body to the detriment of religious penance.

[வஞ்சனையாற் றேடிய பொருள் மாயமா யழியு மெனல்.]

சுரு. இடைதெரிந் தச்சுறுத்து வஞ்சித் தெளியார்
உடைமைகொண் டோமாப்பார் செல்வம்—மடநல்லார்
பொம்மன் முலைபோற் பருத்திடினு மற்றவர்
நுண்ணிடைபோற் றேய்ந்து விடும்.

[பதவுரை]

இடை தெரிந்து	=	வருத்தப்படுஞ் சமயமறிந்து
அச்சு உறுத்து	=	பயமுறுத்தி,
வஞ்சித்து	=	இப்படி வஞ்சகம் பண்ணி

எளியார்	=	(அதனால்) எளியவர்களுடைய
உடைமை கொண்டு	=	பொருளை அபகரித்துக்கொண்டு
ஏமம் யாப்பார் செல்வம்	=	(இவ்வாறு தாஞ் செய்வதனாற்) பெருமிதச் சிந்தை யடை பவர்களுடைய செல்வ மானது
மடம் நல்லார்	=	பேதைமையையுடைய பெண்க ளது
பொம்மன் முலைபோல்	=	பொருமிய தனத்தினை யொப்ப
பருத்திடினும்	=	தொடக்கத்தில் அதிகரிக்கு மாயி னும் (சீக்கிரத்தில்)
அவர்	=	அப் பெண்களுடைய
நுண்மை இடைபோல்	=	நுண்ணிடையைப் போல(த்)
தேய்ந்து விடும்	=	குறைந்தேபோகும்.

[தேரகுத்துரை]

மேற் கூறியவாறு பொருள் தேடுவோர் நீடித்து அப் பொருளை யாளுத லரிது என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'இடை': இடமென்னும் பொருட்டு

2. **'அச்சு'**: வினையடிப் பகுபத வினைப்பெயர். செய்-36, (வி-ரை) இல-5, காண்க.

3. **'உறுத்து'**, **'உறுத்தி'** என்பன வொருபொருண்மொழி.

4, **'ஏமம் யாப்பார்'** என்பது 'ஏமாப்பார்' என விகாரப் பட்டு நின்றது.

5. **'பொம்மல்'**: வினையடிப் பகுபத வினைப்பெயர். பொம் மன் முலை - பொம்மலையுடைய முலை.

6. **'பருத்திடின்'**: பருத்திடு-பகுதி.

7. **'நுண்ணிடை'**: நுண்மை இடை.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால்-அங்கவியல்-௬௬-அதி.-
வினைத்தூய்மை-௯-குறள்]

" அழக்கொண்ட வெல்லா மழப்போ மிழப்பினும்
பிற்பயக்கு நற்பா லவை."

பரி:—(இ-ள்) ஒருவன் தீயவினைகளைச் செய்து பிறர் இரங்கக் கொண்ட பொருளெல்லாம் இம்மையிலே அவன்றான் இரங்கப் போகாநிற்கும்; மற்றைத் தூயவினையான் வந்த பொருள்கள் முன்னிழந்தான் ஆயினும் அவனுக்குப் பின்னர் வந்து பயன் கொடுக்கும், எ-று.

The wealth of those who, availing themselves of the weakness of the poor, disposes them off their property by threats and deceit, although it may for a time swell like the blooming breast of a maiden, will in the end melt like her attenuated waist.

[ஆசை யடங்காதார்க்கு ஆக்கம் அறிதெனல்.]

௬௪. பெற்ற சிறுகப் பெறாத பெரிதுள்ளுஞ்
சிற்றுயிர்க் காக்க மரிதம்மா—முற்றும்
வரவர வாய்மடுத்து வல்விராய் மாய
எரிதழன் மாயா திரா.

[பதவுரை]

பெற்ற	=	தாம்பெற்றுக்கொண்டனவற்றை
சிறுக	=	அற்பமாகவும்,
பெறாத	=	பெற்றுக்கொள்ளாதனவற்றை
பெரிது	=	அதிகமாகவும்
உள்ளும்	=	நினைக்கின்ற

சிறுமை உயிர்க்கு	=	அற்பவாயுளையுடையவுயிர் களாகிய மனிதருக்கு(ச்)
ஆக்கம் அரிது	=	செல்வஞ் சித்திப்பது அரிது;
முற்றும்	=	முழுவதும்
வரவர	=	படிப்படியே
வாய்மடுத்து	=	தீயானது எரிக்க
வல் விராய் மாய	=	வலிய விறகும் முடியும்பொழுது
எரி தழல்	=	அவ் வெரிகின்ற தீயும்
மாயாது இரா	=	தணியாம விராது.

[தோகுத்துரை]

அவர் வாணாள் முடிவில் அவ ருயிரும் அவரை விட்டு நீங்கு மாதலால் தமக்கிருக்குஞ் செல்வத்தோடு திருப்தி யடையாதவர் பாக்கியராத லரிது என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'பெற்ற,' 'பெறாத' என்பன வினையாலணையும் பெயர் கள். 'பெற்ற சிறுக' என்பது '(தாம்) பெற்றன தமதெண்ணத் திற் சிறுக' என விரியும்.

2. 'மடுக்க' என்ற வினையெச்சம் 'மடுத்து' என மயங்கி நின்றது.

3. 'விராய்': பால்பகா அஃறிணைப் பெயர்.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-அறத்துப்பால்-துறவறவியல்-௩எ-அதி.- அவாவறுத்தல்-௩-குறள்]

"வேண்டாமை யன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டு மஃதொப்ப தில்."

பரி:—(இ-ள்) ஒரு பொருளையும் அவாவாமையை ஒக்கும் விழு மிய செல்வம் காணப்படுகிற இவ் வுலகின்கண் இல்லை; இனி அவ் வளவே யன்று; கேட்கப்படுகின்ற துறக்கத்தின்கண்ணும் அதனை ஒப்பதில்லை, எ-று.

That short lived mortals, who underrate the value of what they have, but overrate the value of what they have not, should enjoy happiness is impossible. The blazing conflagration becomes extinct after burning all the fuel in its scope.

[அறவழியிற் பொருள் தேடுபவரே திரண்ட செல்வமுடையவ ராவா ரெனல்.]

சுரு. தத்த நிலைக்குங் குடிமைக்குந் தப்பாமே
யொத்த கடப்பாட்டிற் றாளூன்றி—எய்த்தும்
அறங்கடையிற் செல்லார் பிறன்பொருளும் வெஃகார்
புறங்கடைய தாகும் பொருள்.

[பதவுரை]

பொருள்	=	பொருளானது
தத்தம் நிலைக்கும்	=	தத்த நிலைமைக்கும்
குடிமைக்கும்	=	குலத்துக்கும்
தப்பாமே	=	வழுவுறாது
ஒத்த கடப்பாட்டில்	=	இயைந்த முறைமையான்
தாள் ஊன்றி	=	விடாமுயற்சி செய்து
எய்த்தும்	=	(தாம் எவ்வாறு வறுமையினால்) வருந்தினும்
அறங்கடையில் செல்லார்	=	பாவத்திற் செல்லாதவரும்,
பிறன் பொருளும்	=	பிறனுடைய பொருளை
வெஃகார்	=	இச்சியாதவருமானவருடைய
புறங்கடையது ஆகும்	=	தலைவாசலி லிருக்கும்.

[தொகுத்துரை]

மேற்கூறிய குணங்களை யுடையவர் வரம்பில்லாச் செல்வ வருவா யுடையவ ராவார் என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'தத்தம்': 'தாம் தாம்' என்பது ஆறும் வேற்றுமைத் தொகைக்கண் 'தத்தம்' என நின்றது.

2. 'தப்பாமே': "வினையுருபுகள்": 22, காண்க.

3. 'ஓத்த': செய்-44, (வி-ரை) இல-2, காண்க.

4. 'கடப்பாடு': 'கடன்பாடு' என்பது 'கடப்பாடு' என விகாரப்பட்டு நின்றது. செய்-10, (வி-ரை) இல-4, செய்-7, (வி-ரை) இல-7, காண்க.

5. 'தாள்': கால்.

6. 'எய்த்து': வினையெச்சம்.

7. 'ஊன்றி,' 'எய்த்து' என்பன 'செல்லார்' என்ற வினையின் தனிவினைப்பெயரோடு தனித்தனி முடிந்து நின்றன.

8. 'செல்லார்,' 'வெஃகார்': என்பன வினையாலணையும் பெயர்கள்.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-அறத்துப்பால்-இல்லறவியல்-வெஃகாமை-கஅ-அதி.-அ-குறள்]

"அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்."

பரி:—(இ-ள்) சுருங்கல் மாலைத்தாகிய செல்வத்திற்குச் சுருங்காமைக் காரணம் யாதென்று ஒருவன் ஆராயின், அது பிறன் வேண்டுங் கைப்பொருளைத் தான் வேண்டாமையாம். எ-று.

Abundant wealth will be stable only with those who toil on straight in the paths of virtue, and in spite of pains and privations, acquire riches by means worthy of their birth and station, indulge not in sin, and covet not another's property.

[உத்தமர் மத்திமர் அதமர் செல்வங்கள் முறையே பொதுப்பெண் குலப்பெண் கைம்பெண் நலம்போலா மெனல்.]

சுசு. போதுமகளே போலுந் தலையாயார் செல்வங்
குலமகளே யேனையோர் செல்வங்—கலனழிந்த
கைமையார் பெண்மை நலம்போற் கடையாயார்
செல்வம் பயன்படுவே தில்.

[பதவுரை]

தலையாயார் செல்வம்	=	தலையாயோருடைய (மேலோருடைய) செல்வமானது
பொது மகளே போலும்	=	பொது மகளிரைப் போல யார்க்கும் பயன்படும்;
ஏனையோர் செல்வம்	=	இடையாயினோரது செல்வமானது
குலமகளே	=	குலமகளைப்போலத் தன்னையுடையவருக்கே பயன் படும்;
கடையாயார் செல்வம்	=	கடையாயினோரது செல்வமானது
கலன் அழிந்த மகைமையார்	=	மங்கலிய மிழந்த விதவையரின்
பெண்மை நலம்போல்	=	அழகாகிய நலமேபோல
பயன் படுவது இல்	=	ஒருவருக்கும் பயன் படாது.

[தோதத்துரை]

தம் செல்வத்தை யாவருக்கும் பயன் படும்படி பண்ணுபவரே தலையாயினர்; அதை யொருவருக்கும் பயன் படாதபடி பண்ணுபவர் கடையாயினர்; அதைத் தமக்கே பயன் படுத்துபவரை இடையாயினு ரென்று சொல்லவேண்டும் என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'ஆயார்': ஆ-தனிவினைப் பெயர்; ய்-இறந்தகால இடைநிலை.

2. 'படுவது': வினையடிப் பகுபத வினைப்பெயர்.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால்-ஒழிபியல்-கoக-அதி.-நன்றியில் செல்வம்-க-குறள்]

"வைத்தான்வாய் சான்ற பெரும்பொரு ளஃதுண்ணான்
செத்தான் செயக்கிடந்த தில்."

பரி:—(இ-ள்) தன் மனையகல மெல்லாம் நிறைதற் கேதுவாய பெரும் பொருளை யீட்டிவைத்து உலோபத்தால் அதனை யுண்ணாதவன் உளனாயினுஞ் செத்தானும், அதன்கண் அவனாற் செயக்கிடந்ததோ ருரிமை யின்மையான், எ - று.

The wealth of the great will be useful to all, like the womanhood of a whore; the wealth of men in the middling ranks will be serviceable only to the owners, like the womanhood of a chaste wife; whereas the wealth of the lowly will be useful to none, like the womanhood of a widow.

[ஈயாதான் செல்வத்தினும் ஈவான் வறுமையே ஏற்ற மெனல்.]

கூஎ. வள்ளன்மை யில்லாதான் செல்வத்தின் மற்றையோன்
நல்குரவே போலு நனிநல்ல—கொன்னே
அருளில னன்பிலன் கண்ணறைய னென்று
பலரா லிகழப் படான்.

[பதவுரை]

வள்ளன்மை	=	ஈயுந் தன்மை
இல்லாதான்	=	இல்லாதவனுடைய
செல்வத்தின்	=	செல்வத்தைப் பார்க்கிலும்
மற்றையோன்	=	ஈயுந் தன்மை யுடையவனுடைய
நல்குரவே	=	வறுமையே
நனி நல்ல	=	மிகவு நல்லது ; (ஏனெனில்),
அருள் இலன்	=	" இவன் கிருபை யில்லாதவன்,
அன்பு இலன்	=	பிரீதி யில்லாதவன்,
கண்ணறையன்	=	தறுகண்ணன் "
என்று	=	என்று
பலரால் கொன்னே இகழப்படான்	=	பலராலும் வீணிலே நிந்திக்கப் படான்.

[தொகுத்துரை]

ஈயாத செல்வன் உலகத்தாரால் நிந்திக்கப்படுவான் ; ஈயுந் தரித்திரன் புகழப்படுவான் என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'வள்ளன்மை': வள்ளல்+மை. 'வள்' என்பது 'வண்மை' என்பதன் பண்படி. 'அல்,' 'மை' என்பன பகுதிப் பொருள் விகுதி. செய்-1, (வி-ரை) இல, 3, காண்க.

2. 'இல்லாதான்': த்-எழுத்துப்பேறு, ஆ-சாரியை; இஃது 'இல்லான்' என்னும் பொருள்படுங் குறிப்பு வினைமுற்று.

3. 'செல்வத்தின்': ஐந்தாம் வேற்றுமை யெல்லைப்பொருள்.

4. 'போலு நனிநல்ல': நனிநல்ல போலும்.

5. 'கண்ணறையன்': குறிப்பு வினைப்பெயர்.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால்-ஒழிபியல்-கoக-அதி.-நன்றியில் செல்வம்-கூ-குறள்]

"ஏதம் பெருஞ்செல்வந் தான்றுவ்வான் றக்கார்க்கோன்
நீத லியல்பிலா தான்."

பரி:—(இ-ள்) *தானுகாாணுய் அதன்மேலுந் தகுதி யுடையார்க்கு அவர் வேண்டிய தொன்றனை யீதலியற்கை யிலனுயினன் இரண்டுஞ் செய்தற் கிடனுடைத்தாய செல்வத்திற்கு ஒரு நோய், எ-று.*

The poverty of a benevolent minded man is better than the opulence of one devoid of benevolence; for, the former cannot be reproached as being destitute of mercy, and kindness and courtesy.

[ஈகை யிலையெனினும் இன்சொல்லேனும் பேசவேண்டு மெனல்.]

கூ௨. ஈகை யரிதெனினு மின்சொலினு நல்கூர்தல்
ஓகோ கொடிது கொடிதம்மா—நாகொன்று
தீவினைக் கம்மியனுல் வாய்பூட் டிடப்படின்மற்
றுவா விவரேன் செய்வார்?

[பதவுரை]

ஈகை	=	*தாம் கொடுப்பது*
அரிது எனினும்	=	*அருமையானுலும்*
இன்சொலினும் நல் கூர்தல்	=	*இனியவசனங்களைத்தானுங் கூறுமலிருப்பது*
ஓகோ கொடிது கொடிது	=	*ஆ! ஆ! மிகவுங் கொடுமையே!*

தீவினை கம்மியனால்	=	தீவினைக் கருமானாகிய எமனால்
நா கொன்று	=	(இவர்கள்) நாவானது கொய்யப்பட்டு
வாய்	=	(இவர்கள்) வாயானது
பூட்டு இடப்படின்	=	அடைக்கப்பட்டால்
ஆவா	=	ஐயையோ!
இவர் என் செய்வார்	=	இவர்கள் என்ன செய்வார்கள்? (அப்போது இவர்கள் வாய் திறக்க வேண்டுமென்றாலும் திறக்க முடியாதே).

[தோகுத்துரை]

அவர்களை யமன் கொண்டுபோகும்பொழுது அவர்கள் பேச முடியா தாகையால், ஈயாதவர்கள் தம்முயி ரிருக்கும்பொழுதே நல் வார்த்தைதானுங் கூறாமலிருப்பது மிகவும் பரிதாபமான காரியமா யிருக்கின்றது என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'சோரினும்': இழிவு சிறப்பும்மை.

2. 'ஓகோ', 'அ ஆ': என்பன இரக்கக்குறியை யுணர்த்து மிடைச்சொல்.

3. 'கம்': என்பது கொல்லரது தொழில்.

4. 'பூட்டிடப்படின்': "வினையுருபுகள்": 13, காண்க.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-அறத்துப்பால்-இல்லறவியல்-க0-அதி.-இனியவைகூறல்-கூ-குறள்]

"இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது."

பரி—(இ-ள்):—பிறர் கூறிய இன்சொல் தனக்கின்பம் பயத்தலை அநுபவித்தறிகின்றவன், அது நிற்கப் பிறர் மாட்டு வன்சொல்லைச் சொல்லுவது என்ன பயன் கருதி? எ-று.

To be poor in good words is far worse than to be devoid of benevolence. What can such persons do when death will cut their tongues and lock their mouths?

[சொல்வன்மையைப் பிறர்க்குப் பயன்படுத்த வேண்டு மெனல்.]

சுசு. சொல்வன்மை யுண்டெனிற் கொன்னே விடுத்தொழிதல்
நல்வினை கோறலின் வேறல்ல—வல்லைத்தம்
ஆக்கங் கெடுவ துளதெனினு மஞ்சுபவோ
வாக்கின் பயன்கொள் பவர்.

[பதவுரை]

சொல் வன்மை	= (ஒருவன் தனக்குச்) சொல் வன்மை
உண்டு எனின்	= உளதாயின்
கொன்னே விடுத்து ஒழிதல்	= அதனைப் பிரயோசனப் படுத் தாமை வீணே விடுதல்
நல் வினை	= தனது நல்விதியை(ப்)
கோறலின்	= பிரயோசனப் படுத்தாது கெடுத்தல் போலாமேயன்றி
வேறு அல்ல	= வேறொன்றாகாது ;
தம் ஆக்கம்	= தமது பொருளெல்லாம்
வல்லை	= விரைவிலே
கெடுவது உளது எனினும்	= கெட்டொழியுமாயினும்
வாக்கின் பயன்	= சொல்லாற்றலாகிய பயனை(க்)
கொள்பவர்	= கொண்டிருப்பவர்கள்
அஞ்சுபவோ	= (அப் பொருள் தம்மை விட்டுப் போவதைப்பற்றித்) துன் புறுவரோ ?

[தொகுத்துரை]

சொல்லாற்ற லுள்ளோர் தம் பொருள் தம்மை விட்டு நீங்கின், "இனி யாம் என்செய்வோம்?" என்று துயருறார். ஆதலால், இவ் வாற்றலாற் பிரயோசன மடையாது விடுபவர் தம் நல்விதியைத் தாமே கெடுப்பவ ரெனப்படுவர்.

[விருத்தியுரை]

1. 'கொன்,' 'வல்லை': இடைச்சொற்கள்.

2. 'விடுத்து': "வினையுருபுகள்": 12, காண்க.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால்-அங்கவியல்-எ௩-அதி.-அவையஞ்சாமை-கூ-குறள்]

"கல்லா தவரிற் கடையென்ப கற்றறிந்து
நல்லா ரவையஞ்சு வார்."

பரி:—(இ-ள்) நூல்களைக் கற்றுவைத்தும் அவற்றாற் பயனறிந்துவைத்தும் நல்லாரிருந்த அவையினை யஞ்சி ஆண்டுச் செல்லாதாரை உலகத்தார் கல்லாதவரினுங் கடையரென்று சொல்லுவார், எ-று.

To allow the talent of vigour of expression to remain unemployed, is to destroy a proper means of growing rich. Will they who appreciate the value of powerful words hesitate to speak, though to the detriment of their fortune?

[அறவோர் சிறு முயற்சியாற் பெரும் பயன் பெறத் தாழா ரெனல்.]

௭௦. சிறுமுயற்சி செய்தாங் குறுபயன் கொள்ளப்
பெறுமேனிற் றாழ்வரோ தாழார் ;—அறனல்ல
எண்மைய வாயினுங் கைவிட் டரிதெனினும்
ஒண்மையிற் றீர்ந்தொழுக லார்.

[பதவுரை]

அறன் அல்ல	=	தருமமல்லாதனவற்றை(ச்)
எண்மைய ஆயினும்	=	செய்தற்கு எளியவாயினும்
கைவிட்டு	=	செய்யாது விட்டு
அரிது எனினும்	=	செய்தற்கு அரிதாயினும்
ஒண்மையின்	=	அறஞ் செய்தலினின்றும்
தீர்ந்து ஒழுகலார்	=	நீங்கி நடவாதவர்களாகிய அறத்தின் வழி நிற்போர் :
சிறு முயற்சி செய்து	=	சிறிய முயற்சி செய்து
ஆங்கு	=	அதனால்
உறு பயன்	=	அறப்பயன்
கொள்ளப் பெறும் எனின்	=	அடையப் பெறுவது மெய்யாயின்
தாழ்வரோ	=	அம் முயற்சி செய்யத் தாமதிப்பரோ ?
தாழார்	=	தாமதியார்.

[தொகுத்துரை]

அதனாற் றமக்கு எவ்வளவு வருத்தம் வந்தகாலத்தும் அறத்தின் வழியே நிற்பவர்: ‘ எவ்வகைச் சிறு அறமுந் தம் முயற்சிக்குக் கீழ்ப்பட்டது ’ என்று எண்ணார் என்பதாம்.

[விருத்தியுரை]

1. ‘பெறும்’: “செய்யும்” என்னும் வாய்பாட்டு வினைமுற்று.

2. 'கொள்ளப்பெறு': தனிவினைப் பெயர்.

3. 'எண்மைய': குறிப்புப் பெயரெச்சம்.

4. 'ஒண்மை': அறம்.

5. 'ஒழுகலார்': ஒழுகு-தனிவினைப் பெயர், அல்-சாரியை, ஆர்-வினைமுற்று விகுதி.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால்-ஒழிபியல்-௯௭-அதி.-பெருமை-௫-குறள்]

"பெருமை யுடையவ ராற்றுவா ராற்றி
னருமை யுடைய செயல்."

பரி:—(இ-ள்) அவ்வாற்றாற் பெருமை யுடைய ராயினர் தாம் வறியாராய வழியும் பிறரால் செய்தற் கரியவாய தஞ் செயல்களை விடாது அவை செய்யு நெறியாற் கடைபோகச் செய்தலை வல்லாராவர், எ-று.

Those that unswervingly walk in the path of virtue and avoid that of wickedness—howsoever difficult the former and howsoever easy the latter may be-will never hesitate to perform any of the slightest deed of virtue, provided it brings with it its own virtuous reward.

[முடியாத காரியத்தையு முடியுமெனல் நம்பவைத்துத் தலையை வாங்குவதா மெனல்.]

௭௧. செயக்கடவ வல்லனவுஞ் செய்துமன் னென்பார்
நயத்தகு நாகரிக மென்னும்?—செயிர்த்துரைப்பின்
நெஞ்சுநோ மென்று தலைதுமிப்பான் றண்ணளிபோல்
எஞ்சா தெடுத்துரைக்கற் பாற்று.

[பதவுரை]

செயக்கடவ = தம்மாற் செய்யக்கடவனவாகிய

அல்லனவும் = தயவு அல்லாதனவற்றையும் (தாம் பிறர்க்கு அவரைத் தம் வார்த்தையினுற் சந்தோஷிப்பதே காரணமாகத்)

செய்தும் என்பார் = செய்வோம் என்பவர்களுடைய

நயக்கத் தரும் = விரும்பத் தரும்

நாகரிகம் = முகமன் வார்த்தைகள் (தம் வார்த்தையளவா யிருக்குமே யன்றி)

என் ஆம் = என்ன பிரயோசனத்தைக் கொடுக்கும்? (இவ்வாறு கூறுவது)

செயிர்த்து உரைப்பின் = ஒருவனைக் கோபித்துப் பேசினுல்

நெஞ்சு நோம் என்று = அவனுக்கு மனவருத்தம் உண்டாகுமே யென்று (அம் மனவருத்தத்தை நீக்குவதற்காய்)

தலை துமிப்பான் = அவன் தலையை வெட்டுவோனது

தன் அளிபோல் = தண்ணிய கிருபைபோலாமென்று (பெரியோரால்)

எஞ்சாது = குறையாது

எடுத்து உரைக்கல் பாற்று = எடுத்துச் சொல்லப்படும் பகுதியினை யுடைத்து.

[தேர்குத்துரை]

ஒருவனைச் சந்தோஷிப்பதற்காகவே அவனுக்கு ஒன்றைச் செய்வதாகச் சொல் மாத்திரையிற் கூறுதல், இல்லையென்ருல் அவனுக்கு வரும் மனவருத்தத்தை நீக்க அவன் தலையை வெட்டல் போலாம் என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'கடவ': 'கடமை' என்னும் பண்படியாகப் பிறந்த வினையாலணையும் பெயர். அ-பலவின்பால் விகுதி.

2. 'செய்தும்': "வினையுருபுகள்": 19 : 17, காண்க.

3. 'மன்': அசைநிலை.

4. 'நயத்ததும்' என்புழி குகாரச்சாரியையும், வினையெச்ச விகுதியாகிய, அகரமும் கெட்டுநின்றன.

5. 'நாகரிகம்': சந்தோஷிப்பதே காரணமாகச் சொல்லும் பயனில் வார்த்தை.

6. 'செயிர்த்துரைப்பின்' என்பதன்முன் "இந்நாகரிகம்" எனத் தோன்ருவாய் நின்ற மொழிகளுள் 'நாகரிகம்' என்பது 'பாற்று' என்ற குறிப்பு வினைக்கு எழுவாயாய் நின்றது.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால்-அங்கவியல்-கூஎ-அதி.-
வினைத்திட்பம்-சு-குறள்]

"சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல்."

பரி:—(இ-ள்) யாம் இவ் வினையை இவ்வாற்ருற் செய்து மென நிரல்படச் சொல்லுதல் யாவர்க்கும் எளிய; அதனை அவ் வாற்ருனே செய்தல் யாவர்க்கும் அரியவாம், எ-று.

[திருக்குறள்-பொருட்பால்-ஒழிபியல்-கூஅ-அதி.-
பெருமை-எ-குறள்]

"இறப்பே புரிந்த தொழிற்ருஞ் சிறப்புந்தான்
சீரல் லவர்கட் படின்."

பரி:—(இ-ள்) தனக்கொக்கும் பெரியாரிடத்து அமைந் திருத்தலைச் செய்வதாய சிறப்புத்தானும், தனக்கொவ்வாத சிறியா

ரிடத்துப் படுமாயின், அதனை யொழிந்து தருக்கின்கண்ணே மிக்க செயலை யுடைத்தாம், எ-று.

Of what avail is the courteous spirit of those who will do what it does not become them to do? It is like the mercy of one who cuts off the head of a fellow, lest he should give pain by angry words.

[அறிந்தடங்கி வாழ்வாரை அகிலத்திற் காண்பதரிது.]

எஉ. அல்லன செய்யினு மாகுலங் கூழாக்கொண்
டொல்காதார் வாய்விட் டுலம்புப—அல்லால்
பிறர்பிறர் செய்பபோற் செய்தக்க செய்தாங்
கறிமடம் பூண்டுநிற்பா ரார்.

[பதவுரை]

ஒல்காதார்	=	அடங்காதவர்
அல்லன செய்யினும்	=	அறமல்லனவற்றைச் செய்தாராயினும்
ஆகுலம்	=	ஆரவாரத்தையாவது
கூழ் ஆகக்கொண்டு	=	(தாம் செய்தவற்றிற்குப்) பயன் ஆகக் கொண்டு
வாய் விட்டு	=	தஞ் செய்கைகளை யாவருமறியச் சொல்லி
உலம்புப	=	முழங்குவார்;
அல்லால்	=	இதல்லாமல்
செய்தக்க செய்து	=	செய்யத்தக்கனவாகிய அறங்களைச் செய்தும்,

பிறர் பிறர் செய்பபோல் = (தஞ் செய்கையை) யாரோ பிறரொருவர் செய்வது போல(த்)

அறி மடம் பூண்டு = (தமக்குள்) அறிந்தும் அறியாமையாகிய தாழ்மையை யடைந்து

நிற்பார் ஆர் = நிற்பவர்கள் இந்த வுலகத்திற் பெரும்பான்மை யில்லை.

[தேோகுத்துரை]

உலகத்துட் பெரும்பான்மையும் அறிந்தும் அறியாதவர்போல் அமைவுடையவரா யிருப்பவர் அரிது என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'ஆதுலம்': ஆரவாரம்.
   'கூழ்': பயன்.
2. 'வாய்விடு': தனிவினைப் பெயர்.
3. 'அல்லால்': குறிப்பு வினை யெச்சம்.
4. 'செய்ப': செய்-1, (வி-ரை) இல-14, காண்க.
5. 'செய்தக்க': செய்-71, (வி-ரை) இல-4, காண்க.
6. 'அறிமடம்': அறிந்தும் அறியாதவர் போற் றோன்றும் அமைவு.
7. 'ஆர்': எதிர்மறைப் பொருள் கொடுத்தது.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால்-ஒழிபியல்-கூகூ-அதி.-சான்றாண்மை-க-குறள்]

"கடனென்ப நல்லவை யெல்லாங் கடனறிந்து
சான்றாண்மை மேற்கோள் பவர்க்கு."

பரி:—(இ-ள்) நமக்குத் தகுவது இதுவென் றறிந்து சான்றாண்மையை மேற்கொண் டொழுகுவார்க்கு நல்லனவாய குணங்களெல்லாம் இயல்பா யிருக்குமென்று சொல்லுவர் நூலோர், எ-று.

[திருக்குறள்-பொருட்பால்-ஒழிபியல்-கoஅ-அதி.-கயமை-ச-குறள்]

" அகப்பட்டி யாவாரைக் காணி னவரின்
மிகப்பட்டுச் செம்மாக்குங் கீழ்."

பரி :—(இ-ள்) கீழாயினுன் தன்னிற் சுருங்கிய பட்டியா யொழுகுவாரைக் கண்டானாயின் அவ்வொழுக்கத்தின்கண் அவரிற் றான் மேம்பட்டு அதனாற் றன்மிகுதி காட்டி யிறுமாக்கும், எ-று.

The insolent will trumpet forth their actions, evil though they be, desirous ostentatious display. There is mone in the world who will remain silent after performing, deeds of charity as if he knows nothing about it, and if some one else had done it.

[பிறர் குற்றமே கண்டு நகைப்பவனைக் கொலையாளிபோல் அஞ்சவேண்டு மெனல்.]

எஙு. பகையின்று பல்லார் பழியெடுத் தோதி
நகையொன்றே நன்பயனாக் கொள்வான்—பயமின்று
மெய்விதிர்ப்புக் காண்பான் கோடிறுடைத்துக் கோல்
கைவிதிர்த் தஞ்சப் படும். [வான்போற்

[பதவுரை]

பகை இன்று	=	அவரோடு யாதேனும் பகையில்லாத காலத்தும்
பல்லார்	=	பலருடைய
பழி எடுத்து ஓதி	=	குற்றங்களையு மெடுத்துச்சொல்லி (பிறர் குற்றங்களைப்பற்றி)
நகை ஒன்றே	=	நகைப்பாடலையே
நல் பயன் ஆக	=	(தான் அவ்வாறு கூறுவதற்குப்) பெரும் பயனாக(க்)
கொள்வான்	=	கொள்பவன்

மெய் விதிர்ப்பு காண்பான்	=	உடல் நடுங்குவதெப்படியென்று அறியும்படி
பயம் இன்று	=	யாதேனும் அஞ்சுதலின்றி
கொடிறு உடைத்து	=	(ஒருவன்) கன்னத்தை யுடைத்து
கொல்வான்போல்	=	வருத்து மியல்புடையானுக்கு அஞ்சுதல்போல
கைவிதிர்த்து	=	(பிறரால்) கைந்நடுங்கி
அஞ்சப்படும்	=	அஞ்சப்படுவான்.

[தோகுத்துரை]

நபையாடலே காரணமாகப் பிறர் குற்றங்களை யெடுத்துக் கூறுமவன், மெய்விதிர்ப்புக் காணுமாறு கொடிறுடைப்பவன் போலாவான் என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'கோள்வான்,' 'கோல்வான்': என்பன வினையாலணையும் பெயர்கள்.

2. 'மெய் விதிர்ப்பு': வினையடிப் பகுபத வினைப்பெயர்.

3. 'காண்பான்:' "வினையுருபுகள்": 22, காண்க.

4. 'படும்' ,, 19, 13, காண்க.

5. 'இன்று': [நன்னூல்: உயிரீற்றுப் புணரியல்-சூத்திரம்-23]

"அன்றி யின்றியென் வினையென் சிகரம்
தொடர்பினு ளுகர மாய்வரி னியல்பே."

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-அறத்துப்பால்-இல்லறவியல்-உ௦-அதி. பயனில சொல்லாமை-க-குறள்.]

"பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரு மெள்ளப் படும்."

பரி:—(இ-ள்) அறிவுடையோர் பலருங் கேட்டு வெறுப்பப் பயனிலவாகிய சொற்களைச் சொல்லுவான் எல்லாராலும் இகழப் படும், எ-று.

He who exposes the failings of others without any cause of enmity, aiming at no more effect than derisive laughter, will be feared like him who breaks the jaws of a person simply to see him tremble with pain.

[தெய்வ தண்டனை, தெய்வம் உண்டு என் பார்க்கு உண்டு, இல்லையென்பார்க்கு இல்லை யெனல்.]

எச. தெய்வ முளதேன்பார் தீய செயப்புகின்
தெய்வமே கண்ணின்று நின்றேறுக்கும்—தெய்வம்
இலதேன்பார்க் கில்லேத மின்புதல்வர்க் கன்றே
பலகாலும் சோல்வார் பயன்.

[பதவுரை]

தெய்வம் உளது	=	தெய்வம் உண்டு
என்பார்	=	என்பவர்கள்
தீய செய புகின்	=	தீமை செய்ய உடம்படுவாராயின்
தெய்வமே	=	அவர்கள் தெய்வமே
கண் நின்று	=	எதிர் நின்று (தாட்சணியமின்றி, அத் தீமை செய்தவர்களைத்)
ஒறுக்கும்	=	தண்டிக்கும்; (இவ்வாறு தண்டனை யடைதல்)
தெய்வம்	=	தெய்வமானது
இலது என்பார்க்கு	=	இல்லை என அஞ்சாது நடப்ப வருக்கு

இல்லை	=	அவ்வாறு தண்டித்தல் இல்லை ;
பயன்	=	{ பயன் கொடுக்கும் வார்த்தைகளை(ப்)
தம் இன் புதல்வர்க்கு அன்றே }	=	{ (பெற்றோர்) தங்களுடைய இனிய புத்திரருக்கல்லவா
பலகாலும்	=	பலதரமும்
சொல்வார்	=	சொல்லுவார்கள்.

[நேர்கருத்துரை]

கடவுள் கடாட்சம் பெற்றவர்களே, தீமை செய்கிறபொழுது கடவுளாற் கண்டிக்கப்படுவார் என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'செயப்புது': தனிவினைப்பெயர்.

2. 'கண்ணின்று': செய்-73, (வி-ரை) இல-5, காண்க.

3. 'அன்று': 'அல்' என்னும் பண்படியாகப் பிறந்த வினைமுற்று. செய்-73, (வி-ரை) இல-5, காண்க.

4. 'காலும்': ஏழாம் வேற்றுமைத் தொகை.

5. 'பயன்': காரண ஆகுபெயர்.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-அறத்துப்பால்-துறவறவியல்-ருஉ-அதி.-இன்னாசெய்யாமை-கூ-குறள்]

" பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்."

பரி-(இ-ள்) துறந்தவர் பிறர்க்கின்னாதனவற்றை ஒரு பகலது முற்கூற்றின்கட் செய்வாராயின், தமக்கின்னாதன அதன் பிற்கூற்றின்கண் அவர் செய்யாமற் றாமே வரும், எ-று.

Should he who puts faith in God begin to do evil, the Almighty will stand before him and punish him with

rigor; whereas those who ignore the existence of God are not so punished. The father utter words of admonition only to his sons.

[தீயோர் செல்வங்கள் பெருகினும், நல்லன வாகா வெனல்.]

எரு. தீயசெயல் செய்வா ராக்கம் பெருகினுந்
தீயன தீயனவே வேறல்ல—தீயன
நல்லன வாகாவா நாவின் புறநக்கிக்
கொல்லும் கவயமா போல்.

[பதவுரை]

தீய செயல் செய்வார்	=	தீவினை செய்பவரது
ஆக்கம் பெருகினும்	=	செல்வங்கள் பெருகினும்
தீயன	=	தீவினையாற் பெறப்பட்டன,
நா இன்புற நக்கி	=	நாவினு லின்பமுறும்படி (நக்கிப்)
கொல்லும்	=	பின் கொல்லுகிற
கவயமா போல்	=	காட்டுப் பசுவினை யொப்ப(த்)
தீயனவே	=	தீமை பயப்பனவே யன்றி
வேறு அல்ல	=	வேறொன்றல்ல.
		(ஏனெனில்,)
தீயன	=	தீயவை
நல்லன ஆகா	=	நல்லன ஆக மாட்டா.

[நேர்கருத்துரை]

தீய செய்து பொருளீட்டுவோர் நீடித்து அதை யனுபவித்த லில்லை என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'தீய': குறிப்புப் பெயரெச்சம்.

2. 'செயல் செய்வார்': செய்கைகளைச் செய்வார்.

3. 'கவயமா': காட்டுப் பசு.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-அறத்துப்பால்-இல்லறவியல்-உக-அதி.-தீவினையச்சம்-ரு-குறள்]

"இலனென்று தீயவை செய்யற்க செய்யின்
இலனாகு மற்றும் பெயர்த்து."

பரி:—(இ-ள்) யான் வறியனென்று கருதி அது தீர்தற் பொருட்டுப் பிறர்க்குத் தீவினைகளை ஒருவன் செய்யாதொழிக; செய்வனாயின் பெயர்த்தும் வறியனாம், எ-று.

The wealth of the wicked, although it may for a time grow, will still yield nothing but pain. It cannot but be evil. What is bad cannot become good. Hence their wealth is like the jungle cow, which pleases by licking, but kills us.

[சான்றோர் புகழும் நல்லோர் ஊழ்வலியால் தீய செயினும் அல்லோராகா ரெனல்.]

எசு. நன்மக்கள் செந்நாத் தழும்பிருக்க நாள்வாயுஞ்
செந்நெறிச் செல்வாரிற் கீழல்லர்—முன்னைத்தம்
ஊழ்வலி யுன்னிப் பழிநாணி யுள்ளுடைவார்
தீய செயினுஞ் சில.

[பதவுரை]

நல் மக்கள்	=	மேன்மக்கள் (இடைவிடாது தம்மைப் புகழ) (அதனால்)
செம்மை நா	=	அவாது செவ்விய நாவிலே

தழும்பு இருக்க	=	தழும்புறத்தக்கதாக
நாள்வாயும்	=	நாடோறும்
செம்மை நெறி	=	நல்லொழுக்கத்திலேயே
செல்வாரின்	=	செல்பவர்க்கு
தம்	=	தம்முடைய
முன்னை ஊழ் வலி	=	பழைய ஊழின் வலிமையை
உன்னி	=	எண்ணி(த்)
பழி நாணி	=	தீமை செய்தற்கு வெட்கி
உள் உடைவார்	=	மனவருத்த மடைபவர்கள் (ஒரோ காலங்களில்)
சில தீய செயினும்	=	சில தீமைகள் செய்தாராயினும்
கீழ் அல்லர்	=	கீழாகார்.

[தொகுத்துரை]

பழைய ஊழினாலாய தம் பிறப்பை நீக்கத் தேடி அறத்தின் வழி நிற்போர் ஒரோகாலங்களில் தீமையைச் செய்தாலும் அவர் மேலோரென்றே யெண்ணப்படுவார்.

[விருத்தியுரை]

1. 'செம்மை நா': செந்நா.
2. 'வாய்': ஏழாம் வேற்றுமை யுருபு.
3. 'கீழ்': ஆகுபெயராய்க் கீழானோரை யுணர்த்திற்று.
4. 'முன்னை': என்ற இடைச்சொல்லை யணைந்த ஐகாரஞ் சாரியை.
5. 'உள்': இடவாகுபெயராய் மனத்தை யுணர்த்திற்று.
6. 'தீய செயினுஞ் சில': தீய சில செயினும்.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால் ஒழிபியல்-க0உ-அதி.-நாணுடைமை-ரு-குறள்]

"பிறர்பழியுந் தம்பழியு நாணுவார் நாணுக்
குறைபதி யென்னு முலகு."

பரி:—(இ-ள்) பிறர்க்கு வரும் பழியையுந் தமக்கு வரும் பழியையும் ஒப்ப மதித்து நாணுவாரை உலகத்தார் நாணுக் குறைவிடமென்று சொல்லுவார், எ-று.

Those who feel afflicted and ashamed by deeds of ill, being over-ruled by fate, are not inferior to those who move un-swervingly in the paths of virtue extoring reiterated applause from the wise.

[பிறன்மனை புகாமை அறனெனத்தகுமெனல்.]

எஎ. பிறன்வரை நின்றாள் கடைத்தலைச் சேறல்
அறனன்றே ஆயினு மாக ;— சிறுவரையு
நன்னலத்த தாயினுங் கோள்க நலமன்றே
மெய்ந்நடுங்க வுண்ணடுங்கு நோய்.

[பதவுரை]

பிறன் வரை நின்றாள்	=	பிறனுடைய ஆணையில் நிற்பவளாகிய
கடைத்தலை சேறல்	=	அவன் மனையாளிடத்துப் போவது
அறன் அன்றே	=	தருமம் அல்லவே ;
ஆயினும் ஆக	=	அது தருமமேயென்று யெண்ணின காலத்தும்
சிறுவரையும்	=	(அச் செய்கையில்) கணப் பொழுதாயினும்
நல் நலத்தது ஆயினும்	=	இன்ப மிருப்பினும் [நல்ல இன்பத்தைத் தருவதாயிருப்பினும்]
கொள்க	=	அதைச் செய்யவேண்டும் ; (ஆனால், அச் செய்கையை நடத்தும் வேளையில்

மெய் நடுங்க = சரீர நடுங்க

உள் நடுங்கும் நோய் நலம் அன்றே } = { மனமும் நடுங்கு நோயாகிய இன்பமல்லவாவரப் பெறும்?

[தோகுத்துரை]

பிறன்மனை நயத்தல் அறத்திற்கேயன்றி யின்பத்திற்குங் கேடு என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'வரை':-எல்லை ஆணை-சொல்.

2. 'ஆக': அறமாக. வியங்கோள் வினைமுற்று.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-அறத்துப்பால்-இல்லறவியல்-பிறனில் விழையாமை-௧௫-அதி.-௧-குறள்]

"பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்
தறம்பொருள் கண்டார்க ணில்."

பரி:—(இ-ள்) பிறனுக்குப் பொருளாந் தன்மையை யுடையாளைக் காதலித் தொழுகுகின்ற அறியாமை ஞாலத்தின்கண் அறநூலையும் பொருணூலையும் ஆராய்ந்தறிந்தார் மாட் டில்லை, எ-று.

Wicked as adultery is, it may be reasonable to indulge in it, could it afford even a moment's pleasure. It does not yield such delight. It is a source of fear, afflicting the heart and shaking the limbs.

[கருமமும் தருமமுங் கெடாமல் காரிகை யாரைச் சேர்தல் சிற்றின்ப வெற்றியா மெனல்.]

எஅ. கருமஞ் சிதையாமே கல்வி கெடாமே
தருமமுந் தாழ்வு படாமே—பெரிதுந்தம்
இன்னலமுங் குன்றுமே யேரிளங் கோம்பன்னார்
நன்னலந் துய்த்த னலம்.

[பதவுரை]

கருமம் சிதையாமே	=	கருமமானது கெடாமலும்,
கல்வி கெடாமே	=	கல்வியானது இழந்துவிடப் படாமலும்,
தருமமும்	=	தருமஞ் செய்வதற்குத் தமக்கு இருக்கும் ஊதியம்
தாழ்வு படாமே	=	அதனாற் குறையாமலும்,
பெரிதும்	=	மிகுதியும்
தம் இன் நலமும் குன்றாமே	=	தம்முடைய இனிய அழகு அழிந்து போகாமலும்,
ஏர் இள கொம்பு அன்னார்	=	அழகிய யவ்வன மாதரின்
நல் நலம்	=	நன்மையை [நல்ல இன்பத்தை]
துய்த்தல் நலம்	=	அநுபவித்தல் நல்லது.

[தொகுத்துரை]

கருமமுதலியவற்றிற்குச் சிதைவு வாராமற் பெண்ணலத்தை யநுபவித்தல் தீதாகாது என்பதாம்.

1. 'சிதையாமே,' 'கெடாமே,' 'தாழ்வு படாமே,' 'குன்றாமே:' "வினையுருபுகள்": 22, காண்க.

2. 'கோம்பு அன்னார்': பூங்கொம்பை யொத்த மாதர்கள்.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால்-அரசியல்-சச-அதி-பெரியாரைத் துணைக்கோடல்-க௦-குறள்]

" காதல காத லறியாமை யுய்க்கிற்பின்
ஏதில வேதிலார் நூல்."

பரி.—(இ-ள்) தான் காதலித்த பொருள்களை அவர் அக் காத லறியாமல் அநுபவிக்க வல்லனாயின், பகைவர் தன்னை வஞ் சித்தற் கெண்ணும் எண்ணம் பழுதாம், எ-று.

It is good to enjoy the charms of tender and lovely women without impeding the progress of our actions and studies, without contracting the sphere of our charity, and depriving us of youthful vigor.

[காமிகள் பழிபாவத்துக்கு அஞ்சா ரெனல்.]

எகூ. கொலையஞ்சார் பொய்ந்நாணார் மானமு மோம்பார்
களவொன்றோ வேனையவுஞ் செய்வார்—பழியோடு
பாவமிஃ தென்னார் பிறிதுமற் றென்செய்யார்
காமங் கதுவப்பட் டார்.

[பதவுரை]

காமம்	=	காமத்தினாலே
கதுவப்பட்டார்	=	ஆளப்பட்டவர்கள்
கொலை அஞ்சார்	=	கொலையினுக்கு அஞ்சார்கள்;
பொய் நாணார்	=	பொய் கூற நாணார்கள்;
மானமும் ஓம்பார்	=	தமது யோக்கியதையைக் காவார்கள்;
களவு ஒன்றோ	=	களவு மாத்திரமோ
ஏனையவும்	=	மற்றும் அறமல்லனவற்றையும்

செய்வார்	=	செய்வார்கள்;
இஃது	=	இக் காமமே
பழியொடு பாவம்	=	(இவ்வாறு) பழிக்கும் பாவத்திற்கும் காரணம்
என்னார்	=	என்று சொல்லவு மாட்டார்; (ஆகையால் இவர்)
பிறிது	=	பின்னை
என் செய்யார்	=	என்னதான் செய்யார்?

[தேர்குத்துரை]

காமத்தா லாளப்படுபவர் எவ்வகைத் தீமைக்கும் உட்படுவார் என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'கோலை அஞ்சார்': கொலைக்கு அஞ்சார்.

2. 'பழி': பழிக்கப்படுவது பழி யென்னப்பட்ட தாகையால் அஃது வினையடிப் பகாப்பதப் பொருட்பெயர்.

3. 'இஃது': செய்யுள் நோக்கி விரித்தல் விகாரம் பெற்ற குறிப்பு வினைப்பெயர்.

4. 'காமங் கதுவப்பட்டார்': காமத்தாற் கதுவப்பட்டார்.

5. 'மற்று': அசைச்சொல்.

[திருக்குறள் அறத்துப்பால்-இல்லறவியல்-கரு-அதி.-பிறனில் விழையாமை-கரு-குறள்]

"பகைபாவ மச்சம் பழியென நான்கும்
இகவாவா மில்லிறப்பான் கண்."

பரி:—(இ-ள்) பிறன் இல்லாள்கண் நெறி கடந்து செல்வானிடத்துப் பகையும் பாவமும் அச்சமும் குடிப்பழியும் என்னும் இந் நான்கு குற்றமும் ஒருகாலும் நீங்காவாம்.

Those who are actuated by lust will not shrink from murder, and will not feel ashamed of falsehood and dis

honor. Is it only theft that they will indulge in? They will perpetrate all species of vice. What is there that those who maintain that lust is not sinful will hesitate to do?

[காமிகளுக்குக் கண்ணில்லை யெனல்.]

௮0. திருவினு நல்லாள் மனைக்கிழத்தி யேனும்
பிறர்மனைக்கே பீடழிந்து நிற்பர்—நறுவிய
வாயின வேனு முமிழ்ந்து கடுத்தின்னும்
தீய விலங்கிற் சிலர்.

[பதவுரை]

நறுவிய = இனியவைகள்
வாயின ஏனும் = வாயிடத்திருப்பன ஆயினும்,
உமிழ்ந்து = (அவற்றைக்) கக்கிவிட்டு(க்)
கடு தின்னும் = கசப்பானவைகளைத் தின்னும்
விலங்கின் = மிருகத்தினைப் போன்ற
சில தீயர் = சில தீயர்கள்
மனைக்கிழத்தி = தமது மனைவியர்
திருவினும் = இலக்குமியினும்
நல்லாள் ஏனும் = சிறந்தவராயினும்
பிறர் மனைக்கே = பிறர் மனைவியரிடத்திலேயே
பீடு அழிந்து = பெருமை கெட்டு
நிற்பர் = நிற்பார்.

[தொகுத்துரை]

தீயர்களாகிய சிலர், இலக்குமி போன்ற தம் மனைவியரையும் வெறுத்துப் பிறர் மனைவியரையே நாடுவார் என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'கிழத்தி': கிழமையை யுடையவள். "வினையுருபுகள்": 1, 18, காண்க.

2. 'நறுவிய': நறுவென்னும் பகுதியடியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம்; இ-சாரியை.

3. 'வாயின': குறிப்பு வினைமுற்று.

4. 'விலங்கில்': ஐந்தாம் வேற்றுமை ஒப்புப் பொருள்.

5. 'பிறர் மனை' என்புழி 'மனை' என்பது இடவாகு பெயராய் நின்றது.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-அறத்துப்பால்-இல்லறவியல்-கரு-அதி.-
பிறனில் விழையாமை-ரு-குறள்]

"எளிதென வில்லிறப்பா னெய்துமெய் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி."

பரி:—(இ-ள்) எய்துதல் எளிதென்று கருதிப் பின் விளைவு கருதாது பிறனில்லின்கண் இறப்பான் மாய்தலின்றி எஞ்ஞான்றும் நிலைநிற்குங் குடிப்பழியினை யெய்தும், எ-று.

Though the wife of their homes be more beautiful and virtuous than the goddess of beauty herself, some persons will always long for another's wife; and thus stain their honor, like the foolish animals which spit out the sweet things in their mouth to eat bitter ones.

[கற்புடையாளே பொற்புடையா ளெனல்.]

அக. கற்புடுத் தன்பு முடித்துநாண் மெய்ப்பூசி
நற்குண நற்செய்கை பூண்டாட்கு—மக்கட்பே
றென்பதோர் செல்வமு முண்டாயின் இல்லன்றே
கொண்டாற்குச் செய்தவம் வேறு.

[பதவுரை]

கற்பு உடுத்து = கற்பாகிய ஆடையை யுடுத்து,

அன்பு முடித்து = அன்பென்னு மலரை முடித்து,
நாண் மெய் பூசி = நாணமாகிய சந்தனத்தை உடம்பில் பூசி,
நல் குணம்நல் செய்கை = நற்குண நற்செய்கை முதலிய
பூண்டாட்கு = (நல்லறங்களாகிய ஆபரணங்களை யணிந்த) மனையாளுக்கு.
மக்கள் பேறு என்பது = மக்கட் பேறு எனப்படுவதாகிய
ஓர் செல்வமும் = ஒப்பற்ற செல்வமும்
உண்டாயின் = உண்டாயிருந்தால்
கொண்டாற்கு = அவளது நாயகன்தான்
செய் தவம் வேறு = பிற செல்வம் அடையவேண்டிப் பின் தவஞ் செய்ய வேண்டியதில்லை.

[தோகுத்துரை]

கற்புமுதலிய நன்மைகளையுடைய மனைவியானவள் புத்திரப் பேற்றையு முடையவளானால் அவள் கணவனுக்கு வேறு பாக்கியம் வேண்டியதில்லை.

[விருத்தியுரை]

1. ‘மெய்ப்பூசி’: மெய்யிற் பூசி.
2. ‘பூண்டாள்’: வினையாலணையும் பெயர்.
3. ‘ஓர்’: ஒப்பற்ற.
4. ‘உண்டாயின்’: செய்-5, (வி-ரை) இல-14, காண்க.
5. ‘கோண்டார்க்கு’ என்பது ‘கொண்டானுக்கு’ என்பதன் உகரச்சாரியை தொக நின்றது.

A person whose wife is robed with chastity, decked with the flowers of affection, perfumed with female modesty, ornamented with domestic virtues, and also blest with the wealth of child-bearing, need not wish for anything more.

[கற்பிலாள் கணவனை வஞ்சிப்பாளெனல்.]

அஉ. ஏந்தெழின் மிக்கா னிளையா னிசைவல்லான்
காந்தையர் கண்கவர் நோக்கத்தான்—வாய்ந்த
நயனுடை யின்சொல்லான் கேளெனினு மாதர்க்
கயலார்மே லாகு மனம்.

[பதவுரை]

கேள்	=	தம் கணவன்
ஏந்து எழில் மிக்கான்	=	பொருந்திய அழகில் மிக்கவனும்,
இளையான்	=	இளமைப் பருவத்தினனும்,
இசை வல்லான்	=	சங்கீத வல்லபனும்,
காந்தையர்	=	ஸ்திரீகளுடைய
கண் கவர்	=	கண்களைக் கவருகின்ற
நோக்கத்தான்	=	பார்வையினை யுடையவனும்,
வாய்ந்த	=	வாய்ந்த அமைந்த
நயன் உடை	=	நன்மைகளையுடைய
இன் சொல்லான் ஆயினும்	=	இனிய சொற்களையுடையவனுமாயினும்
மாதர்க்கு	=	(கற்பிலா) மாதர்க்கோ
அயலார் மேல்	=	அன்னிய புருடரிடத்திலேயே
மனம் ஆகும்	=	மனஞ் செல்லும்.

[தொகுத்துரை]

மாதர்: தம் நாயகர் எவ்வகைச் சிறப்பினையுடையரேனும் பிற நாயகரையே பெரும்பான்மை நாடுவர்.

[விருத்தியுரை]

1. 'ஏந்துதல்': பொருந்துதல்.

2. 'மிக்கான்': 'மிக்கவன்': என்பன ஒரு பொருண் மொழி.

3. 'இசை வல்லான்': இசையில் வல்லான்.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால்-அங்கவியல்-கூஉ-அதி.-வரைவின் மகளிர்-க-குறள்]

" அன்பின் விழையார் பொருள்விழையு மாய்தொடியார்
இன்சொ லிழுக்குத் தரும்."

பரி:—(இ-ள்) ஒருவனை அன்புபற்றி விழையாது பொருள் பற்றி விழையும் மகளிர் அது கையுறுந் துணையும் தாம் அன்பு பற்றி விழைந்தாராகச் சொல்லும் இனிய சொல் அவனுக்குப் பின் இன்னுமையைப் பயக்கும், எ-று.

Though the husband be conspicuous for beauty and musical accomplishments, though he may have glances fascinating the looks of women, and though he may be kind and tender in his words, a harlot will always love others.

---

* [அக-ம் செய்யுளில் விடுபட்டுப்போன உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-அறத்துப்பால்-இல்லறவியல்-சு-அதி.-வாழ்க்கைத் துணைநலம்-கo-குறள்]

" மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கல நன்மக்கட் பேறு."

பரி:—(இ-ள்) ஒருவற்கு நன்மை யென்று சொல்லுவர் அறிந்தோர் மனையாளது நற்குண நற்செய்கைகளை; அவை தமக்கு நல்ல அணிகலமென்று சொல்லுவர் நல்ல புதல்வரைப் பெறுதலை, எ-று.

[திருக்குறள்-அறத்துப்பால்-இல்லறவியல்-சு-அதி.-வாழ்க்கைத் துணைநலம்-சு-குறள்]

" பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மை யுண்டாகப் பெறின்."

12

பரி :—(இ-ள்) ஒருவனெய்தும் பொருள்களுள் இல்லாளின் மேம்பட்ட பொருள்கள் யாவை யுள ? அவள் மாட்டுக் கற்பென்னுங் கலங்கா நிலைமை யுண்டாகப் பெறின், எ-று.

[திருக்குறள்-அறத்துப்பால்-இல்லறவியல்-எ-அதி.-
புதல்வரைப் பெறுதல்-க-குறள்]

" பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற."

பரி :—(இ-ள்) ஒருவன் பெறும் பேறுகளுள் அறியவேண்டுவன அறிதற்குரிய மக்களைப் பெறுதல் அல்லது பிற பேறுகளை யாம் மதிப்பதில்லை, எ-று.

* இந்த மூன்றும் உதாரண மேற்கோள் ; இவற்றை அக-ம் செய்யுளின் கீழ்ச் சேர்த்து வாசிக்கவும்.

[கற்பிலாக் குலமகளின் விலைமகளே ஏற்ற மெனல்.]

அஈ. கற்பின் மகளி னலம்விற் றுணவுகொளும்
பொற்றொடி நல்லார் நனிநல்லர்—மற்றுத்தங்
கேள்வர்க்கு மேதிலர்க்குந் தங்கட்குந் தங்கிளைஞர்
யாவர்க்குங் கேடுசூ ழார்.

[பதவுரை]

தம் கேள்வர்க்கும்	=	தமது நாயகர்க்கும்
ஏதிலர்க்கும்	=	தமது அயலார்க்கும்,
தங்கட்கும்	=	தங்களுக்கும்
தம் கிளைஞர் யாவர்க்கும்	=	தமது சுற்றத்தாரனைவர்க்கும்
கேடு சூழார்	=	கேடு வருவியார் ;
		(ஆதலின்)
கற்பு இல் மகளின்	=	கற்பில்லாத பெண்களினும்

நலம் விற்று	=	தமது அழகைப் பலர்க்கும் விற்று
உணவு கொள்ளும்	=	(அதனால்) தம்மைப் போஷிப்பிக்கும்
பொன் தொடி	=	பொன் வளைய லணிந்த
நல்லார்	=	பொதுப் பெண்களே
நனி நல்லர்	=	மிகவு முத்தமராவர்.

[தோகுத்துரை]

கற்பில் மகளிர் யாவர்க்குங் கேடு தருவிப்பார்; பொது மகளிரோ அவ்வாறு செய்யார். ஆதலின், இவரினு மவர் நல்லவர் என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'கற்பின் மகள்': கற்பில் மகள்.
2. 'பொற்றொடி': அன்மொழித் தொகை.
3. 'நல்லார்'-பெண்கள்.
4. 'நனி': உரிச்சொல்.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-அறத்துப்பால்-இல்லறவியல்-கூ-அதி.-
வாழ்க்கைத் துணைநலம்-கூ-குறள்]

"புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்
ஏறுபோற் பீடு நடை."

பரி:—(இ-ள்) புகழை விரும்பிய இல்லாளை இல்லாதார்க்குத் தம்மை யிகழ்ந்துரைக்கும் பகைவர் முன் சிங்க ஏறுபோல் நடக்கும் பெருமிதநடை யில்லை, எ-று.

[திருக்குறள்-பொருட்பால்-ஒழிபியல்-கOஅ-அதி.-
கயமை-கO-குறள்]

"எற்றிற் குரியர் கயவரொன் றுற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து."

பரி:—(இ-ள்) கயவர் தம்மை யாதானுமொரு துன்பமுற்றக் கால் அதுவே பற்றுக்கோடாக விரைந்து தம்மைப் பிறர்க்கு விற் றற் குரியர்; அதுவன்றி வேறெத்தொழிற் குரியர்? எ-று.

Whores who live by selling their youthful charms are better than an unchaste wife, for they do not bring disgrace on their husband, and relatives, and themselves, and others, as the latter does.

[கற்பிலாப் பெண்டிர் பெரும்பாவிக ளெனல்.]

அச. முறையுங் குடிமையும் பான்மையு நோக்கார்
நிறையு நெடுநாணும் பேணார்—பிறிதுமொரு
பெற்றிமை பேதைமைக் குண்டே பெரும்பாவங்
கற்பின் மகளிர் பிறப்பு.

[பதவுரை]

முறையும்	=	தமக்கும் பிறர்க்கு முரிய உறவையும்,
குடிமையும்	=	தமது குலத்துக்குரிய ஒழுக்கத்தையும்,
பான்மையும்	=	தமக்கும் பிறர்க்கு முள்ள தகுதியையும்
நோக்கார்	=	கவனியார்;
நிறையும்	=	தமக்குரிய நிறையினையும் (மனம் அன்னியர்பால் செல்லாமல்) நிறுத்தும் குணத்தையும்
நெடு நாணும்	=	மிக்க நாணத்தினையும்
பேணார்	=	பாதுகாவார்;
பேதைமைக்கு	=	பேதைமையே யென்று சொல்லப்படும் பெண்களுக்கு

பிறிது ஒரு பெற்றிமையும்	=	இனி மேன்மையும் (வேறொரு நன்மையும்)
உண்டே	=	வேண்டுமோ? (ஆதலால்)
கற்பு இல் மகளிர்	=	கற்பில்லாத மகளிரது
பிறப்பு	=	பிறப்பெனப்படுவது
பெரும் பாவம்	=	பெரும்பாவத்தினது உருவேயாம்

[தோகுத்துரை]

கற்பில்லாத மகளிர்: முறை முதலிய ஓம்பாராதலால் அவர், பாவமே தம் உருவமாய்க் கொண்டனர் போலும் என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'பிறிதும்': முற்றும்மை.

2. 'பெற்றிமை' என்புழி, 'மை' விகுதி விகுதிமேல் விகுதியாய் நின்றது. 'பெற்றி' என்பது 'தன்மை'; பெறப்பட்டன 'பெற்றி' ஆதலால், இஃது வினையடிப் பகுபதப் பொருட்பெயர்.

3. 'பிறப்பு', 'பாவம்' என்பன அவ்வவற்றாலாய வுருவத்தை யுணர்த்தினமையா லிவற்றுள் முன்னது வினையடிப் பகுபதப் பொருட்பெயர், பின்னையது காரண ஆகுபெயர்.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால்-அங்கவியல்-கூஉ-அதி.-
வரைவின் மகளிர்-ங-குறள்]

"பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்க மிருட்டறையில்
ஏதில் பிணந்தழீஇ யற்று."

பரி:—(இ-ள்) கொடுப்பாரை விரும்பாது பொருளையே விரும்பும் பொதுமகளிரது பொய்ம்மையையுடைய முயக்கம், பிணமெடுப்பார் இருட்டறைக்கண்ணே முன்னறியாத பிணத்தைத் தழுவினாற் போலும், எ-று.

To be born an unchaste wife is a great sin. Such foolish women regard not virtue; heed not the greatness

of their birth and worth; preserve not chastity; and feel not shame; and in fact have nothing good in them.

[துறவிகள் பெண்களை வெறுப்பா ரெனல்.]

அரு பெண்மை வியவார்; பெயரு மெடுத்தோதார்;
கண்ணொடு நெஞ்சுறைப்ப நோக்குறார்;—பண்ணொடு
பாடல் செவிமடார்; பண்பல்ல பாராட்டார்;
வீடில் புலப்பகையி னார்.

[பதவுரை]

வீடு இல் புலம் பகையினார்	=	எக்காலத்தும் தம் புலன்களுக்குப் பகைஞரா யிருப்பவர்:
பெண்மை வியவார்	=	பெண் தன்மையை விரும்பார்;
பெயரும்	=	பெண்ணென்னும் பெயரையும்
எடுத்து ஓதார்	=	எடுத்துப் பேசார்;
நெஞ்சு உறைப்ப	=	தம் மனத்திற் படும்படியாய்(க்)
கண்ணொடு நோக்குறார்	=	கண்களால் அவரைப் பாரார்;
பண்ணொடு பாடல்	=	அவர்கள் இசையுடன் பாடுதலுக்குச்
செவி மடார்	=	செவி கொடார்;
பண்பு அல்ல	=	குணமற்றவையாகிய இவ்வகை மாய்கைகளை(க்)
பாராட்டார்	=	கொண்டாடியும் பேசார்.

[தேர்குத்துரை]

துறந்தோர்: எவ்வகையானும் பெண்ணலத்தை யிச்சித்தலுக்கு விரோதமாயிருப்பர் என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'வீடு' என்பது இவ்விடத்து 'நீங்குதல்' என்னும் பொருட்டு.

2. 'கண்ணோடு' என மூன்றும் வேற்றுமை யுருபுகளுள் 'ஆல்' உருபு நிற்றற்குரிய விடத்து 'ஒடு' உருபு வந்தது.

3. 'நோக்கு உறர்': நோக்குதலை யுறார்.

4. 'மடார்': மடுத்தல் - உட்கொள்ளல்.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-அறத்துப்பால்-துறவறவியல்-உக-அதி.-கள்ளாமை-எ-குறள்]

"களவென்னுங் காரறி வாண்மை யளவென்னும்
ஆற்றல் புரிந்தார்க ணில்."

பரி:—(இ-ள்) களவென்று சொல்லப்படுகின்ற இருண்ட அறிவினை யுடையாதல் உயிர்முதலியவற்றை அளத்தலென்னும் பெருமையை விரும்பினார்கண் இல்லை, எ-று.

The sages who have, with incessant care, subdued the senses will not admire female beauty, will not even utter the word 'woman,' will not cast lascivious eyes with a lustful heart, will not hear their songs, and in fact will avoid whatever is improper.

[பெரியோர் நித்திரைசுக முதலியவற்றை இச்சியா ரெனல்.]

அசு. துயிற்சுவையும், தூநல்லார் தோட்சுவையும், எல்லாம்
அயிற்சுவையி னாகுவவென் றெண்ணி—அயிற்சுவையும்
பித்துணக் கோள்பபோற் கோள்ப, பிறர்சிலர்போல்
மொத்துண மொய்ம்பி னவர்.

[பதவுரை]

பிறர் சிலர் போல் = { தம்மைப்போலிருக்கும் இன்னுஞ் சிலரைப்போல

மொத்துண்ணுத	=	இன்னும் பிறவித் துன்பத்தா லடிபடுதலை வேண்டாத
மொய்ம்பினவர்	=	தவ வலிமையை யுடையோர்:
துயில் சுவையும்	=	நித்திரை யின்பத்தையும்,
தூ நல்லார்	=	அழகிய மாதரது
தோள் சுவையும்	=	தோளைத் தழுவு மின்பத்தையும்,
எல்லாம்	=	மற்ற யாவும்
அயில் சுவையின்	=	உணவைப் பெரிதுங் கொள்ளு வதினாலே
ஆகுவ என்று எண்ணி	=	விரும்பவேண்டி வருமென்று கருதி
அயில் சுவையும்	=	அவ்வுணவைக் கொள்ளுதலையும்
பித்து உணு கொள்ப போல்	=	பித்தன் உணவு கொள்வது போல
கொள்ப	=	மிகச் சிறிதே அநுபவிப்பார்கள்.

[தோகுத்துரை]

துயிற்சுவைவிரும்பல் முதலியவற்றிற்குக் காரணம் தம் சரீர புஷ்டியேயென்று எண்ணித், தம் பிறப்பை நீக்கத்தக்க தவ வலிமை யுடையோர், தம் உணவையுங் குறைப்பர் என்பதாம்.

[விருத்தியுரை]

1. '**துயில்**': வினையடிப் பகாப்பத வினைப்பெயர்.

2. முன்னைய மூன்று '**சுவை**'யும் ஆகுபெயராய் அவ்வச் சுவையின் விருப்பத்தையும், பின்னைய இரண்டுள் முதலாவது ஆகு பெயரேயாய்ச் சுவையின் நலத்தையும், இரண்டாவது அச் சுவைத் தொழிலையு முணர்த்தின.

3, '**பித்து**': ஆகுபெயராய்ப் பித்தை யுடையவனை யுணர்த் திற்று.

4. '**உணு**': வினையடிப் பகுபதப் பொருட் பெயர்.

5. '**கொள்ப**': இரண்டு 'கொள்ப'வுள்ளும் முதலது வினை யடிப் பகுபத வினைப்பெயர் ; பின்னையது வினைமுற்று.

6. 'மொத்துண' : 'மொத்துதலை யுண்ணுத' என்பது 'மொத்துண' என நின்றது ; இவ்விடத்து உண்ணுதல் - பொருந் தல்.

7. 'மொய்ம்பின்' : இன் - சாரியை.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால்-அரசியல்-சஉ-அதி.-கேள்வி-உ-குறள்]

"செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும்."

பரி :—(இ-ள்) செவிக்குணவாகிய கேள்வி யில்லாதபொழுது வயிற்றுக்குஞ் சிறிதுணவு இடப்படும், எ-று.

Those who have freed themselves from the evils incident to birth, in which others are involved, by the power of penance, will not indulge in excessive eating, because they know that sleep and sexual desire result from luxurious eating. Like an insane man they will eat little.

[ஞானிகள் தம் ஊன உடலை மதியார் எனல்.]

அஎ. அன்போ டருளுடைய ரேனு முயிர்நிலைமற்
றென்பியக்கங் கண்டேம் புறந்தரார்—புன்புலாற்
போய்க்குடி லோம்புவரோ போதத்தாற் றம்வேய்ந்த
புக்கில் குடிபுகுது வார்.

[பதவுரை]

போதத்தால்	=	ஞானத்தால்
வேய்ந்த புக்கில்	=	வேயப்பட்ட வீட்டினில்

குடி புகுதுவார்	=	குடிபுகக் கருதுபவர்கள் :
புன் புலால்	=	அற்பதசையினால் வேய்ந்த
பொய்க்குடில்	=	பொய்யுடம்பாகிய குடிலை(ப்)
ஓம்புவரோ	=	பாதுகாப்பரோ ? (ஆதலால், இவர்)
அன்பொடு	=	அன்புடனே
அருள் உடையர் எனும்	=	அருளையு முடையராயினும்
உயிர் நிலை	=	உயிர் நிலையாகிய உடம்பு (உண வில்லாமையினால் இளைக்க)
என்பு இயக்கம் கண்டும்	=	(அதனால் அவற்றின்) எலும்புகள் இயங்குவதைக் கண்டாலும்
புறந்தரார்	=	பாதுகாவர்.

[தேர்ந்தவுரை]

ஞானவீட்டை யடைய விரும்புபவர் தமது பொய்க் குடிலாகிய உடம்பைப் பாதுகாத்தலைப்பற்றிச் சிந்தியார் என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'நிலை': வினையடிப் பகுபதப் பொருட்பெயர்.
2. 'இயக்கம்': செய்-53, (வி-ரை) இல-1, காண்க.
3. 'புறந்தரார்': தொடர்மொழி வினைமுற்று.
4. 'புக்கில்': புகு + அகம் = "புக்ககம்" என நின்றாற் புக்கு + இல் = 'புக்கில்' என நின்றது.
5. 'புகுதுவார்': து-சாரியை.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-அறத்துப்பால்-துறவறவியல்-ருசு-அதி.-நிலையாமை-க௦-குறள்]

"புக்கி லமைந்தின்று கொல்லோ வுடம்பினுட்
டுச்சி லிருந்த வுயிர்க்கு."

பரி:—(இ-ள்) வாதமுதலியவற்றின் இல்லாய உடம்புகளுள் ஒதுக்கிருந்தே போந்த உயிர்க்கு எஞ்ஞான்றும் இருப்பதோரில் இதுகாறும் அமைந்ததில்லை போலும், எ-று.

Ascetics will not shrink from seeing their bodies become lean and emaciated, although they are benevolent and merciful. Will they who have to enter a celestial abode, reared up by wisdom, deign to cherish this false tenement of clay, rank with corrupt flesh ?

[ஞானிகள் சிற்றின்பத்தைப் பொருட்படுத்தார் என்னல்.]

அஅ. சிற்றின்பஞ் சின்னீர தாயினு மஃதுற்றார்
மற்றின்பம் யாவையுங் கைவிடுப—முற்றுந்தாம்
பேரின்ப மாக்கட லாடுவோர் வீழ்பவோ
பாரின்பப் பாழ்ங்கும்பி யில்.

[பதவுரை]

சிறு இன்பம்	=	சிற்றின்பமானது
சில் நீரது ஆயினும்	=	அற்பத்தன்மையை யுடைய தாயினும்
அஃது உற்றார்	=	அதனை யடைந்தவர்கள்
மற்று இன்பம் யாவையும்	=	மற்ற இன்பங்களை யெல்லாம்
கை விடுப	=	கைவிடுவார்கள்;
பேர் இன்பம்	=	பேரின்ப மென்னும்
மா கடல்	=	பெரிய சமுத்திரத்தில்
ஆடுவார்	=	முழுவதும் ஆடுகிற ஞானிகள்
பார் இன்பம்	=	உலக இன்பமாகிய
பாழ் கும்பியில்	=	பாழ் நரகத்தில்
வீழ்பவோ	=	விழுவார்களோ?

[தேர்குத்துரை]

சிற்றின்பத்தில் விழுபவர்கள் மற்றெல்லாவற்றையும் கைவிடுவர்; பேரின்ப நாடுவோர் சிற்றின்ப நாடார் என்பதாம்.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-அறத்துப்பால்-இல்லறவியல்-கஅ-அதி.-வெஃகாமை-ந-குறள்]

" சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்."

பரி :—(இ-ள்) *பிறர்பால் வெளவிய பொருளால் தாம் எய்தும் நிலையில்லாத இன்பத்தை விரும்பி அவர்மாட்டு அறனல்லாத செயல்களைச் செய்யார், அறத்தான் வரும் நிலையுடைய இன்பத்தைக் காதலிப்பவர்.*

[திருக்குறள்-அறத்துப்பால்-துறவறவியல்-உஎ-அதி.-அவாவறுத்தல்-ரு-குறள்]

" அற்றவ ரென்பா ரவாவற்றார் மற்றையார்
அற்றாக வற்ற திலர்."

பரி :—(இ-ள்) *பிறவி அற்றவரென்று சொல்லப்படுவார் அதற்கு நேரே ஏதுவாகிய அவா அற்றவர்கள்; பிற ஏதுக்களற்று, அஃதொன்றும் அறாதவர்கள், அவற்றால் சில துன்பங்களற்றதல்லது, அவர்போற் பிறவி அற்றிலர், எ-று.*

Those who indulge in the enjoyment of sensual pleasures frivolous though they be, will relinquish all other delights for the sake of these pleasures. Will they who have bathed in the great ocean of supernal bliss fall into the internal pit of secular pleasure.?

[ஞானிகளுக்குப் பெண்ணாசை கூடாதெனல்.]

அகூ. எவ்வினைய ரேனு மிணைவிழைச்சொன் றில்லெனின்
தெவ்வுந் திசைநோக்கிக் கைதொழூஉம்—அவ்வினை
காத்த லிலரே லெனைத்துணைய ராயினும்
தூர்த்தருந் தூர்ப்பா ரலர்.

[பதவுரை]

எவ்வினையர் எனும்	=	(ஞானிகள்) பிற எவ்வாற்றானுந் தீய செய்கைகளைச் செய்யினும்
இணை விழைச்சு	=	(அவர்களிடத்து) ஸ்திரீபோகமென்பது
ஒன்று இல் எனின்	=	ஒரு தீத்தொழில் இல்லாதாயின்
தெவ்வும்	=	பகைஞரும்
திசை நோக்கி	=	(அவருக்குத்) திக்கு நோக்கி(த்)
கை தொழும்	=	தெண்டஞ் செய்வர்; (ஆயினும்),
எனைத்துணையர் ஆயினும்	=	அவர் எத்தனை அறச் செய்கையுடையாராயினும்
அவ்வினை	=	அப்போகத்தின் நின்று
காத்தல் இலரேல்	=	தம்மைப் பாதுகாவாராயின்
தூர்த்தரும்	=	ஸ்திரி போகத்திலேயே முயல்கின்ற காமுகரும்
அலர் தூர்ப்பார்	=	அவரைப்பற்றிப் பழிமொழி பேசுவர்.

[தொகுத்துரை]

இணை விழைச்சு இல்லாத துறவிகளே பெரியோர் எனக் கூறப்படுவர் என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'இனை விழைச்சு': "வினையுருபுகள்": 9 காண்க.
2. 'தெவ்வு': ஆகுபெயராய் நின்ற பால்பகா அஃறிணைப் பெயர்.
3. 'கைதொழூஉம்': செய்-19, (வி-ரை) இல-13, காண்க.
4. 'இலரேல்': ,, 5, ,, ,, 14 ,, .
5. 'அலர்'- பழிமொழி.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-அறத்துப்பால்-இல்லறவியல்-கரு-அதி.-பிறனில்-விழையாமை-சு-குறள்]

"எனைத்துணைய ராயினு மென்னாந் தினைத்துணையுந்
தேரான் பிறனில் புகல்."

பரி:—(இ-ள்) எத்துணைப் பெருமை யுடையராயினும் ஒருவர்க்கு யாதாய் முடியும், காம மயக்கத்தாற் றினையளவுந் தம் பிழையை யோராது பிறனுடைய இல்லின்கட் புகுதல், எ-று.

[திருக்குறள்-அறத்துப்பால்-இல்லறவியல்-கரு-அதி.-பிறனில்-விழையாமை-க0-குறள்]

"அறன்வரையா னல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று."

பரி:—(இ-ள்) ஒருவன் அறத்தைத் தனக்கு உரித்தாகச் செய்யாது பாவங்களைச் செய்யுமாயினும், அவனுக்குப் பிறனெல்லைக்கண்ணிற்பாளது பெண் தன்மையை விரும்பாமை உண்டாயின் அது நன்று, எ-று.

Howsoever those who pretend to have renounced the world may act, should they be only pure, even their foes will adore them with up-lifted hands. Should they fail to cherish this virtue, howsoever conspicuous they may

otherwise be, even sensulatists will venture to reproach them.

[அறன்வழி நில்லார் பிறப்பரு ரெனல்.]

கூ0. பரபரப்பி னேடே பலபல செய்தாங்
கிரவுபகல் பாழுக் கிறைப்ப—ஒருவாற்ருன்
நல்லாற்றி னூக்கிற் பதறிக் குலேகுலேப
எவ்வாற்ரு னுய்வா ரிவர்?

[பதவுரை]

பல பல	=	தீயன பலவற்றையும் (பெரும்பான்மை மனிதர் யாவரும்)
பரபரப்பினேடே	=	விரைவுடனே
செய்து	=	செய்து
இரவு பகல்	=	இரவையும், பகலேயும்
பாழுக்கு இறைப்ப	=	பாழுக்கு இறைப்பார்கள் (அவமாகிய காரியத்துக்குக் கழிப்பார்கள்);
ஒருவாற்ருன்	=	சிறுபொழுதாவது
நல் ஆற்றின்	=	(அவரை) நல்ல வழியில்
ஊக்கின்	=	ஒருவர் நிறுத்திஞலோ
பதறி	=	மெய் பதறி
குலே குலேப	=	நடுநடுங்குவார்கள்
இவர்	=	இவர்கள்
எவ்வாற்ருன் உய்வார்	=	வீடடைந்து உய்ந்துபோதலெப்படி?

[தோகுத்துரை]

பெரும்பான்மையோர் அறத்தின்வழி நிற்க இச்சியார் ஆதலின், அவர் பிறப்பினின்றுந் தப்புவது அரிது என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'பாபரப்பு': குறிப்பிசைப் பெயர்ச்சொல்.

2. 'ஊக்கின்': செலுத்தின்.

3. 'துலைதுலைப' என்ற வினையெச்சத்துட் 'குலைகுலை' என்ற தனிவினைப்பெயரி னடுக்கு அவ் வினையின் மிகுதியை யுணர்த்திற்று.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-அறத்துப்பால்-துறவறவியல்-உஎ-அதி.-தவம்-கூ-குறள்]

"தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லார்
அவஞ்செய்வா ராசையுட் பட்டு."

பரி:—(இ-ள்) தங்கருமஞ் செய்வாராவார் துறந்து தவத்தைச் செய்வார்; அவரை யொழிந்த பொருளின்பங்களைச் செய்வார் அவற்றின்கண் ஆசையாகிய வலையுட்பட்டுத் தமக்குக் கேடு செய்வார், எ-று.

Some there are who waste their days and nights in doing many things at once, with a rash haste. Should they be led into the right path by some means, they tremble with fear and are confounded. How can such escape the evils incident to birth?

[இளமையிலேயே தவ மியற்றவேண்டு மெனல்.]

கூக. இளைய முதுதவ மாற்றுது நோற்றேன்
றுளைவின்று கண்பாரே ழ்ழே—விளிவின்று
வாழ்நாள் வரம்புடைமை காண்பரேற் காண்பாரும்
தாழாமே நோற்பார் தவம்.

[பதவுரை]

விளிவு இன்று	=	சாவின்றி
வாழ் நாள்	=	வாழுகின்ற தமது ஆயுள்
வரம்பு உடைமை	=	எல்லையை உடைத்தாயிருப் பதை(க்)
காண்பரேல்	=	கண்டுகொள்ளின்
இளையம்	=	‘இவ்வேளை நாம் இளையோம்’
முதுமை	=	மேல் முதுமையில்
நோற்று	=	வருத்தப்பட்டு
தவம் ஆற்றுதும் என்று	=	தவஞ் செய்வோம்; என்று
உளைவு இன்று	=	வருந்தாமல்
கண்பாடும்	=	உறங்கிக் கிடப்பதும்
ஊழே	=	ஒருகால் முறைமையாகலாம்; (ஆனாலோ,)
காண்பாரும்		தமது வாழ்நாள் முடிவைக் காண்பாரும்
தாழாமே	=	கணப்போதாயினுந் தாமதியா மல்
தவம் நோற்பார்	=	தவ மியற்றுவார்.

[தேர்ந்துத்துறை]

தவத்தின் பெருக்கத்திற்குத் தக்கதா யதன் பயனும் அதிகமா மெனக் கருதித் தம் வாழ்நாளின் எல்லையை யறிந்தவரும் நோற்பா ராதலால், அதனை அறியாதவர் இக்கணமே தவமாற்ற முயல வேண்டும் என்பதாம்.

[விருத்தியுரை]

1. ‘ஆற்றுதும்’: “வினையுருபுகள்”: 19: 7, காண்க.

2. ‘கண்பாடு’: கண்படுதல், அதாவது கண் அதிகரித்தல்.

3. ‘காண்பரேல்’: செய்-அ-9, (வி-ரை) இல-4, காண்க.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-அறத்துப்பால்-துறவறவியல்-௩௪-அதி.-நிலையாமை-௩-குறள்]

"நெருந லுளனொருவன் இன்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு."

பரி:—(இ-ள்) ஒருவன் நெருந லுளனாயினன் அவனே இன்று இல்லை யாயினு னென்று சொல்லும் நிலையாமை மிகுதி யுடைத்து இவ் வுலகம், எ-று.

[திருக்குறள்-அறத்துப்பால்-துறவறவியல்-௩௪-அதி -நிலையாமை-க-குறள்]

"நில்லா தவற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை."

பரி:—(இ-ள்) நிலையுதல் இலவாகிய பொருள்களை நிலையு தல் உடையவென்று கருதுகின்ற புல்லிய அறிவினை யுடையாதல் துறந்தார்க்கு இழிபு, எ-று.

It may be proper in those who know the term of existence on earth allotted to them, to waste their youth in indolence, with the excuse that they may do acts of penance in old age. Even sages who know the limited duration of man's life, will perform religious austerities without delay.

[ஊழை வெல்ல ஒருவரானு மாகாதெனல்.]

௬௨. நல்லவை செய்யத் தொடங்கினு நோனுமே
அல்லன அல்லவற்றிற் கொண்டேய்க்கும்—எல்லி
வியனெறிச் செல்வாரை யாறலைத் துண்பார்
செலவு பிழைத்துய்ப்ப போல்.

[பதவுரை]

ஆறு அலைத்து	=	வழி பறித்து
உண்பார்	=	உண்ணும் வேடர்
எல்லி	=	இரவிலே
வியன்நெறி செல்வாரை	=	இராஜ வீதியிற் போகுகின்றவர்களை
செலவு பிழைத்து	=	அவ் வழியினின்றும் தப்பி அவர்கள் போகும்படி
உய்ப்ப போல்	=	அவர்களைச் செலுத்துவதுபோல,
நல்லவை	=	நற்கருமங்களை
செய்யத் தொடங்கினும்	=	(ஒருவர்) செய்ய ஆரம்பிக்கினும்
அல்லன	=	ஒருவனுடைய தீய ஊழ்கள்
நோனுமே	=	பொறுமல்
அல்லவற்றில்	=	தீய கருமங்களில்
கொண்டு	=	(அவனைத்) தம் வசப்படுத்தி
உய்க்கும்	=	செலுத்தும்.

[தோகுத்துரை]

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்." என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'நோனுமே': 'சகியாமல்,' 'பொறுமல்' என்பன ஒரு பொருண் மொழி.

2. 'எல்லி': ஏழாம் வேற்றுமைத் தொகை.

3. 'வியன்'-அகலம்.

4. 'பிழைத்து'-பிழைக்கப்பண்ணி.

5. 'செலவு'-செல்லுதல்.

6. 'உய்ப்ப': (பிற) வினையடிப் பகுபத வினைப்பெயர்.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-அறத்துப்பால்-துறவறவியல்-உஎ-அதி.-தவம்-உ-குறள்]

"தவமுந் தவமுடையார்க் காகு மவமதனை
யஃதிலார் மேற்கோள் வது."

பரி:—(இ-ள்) பயனையன்றித் தவந்தானும் உண்டாவது முற்றவ முடையார்க்கே; ஆகலான், அத் தவத்தை அம் முற்றவ மில்லாதார் முயல்வது பயனின் முயற்சியாம், எ-று.

[திருக்குறள்-அறத்துப்பால்-துறவறவியல்-௩அ-அதி-ஊழ்-க०-குறள்]

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்."

பரி:—(இ-ள்) தன்னை விலக்குதற் பொருட்டுத் தனக்கு மறுதலையாவதோ ருபாயத்தைச் சூழினும், தான் அவ் வுபாய மேயானும் பிறிதொன்றானும் வழியாக வந்து அச் சூழ்ச்சியின் முற்பட்டு நிற்கும். அதனால் ஊழ்போல மிக்க வலியுடையன யாவை யுள? எ-று.

Although a person begin to do acts of goodness, evil fate, envious of his prosperity, will lead him into evil ways; just as the robber at dead of night misleads the traveller on the highway into dangerous paths.

[வெளித்துறவினும் மனத்துறவே மான்புடைத் தெனல்.]

கூ௩. நெஞ்சு புறம்பாத் துறந்தார் தவப்போர்வை
கஞ்சுக மன்று பிறிதொன்றே—கஞ்சுகம்
எப்புலமுங் காவாமே மெய்ப்புலங் காக்குமற்
றிப்புலமுங் காவா திது.

[பதவுரை]

நெஞ்சு புறம்பு ஆக = தம்முடைய மனம் நீங்க

துறந்தார் = (வினைய தோற்றத்தால்) துறந்தவர்களுடைய

தவப் போர்வை = தவ (வேடமாகிய) போர்வை

கஞ்சுகம் அன்று = சட்டை போன்றதுதானு மல்ல;

பிறிது ஒன்றே = அது வேறொன்றே; (எனெனில்,)

கஞ்சுகம் = சட்டையானது

எப்புலமும் காவாமே = புலன்கள் ஐந்தினையும் ஒருங்கு காவாதபோதிலும்

மெய்ப்புலம் காக்கும் = மெய்யால் உணரப்படும் புலம் ஒன்றினையுமாவது காக்கும்;

இது (ஆனால்) இப் போர்வையோ

இப்புலமும் காவாது = இத்தொழிலையேனுஞ்செய்யாது.

[தொகுத்துரை]

மனத்தால் துறவாதாரது துறவு அவாது சட்டையளவு தானும் அவர்க்குப் பயன் படாது என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'புறம்பா': புறம்பு ஆக.

2. 'காவாமே': வினையெச்சம்.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-அறத்துப்பால்-துறவறவியல்-உஅ-அதி.-கூடா வொழுக்கம்-சு-குறள்]

"தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று."

பரி:—(இ-ள்) அவ் வலியி னிலைமையான் தவவேடத்தின் கண்ணே மறைந்து நின்று தவ மல்லவற்றைச் செய்தல் வேட்டு

வன் புதலின்கண்ணே மறைந்து நின்று புட்களைப் பிணித்தாற் போலும், எ-று.

The cloak of devotion worn by those, who have renounced the world externally, is somewhat different from a garment; for a garment though it guard not the other organs of senses, yet guards the body-the other guards not even this.

[வஞ்ச நெஞ்சர் கடவுளை அஞ்சவேண்டு மெனல்.]

கூச. வஞ்சித் தொழுகு மதியிலிகாள்! யாவரையும்
வஞ்சித்தோ மென்று மகிழன்மின்!—வஞ்சித்த
எங்கு முளனொருவன் காணுங்கொ லென்றஞ்சி
அங்கங் குலைவ தறிவு.

[பதவுரை]

வஞ்சித்து	=	(வேஷத்தால்) வஞ்சித்து
ஒழுகும்	=	நடக்கின்ற
மதியிலிகாள்	=	மதியீனர்களே!
யாவரையும்	=	' சகலரையும்
வஞ்சித்தோம் என்று	=	வஞ்சித்துவிட்டோம், என்று
மகிழன்மின்	=	(நீவிர்) மகிழவேண்டாம்;
வஞ்சித்த	=	உமது வஞ்சித்தலை
எங்கும் உளன் ஒருவன்	=	எங்கும் உள்ளவனாகிய ஒருவன்
காணும் என்று அஞ்சி	=	காணுகிறானென்று பயந்து
அங்கம் குலைவது	=	(உமது) மெய் பதறுவதே
அறிவு	=	(உங்களுக்கு) அறிவாகும்.

[தொகுத்துரை]

வஞ்சனை யாவுங் கடவுளா லறியப்படும் என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'மதியிலிகள்': என்பது எட்டாம் வேற்றுமைக்கண் 'மதியிலிகாள்' என நின்றது. "அவர்கள்" என்புழிப்போலக் 'கள்' விகுதி, விகுதிமேல் விகுதியாய் வரப்பெற்றது.

2. 'மகிழன்மின்': "வினையுருபுகள்": 19-11, காண்க.

3. 'வஞ்சித்த': வினையடிப் பகுபத வினைப்பெயர்.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-அறத்துப்பால்-துறவறவியல்-உஅ-அதி.-கூடா வொழுக்கம்-க-குறள்]

"வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்க
ளைந்து மகத்தே நகும்."

பரி:—(இ-ள்) வஞ்சம் பொருந்திய மனத்தை யுடையவனது மறைந்த வொழுக்கத்தை, உடம்பாய் அவனோடு கலந்து நிற்கின்ற பூதங் களைந்துங் கண்டு, தம்முள்ளே நகும், எ-று.

Ye fond men who indulge in the ways of fraud, rejoice not at the success of your guile. Wisdom consists in trembling with horror at the thought that their is one above, who watches over you wherever you may practise your deceit.*

---

* This is the general interpretation. But what is given in Tamil is my own.

[மறைவிற் கூறிய பழிமொழி விரைவில் வெளியா மெனல்.]

கூரு. மறைவழிப் பட்ட பழிமொழி தெய்வம்
பறையறைந்தாங் கோடிப் பரக்கும்—கழிமுடைப்
புண்புலா ணுற்றம் புறம்பொதிந்து மூடினும்
சென்றுதைக்குஞ் சேயார் முகத்து.

[பதவுரை]

புறம் பொதிந்து	=	*புறத்திற் பொதிந்து*
மூடினும்	=	*மூடி வைப்பினும்*
கழி முடை	=	*மிகுந்த துர்க்கந்தத்தினையுடைய*
புல் புலால் நாற்றம்	=	*அற்ப புலால் நாற்றமானது*
சேயார் முகத்து	=	*தூரமாயிருப்பவருடைய முகத்திலும்*
சென்று தைக்கும்	=	*போய் நாறும்;*
		(அதுபோலவே),
மறை வழிப்பட்ட	=	*மறைவிடத்திற் கூறிய*
பழி மொழி	=	*பழிமொழியும்*
தெய்வம்	=	*கடவுள்*
பறை அறைந்தது ஆங்கு	=	*பறை யறைந்ததென்ன*
ஓடி பரக்கும்	=	*ஓடி வெளிவரும்.*

[தோகுத்துரை]

பழிமொழி நெடுங்கால மறைக்கப்பட்டிராது என்பதாம்.

[விருத்தியுரை]

1. ‘பட்ட’- கூறப்பட்ட.

2. ‘பழி மொழி’- *அகாரணமாய்க் கூறப்படும் நிந்தனை மொழி.*

3. ‘பறையறைந் தாங்கு’: *பறை யறைந்தது ஆங்கு.*

4. ‘சென்று உதைக்கும்.’

[உதாரண. மேற்கோள்]

[திருக்குறள்-அறத்துப்பால்-இல்லறவியல்-அடக்கமுடைமை-
௧௩-அதி.-எ-குறள்]

"யாகாவா ராயினு நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு."

பரி:—(இ-ள்) *தம்மாற் காக்கப்படுவன எல்லாவற்றையுங் காக்கமாட்டாராயினும் நாவொன்றனையுங் காக்க; அதனைக் காவா ராயின் சொற்குற்றத்தின்கட் பட்டுத் தாமே துன்புறுவர், எ-று.*

Slanderous words uttered in secret will spread abroad, as if the Almighty were trumpeting them forth. The noxious stench of putrid flesh, although closely covered up, will affect the senses of distant persons.

[*நிலை திரியின் மெலியாரினும் வலியாரே வருந்தி யழிவரெனல்.*]

௬௬. மெலியார் விழினு மொருவாற்று னுய்ப
வலியார்மற் றென்று முய்யார்—நிலைதப
நொய்ய சழக்கென வீழாவாம் வீழினும்
உய்யுமா லுய்யா பிற.

[பதவுரை]

நொய்ய	=	*கனமற்றவை*
நிலை தப	=	*நிலை தவறி*
சழக்கு என வீழா	=	*விரைவாய் விழமாட்டா;*
வீழினும்	=	*(அன்றேல்) வீழ்ந்தாலும்*
உய்யும்	=	*கேட்டை யடையா;*
பிற உய்யா	=	*(ஆனால்) வலிய பொருளோ தப்புவது அரிது; (அதுபோல),*

மெலியார்	=	சிறியவர்கள்
விழினும்	=	தம்முடைய நிலையினின்றும் தவறி விழினும்
ஒருவாற்றான் உய்ப	=	ஒருகால் உய்வார்கள்;
வலியார்	=	பெரியவர்களோ
ஒன்றானும் உய்யார்	=	அவ்வாறு தவறி விழின் உய்வது அரிது.

[தோகுத்துரை]

தந்நிலை கெடவேண்டி வந்த காலத்துச், சிறியோர் தப்பினாலும், பெரியோர் தப்புவது அரிது என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'மற்று,' 'ஆம்,' 'ஆல்,': அசைச்சொல்.

2. 'தப': என்ற "செய" என்னும் வாய்பாட்டு வினையெச்சம், 'தப்பி' என்னுஞ் "செய்து" என்னும் வினையெச்சத்திற்காய் மயங்கி நின்றது.

3. 'நோய்ய': குறிப்பு வினைப்பெயர்.

4. 'சழக்கு': இசைப் பெயர்ச்சொல்.

5. 'என்' என்பது இசையை யுணர்த்த வந்த இடைச்சொல். சுட்டுப்பெயர் வினைப்பெயர்கட்குத் தமக்கென ஓர் பொருளின்றிச் சுட்டவும் வினவவும் படும் பொருளாதியாறு பெயர்ப்பொருளே பொருளாக வருதல்போல, இவ்விரண் டிடைச் சொற்குந் தமக்கென ஓர் பொரு ளின்றி, வினைமுதலியவா யிங்ஙனம் விதந்தவற்றின் பொருளே பொருளாக வரும்" என்னும் நன்னூலார்:

"வினைபெயர் குறிப்பிசை"

என்னுஞ் சூத்திரத்துள் ஆறு பொருளையுந் தருமென்னாது ஆறினும் வரும் என்றார். [நன்னூல் விருத்தி]

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-அறத்துப்பால்-இல்லறவியல்-கரு-அதி.-அடக்கமுடைமை-சு-குறள்]

"நிலையிற் றிரியா தடங்கியான் றோற்ற
மலையினு மாணப் பெரிது."

பரி:—(இ-ள்) இல்வாழ்க்கையாகிய தன்னெறியின் வேறுபடாது நின்று அடங்கினவனது உயர்ச்சி மலையி னுயர்ச்சியினும் மிகப் பெரிது, எ-று.

[திருக்குறள்-பொருட்பால்-ஒழிபியல்-கூஎ-அதி.-மானம்-சு-குறள்]

"தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையி னிழிந்தக் கடை"

பரி.—(இ-ள்) குடிப்பிறந்த மாந்தர், தம் முயர்ந்த நிலையை விட்டு அதனினின்றுந் தாழ்ந்த வழி, தலையை விட்டு அதனினின்றும் வீழ்ந்த மயிரினை யொப்பர், எ-று.

If the weak should fall they may save themselves by some means, whereas the strong have no means of safety. A fragile thing, when dislodged from its position, does not fall with a loud crash, but such is not the case with the heavy.

[மேலோர் செய்கை தீயவேபோலினும் நன்மையேயா மெனல்.]

கூஎ. இசையாத போலினு மேலையோர் செய்கை
வசையாகா மற்றையோர்க் கல்லாற்—பசுவேட்டுத்
தீயோம்பி வான்வழக்கங் காண்பாரை யொப்பவே
ஊனோம்பி யூன்றின் பவர்.

[பதவுரை]

ஊன் ஓம்பி	=	தம்முடலைப் போற்ற
ஊன் தின்பவர்	=	ஊனை யருந்துபவர்:
பசு வேட்டு	=	பசுமேதஞ் செய்து,
தீ ஓம்பி	=	தீயைப் பூசித்து(த்)
வான் வழக்கம் காண்பாரை	=	துறக்க மடைவாரை
ஒப்பவே	=	ஒப்புவரோ? (அதுபோல),
மேலையோர் செய்கை	=	பெரியோருடைய செய்கைகள்
இசையாதபோலினும்	=	பொருந்தாதனபோற் காணப் படினும்
மற்றையோர்க்கு அல்லால்	=	(அவர் செய்யுஞ் செய்கை) சிறியோர் செய்தாற் பழிக்கப் படுமே யன்றி
வசை ஆகா	=	(பெரியோராகிய தாஞ் செயிற்) பழிக்கப்படாது.

[தொகுத்துரை]

மேலோர் செய்யுந் தீய செய்கைகள் நன்மை பயக்கு மாதலால் அவை பழிப்புக் கிடமாகா என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'போலின்': "வினையுருபுகள்": 22, காண்க.
2. 'மேலை': ஐ-சாரியை.
3. 'வேட்டு': "செய்து" என்னும் வாய்பாட்டு வினையெச்சம். (வேள்-த்-உ.)
4. 'ஏ': எதிர்மறையை யுணர்த்தும் வினா.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-அறத்துப்பால்-துறவறவியல்-உசு-அதி.-புலான் மறுத்தல்-க-குறள்]

"தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பா
னெங்ஙன மாளு மருள்."

பரி :—(இ-ள்) தன்னுடம்பை வீக்குதற் பொருட்டுத் தான் பிறிதோ ருயிரின் உடம்பைத் தின்பவன் எவ்வகையான் நடத்தும் அருளினை ? எ-று.

The acts of the great, unlike those of the mean, will not be condemned, although they may seem improper. Are those who cherish their body with flesh to be compared with those who sacrifice (a cow) to appease the sacred flame, and thereby explore into the ways of Providence?

[சிவயோகிகள் உலகத்தவர்போ லொழுகினும் [பற்றற்றிருப்ப ரெனல்.]

கூஅ. எவரேவ ரெத்திறத்த ரத்திறத்த ராய்நின்
றவரவர்க் காவன கூறி—எவரேவர்க்கும்
உப்பாலாய் நிற்பமற் றெம்முடையார் தம்முடையான்
எப்பாலு நிற்ப தென.

[பதவுரை]

தம் உடையான்	=	தம்மை ஆளாகவுடைய பரமசிவன்.
எப்பாலும்	=	உள்ளும் புறம்பும்
நிற்பது என	=	நிறைந்திருப்பது போல,
எம் உடையார்	=	எம்மை ஆளாகவுடைய சிவ யோகிகள்:
எவர் எவர்	=	யார் யார்
எத்திறத்தர்	=	எவ்வெவ் பக்குவத்தை யடையப்பெற்றிருக்கிறரோ
அத்திறத்தர் ஆய் நின்று	=	அவ்வவ் பக்குவத்திக் கமைந்தவர்களாயிருந்து
அவர் அவர்க்கு	=	அவரவர்களுக்கு
ஆவன கூறி	=	உறுதிமொழிகளை யுபதேசித்து

எவர் எவர்க்கும் = எவ்வகைப்பட்டார்க்கும்
உப்பாலாய் நிற்ப = புறம்பாயே யிருப்பர்.

[தோதகத்துறை]

சிவயோகிகள் அவரவர்பேரி லிரங்கி யவரவருக்குத் தகுந்தபடி யுபதேசிப்பினும் அவரவர்பேரிற் கொள்ளப்பட்ட பட்சத்தா லாளப்படார் என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'உப்பால்' 'எப்பால்':உ, எ-சுட்டிடைச்சொல், பால்-குணவாகுபெயர்.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-பொருட்பால்-அரசியல்-சுந-அதி.-அறிவுடைமை-சு-குறள்]

"எவ்வ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு."

பரி :—(இ-ள்) உலகம் யாதொருவாற்றான் ஒழுகுவதாயிற்று அவ் வுலகத்தோடு மேவித் தானும் அவ்வாற்றா னொழுகுவது அரச னுக் கறிவு, எ-று.

The Saints, that possess our hearts, but whose hearts are in turn possessed by Siva, instruct men of every nature, adapting their instructions to the kind of reception that they might receive from their hearers; yet these, like Him who stands aloof from all relations, never allow themselves to be governed by any ties of affection towards other men.

[உண்மை நெறியாளர் ஐம்புலன்களை அடக்குவா ரெனல்.]

௬௬. மெய்புணர்ந்தார் பொய்மேற் புலம்போக்கார் [மெய்யுணர்ச்சி
கைவருதல் கண்ணுப் புலங்காப்பார்—மெய்யுணர்ந்தார்
காப்பே நிலையாப் பழிநாண நீள்கதவாச்
சேர்ப்பார் நிறைத்தாழ் செறித்து.

[பதவுரை]

மெய் உணர்ந்தார்	=	(பிறப்பு வீடுகளையும் அவற்றின் காரணங்களையும்) உண்மையா யுணர்ந்தோர்கள்
பொய் மேல்	=	பொய்யாகிய விடயங்களில்
புலம் போக்கார்	=	ஐம்புலன்களைச் செலுத்தாது
மெய் உணர்ச்சி	=	மெய்ப்போதம்
கைவருதல்	=	சித்திப்பதே
கண்ணுக	=	தம் எண்ணமாகக் கொண்டு
புலம் காப்பார்	=	ஐம்புலன்களையுங் காப்பார்;
மெய் உணர்ந்தார்	=	(அம்) மெய்யுணர்ந்தவர்
காப்பே	=	(ஐம்புலன்களையும் அடக்குங்கால் அவர் தம் புலன்களைக்) காத்தலே
நிலையாக	=	கதவினிலையாகவும்,
பழி நாணம் ஏ	=	பழிக்கு நாணுதலே
நீள் கதவு ஆக	=	நீண்ட கதவுகளாகவுங் கொண்டு
நிறை தாழ் செறித்து	=	நிறையாகிய தாழினைக் கொளுவி
சேர்ப்பார்	=	(விடயங்களில் அறிவு செல்லாது) அடக்குவர்.

[தோகுத்துரை]

ஐம்புலன்களையும் அடக்கு ஞானிகள் தமது அடக்குந்தொழிலுக்குக் காப்புமுதலியவற்றை முறையே வாசல்நிலை முதலியவாகப் பிரயோகிப்பார் என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'நிறை': நடுவுநிலைமை.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-அறத்துப்பால்-பாயிரம்-ங-அதி.-நீத்தார் பெருமை-எ-குறள்]

"சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு."

பரி:—(இ-ள்) சுவையும் ஒளியும் ஊறும் ஓசையும் நாற்றமுமென்று சொல்லப்பட்ட தன் மாத்திரைகள் ஐந்தனது கூறுபாட்டையும் ஆராய்வான் அறிவின்கண்ணதே உலகம், எ-று.

Those who have obtained the knowledge of the truth will not direct their senses towards things that are unreal; making it their sole object to discover the truth, they will guard their senses. Making the preservation of the senses the door-post, and fear of guilt the door, they will curb themselves with the bolt of equity.

[துறந்தார் துய்க்கும் இன்பமே இன்ப மெனல்.]

க00. கற்றுத் துறைபோய காதலற்குக் கற்பினாள்
பெற்றுக் கொடுத்த தலைமகன்போல்—முற்றத்
துறந்தார்க்கு மெய்யுணர்விற் றோன்றுவதே யின்பம்
இறந்தவெலாந் துன்பமலா தில்.

[பதவுரை]

கற்று	=	(ஞானநூல்களைக்) கற்று(த்)
துறைபோய	=	தான் கற்றவற்றின் பொருட் கூறுபாடுகளை யெல்லா மறிந்த
காதலற்கு	=	(தன்னுடைய) கணவனுக்கு
கற்பினுள்	=	(அவனுடைய)கற்புடைய மனைவி
பெற்றுக்கொடுத்த	=	பெற்றுக்கொடுத்த
தலைமகன்போல்	=	மூத்த குமாரன்போல்
முற்ற துறந்தார்க்கு	=	முழுவதுந் துறந்தவர்கட்கு
மெய் உணர்வில்	=	அவருடைய மெய்யுணர்வில்
தோன்றுவதே	=	வெளிப்படுவதே
இன்பம்	=	நிரதிசய இன்பமாம்;
இறந்த எலாம்	=	அஃது ஒழிந்த உலகத்தின்ப மெல்லாம்
துன்பம் அல்லாது இல்	=	துன்பமே யல்லாமல் இன்ப மாவதில்லை.

[தோகுத்துரை]

அவர் ஞானத்தாற் பெறப்படும் அறிவே ஞானிகளுக்கு இன்பத்தைக் கொடுக்கும் என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'காதலற்கு': காதலன் + கு.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-அறத்துப்பால்-துறவறவியல்-சுஎ-அதி.-
அவாவறுத்தல்-கூ-குறள்]

"இன்ப மிடையறா தீண்டு மவாவென்னுந்
துன்பத்துட். டுன்பங் கெடின்."

பரி:—(இ-ள்) அவாவென்று சொல்லப்படுகின்ற மிக்க துன்பம் ஒருவற்குக் கெடுமாயின், அவன் வீடு பெற்றவழியே அன்றி உடம்போடு நின்றவழியும் இன்பம் இடையறாது, எ-று.

Like the first born presented to the husband, who has sounded the depths of knowledge, by his chaste consort, the beatific visions of truth that float in the minds of the holy sage constitute real happiness. All else is evil and painful.

[கற்றுத் தெளிந்தாரே வீட்டுநெறி நிற்பா ரெனல்.]

கoக. கற்றறிந் தடங்கித் தீதோரீஇ நன்றாற்றிப்
பெற்றது கொண்டு மனந்திருத்திப்—பற்றுவதே
பற்றுவதே பற்றிப் பணியறநின் றோன்றுணர்ந்து
நிற்பாரே நீணெறிச்சென் றார்.

[பதவுரை]

கற்று	=	(ஞானநூல்களைக்) கற்று,
அறிந்து	=	(அவற்றின் பொருள்களை ஐயந் திரிபற) அறிந்து,
அடங்கி	=	(கற்றறிந்தன மென்னும் செருக்கின்றி) அமைந்து,
தீது ஒரீஇ	=	(அந் நூல்கள்) விலக்கியதி னின்று நீங்கி,
நன்று ஆற்றி	=	(அந்நூல்கள்) விதித்ததைச் செய்து,
பெற்றது கொண்டு	=	கிடைத்ததனால்
மனம் திருத்தி	=	மனத்தைத் திருத்தி செய்து,
பற்றுவதே பற்றுவதே	=	வீட்டு நெறியையும் அதற் கமைந்த உபாயத்தையும்

பற்றி	=	உட்கொண்டு
பணி அற	=	சரியைமுதலிய தொழில்கள் சோர்ந்தொழிய
நின்று	=	(சமாதிநிலையில்) நின்று
ஒன்று உணர்ந்து	=	சிவத்தை யான் எனது என்னும் பகுப்பற வுணர்ந்து
நிற்பாரே	=	(அந்நிலையினின்றும் பெயராது) நிற்பவரே
நீள் நெறி சென்றார்	=	வீட்டை யடைந்தவ ராவர்.

[தோகுத்துரை]

மேற்கூறிய குறிகளை யுடையவரே வீடடைவார் என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'பற்றுவது': முதற் 'பற்றுவது' வீட்டைப் பற்றும் நெறியையும், இரண்டாம் 'பற்றுவது' அந்நெறியைப் பற்றும் உபாயத்தையும் உணர்த்தினவாதலால், இவை வினையடிப் பகுபதப் பொருட்பெயர்.

2. 'பணி': தொழில்கள்.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-அறத்துப்பால்-துறவறவியல்-௩௬-அதி.-மெய்யுணர்தல்-௩-குறள்]

"ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வான நணிய துடைத்து."

பரி:—(இ-ள்) ஐயத்தினின்று நீங்கி மெய்யுணர்ந்தார்க்கு எய்தி நின்ற நிலவுலகத்தினும் எய்தக்கடவதாய வீட்டுலகம் அணித்தாத லுடைத்து, எ-று.

[திருக்குறள்-அறத்துப்பால்-துறவறவியல்-௩௬-அதி.-மெய்யுணர்தல்-௪-குறள்]

"ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு."

பரி :—(இ-ள்) செல்லப்படுகின்ற புலன்கள் வேறுபாட்டான் ஐந்தாகிய வுணர்வு அவற்றை விட்டுத் தம் வயத்தாய வழியும், அத னாற் பயனில்லையேயாம்; மெய்யினை யுணர்த லில்லாதார்க்கு, எ-று.

[திருக்குறள்-பொருட்பால்-அரசியல்-சு௦-அதி.-
கல்வி-க-குறள்]

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக."

பரி :—(இ-ள்) ஒருவன் கற்கப்படு நூல்களைப் பழுதறக் கற்க; அங்ஙனங் கற்றால் அக் கல்விக்குத் தக அவை சொல்லு கின்ற நெறிக்கண்ணே நிற்க, எ-று.

Those alone can attain final emancipation who study the works of wisdom, appreciate the truths they contain, feel not the pride of knowledge, avoid what is prohibited in them and perform what they enjoin, purge the impurities of their mind by what they have acquired; discover the means of securing heavenly bliss, proceed from சரியை to the higher stage of சமாதி and appreciate the devine nature, distinguishing between the *ego* and *non-ego.*

[கண்விழிப்பத் தூங்கும் சிவயோகிகள்
காண்பதே காட்சி யெனல்.]

க௦உ. ஐயந் திரிபின் றளந்துத் தியிற்றெளிந்து
மெய்யுணர்ச்சிக் கண்விழிப்பத் தூங்குவார்—தம்முளே
காண்பதே காட்சி கனவு நனவாகப்
பூண்பதே தீர்ந்த பொருள்.

[பதவுரை]

அளந்து	=	(வேதாகமங்களாகிய அளவைகளினுல் ஆன்ம சொரூபத்தை) அறிந்து, (பின்னர்,)
ஐயம் திரிபு இன்று	=	(அதன்கண்) சந்தேகமும் விபரீதமு மில்லாமலும்
உத்தியின் தெளிந்து	=	கருத லளவையால் நிச்சயித்து,
மெய் உணர்ச்சி	=	மெய்யறிவாகிய
கண் விழிப்ப	=	கண் விழியாநின்று
தூங்குவார்	=	ஞான நித்திரை செய்கிறவர்கள்
தம் உள்ளே	=	தம் உள்ளத்தில்
காண்பதே காட்சி	=	காணுவதே காட்சியாம்;
கனவு	=	அத் தூக்கத்தில் வெளிப்படுங் கனு(ச்)
நனவாக பூண்பதே	=	சாக்கிரமாகப் பொருந்துவதே
தீர்ந்த பொருள்	=	முடிந்த பயனும்.

[தோகுத்துரை]

மேற்கூறிய குணங்களை யுடையவர் காண்பதே காட்சி, அவரது சாக்கிரமே அவருக்குத் தீர்ந்த பொருள் என்பதாம்.

[விருத்தியுரை]

1. 'மெய்யுணர்ச்சிக்கண்': மெய்யுணர்ச்சியாகிய கண்.
2. 'நனவு': சாக்கிரம்.

[உதாரண மேற்கோள்]

[திருக்குறள்-அறத்துப்பால்-துறவறவியல்-௩௫-அதி.-௩௦-குறள்]

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு."

பரி:—(இ-ள்) எல்லாப் பொருளையும் பற்றிநின்றே பற்றற்ற இறைவன் ஓதிய வீட்டுநெறியை இதுவே நன்னெறி யென்று மனத்துக் கொள்க; கொண்டு, அதன்கண் உபாயத்தை அம் மனத்தாற் செய்க, விடாது வந்த பற்று விடுதற்கு, எ-று.

